Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 99 | சர்வதேச மின் செய்தித்தாள் | யூன் 15 2025






**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298 647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique , les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com

TOPSTARS RE/MAX ACE
வீடு வாங்க | விற்க | முதலீடு
BUY | SELL | INVEST
THRIVE FOR YOUR LIFE LONG HAPPINESS
Arul Amirthalingam
Realtor
Dir: 647-450-2479
Office: 416-270-1111 / 3-1286 Kennedy Rd, Toronto M1P 2L5

RIGHT AT HOME REALTY INC. RealtorGroup
JEY RASATHURAI
MBA, BBA (Hons)
REALTOR & MORTGAGE BROKER
MORTGAGE ALLIANCE
- Mortgage, Line of Credit, Refinance, Renewal
- Private 1st,2nd & 3rd Mortgages - No Income Verification
- Solutions for Power of Sale Issues
- Buying & Selling & Lease Commercial & Residential Properties
301-305 Milner Ave, Toronto ON M1B 3V4
Cell : 416-624-4843
Bus : 416-816-9011
" NO PROMISES BUT SOLUTIONS"

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing? Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you... Self Employed?
Temporary Resident? New Immigrant?
Not to Worry!
Please Call - THEVEN KANKESU
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
thevenk1.tk@gmail.com / theven.kankesu@mtgarc.ca

ACCIDENT HAPPENS!
But your injuries don't have to last a lifetime.
TRUST ARAM LEGAL SERVICES!
ONE CALL - WE WILL HANDLE IT ALL!
Motor Vehicle Accident? Questions? Get Answers
ARAM Legal Services
Selva Thiyagarajah
416-618-1447
www.aramlegal.ca

விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203




"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."
தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்




# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**ஒரு விடுதலைப் போராட்டம் பல சூறாவளிகளைக் சந்திக்கின்றது. பல நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது. கொந்தளிப்பான பல சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்கின்றது.**







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# சாவுக்குள் உழைத்த வீரம் லெப். கேணல் சேகர்

1998 சுதந்திர நாளுக்குக் கிளிநொச்சியிலிருந்து கண்டி வீதியால் தலதா மாளிகைக்குப் பேருந்து வருமெனச் சிங்களத்து ஜெனரல் விடுத்த சவாலுக்குச் சாட்டையடியாகக் கிளிநொச்சித் தளம்மீதான பாய்ச்சலுக்குத் தலைவர் கட்டளையிட்டார். அவரின் கட்டளைக்கு மையத்தலத்தினுள் முன்னேறி எமது போராளிகளை வீழ்த்தி எமது முன்னேற்றத்தைத் தடுத்துக் கொண்டிருந்தான் எதிரி.

எதிரிக்காக எடுத்த சாதியின் அடி எங்கள் முதுகளிலேயே விழுந்துவிடுமா? எதிரி கொடியேற்றும் நாளில் எங்கள் தேசியக் கோடி அரைக்கம்பத்திற் பறக்குமா? அர்த்தமற்ற உயிரிழப் புக்களுடன் நாம் தளம் திரும்பநேருமா? தலைவன் இட்ட ஆணையை வீணேபோக விட்டு வெறுங்கையுடன் திரும்பப் போகிறோமா? இவை எதையும் ஏற்றுக்கொள்ள எங்கள் மனங்கள் மறுத்தன. ஆனாலும், யதார்த்தம் எங்கள் பிடரி மயிரைப் பிடித்துலுப்பியது. வழிதெரியாது, மனம் வெப்பியாரத் தில் உழன்றது. எல்லா அலைவரிசைகளையும் வேகமாய் நோட்டமிட்டபடி அங்குமிங்கும் ஏதோ ஒரு நம்பிகைச் செய் திக்காய் தவித்தபடியிருந்தோம்.

மூத்த தளபதிகள் நிலைமையை அவதானித்தவாறு தொலைத் தொடர்புக் கருவியின் ஒலிகளை தமது காதுகளுள் வாங்கிக் கொண்டிருந்தனர். எங்கும் அமைதி நிலவியது. ஓர் அலை வரிசையிற் கம்பீரமான கட்டளைக்குரல் நிதானமாய், நேர்த் தியாய், உற்சாகமாய் களத்தைத்தன் கையிற்குள் வைத்திருப் பதை உணர்த்துமாறு ஒலித்துக் கொண்டிருந்தது. எதிரியின் பலம் வாய்ந்த முன்னரண்களையெல்லாம் வீழ்த்தியபடி, முறியடிக்கவந்த எதிரிகளை சாவுக்குள் அனுப்பியபடி தனக்கு தரப்பட்ட பகுதிகளைக் கடந்தும் ஓர் அணி முன்னேறிக்கொண் டிருப்பதை அந்தக் கட்டளைகள் தெளிவாக உணர்த்தின. அந் தக் கட்டளைக்குரல் தந்த உற்சாகத்திலிருந்து விடுபட மனம் மறுத்தது.

“ஆர்... அந்த இடத்தில நிக்கிறதெண்டு பாருங்கோ” என்று தளபதி ஒருவர் கூற, மூத்த தளபதியொருவர்.

“அந்த ‘வரைபடத்தை’ (மப்) பை எடு, இடம் எதென்று பார்”

“அது சேகரின்ர இடம், சேகர் பிடிச்சுக்கொண்டு போறான். பயப்படத் தேவையில்லை. சேகர் விடமாட்டான்.”

அந்தச் சமரோடு சம்பந்தப்படாவிட்டலும் அந்தச் சமரை அவ தானித்துக் கொண்டிருந்த தளபதிகள் நம்பிக்கையுடன் உற் சாகமடைந்தனர். சேகர் பிடித்த காவலரண் பகுதிகளை மீளக் கைப்பற்ற எதிரி கடுமையாக முயன்றான். ஏனைய பகுதிகளை நாம் இழந்துவிட்டபோதும் சேகர் தனக்குத் தரப்பட்ட பகுதிக்கு அப்பாலும் எதிரிப் பகுதிகளைக் கைப்பற்றியிருந்தான். கிளி நொச்சி நகரின் மத்திய பகுதிவரை கைப்பற்றப்பட்ட எதிரித் தளத்தைத் தக்கவைக்கவென அணிகளை நிலைப்படுத்திய போது எதிரிக்கும் எமக்குமிடையிலான சண்டை வலுப்பெற்றது. எதிரியின் விடாப்பிடியான, தீர்மானமான சண்டையைப் போர்க் களம் கண்டது. ஒன்பது தடவை சேகரிடம் தோற்றுப்போன எதிரி, பத்தாம் முறையும் முன்னேறி மூக்குடைபட்டான். கிளி நொச்சியிலிருந்து பேருந்து விடச் சவால்விட்ட எதிரிக்கு, எங்கள் நிலத்தில் அவலத்தை விதைத்த எதிரிக்கு, தலைவரின் ஆணையை நிறைவேற்றி, நிலம் மீட்டு மரணப்படுக்கை விரித்தான் தளபதி சேகர். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை யணியின் சிறப்புத் தளபதியாகத் தன்னை நியமித்த தலை வர்கள் மெச்சும்படியாகத் தன் ஆளுமையை அவன் வெளிப் படுத்திய முதற்சமர் அதுதான்.



‘ஓயாத அலைகள் - 02’ நடவடிக்கையில், கடுமையானதெனக் கருதப்பட்ட பகுதிக்கான கட்டளைத் தளபதியாகத் தலைவரால் அவன் நியமிக்கப்படுவதற்கு இதுவே காரணமாகியது. அச் சமரில் எதிரியின் வலுமிக்க பேரணியை, தளத்தின் மையப் பகுதியின் திறவுகோலாக அமைந்த பகுதியிலேயே எதிர்




கொண்டு எதிரியின் தீர்மானமான முறியடிப்பை மோதி யுடைத்து வெற்றியை எமதாக்கியவன் சேகர். இப்பகுதியிற் போரிட்டுத் தோற்ற எதிரிப்படைக் கொமாண்டருக்கு எதிரியின் கட்டளைப்பீடம் வீரவிருது கொடுத்துக் கௌரவித்தமை சேகர் எதிர் கொண்ட சண்டையின் காத்திரத்தை அனைவருக்கும் புரியவைக்கும்.

என்றும் மரணத்துள் வாழ்ந்தவன், மரணத்திற்கு அஞ்சா தவன். ஆனால் மரணத்தை விரும்பாத அவனது மனம் எதையோ சாதிக்கத் துடித்ததை அவனை அறிந்தவரே அறிவர். அதை அறியாதவர்களால் இலகுவில் அந்தச் சாவைச் சகித் துக்கொள்ள முடியவில்லை. அவனுக்கான சர்ந்தப்பங்கள் நீண்டிருந்தால், மாளும் பகையின் பின்னாலும் மீளும் எம் நிலங்களின் பின்னாலும் அவன் இருந்திருப்பான். தலைவன் சுட்டும் திசையெங்கும் அவன் புலிக்கொடி நாட்டிப் பெருமை சேர்த்திருப்பான்.

பத்து வருடத்தின்முன் மாங்குளம் முகாம் தகர்ப்பின்போது, அப் போதுதான் பயிற்சி முடிந்து வந்திருந்த மெல்லிய உருவங் கொண்ட, தலை சாய்த்து இழுத்திருந்த, கறுப்பை அண்டிய பொது நிறமான அந்தப் பதினைந்து வயதுப் பெடியன் அந்தப் போர்க்களத்தின் மத்தியில் நின்று காயப்பட்ட வீரர்களைச் சுமந்து சென்றுகொண்டிருந்தான். இதுதான் போராளி என்ற பெருமைமிக்க வாழ்வில் இந்த சின்னப்பெடியன் கண்ட முதற் களம்.

ஒன்பது வருடங்களின்பின், தென்முனையில் எதிரி மீண்டும் மாங்குளம் வரை ஆக்கிரமித்திருந்த பொது மாரிப்பிரவாகமென எழுந்தது ‘ஓயாத அலைகள் - 03’. அம்பகாமத்தில் உடைப்





பெடுத்து ஒலுமடுத் தளத்தை வீழ்த்தி, கரிப்பட்டமுறிப்பை வெற்றிகொண்டு, கனகராயன்குளம் கட்டளைத் தலைமையகத்தைத் தோற்கடித்து மாங்குளத்தை எமது கைகளுக்கு மீட்டது. இந்தச் சமரில் இதைச் சாதிக்கக் களத்தில் தலைமை தாங்கிக்கொண்டிருந்தத தளபதி அன்று மாங்குளம் முகாம் தகர்ப்பிற் காயப்பட்ட போராளிகளைச் சுமந்துகொண்டிருந்த அதே சின்னப் பெடியன் சேகர்தான். இந்த உயர்பணியை ஆற்ற இந்த ஒன்பது வருடத்தில் அவன் எத்தனை களங்களைக் கண்டிருப்பான். ஒயாது உடல் வருத்தி அவன் எப்படி உழைத்திருப்பன்.

போர்க்களத்தில் ஆரம்ப காலங்களில் இவன் 50கலிபர் அணியின் தலைவனாக இருந்தான். பதுங்கித்தாக்குதல்களும் அதிரடித்தாக்குதல்களுமே நடந்த அன்றைய சண்டைக் காலத்தில் அச்சண்டைகளுக்கு 50கலிபர் அணி தேவையானதாக இருக்கவில்லை. எல்லோரும் சண்டைகாகப் புறப்படும்போது அவன் வாய்ப்பின்றி இருந்தான். ஆயினும், எவரும் சிந்திக்காத கோணத்திற் சிந்தித்துத் தளபதியிடம் தனது அபிப்பிராயத்தைச் சொல்லி அனுமதி கேட்டு, தானே வேவுபார்த்து, வாய்ப்பான இலக்குகளைத் தெரிவுசெய்து தன்னுடன் 50கலிபர் அணியை மட்டுமே வைத்து அன்று எதிரிகளுக்குத் தலைவலியாய் எழுந்தான். சொல்லக்கூடிய பல சண்டைகளை அவன் வெற்றிகரமாகச் செய்தான். இதுவே, தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்ட 'பசீலன்' அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிக்கு அவன் அனுப்பப்படுவதற்கான தகுதியை அவனுக்குக் கொடுத்தது.

பயிற்சி முடித்து வெளியேறியபின் சேகரின் தோள்கள் அதிக பாரத்தைச் சுமக்கத்தொடங்கின. இனத்தின் விடுதலைக்காக எதிரிகள் வாழ்ந்து உழைக்கத் தொடங்கினான். அவன் நேசித்த மக்களுக்காக அந்த வீரனின் இனிய இளமைக் காலங்களெல்லாம் எதிரியோடோ போராடுவதிலேயே கரைந்தன.

மண்டைதீவு, மூன்றாம் கட்ட ஈழப்போர் மூண்டபோது, அந்த உப்புக்கடல் சூழ்ந்த பகை முகாமினுள் தலைவனின் திட்டப்படி எவருக்கும் தெரியாது ஏதோ செய்துகொண்டிருந்தார்கள் சேகரும் அவன் தோழர்களும். அந்த முகாமின் இறங்க்குதுறையிலிருந்து பிரதான் முகாம்வரியா கடினமான பகைபிரதேசத்தினுள் கடல்நீரிலும் நிலத்திலுமாக, சீரான உணவும் நித்திரையுமின்றி எத்தனை நாட்கள் உழன்றது சேகரின் வாழ்வு. அந்த வாழ்வின் மூலம் ஒரு தாக்குதல் திட்டத்திற்க்கான பெறுமதியான தகவல்களை அவன் பெற்றுத்தந்தான்.

சிறிய தவறுகள்கூட போராளிகள் பலரின் உயிர்களை அந்தக் கடல் நீரினுள்ளேயே கரைத்துவிடும். அப்படி எதுவும் நடந்துவிடுவதை விரும்பாத தலைவர், தளபதிகள் வகுத்த திட்டத்திற்கு மேலாக சில மாற்றுத்திட்டங்களைப் பரிந்துரைக்க, அதற்காக ஓர் உடனடி வேலை செய்துமுடிப்பதற்கு எல்லோரின் கண்களுள்ளும் நிழலாடியவன் நம்பிக்கைக்குரிய சேகர்தான்.

அவசர அவசரமாக அந்த வேவுப் பணிகளைச் செய்துமுடித்து, நம்பிக்கையான தகவல்களைத் திரட்டினான். தலைவரின் திட்டப்படி 15 பேர்கொண்ட அணிக்குத் தலைமையேற்று எதிரியுள் இரகசியமாக ஊடுருவி, அந்த இறங்குதுறையைத் தீடீர் தாக்குதல் மூலம் கைப்பற்றிப் பிரதான முகாமிற்கான தாக்குதல் அணிகளை உள்ளேடுக்கவேண்டிய முக்கியமான பனி சேகரிடந்தான் ஒப்படைக்கப்பட்டது. அப்போது அந்த இருபது வயதேயான சேகரை நம்பிப் பெரிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன. எம் எத்தனை போராளிகளின் உயிர் இருப்பு அவன் கைகளில் இருந்தது. எல்லாவற்றையும் சிந்தித்துப் பொறுப்புணர்வுடன் செயற்படக்கூடியவனென எல்லோரும் அவனில் வைத்த நம்பிக்கையை அந்தச் சண்டையில் தனது செயலின் மூலம் மெய்ப்பித்தான்.

திட்டத்தின்படியே தனது அணியுடன் உள்நுழைந்து, தாக்குதலுக்காகக் காத்திருந்த அந்த சொற்ப நேரத்திற் பிறிதொரு பகுதிக்குரிய அணியொன்று பாதைமாறி வந்துவிட, எதிரியின் கண்களுக்குள் மண்ணைத்தூவி அவர்களை அத்தனை விரைவாய் உரிய இடத்திற் சேர்த்து விட்டு, எதிரி உசாரடைந்து விடக்கூடாது என அந்தத் தடயங்களை அழித்தபடி தன் பணிக்கு வந்துசேர்ந்து, எத்தனை சாதுரியமாய் அந்தக் களத்தில் அவன் சுழன்று பனி முடித்தான். எதிரிக்கு அதிர்ச்சிகரமான அழிவைக் கொடுத்து, ஒரு நாளுக்குள்ளேயே வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்ட அந்தத் தாக்குதலில் நாம் பெரும் இழப்புக்களின்றியே சாதித்த வெற்றிக்குப் பின்னல் சேகரின் பலமாதக் கடும் உழைப்பு இருந்தது.

'சூரியக்கதிர்' எதிர்ச்சமர் நடவடிக்கை. அந்தக் காலத்தில் எம்மிடம் பீரங்கிகளோ, ஆட்லறிகளோ இருக்கவில்லை. வெகு அணிகளோ எமது வலுமிக்க பீரங்கிகள் என்று சொல்ல வேண்டும். அந்தக் களத்திற் சின்னச்சிறு வேவு அணிகளுடன் எதிரிப் பிரதேசத்தின் உள்ளே அடிக்கடி போய்வரும் சேகர். எதிரியின் செயற்பாடுகளை அவதானித்து அவனது போர் ஏற்பாடுகளை அறிந்து, எமது எதிர் நடவடிக்கைக்கான தகவல்களை அனுப்பிக்கொண்டிருப்பான். அந்தக் களத்தில் 'உறங்காத கண்மணியாய்' உலாவிக்கொண்டிருந்தான் சேகர்.

அந்த நாட்களில் ஒருநாள் பெண் போராளிகளின் பகுதியினூடாகத் தன் வேலைக்காகப் போய்க்கொண்டிருந்தவனிடம் "என்ன சேகர் நெடுகலும் குண்டோடையே திரியிறீர்" என்று அவர்களின் தளபதி கேட்பதற்கு "நான் ஒரு வேவுக்காரன் எனக்குக் குண்டுதான் எல்லாமே இதை வைத்தே எல்லாத்தையும் சமாளிப்பான்" என்று சொல்லிக்கொண்டிருந்தவன், தீடீரெனப் பாய்தோடி மதில் ஒன்றைக் கடக்கக் குண்டு ஒன்று வெடித்தது. எல்லோரும் திகைத்துப் போனார்கள். சில வினாடிகளில் நடந்ததைப் பார்த்து வியப்படைந்தனர். அந்த மதிலுக்குப் பின்னால் எதிரிகள் சில சேகர் அடித்த குண்டில் மாண்டு போய்க் கிடந்தார்கள்.

எமது பிரதேசத்தின் உள்ளேயே சாதாரணமாக ஒரு போராளியுடன் உரையாடும்போதுகூட அவனது கண்கள் மட்டுமல்ல மனதும் எதிரியைச் சுற்றியே உலாவிக்கொண்டிருக்கும். அந்த அசாதாரண ஆற்றல் அவனுக்கே உரியது என்று சொல்வதை விட வேறு எப்படிச் சொல்வது. அன்று அவ்விடத்தில் அவன் இல்லையென்றால் ஒருவேளை எதிரியின் திகைப்புத் தாக்குதலில் எங்கள் பெண் தளபதிகளையும் போராளிகளையும் நாம் இழந்திருக்கக்கூடும்.



புலிகள் யாழ்ப்பாணத்திலிருந்து பினவாங்கியதனாற் பெரும் இராணுவ வெற்றி ஒன்றைக் கட்டாயமாக ஈட்டவேண்டிய நிலையிலிருந்துனர். அந்நிலையிலேதான் ஓயாத அலைகள் ஒன்று திட்டமிடப்பட்டது. அத்திட்டத்தின் வெற்றி எடுக்கப்படும் வேவுத்தரவுகளிலேயே பெரிதும் தங்கி நின்றது. மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட வேவு நடவடிக்கையில் முக்கியமான ஒரு பகுதியின் வேவுப்பணிகள் சேகரிடம் கொடுக்கப்பட்டன. மீண்டும் சேகர் எதிரிகள் வாழத்தொடங்கினான். இறுதியில் எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு, சமருக்கான தாக்குதற் பணிகள் தலைவராற் பிரித்துக்கொடுக்கப்பட்டபோது, சேகரின் தோள்களில் விழுந்தது சாதாரண சுமையன்று, அது வெற்றிக்கான 'சாவியை'க் காவிச்செல்லும் சுமை.

இரவு பகலாக நீந்தித் திரிந்து பெருங்கடலினுடாகத் தெரிந்தெடுத்த நகர்வுப் பாதையின் மூலம் தாக்குதல் அணிகளை உள்னகர்த்தி தளத்தின் கடற்கரைக் காவலரண்களைத் தகர்த்தெறியவேண்டும். இத்திட்டம் நிறைவுசெய்யப்பட்டபோது, கடற்கரையை அண்டியிருக்கும் எதிரியின் கட்டளைப்பீடம் எமது அச்சுறுத்தலால் நிலைதடுமாற அச்சமருக்கான எமது ஏனைய நடவடிக்கைகள் சுலபமாக்கப்பட்டுவிடும் வெற்றி நிச்சயிக்கப்பட்டுவிடும். அதற்காக லெப். கேணல் தர்சனின் கடற்புலிகள் அணியை அழைத்துச் சென்றவன் அவன்தான்.

சிறிய தவறொன்று நடந்தாலும் பெருங் கடலாற் செல்லும் அணிகளுக்கு மீட்சியே கிடையாது. அத்தனை உயிர்களும் கடலோடு கரைந்துபோக வேண்டியதுதான். சேகர் திரட்டிய தகவல் மீதும் சேகரது ஆற்றல் மீதும் கொண்ட நம்பிக்கையால் மட்டுமே தீட்டப்பட்ட இத்திட்டம் இறுதியில் வெற்றிகண்டது. தளம் எங்களின் கைகளில் வீழ்ந்தது.

அந்த வெற்றிக்காக உழைத்த எங்கள் சேகர், தோல்வியை மூடி மறைத்துவிட ஆனையிறவுத் தளத்திலிருந்து எதிரி எடுத்த 'சத்ஜெய' நடவடிக்கைக்கு எதிராக முன்னணி வேவு அணிகளுடன் செயற்பட்டுக்கொண்டிருந்தான். 'சத்ஜெய'வின் இரண்டாம் கட்டத்தில் எம்மிடம் செம்மையாக வாங்கிக்கட்டிப் பல நூறு எதிரிகள் மாண்டுபோன அந்த வெற்றிகர முறியடிப்புச்சமரின் பின்னால் அதன் மூலவேர்களில் ஒன்றாக சேகரும் இருந்தான். தனது அணியை வைத்து எதிரிகுள்ளேயே எதிரியின் 'ராங்கி'யை அழித்த சாதனை அந்தச் சமரில் அவனது பங்கைச் சொல்லும்.

அவனது கால்படாத களங்களே இல்லையெனும்படி போர்க்களக் கதாநாயகனாக அந்த எளிமையான போராளி உலாவந்தான். 'ஜயசிக்குறுய்' களம்தான் எங்கள் வீரனது உச்சளவு உழைப்பை உறிஞ்சியது. அவனை ஒரு தளபதியாகவும் உயர்த்தியது. அந்தக் களத்தில் எத்தனை சவால்களை எதிர்கொண்டபோதும் வெற்றிகொண்ட அவனது மன ஆற்றலின், தாங்கு சக்தியின் எல்லை எதுவென யாராலும் அறிந்துகொள்ள முடியவில்லை.

கொடுக்கப்பட்ட சுமைகள் அனைத்தையும் சுமந்தான். இந்தத் தேசத்திற்காக இன்னும் இன்னும் பாரம் சுமந்தான். "சிறு அணிகளை வைத்துக்கொண்டு போர்க்களத்திற் பெரும் பணிகளை ஆற்றக்கூடிய வல்லமையை நான் அவனிடத்திற் கண்டேன். சில சமர்களில் அவனது இந்த ஆற்றல்தான் எமக்குப் பெருவெற்றிகளைத் தந்தது" என்று பெருமையுடன் மனம் நெகிழ்ந்து பாராட்டினார் அவனை வளர்த்த தளபதி கேணல் தீபன். (பிரிகேடியர் தீபன்)

'வெற்றி உறுதி'யென்று எதிரி முன்னேறிக்கொண்டிருந்தான். ஆனால், அவன் பிடரியில் அடிகொடுக்கும் தலைவரின் போர் வியூகத்திற்காகத் தாண்டிக்குளம் ஊடறுப்பிற்குப் புலியணிகள் தயாராகிக்கொண்டிருந்தன. தளபதிகளும் போராளிகளும் அதற்காகச் சென்றபோது புளியங்குளம் பகுதியின் முன்னணிக் காவல்நிலைகளுக்குத் தற்காலிகப் பொறுப்பாளனாகச் சேகர் நியமிக்கப்பட்டான். தளபதி ஒருவருக்குரிய பணி தலைவறாற் சேகருக்கு வழுங்கப்பட்டிருந்தது. அவனது ஆளுமைக்கு அத்தனை விரைவாகப் பரீட்சை வைத்தான் எதிரி. மட்டுப்படுத்தப்பட்ட அணிகளுடன் நின்ற சேகரின் மேல் எதிரியின் படை வெள்ளம் அணையுடைத்துப் பாய்ந்தது.

சமரை எதிர் கொண்டான் சேகர். தானே முன்னின்று தனது சிறிய அணிகளைத் களமிறக்கி சண்டையிட்டான். சமர் உக்கிரம் கண்டது. எவருமே எதிர்பார்த்திராத ஒரு சமரை அன்று அவன் நிகழ்த்தினான். மூன்று ராங்கிகள் அழிக்கப்பட்டுக் கொத்துக் கொத்தாய் எதிரி சாய்ந்து விழப் பகைவன் பனிக்க நிராவியுடனேயே முடங்கிப்போனான்.

புலிகளின் முன்னணிப் படைகளோ கட்டளைத் தளபதிகளோ இல்லாதிருந்துங்கூட அப்படியொரு மரண அடியை தாங்கள் பெற்றதை எதிரி நம்பவேமாட்டான். இதைச் சாதித்த சேகர் ஒரு தளபதி என்ற உயர்நிலையில் பெரும் பணிகளைச் சுமக்கத் தொடங்கினான். இக்காலத்தில் இயக்கம் இழந்த அனுபவமிக்க வீரத்தலபதியான லெப். கேணல் தனத்தினுடைய பொறுப்புகள், தனம் சுமந்தா சுமைகள் எல்லாவற்றையும் சேகரின் தோள்கள் சுமக்கத்தொடங்கின.

அப்போது புளியங்குளம் புலிக்குகையாக மாறியிருந்தது. அதற்குள் நுழைய நினைத்தால் அதற்குள்ளேயே மாளவேண்டியது தான். எதிரி எவ்வளவோ முயன்றும் அந்தக் குகையை அசைக்க முடியவில்லை. அது தலைவர் போர்க்களத்தில் அறிமுகப்படுத்திய புதிய தந்திரமாகும். அதனை நிறைவேற்றத் தளபதி கேணல் தீபனுக்குத் துணையாக நின்றவன் தளபதி சேகர். எதிரி புளியங்குளத்தை நினைக்குந்தோறும் தந்து சாவையும் நினைக்கவேண்டிய களச் சூழலை உருவாக்கினான். அதற்காக அவன் சிந்திய வியர்வையும் கொண்டிருந்த ஓர்மத்தையும் போராளிகள் ஒவ்வொருவரையும் இராணுவத்தினர் பலருக்குச் சமனாக வளர்த்தெடுத்த திறனையும் எழுத்தில் வடிக்கக முடியாது. ஒவ்வொரு அரணிலும் சேகர் ஒரு முறை கதைத்து விட்டுச் சென்றால் அதுவே ஓர் இரும்புக் கோட்டையாக மாறிவிடும். இப்படித்தான் புளியங்குளம் புரட்சிக் குளமாக மாறி எதிரிக்குச் சாவை நோக்கிய பயணத்தைக்



**சொல்லுக்கு முன்னே எப்போதும் செயல் இருக்கவேண்டும். செயலால்தான் நாங்கள் செல்வாக்குப்பெற்றோம்; செயல்தான் நமது நடவடிக்கைகளுக்கு அரசியல் வடிவம் தருகிறது.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

கொடுத்தது.

1998 மாசி மாதம், அந்தக் கிளிநொச்சி ஊடறுப்புச் சமர் சேகரின் போரியல் ஆற்றலுக்குச் சிகரம் வைத்த சமர்.

"நான் சாதித்துவிட்டு. எனக்குத் தந்த பணிகளையெல்லாம் என் போராளிகள் செய்துவிட்டார்கள். எதிரிகளை ஓட ஓட இன்றைய களத்தில் நானும் எனது போராளிகளும் விரட்டினோம். ஆனால், நான் என் போராளிகள் பதின்மூன்று பேரை இழந் திருக்கின்றேன். அந்த உயிரிழப்பு என் மனத்தைக் குடைகிறது என்று அந்த சமர்பற்றி சேகர் நாட்குறிப்பில் எழுதியிருந்தான்.

சேகர் தன போராளிகளை நேசித்தான். அவர்களின் இழப் புக்கள் அவனை வாட்டின, போராளிகளின் துன்பத்தில் அவ னும் பங்கெடுத்தான். ஒருநாள் கிளிநொச்சியில் நாம் இராணு வத்திடமிருந்து கைப்பற்றிய பகுதியிற் பாதுகாப்புப் பணியில் ஈடு பட்டிருந்த போராளியோருவன் கண்ணிவெடியால் காலிழந் தான். "நான் படையணியைப் பொறுப்பெடுத்த இவ்வளவு காலத் துள் எனது பிழையாற் போராளி ஒருவனின் காலைப் பறிகொடுத் துவிட்டேன். 56 நாங்கள் பயன்படுத்திய பாதையில் இதுவரை வெடிக்காத கண்ணிவெடி இன்று வெடித்தது ஏன்? எப்படியோ நான்தான் அதற்குக் காரணம், என்னுடைய கவனமின்மை யால் எனது படையணியில் ஏற்பட்ட முதல் இழப்பு இதுதான். நான் இப்படி மேலும் வேறு பிழைகள் விட்டு என்னருமைப் போராளிகளின் அனாவசிய இழப்புக்குக் காரணமாக இருந் திருக்கிறேனாவென யோசித்துபார்கிறேன். நான் அறியக் கூடிய தாக இல்லை. இனி இப்படி ஒரு பிழையை விடமாட்டேன் என இந் நாளினில் உறுதியெடுத்துள்ளேன் (27.03.1998), என்று சேகர் தன் நாட்குறிப்பில் குறிப்பிட்டிருந்தமை அவன் தன் போராளிகள் மீது வைத்திருந்த பற்றுக்குச் சான்றாகும்.

கிளிநொச்சியிற் தான் பிறந்த மண்ணில் தன் இனத்தைக் கொன்று குவித்துத் தாண்டாவமாடிய எதிரியை, மாசி மாதச் சண்டையில் வீரச்சாவடைந்த பெண் போராளிகளின் உடல் களைச் சீரழித்து இழிவுபடுத்தி வெறியாடிய எதிரியை 1998 ஆணி 4ம் நாள் சண்டையில் தன் படையணி மூலம் கொத்துக் கொத்தாகக் கொன்றுகுவித்தபோதுதான் அவன் மனம் அமைதி யடைந்திருந்தது.

மன்னாரில் 'ரணகோச' என்ற பெயரிற் புறப்பட்டுவந்த எதிரி, எமது போராளிகள் பலரைக் கொன்றபோது துடித்துப்போனவன், 'ரணகோச - 05' என அதே எதிரிகள் புறப்பட்டு வந்தபோது நேரில் நின்று படைநடத்தி நூற்றுக்கணக்கில் எதிரிகளைக் கொன்று பதில் கொடுத்த பின்தான் நிம்மதியடைந்தான். எல்லா வற்றையும்விட அவன் பகுதிப் பொறுப்பாளராக இருந்தபோது இரண்டுமுறை அடுத்தடுத்து 'வோட்ட ஷெற்' என்று புறப்பட்டு வந்த எதிரிகள் எமது பெண் போராளிகள் பலரின் உயிர்களைப் பரித்துவிட்டபோது அவனது நெஞ்சில் நெருப்பேயெரியத் தொடங்கிற்று.





சில நாள்களுக்குள்ளேயே ஓயாத அலைகள் 03 படை நடவடிக்கையில் கேணல் தீபனின் கட்டளையின்கீழ் பெண் போராளிகள் கொல்லப்பட்ட அதே பகுதியூடாகப் பெண் போராளி களையும் வழிநடத்தி அம்பகாமம், ஒலுமடு கரிப்பட்டமுறிப்பு எனப் படைத்தளங்களை வீழ்த்திக் கனகராயன்குளத்தையும் வெற்றிகொண்டபோதுதான் ஆறுதலடைந்தான்.

ஆனையிறவிற்கான இறுதிச் சமர்களின்போது முகாவில் ஊட றுப்பு முயற்சியில் ஓர் அணிக்குத் தலைமையேற்றுப் போன வன், எதிரியிடம் அடிவாங்கித் தன தோழர்களை இழந்து வந்த போது துயரமும் ஆவேசமும் மேலிட, மீண்டும் மிகக் கடுமை யாக உழைத்து இறுதியில் ஆனையிறவை வீழ்த்துவதற்கான சண்டையில் ஒரு படைத்தொகுதிக்குத் தலைமைதாங்கி அல் லிப்பளை நீரேரிவரை படை நடத்திப் பெருமளவில் எதிரிகளை வீழ்த்தி வெற்றிகொண்டபோது தான் அவன் துயரத்திலிருந்து மீண்டான்.

தென்போர்முனையில் நின்றவனை இந்தக் களத்தின் கடுமை அவனது தேவையை உணர்ந்து அழைத்தது. குடாரப்புவில் தரையிரங்கிய அணிகள் இத்தாவில் கண்டாய் வீதியில் 30, 000 எதிரிகள் நடுவே போரிட்டுக் கொண்டிருந்தன. தாளை யடித் தளத்தை நாம் வெற்றிகொல்லாமல் அந்தப் போராளிக ளுக்கான எந்த விநியோகங்களும் சாத்தியம் இல்லை என்ற நிலை இருந்தது. காயப்பட்டவர்களை எடுப்பதிலிருந்து உணவு, வெடிபொருள்வரை அனைத்துமே நெருக்கடிக்குள் இருந்தன.

53வது டிவிசனின் 'கொமாண்டோ பிரிகேட்' தளம். எதிரியின் நடவடிக்கை ஒன்றிற்காக ஆயத்தப்படுத்தப்பட்ட நிலையில் நிலை கொண்டிருந்த பலமான கோட்டை அது. முன்னர் எம் மால் வீழ்த்தப்பட்ட கிளிநொச்சித் தளத்தின் பலத்திர்க்குக் குறை யாத வலுமிக்க தளம் அது. குடாரப்புவில் இரவில் தரையிறங்கிய அணிகள், விடிந்தபோது தமது கடல் தொடர்பை இழந்து போயின. தாளையடித் தளத்திற் கான சமர் தொடங்கியது. எதிரியைத் தோற்கடித் தவாறு மூர்க்கமாக, எல்லோருக்கும் நம் பிக்கை தரும்படி முன்னேரிகொண்டிருந்ததன் புலியணிகள். ஆனால், அன்று மாலைக்குள்ளேயே நாம் கைப்பற்றிய பகுதி களிற் கணிசமானவற்றை எதிரி மீண்டும் கைப்பற்றிவிட்டான். இத்தாவிலில் தரையிறங்கி நிலை கொண்டிருந்த அணிகள் கேள்விகளோடு காத் திருந்தன.

மறுநாள் விடிவதற்குள் மாற்று ஏற்பாடுகள் செய்தேயாக வேண் டும். சேகரைக் களமிறக்க ஏற்பாடாகியது. அணித் தலைவர் களையெல்லாம் ஒன்றுகூட்டித் தளபதி தீபன் கதைத்தார். "இது எங்கட ஆயிரம் போராளிகளின் உயிர்ப் பிரச்சினை. நாங்கள் எல்லோரும் உயிரோடு இருந்துகொண்டு ஆனை யிறவை வீழ்த்தாமல் அவர்களின் அழிவிற்குக் காரணம் சொல்லேலாது. நாங்கள் வென்றுதான் ஆகவேண்டும். இல்லையென்றால் நாங்கள் இதில் முயன்று அழிந்தால் எங்கட பக்கம் நியாயம் இருக்கும்."

சேகர் போராளிகளையும் தனது பணியையும் எண்ணியவன், எழுட்சிகொண்டவனாக இரவிரவாய்த் தவண்டு புரண்டு தானே வேவுபார்த்தான். மறுநாள் போரின் ஒரு முனையை வழி நடத்திக் களம் குதித்தான். அந்தத் தளத்தை அடுத்துவந்த நாற் பது மணித்தியாலத்திற்குள் வெற்றிகொள்ளப்பன்னினான் எங்கள் தளபதி சேகர். அப்போது தலைவரின் ஆனையிறவிற் கான வியூகம் முழுமை பெற்றது.

1998ல் 'ஓயாத அலைகள் - 02' இன் வெற்றிச் சாதனை யிற் சேகரின் பங்கை அறிந்த அவைவரிடமும் பாராட் டுப்பெற்று மகிழ்ட்சியில் திளைத்திருந்தவன், அடுத்து வந்த சில மாதங் களிற் படையணிச் சிறப்புத் தளபதி என்ற பொறுப்பிலிருந்து தலைவரினால் எடுக்கப் பட்டான். எதிரித் தளத்தில் எடுக்கப்பட்ட பொருட்களைத் தனது படையணித் படையணித் தேவைக்காக அனுமதி பெறாமல் வைத்திருந்தமைக்ககத் தண்டனை பெற்ற சேகர், ஓர் அணியின் தலைவனாக நியமனம் பெற்றுச் சிராட் டிக்குளம் காவலரண் பகுதிக்குச் செல்ல நேர்ந்தது. மெல்லிதயம் படைத்த சேகர் தான்விட்ட தவறுக்காக வருந்தினான். தலைவ ரால் தண்டிக்கப்படும்படியான தவறிழைத்தேனே எனக்கலங் கினான். சிறந்த போராளியான அவன் மீண்டும் படிநிலை வளர்ச்சியடைந்து தலைவர் அவர்களின் நம்பிக்கைபெற்று, கேணல் தீபனுக்குத் துணையாக தளபதியாக உருவெடுத்து, 2000ம் ஆண்டு 6ம் மாதம் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை யணியின் சிறப்புத் தளபதியாகத் தலைவரால் மீண்டும் நிய மிக்கப்பட்டான். அந்தப் புகழ்பூத்த படையணிக்கு மீண்டும் தலைமையேற்றவன் தலைவரின் எதிர்பார்ப்புக்களிற்கேற்பத் தன் படையணியைப் பெரும் தேவை ஒன்றிற்காகத் தயார்ப் படுத்தியிருந்தான்.

'ஓயாத அலைகள் - 04', மட்டுப்படுத்தப்பட்ட முதல்நாள் சண்டை ஓரளவு வெற்றிகரமாக முடிந்தது. ஆனால் ஒரு பணிக்காக சென்ற எமது அணியொன்று எதிரியின் சூற்றிவளைப்பிற்குள் அகப்பட்டிருந்தது. மீட்க எடுத்த முயற்சிகள் தோற்றுப்போயின. சேகர் உழலத் தொடங்கினான். சாப்பாடின்றி, நித்திரையின்றி மீண்டும் மீண்டும் முயன்று தோற்றும், விடாது முயன்று தன்



வீரர்களை அதிகாலை மீட்டெடுத்தபோது அவன் அடைந்த மகிழ்ச்சியை எழுதி உணர்த்திவிட முடியாது. தன் போராளிகள் மீது அவன் கொண்ட அன்பு சாதாரணமானதன்று. அதனால் தான் அவனது பிரிவை மரணகளத்துள் வாழும் போராளிக ளாற்கூடத் தாங்கமுடியவில்லை. மக்கள் தம் பிள்ளைகள், உறவுகளையெல்லாம் போராடவிட்டுவிட்டு, இந்த ஊர் உலகத் தில் உள்ள கோயில் குளமெல்லாம் ஏறித்திரிந்து, நெத்தி வைத்து, பசிகிடந்து, தவமிருந்து எங்காவது சண்டை மூண் டால் நித்திரை விழித்து எப்படியெல்லாம் பதைபதைப்பார்களோ அத்தனை அக்கறை தன் போராளிகள் மீது தளபதி சேகருக்கு இருந்தது.

"சேகரப்பா" என்று போராளிகள் தமக்குள்ள கதைக்கும் 25 வயதேயான 'குழந்தை'த் தளபதி தன் நாட்குறிப்பில் எழுதிவைத் திருந்தவை.

"தமிழீழம் கிடைத்தாப் பிறகு என்னோட நிண்டு சண்டை பிடிச்ச எல்லா பெடியள் வீட்டையும் போகவேணும். அவங்களின்ர அம்மா, அப்பா, சகோதரங்கள் எல்லோரோடையும் அவை யின்ர கவலைதீரக் கதைக்கவேணும் என்பதே என் ஆசை. அணித் தெய்வத்தின் சிந்தனைப் படியே எல்லாம் நடக்கும். அது நடக்கும் என்றே நம்புகின்றேன்" (10.06.1998).

'ஓயாத அலைகள் - 04', மீண்டுமொரு பாய்ச்சலுக்கான ஆயத்தம். எதை இழந்தும் இதை பிடித்தே தீருவேன் எனத் தலைவரிடம் சொல்லிவிட்டு வந்ததை தனது அருகிலிருந்த போராளிகளிடம் சொல்லியிருந்தான் சேகர். ஒழுங்குபடுத்தல் எல்லாம் முடிந்தது. காலை விடிந்து விட்டால் சமர் வெடிக்கப் போகிறது. தளபதி தீபனிடம் வந்தவன், "அண்ணை எல்லாம் சரி. எதுக்கும் ஒருக்கால் இண்டைக்கு இரவுக்குப்போய் பாதை யெல்லாத்தையும் வடிவாய்ப் பார்த்துவிட்டு வந்தானண்ணை நிம்மதியாய் இருக்கும்" எனக்கேட்டு அனுமதிபெற்று வந்தான்.

வேவுக்காக வெளிக்கிட்டுப் போனவன் சற்று நேரத்திலேயே வெடிவிழுந்து உடல் சல்லடையாகக் காயத்தோடு தூக்கிவரப் பட்டான். எப்படியாவது காத்துவிடவேண்டுமென்ற துடிப்போடு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டான். நான்கு நாட்களாக உயிருக்கு போராடிய அவன் இறுதியில் தன் தாய்நாட்டுக்காகத் தன்னை இழந்தான்.

நினைவுப்பகிர்வு:- அ.பார்த்திபன்.
வெளியீடு :நெருப்பாற்று நீச்சலின் பத்தாண்டு (பக்கம் 160-168)




# யாழ் பொது நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்டமையின் 44 ஆவது ஆண்டு நினைவேந்தல்

01.06.2025

யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்டமையின் 44 ஆவது ஆண்டு நினைவேந்தல் , யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நினைவேந்தலின்போது யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய செல்லப்பா மற்றும் யாழ்ப்பாண பொதுசன நூலகம் எரியூட்டப்பட்டதை அறிந்து உயிரிழந்த தாவீது அடிகளாருக்கும் அஞ்சலி செலுத் தப்பட்டது.

1981 மே 31 அன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் நடந்துகொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதைத் தொடர்ந்து அங்கு வன்முறை வெடித்தது. அன்றிரவு யாழ்ப்பாணத்தின் பிரபல வணிக நிறுவ னங்கள், கடைகள் என அனைத்தும் தீயிட்டு கொளுத் தப்பட்டன.

அன்று கொளுத்தப்பட்ட வன்முறைத் தீ மறுநாளும் கொழுந்து விட்டு எரிந்தது ஜூன் முதலாம் திகதியும் இரவு யாழ்ப் பாணத்திலிருந்த கடைகள் பலவும் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

அன்று முழுவதும் நிலவிய பதற்றச் சூழலை இந்தச் சம்பவம் மேலும் தீவிரப்படுத்தியது அதைத் தொடர்ந்துதான் அந்த வரலாற்றுக் கொடுமை அரங்கேறியது.

சிங்களப் பேரினவாத கும்பல் ஒன்று யாழ்ப்பாண பொதுசன நூலகத்தைத் திட்டமிட்டு கொளுத்தியது. தமிழ்ப் பண்பாட்டின் ஒரு பகுதி திரும்பப் பெற முடியாத வகையில் எரிந்து சாம்பலாகிப் போனது.



இருபதாம் நூற்றாண்டின் இன, பண்பாட்டு அழிப்புகளில் ஒரு மிகப்பெரும் வன்முறையாகக் கருதப்படும் யாழ்ப்பாண நூலக எரிப்பு நடந்து இன்றோடு 44 ஆண்டுகள் ஆகின்றன.








# அல்வாய் படுகொலையின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல்!

01.06.2025

வடமராட்சியை கைப்பற்றும் நோக்கில் சிறீலங்கா இராணுவத் தினரால் மேற்கொள்ளப்பட்ட ‘லிபரேசன் ஒப்பரேசன்’ இராணுவ நடவடிக்கையின் போது 1987 மே 26 - 31 வரை இடம்பெற்ற அல்வாய் படுகொலை நிகழ்வின் 38 ஆம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்வு வடமராட்சி - மாலைசந்தை பகுதியில் ஞாயிற் றுக்கிழமை (01) இடம்பெற்றுள்ளது.



‘லிபரேசன் ஒப்பரேசன்’ இராணுவ நடவடிக்கையின் போது ஆலயங்கள், பாடசாலைகளில் சென்று பொதுமக்களை பாதுகாப் பாக இருக்குமாறு இராணுவத்தினரால் உலங்குவானூர்தி மூலம் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன.

இதையடுத்து வடமராட்சி பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் ஆலய சூழலி லும் அடைக்கலமடைந்திருந்த நிலையில் சிறிலங்கா இரா ணுவத்தினரால் மேற்கொல்லப்பட்ட எறிகணைத் தாக்குதல் களில் நூற்றிற்கு மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டு பலர் காயமடைந்திருந்தனர்.

அத்துடன் வடமராட்சி பகுதியெங்கும் பரவலாக மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிச்சூடு, எறிகணைத் தாக்குதல், கையெறிகுண்டுத் தாக்குதல்களில் சிக்கி நூற்றுக்கணக்கான பொதுமக்கள் படு கொலை செய்யப்பட்டிருந்தனர்.

மைக்கல் விளையாட்டு கழகம், மைக்கல் நேசக்கரம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நினைவேந்தல் நிகழ்வில்,



படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலர்தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஈகைச் சுடரினை ஏற்றி மலர் தூவி வணக்கம் செலுத்தியதை தொடர்ந்து நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் மலர் வணக்கம் செலுத்தினர்.



“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

www.sangathamil.ca

# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 21ஆவது ஆண்டு நினைவேந்தல்

01.06.2025

சிறீலங்கா அரச இயந்திரத்தால் படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 21ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்று (31.05.2025) ஆம் திகதி மாலை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.





இந்நிலையில் படுகொலைக்காக நீதிகோரிய கவனயீர்ப்பு போராட்டமும் இடம்பெற்றுள்ளது.

நினைவு வணக்கத்தின் போது மறைந்த ஊடகவியலாளர் நடேசனின் தீருவுருவப் படத்துக்கு ஈகைச்சுடர் ஏற்றி, மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

இவ் வணக்க நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறீநேசன், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த 40 க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# யாழ். செம்மணியில் பாரிய மனித புதைகுழி இதுவரையில் 07 மண்டையோடுகள் மீட்பு

02.06.2025

யாழ்ப்பாணம் செம்மணி சித்துபாத்தி மயானத்தை மனித புதைகுழியாக பிரகடனப்படுத்த கோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சமர்பணங்களை முன்வைக்க சட்டத்தரணிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





செம்மணி - சிந்துபாத்தி மயானத்தில், அபிவிருத்திப் பணிகளுக்காக நல்லூர் பிரதேச சபையால் கடந்த பெப்ரவரி மாதம் குழிகள் வெட்டப்பட்டபோது, மனிதச் சிதிலங்கள் பல மீட்கப்பட்டிருந்தன.

அந்த மனிதச் மனிதச் சிதிலங்கள் 1995, 1996ஆம் ஆண்டுகளில் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி யாழ் . நீதவான் நீதிமன்ற நீதவான் மேற்கொண்ட ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து, அகழ்வுப் பணிகள் கடந்த மே மாதம் 15ஆம் திகதி ஆரம்பமானது.

இரண்டாம் நாளான 16ஆம் திகதி அகழ்வின், போது முழுமையான என்புத்தொகுதிக்கு மேலதிகமாக, மண்டையோடு ஒன்றும், கை எலும்பு ஒன்றும் மீட்கப்பட்டன. இவை அனைத்தும் அகழ்வு செய்யப்படும் பகுதியின் வெவ்வேறு இடங்களில் இருந்து மீட்கப்பட்டதால், அந்த இடம் மனிதப் புதைகுழியாக இருக்கலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டிருந்தது.

அந்நிலையில் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பெய்த மழை காரணமாக அகழ்வு பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு இருந்தன.

இந்நிலையில், இன்றைய தினம் திங்கட்கிழமை மீள அகழ்வு பணிகள் ஆரம்பமான போது, ஏற்கனவே அகழ்வு பணிகள் இடம்பெற்ற பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி அப்பகுதி சகதியாக காணப்பட்டமையால், பிறிதொரு பகுதியில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன் போது, ஐந்து மண்டையோடுகளுடன், எலும்பு கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இது வரையிலான அகழ்வு பணிகளில் 07 மனித மண்டையோடுகள் மீட்கப்பட்டுள்ளதுடன், எலும்பு கூட்டு எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன. மூன்று மண்டையோடுகளுக்கு மேல் ஒரு பகுதியில் அடையாளம் காணப்பட்டால் அப்பகுதியினை மனித புதைகுழி என பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.



அதனால், அப்பகுதியை மனித புதைகுழி என பிரகடனப்படுத்துமாறு யாழ். நீதவான் நீதிமன்றில் சமர்ப்பனங்களை முன்வைக்க உள்ளதாக சட்டத்தரணிகள் தெரிவித்துள்னர்.

www.sangathamil.ca

# திருகோணமலையில் காணி அபகரிப்பு, சைவ ஆலயங்கள் மீதான அடக்குமுறையைக் கண்டித்து போராட்டம்

02.06.2025



வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் காணி அபகரிப்பு மற்றும் இந்து ஆலயங்கள் மீதான அடக்குமுறையினைக் கண்டித்து திங்கட்கிழமை (02) மாலை 5.30 மணிக்கு திருகோணமலை சிவன் கோயிலடி முன்றலில் சமூக செயற்பாட்டாளர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் கூறுகையில்,

ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறாது என்பது இந்த நாட்டின் சாபக்கேடு. நீண்டகாலமாக சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களால் தமிழர்களின் காணி அபகரிப்பு, சைவத் தமிழரின் தலங்களை அழித்தல், நாடு முழுவதும் இருக்கும் தமிழர் தொல்லியல் சின்னங்களை அழித்தல் மற்றும் உருமாற்றம் செய்தல், இந்துக்களின் கோயில்களின் வழிபாடுகளைத் சட்டத்திற்கு முரணான வகையில் தடுத்தல், ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை அபகரித்தல் எனும் அத்துமீறல்கள் தொடர்கதையாகவே செல்கிறது.

ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே சட்டம் எனக் கூறி, பெரும் பிரச்சாரம் செய்துவந்த ஜேவிபி அரசு முன்னைய ஆட்சியாளர்கள் செய்த சட்டவிரோதப் பணிகளையே இன்னும் தொடர்ந்து வருகிறது.

குறிப்பாக இந்த ஆட்சியாளர்களின் காலத்தில் உகந்தையில் புத்தர் சிலை நிறுவுதல் ஒரு இன மத விரோதச் செயலாகும்.

அத்துடன் நீண்ட நாட்களாக தொடரும் சமய வழிபாட்டுத்தலங்களின் பிரச்சினைகளுக்கு எந்த தீர்வினையும் தராமல் அடாவடியில் ஈடுபட்டு வருகிறது.

கன்னியா சிவனாலய வழிபாட்டு முடக்கம், திருக்கோணேச்சர ஆலயத்தில் காண்டாமணி நிறுவுவதற்கு அனுமதி மறுப்பு, வெடுக்குநாறி மலையில் வழிபாட்டுக்குத் தடை, குருந்தூர் மலையில் தடையினை மீறிய புத்தவிகாரை, தையிட்டி சட்டவிரோத விகாரைப் பிணக்கைத் தீர்க்காமை என பல நூறு சமயத் தலங்களின் பிரச்சினைகள் தொடர்பான பட்டியல் நீள்கிறது என்று குரல் எழுப்பினர்.









# மன்னார் சதொச மனிதப்புதைகுழியை மூடுவதற்கு இடைக்காலத் தடை

## வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி

03.06.2025



மன்னார் 'சதொச' மனிதப்புதைகுழி மூடப்படுவதை எதிர்த்து வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களால் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனு மீதான விசாரணைகளை அடுத்து, வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி அம்மனிதப் புதைகுழியை மூடுவதற்கு இடைக்காலத்தடை விதித்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சுகாதார சீர்கேடுகள் ஏற்படக்கூடும் என்பதாலும், மனித எச்சங்கள், சான்றுப்பொருட்கள் பல எடுக்கப்பட்டிருப்பதனால் அங்கு அகழ்வுப்பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளத் தேவையில்லை என்பதாலும் அகழப்பட்ட மன்னார் 'சதொச' மனிதப்புதைகுழியை மூடுமாறு கடந்த மாதம் 8 ஆம் திகதி மன்னார் மாவட்ட நீதவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இருப்பினும் அதனை எதிர்த்து சட்டத்தரணி ரட்ணவேல் ஊடாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனு நேற்றைய தினம் வவுனியா மாவட்ட மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இம்மனுவில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் என்பன பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டிருந்த நிலையில், அழைப்பாணை கிடைக்கப் பெறாததன் காரணமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை. அதேவேளை காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் சார்பில் சட்டத்தரணிகளான ஜெகநாதன் தற்பரன் மற்றும் ரஷ்னா முபாரக் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

அதன்படி இம்மனிதப்புதைகுழியை மூடுவது தொடர்பில் அதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் அனுமதி பெறப்படவில்லை எனவும், அம்மனிதப் புதைகுழியில் இருந்து மேலும் மனித எச்சங்கள் அல்லது சான்றாதாரங்கள் கண்டறியப்படாது என்ற உத்தரவாதம் இல்லை எனவும் சுட்டிக்காட்டி, ஆகையினால் அதனை மூடுவதற்கு இடமளிக்கக்கூடாது என வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் சார்பில் கோரப்பட்டது.

அதேவேளை காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் சார்பில் வாதங்களை முன்வைத்த சட்டத்தரணி தற்பரன், இம் மனிதப்புதைகுழியை மூடுவதாயின், அதற்குரிய நடைமுறைகள் மற்றும் சர்வதேச நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும் எனவும், அத்தோடு இது உணர்வுபூர்வமான விடயம் என்பதால் பாதிக்கப்பட்ட தரப்பினரின் ஒப்புதல் பெறப்படவேண்டும் எனவும் மன்றில் சுட்டிக்காட்டினார்.

அதுவரை அம்மனிதப்புதைகுழியை உரியவாறு பாதுகாப்பது அவசியம் எனவும், கிடைக்கப்பெற்ற சான்றுகளைக்கொண்டு இவ்வழக்கை முடிவுறுத்துவது பற்றிய நிலைப்பாட்டை எட்டியதன் பின்னரே மனிதப்புதைகுழியை மூடுவது உசிதமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இருதரப்பினரதும் வாதங்களை ஆராய்ந்த மேல் நீதிமன்ற நீதிபதி, மன்னார் 'சதொச' மனிதப்புதைகுழியை மூடுவதற்கு இடைக்காலத்தடை விதித்து உத்தரவு பிறப்பித்தார்.

மேலும் இதுகுறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசித்து பூரண அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

# யாழ். செம்மணி மனித புதைகுழி இன்று ஒரு முழு மனித எலும்புக் கூட்டுத் தொகுதி மீட்பு

03.06.2025

யாழ்ப்பாணம் செம்மணி சித்துபாத்தி மயான மனித புதை குழியில் இருந்து, ஒரு முழு மனித எலும்புக் கூட்டுத் தொகுதி



செவ்வாய்க்கிழமை (03) முழுமையாக மீட்கப்பட்டுள்ளது.



செம்மணி - சிந்துபாத்தி மயானத்தில், அபிவிருத்திப் பணிகளுக் காக நல்லூர் பிரதேச சபையால் கடந்த பெப்ரவரி மாதம் குழிகள் வெட்டப்பட்டபோது, மனிதச் சிதிலங்கள் பல மீட்கப்பட்டிருந்தன.

அதனை அடுத்து, அகழ்வுப் பணிகள் கடந்த மே மாதம் 15ஆம் திகதி ஆரம்பமானது. இரண்டாம் நாளான 16ஆம் திகதி அகழ் வின், போது முழுமையான என்புத்தொகுதிக்கு மேலதிகமாக , மண்டையோடு ஒன்றும், கை எலும்பு ஒன்றும் அடையாளம் காணப்பட்டது.

இந்நிலையில், நேற்றைய தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற அகழ்வு பணிகளின் போது, ஐந்து மண்டையோடுகளுடன் , எலும்பு கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதன் அடிப்படை யில் அவை, அவசர அவசரமாக புதைக்கப்பட்டவையாக இருக்கலாம் எனும் சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

இது வரையிலான அகழ்வு பணிகளில் 07 மனித மண்டை யோடுகளுடன் கூடிய, எலும்பு கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டிருந்தன.

அந்நிலையில் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை அடை யாளம் காணப்பட்ட மனித எலும்பு கூட்டுத் தொகுதியில் ஒரு எலும்பு கூட்டுத் தொகுதி முழுமையாக மீட்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து வரும் நாட்களில் அகழ்வு பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருகோணமலை – குச்சவெளியில் சிறீலங்கா கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் மீனவர் படுகாயம்!

03.06.2025

திருகோணமலை - குச்சவெளிப் பிரதேசத்திலிருந்து சிறீலங்கா கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மீனவர் ஒருவர் படுகாயமடைந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை மலை (03.06.2025) இடம்பெற்றுள்ளது.



குறித்த சம்பவத்தில் குச்சவெளி ஜாயாநகர் கிராமத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே படுகாயமடைந்து திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

குச்சவெளி கடற்பரப்பில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவேளை சுருக்கு வலையை பயன்படுத்தி மீன் பிடித்த குற்றச்சாட்டில் சிறீலங்கா கடற்படையினரால் சிலர் கைது செய்யப்பட்டு



பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் படகு மற்றும் சுருக்கு வலைகளும் சிறீலங்கா கடற்படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளது.

சுருக்கு வலையை பயன்படுத்தி சுமார் 7 கிலோ மீற்றருக்கு அப்பால் மீன்பிடிக்கக்கூடிய சட்டம் இருப்பதாகவும் அதை மீறி மீன்பிடித்த மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இந்த நிலையிலேயே துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள் ளதாகவும் தெரிய வருகின்றது. இச் சம்பவத்தின் பின்னர் அப்பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# மாணவி கிருசாந்தி பாலியல் வன்முறை படுகொலை வழக்கு: கொலையாளிகள் மனு நிராகரிப்பு

03.06.2025

மாணவி கிருசாந்தி குமாராசுவாமி பாலியல் வன்முறை படுகொலை வழக்கில் தண்டனை வழங்கப்பட்ட ஐவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல்மனுவை உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு இன்று ஏகமனதாக நிராகரித் துள்ளதுடன் மேல்முறையீடு செய்வதற்கும் அனுமதிமறுத் துள்ளது.

முதல் குற்றவாளி சோமரட்ண ராஜபக்ச உட்பட தண்டனை வழங்கப்பட்டுள்ள ஐவர் தாங்கள் பல வருடங்களாக மரண தண்டனை கைதிகளாக உள்ளதாக தெரிவித்து அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

தங்களின் மரணதண்டனையை நிறைவேற்றால்,தங்களிற்கு பொதுமன்னிப்பை வழங்கவேண்டும் அல்லது தங்களிற்கு விதிக்கப்பட்ட தண்டனையை ஆயுள்தண்டனையாக மாற்ற வேண்டும் என அவர்கள் தங்கள் மனுவில் தெரிவித் திருந்தனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டிசில்வா அவர்களின் சார்பில் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

மரணதண்டனை விதிக்கப் பட்டு நீண்டகாலமாக சிறை யில் அடைக்கப்படுவது கொடூரமானது மனிதா பிமானமற்றது என தங்கள் மனுவில் தெரிவித்திருந்த அவர்கள் இது தங்கள் அடிப் படை உரிமைகளை மீறுகின்றது என குறிப்பிட் டிருந்தனர்.



சிறைச்சாலை ஆணை யாளர் நாயகம் சார்பில் ஆஜராகிய சிரேஸ் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் இந்த மனுவில் தெரிவிக்கப் பட்டுள்ள விடயங்கள் குறித்து கடும் ஆட்சேபணைகளை முன் வைத்தார்.

பொதுமன்னிப்பு வழங்குவது என்பது முற்றுமுழுதாக ஜனாதி பதியின் விருப்பமே எந்தவொரு குற்றவாளியும் அதனை சட்ட பூர்வ உரிமையாக கருதமுடியாது என அவர் தெரிவித்தார்.

இந்த மனுகாலக்கெடுவிற்கு உட்பட்டது மேலும் மனுதாரர்கள் நல்லெண்ணத்தை உருவாக்கும் விதத்தில் செயற்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நீதிபதிகள் குழுவினர் இந்த ஆட்சேபனையை ஏற்றுக்கொண் டதுடன் மனுவை நிராகரிக்க தீர்மானித்தனர்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் விசாரணை கோரி சிறீலங்கா நீதியமைச்சுக்கு கடிதம்!

03.062025

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்களில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட தரப்பாக இருந்தும் கூட, குறித்த விவகாரத்தில் அரசாங்கம் அக்கறையின்றி செயற்பட்டு வருவதாக காணாமல் போனோர் குடும்ப ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது.

தெற்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சார்பில் இயங்கி வரும் காணாமல் போனோர் குடும்ப ஒன்றியம் சிறீலங்கா நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இடைக்கால நிவாரணக் கொடுப்பனவாக தலா 2 இலட்சம் ரூபாவை வழங்குவதற்கும், காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் உரிய விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பதாக அமைச்சரவை ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும் குறித்த கடிதத்தின் ஊடாக நீதியமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட குறைநிரப்புப் பிரேரணையில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கான இடைக்கால நிவாரணக் கொடுப்பனவை வழங்கல் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளின் செயற்திறனை மேம்படுத்தல் என்பவற்றுக்காக 14 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

இந்த நிதி பாதிக்கப்பட்ட 5000 குடும்பங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் வழங்குவதற்குப் போதுமானது எனினும், கடந்த 6 மாதகாலத்தில் இடைக்கால நிவாரணக் கொடுப்பனவை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தவறியிருக்கின்றது என்று அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் கடந்த 6 மாதகாலத்தில் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் ஒரு விசாரணையைக் கூட மேற்கொள்ளவில்லை. இவ்விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான செயன்முறை தொடர்பில் நீதியமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு ஒப்புதல் அளிப்பதை அமைச்சரவை தாமதப்படுத்தியிருப்பதே இதற்குரிய பிரதான காரணமாகும் என்று அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# கிளி. பூநகரியில் வாள்வெட்டுத் தாக்குதலில் உயிரிழந்த இளைஞனுக்கு நீதி கோரி மக்கள் போராட்டம்

03.06.2025

கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பிராய் குளத்துக்கு அருகில் கடந்த 31ஆம் திகதி இனந்தெரியாத நபர்களின் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்த, பூநகரி செம்மன்குன்று பகுதியைச் சேர்ந்த நபரின் இறுதிக்கிரியை இன்று (3) நடைபெற்ற நிலையில், இறுதி ஊர்வலத்தின்போது இக்கொலைக்கு நீதி கோரி பிரதேச மக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.






இதன்போது குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனை வழங்குமாறு வலியுறுத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள், பூநகரி பொலிஸ் நிலைய பொலிசாரிடம் பொது மக்களின் கையொப்பம் அடங்கிய மகஜரை கையளித்தனர்.

"வாள் வெட்டுக்குழுக்களை சட்டத்தின் முன் நிறுத்துங்கள்", "உயிரை பறித்தவரை ஒருபோதும் மன்னிக்காதே போதையை கூண்டோடு ஒழிப்போம்" போன்ற பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நான்கு பேர் பூநகரி பொலிசாரினால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரையில் ஒரு சிசுவின் எலும்புத் தொகுதி உட்பட 13 எலும்புத் தொகுதிகள் அவதானிப்பு

05.06.2025

யாழ்ப்பாணம் செம்மணி - சித்துப்பாத்தி இந்துமயான மனிதப்புதைகுழியில் இருந்து ஒரு சிசுவின் எழும்புத்தொகுதி உட்பட இதுவரை 13 எலும்புத்தொகுதிகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

இதனால், இந்தப் புதைகுழி மிகப்பெரியதாக இருக்கலாம் என்ற அச்சம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்தில், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தற்போது அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

பணிகளின் ஐந்தாம் நாளான நேற்றையதினம் புதன்கிழமை சிறிய எலும்புத்தொகுதியொன்று அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. முகத்தோற்ற அளவில் அது ஒரு வயதுக்கு உட்பட்ட சிசுவுடையதாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

அத்துடன் இதுவரை 13 எலும்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் ஐந்து தொகுதிகள் முற்றாக மீட்கப்பட்டுள்ளதுடன், ஏனையவற்றை அகழும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை ஆடைகள் எவையும் மீட்கப்படவில்லை. அத்துடன், வேறு சில என்புச் சிதிலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.



**மக்கள் மத்தியில் விரக்தியும், சோர்வும், குழப்பமும், நம்பிக்கையின்மையும் தோன்றும் பொழுது ஒரு தேசத்தின் போராட்ட சக்தி வலு இழக்கின்றது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# தமிழர்களின் பூர்வீக காணிகளைத் திருடிவிட்டு விடுவிக்க மறுக்கும் வன இலாகா சிங்களக் குடியேற்றத்திற்கும், படைத்தளங்கள் அமைக்கவும் காடுகள் விடுவிக்கப்படுவதாக ரவிகரன் எம்.பி. குற்றச்சாட்டு

03.06.2025

வனவளத் திணைக்களம் தமிழ் மக்களின் பூர்வீக குடியிருப்பு மற்றும், விவசாயக் காணிகளை அடாவடித்தனமாக அபகரித்துவிட்டு, அந்தக் காணிகளை விடுவிப்பதற்கு மறுப்பதாகவும், அதேவேளை சிங்களக்குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காகவும் படைத்தளங்களை அமைப்பதற்காகவும் காடுகளை வனவளத் திணைக்களம் விடுவிப்பதாகவும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

குறிப்பாக முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக ஏ.சி.பாம் கிராமத்தை வனவளத் திணைக்களம் அபகரித்துவிட்டு விடுவிக்க மறுப்பதை இதன்போது குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், வவுனியா வடக்கில் போகஸ்வெவ எனும் சிங்களக்குடியேற்றத்தை ஏற்படுத்த 2000 ஏக்கர் ஒதுக்கக்காடு வனவளத் திணைக்களத்தால் விடுவிக்கப்பட்டுள்ளதையும், ஒட்டுசுட்டான், அம்பகாமம் பகுதியில் விமானப் படைத்தளம் அமைப்பதற்கு சட்டவிரோதமாக ஒதுக்கக்காடுகள் அழிக்கப்பட்டுள்ள விடயத்தையும் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை ஊழலை ஒழிப்போமெனும் கோசத்துடன் ஆட்சிபீடமேறிய இந்த அரசு, கடந்தகாலத்தில் சட்டவிரோதமாக இடம்பெற்ற ஒதுக்கக்காடு அழிப்புச் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பிலும், கடந்தகாலத்தில் முறையற்ற தீர்மானங்களை எடுப்பதற்கு வற்புறுத்திய அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பிலும் கவனஞ்செலுத்த வேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் 03.06.2025இன்று இடம்பெற்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்தசில நாட்களில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர்பிரிவில் நான் மேற்கொண்ட களவிஜயத்தின்போது, அரசாங்கத்தின் சிலதிணைக்களங்கள் நூதனமான முறையில் தமிழ் மக்களின் காணிகளை திருடிவருவதை அவதானிக்கமுடிந்தது.

குறிப்பாக வனவளத்திணைக்களம், தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகிய திணைக்களங்கள் நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு முரணாக பொதுமக்களின் காணிகளைத் திருடிவருகின்றார்கள். பொதுமக்களின் குடியிருப்புக்காணிகளையும், அவர்களின் வயல் நிலங்களையும், வர்த்தமானி அறிவித்தல் முலம் சட்டத்திற்கு முரணானவகையில் வன ஒதுக்குப்பிரதேசங்களாக, தொல்லியல் ஒதுக்குப் பிரதேசங்களாக ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ளார்கள்.

இதனால் இங்குள்ள மக்கள் தமது பூர்வீக குடியிருப்புக்களில் குடியிருக்கமுடியாமல், வயல் நிலங்களில் பயிரிட முடியாமல் இத்திணைக்களங்களால் துரத்தியடிக்கப்படுகின்றார்கள். இதனால் அவர்களுடைய வாழ்வாதாரம், அவர்களுடைய அன்றாட உணவுத்தேவை, அவர்களுடைய பிள்ளைகளின் கல்வி என்பன மறுக்கப்படுகின்றன.

ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட தண்டுவான் கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஏ.சி.பாம் என்ற கிராமத்தில் 47குடும்பங்கள் வசித்துவந்த நிலையில், 1997இல் ஜெயசிக்குறு இராணுவ நடடிக்கையின்மூலம் இவர்கள் இடம்பெயர்ந்தனர்.

இன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் யாவும் பூர்த்தியடைந்து விட்டதாக கூறுப்படுகின்ற நிலையில், இம்மக்கள் இன்னும் தங்கள் சொந்தக்கிராமத்தில் மீள்குடியேற்றப்படவில்லை. காரணம் கடந்த 2012ஆம் ஆண்டு இக்கிராமம் தண்டுவான் ஒதுக்கக்காடு என வனவளத் திணைக்களத்தால் சட்டத்திற்கு முரணாக வர்த்தமானிமூலம் அறிவிக்கப்பட்டிருக்கின்றமையாகும்.

ஒரு பிரதேசத்தை வனஒதுக்காக வர்த்தமானிமூலம் அறிவித்தல் செய்யும்முன், அதுபற்றி அப்பிரதேச மக்களுக்கு பிரதேச செயலாளரூடாக அறிவிக்கவேண்டும். இதுதொடர்பான கருத்துக்கள் மக்களிடம் பெறப்படவேண்டும். இவற்றுக்கெல்லாம் முரணாக, இவ்வாறெல்லாம் செய்யாமல் இப்பிரதேசம் தண்டுவான் வனஒதுக்குப்பிரதேசமாக நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டவிதிகளுக்கு புறம்பாக வர்த்தமானப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திருட்டுத் திணைக்களம் இப்பிரதேசத்தை தண்டுவான் வனஒதுக்குப் பிரதேசமாக 2012இல் வர்த்தமானி அறிவித்தல் செய்யும்முன்பு, 1979ஆம் ஆண்டில் இப்பிரதேசம் இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் அளவீடுசெய்யப்பட்டு, எல்லைக் கற்கள் நாட்டப்பட்டு, நிலஅளவை வரைபடம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. றொப்போப் பிபி 66 என்ற வரைபடத் தொகுதியினுள் இவ்வரைபடம் உள்ளது.

இந்தக்கிராமத்தைத் திட்டமிட்டு திருடும்போது வனவளத் திணைக்களத்திற்கு இது தெரிந்திருக்கவில்லை. இதேபோலத்தான் சட்டத்திற்கு முரணாக வனவளத்திணைக்களம் தமிழ் மக்களின் காணிளை வனஒதுக்குப் பகுதியாக வர்த்தமானி மூலம் அறிவித்துவருகின்றார்கள்.

ஒதுக்காட்டில் அமைந்துள்ள சித்தாத்தன் குளம் எனப்படும் தமிழ் மக்களின் பூர்வீக விவசாயநிலங்களை விடுவிக்க வனவளத் திணைத் திணைக்களம் இதுவரை இணங்கவில்லை.

வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவில், வனஒதுக்கு பிரதேசங்களை சிங்களமக்களைமட்டுமே கொண்டகுடியேற்றத் திட்டமான போகஸ்வெவ உருவாக்குவதற்காக 2000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை வனவளத்திணைக்களம் விடுவித்துள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் பிரவின் அம்பகாமம் பகுதியில் இலங்கை விமானப்படையின் விமானப்படைத்தளம் அமைப்பதற்கு, ஒதுக்கப்பட்ட வனப்பகுதியிலிருந்து 8000ஏக்கர் வனப் பகுதிகள் துப்பரவு செய்யப்பட்டுள்ளன. வனவளத்திணைக்களத்தின் அனுமதி இன்றி, குறித்த சட்ட ஏற்பாடுகள் எவற்றையும் பின்பற்றாது, இந்த அடர்வனப்பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளதுடன், இங்குள்ள பெறுமதியான மரங்கள் இரகசியமாக விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஊழலுக்கு எதிரான கோசத்துடன் ஆட்சிக்கு வந்துள்ள அரசு இதுதொடர்பில் வெளிப்படையான விசாரணைகள் மேற்கொள்ளவேண்டும்.



சமகாலத்தில் நாம்மிகவும் வேதனைப்படவேண்டிய விடயம் என்னவெனில் வனவளத்திணைக்களம், வனஜீவராசிகள் போன்ற திருட்டுத் திணைக்களங்களில் உயர்அதிகாரிகள் நீதிபதிகளாக மாறிவிட்டனர். வடக்கு மாகாணத்திலுள்ள மாவட்டச்செயலகங்கள்தோறும் வனஒதுக்குப் பிரதேசங்களை விடுவிப்பதாகக்கூறி விசாரணை மேற்கொண்டு வருகின்றார்கள்.

திருடனே களவை விசாரிக்கும் நகைப்பிற்கிடமான இந்த நீதி வழங்கும் பொறிமுறை ஊழலுக்கு எதிரான கோசத்துடன் ஆட்சிபீடம் ஏறிய இந்த அரசிற்கு பேரவமானமாகும்.

இவ்விசாரணை மேற்கொள்ளவரும் அதிகாரிகள் கடந்தகால அரசாங்கங்களின் காலத்தில் ஊழலில் மூழ்கித்திளைத்தவர்களாவர். இவர்கள் இங்குள்ள ஒதுக்கு வனப்பகுதிகளை விடுவிப்பது தொடர்பில் பொய்யான தகவல்களை அரசிற்கு வழங்கி வருவதுடன், மாவட்டச்செயலாளர் உட்பட, தமிழ் அதிகாரிகளையும் இப்பொய்த்தகவல்களை ஏற்றுக்கொள்ளும்படி அதிகாரத் தோரணையில் மிரட்டியும் வருகின்றனர்.

கடந்த 2023.06.01இல் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், பிரதேசச்செயலாளர், வனவளத்திணைக்களத்தின் அதிகாரிகள் ஆகியோருடன் வனவளப்பகுதிகளை விடுவிப்பதாகக்கூறி கூட்டமொன்றை ஏற்படுத்திய வனவள மற்றும், வனஜீவராசிகள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி சமந்தி, வனவள மற்றும், வனஜீவராசிகள் திணைக்களத்தின் முறையற்ற தீர்மானங்கள் சிலவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தியதுடன், அத்தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் ஒரு அங்குலம் நிலத்தைக்கூட விடுவிக்கமுடியாதென அச்சுறுத்தியுள்ளார். கடந்த அரசாங்கங்களின் காலத்தில் கடமையாற்றிய இவர்களைப்போன்ற அதிகாரிகளை இந்த அரசாங்கம் எச்சரிக்கையுடன் கையாளவேண்டும். நாங்கள் வனப்பகுதிகளை விடுவித்துத் தாருங்கள் எனக் கேட்டு, காடழிப்பிற்கு வழி கோரவில்லை.

எங்கள் வீடுகளையும், வயல்களையும், தெருக்களையும் விடுவியுங்களென்றே கேட்கின்றோம். எமது மக்களின் நிலங்களை விடுவியுங்கள். எமது மக்கள் உழைப்பிற்குப் பழக்கப்பட்டவர்கள். உழைத்துவாழ்வார்கள். நிலங்களை விடுவிக்காத வரை அம்மக்களின் அன்றாட வாழ்விற்கான நிவாரணங்களை வழங்குங்கள். அவர்களின் குழந்தைகள் பசியுடன் இருக்கின்றனர் - என்றார்.

**தமிழர் தேசம்**

**போரை விரும்பவில்லை. வன்முறையை விரும்பவில்லை.**

**அகிம்சை வழியில் அமைதி வழியில் நீதி வேண்டி நின்ற எம் மக்களிடம் சிங்கள தேசம் தான் போரைத் திணித்திருக்கிறது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.ca**

# குச்சவெளியில் மீனவர் மீது துப்பாக்கிச்சூடு; திருகோணமலையில் மக்கள் எதிர்ப்புப் போராட்டம்

04.06.2025

திருகோணமலை குச்சவெளி கடற்பரப்பில் வைத்து மீனவர் ஒருவர் சிறீலங்கா கடற்படையினரால் சுடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து குச்சவெளிப் பகுதியில் இன்று புதன்கிழமை (04.06.2025) காலை பொது மக்களினால் எதிர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.





குச்சவெளி கடற்பரப்பில் நேற்று முந்தினம் மாலை மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாகவும், இதன்போது குச்சவெளி ஜாயாநகரைச் சேர்ந்த 23 வயதுடைய மீனவர் படுகாய மடைந்து திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், இதுபோன்ற மிலேச்சுத்தனமான தாக்குதலை கண்டித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட் டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்போது "பாமர மக்கள் மீது கடுமையான சட்டத்தை திணிக்காதே", தீவிரவாதிகள் இல்லை நாம் மீனவத் தொழிலாளர்", "அடிக்காதே அடிக்காதே மீனவர் வயிற்றில் அடிக்காதே" போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோகங்களை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# செம்மணி புதைகுழியை பாரிய மனிதப் புதைகுழியாக பிரகடனப்படுத்த வேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

04.06.2025

செம்மணி புதைகுழி அகழ்வுப் பணிக்கு போதிய நிதி இல்லாமல் அந்த நடவடிக்கைகளை நிறுத்தப்போகின்றனர். அந்த புதை குழியை பாரிய மனித புதைகுழியாக பிரகடனப்படுத்த வேண்டும். அதற்காக நிதியை ஒதுக்க வேண்டும். உங்களுக்கு தேவையென்றால் வெளிநாடுகளில் இருந்து நாங்கள் நிதியை பெற்றுத் தரவும் உதவலாம் என தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை (4) நடைபெற்ற 2023ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

யாழ்ப்பாணம் செம்மணியில் பாரிய மனித புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இங்கே எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. சர்வதேச ரீதியிலான பாரிய மனித புதைகுழிகள் என்று கூறும் தன்மையை கொண்டுள்ளது. இங்கே எவ்வித பாதுகாப்பும் போடப்படவில்லை. மக்கள் அங்கு சென்று எதனை யும் செய்யலாம் என்பதை போன்று உள்ளது. அந்த புதைகுழி தொடர்பான நடவடிக்கைகளுக்ககாக போதுமான நிதி இல்லை. அங்கு அகழ்வுகளை நடத்துவதற்கும் சட்ட மருத்துவ அதிகாரி விடயங்களை செயற்படுத்துவதற்கும் நிதி போதுமாக இல்லை. ஒதுக்கப்பட்டுள்ள நிதி 20 நாட்களுக்கும் போதுமானது அல்ல.

போதிய நிதி இல்லாமல் அந்த நடவடிக்கைகளை நிறுத்தப் இதனால் அந்த புதைகுழியை பாரிய மனித புதைகுழியாக பிரகடனப்படுத்த வேண்டும். அதற்காக நிதியை ஒதுக்க வேண்டும். உங்களுக்கு தேவையென்றால் வெளிநாடுகளில் இருந்து நாங்கள் நிதியை பெற்றுத் தரவும் உதவலாம்.

1996 காலப்பகுதியில் அங்கே நடந்த கிருஷாந்தி கொலை வழக்கின்போது 600 பேர் அங்கிருந்து காணாமல் போனமை தெரியவந்தது. இதனால் உண்மைகளை கண்டறிய வேண்



டும். இதற்காக நிதியை ஒதுக்குமாறு நாங்கள் கோருகின்றோம். இதனை பாதுகாப்பதற்காகவும், சாட்சியங்களை பாதுகாப்பதற் காகவும் நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம் என்றார்.

# "எங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்"

## இலங்கை தாய் மொழி ஆசிரியர் சங்கம்

05.06.2025

ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தாய்மொழி ஆசிரியர் சங்கத்தினர் இன்றைய தினம் புதன் கிழமை (4) வட மாகாண ஆளுநர் தலைமைச் செயலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன் னால் ஆரம்பமாகி, ஆளுநர் செயலகம் வரை சென்ற பின்னர், அப்பேரணியினரை ஆளுநர் செயலகத்துக்குள் அனுமதிக் காமல் காவல்துறையினர் வாசலில் தடுத்து நிறுத்தினர்.

பின்னர், போராட்டத்தில் கலந்துகொண்ட சிலர் மட்டும் உள்ளே சென்று ஆளுநருடன் பேசலாம் என தெரிவிக்கப்பட்ட நிலை யில், மட்டுப்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் ஆளுநரை சந்திப்பதற் காக உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அதனையடுத்து, ஆளுநர் வேதநாயகனை சந்தித்த பேரணி யினர் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மஜகர் ஒன்றை ஆளுநரிடம் கையளித்தனர்.

அதன் பின், ஊடகங்களுக்கு அவர்கள் தெரிவிக்கையில்,

யாழிலிருந்து வெளி மாகாணங்களுக்கு ஆசிரியர் சேவையில் ஈடுபட்டவர்களுக்கு, மீண்டும் வெளி மாவட்டங்களுக்கு பணி இடமாற்றம் வழங்கப் படுகிறது.




இதன்போது 'எங்கள் பிள்ளை களின் பாதுகாப்பை உறுதி செய்!', 'வெளிமாகாணம் என்ன வேறு 'நாடா!', 'ஆசி ரியர் இடமாற்றம் மூலம் குடம் பத்தை சிதைக்காதே!', 'சேவை யின் தேவை கருதிய இடமாற்றத்தில் ஆசிரியர் களின் அவர்களின் உறவினர் களின் மருத்துவ சான்றி தழைக் கருத்தில் கொள்!', 'இடமாற்றக் கடிதத்தில் காலத்தை வரையறை செய்!' ஆகிய கோஷங்களை எழுப் பியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கம் சார்பாக ஆறு பிரதி நிதிகள் ஆளுநரைச் சந்தித்து மனுவொன்றைக் கையளித் தனர்.

இவ்விடயங்கள் தொடர்பில் பரிசீலனை செய்து விரைவில் சாதகமான முடிவினை அறிவிப்பதாக ஆளுநர் தெரிவித்ததாக குறிப்பிட்டனர்.

www.sangathamil.ca

# குருந்தூர் மலை விவசாயிகளின் கைது மற்றும் உகந்தைமலை பௌத்த ஆக்கிரமிப்பு தொடர்பான ஊடக அறிக்கை

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

04.06.2025

தமிழர் தேசத்தில் ஆண்டாண்டு காலமாகத் தொடர்ந்துவரும் சிங்கள பௌத்த பேரினவாத அரசின் திட்டமிடப்பட்ட தொல்லியல் ரீதியான ஆக்கிரமிப்புக்கள் துரிதமடைந்து வருகின்றது. வடக்குக் கிழக்கில் தமிழர் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கோடு அரங்கேறிக் கொண்டிருக்கும் இக்கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு வடிவங்களை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம். நல்லிணக்கம் மற்றும் மாற்றமெனும் போர்வையில் நிலைகொண்டுள்ள சிங்களபௌத்த பேரினவாதத்தின் போலியான முகத்திரைகள் வடக்குக் கிழக்கில் தொல்லியல் ரீதியான ஆக்கிரமிப்புக்களாலும் தமிழ்த் தேசிய இனத்தின் மீதான திட்டமிடப்பட்ட கைதுகளாலும் அம்பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

அவ்வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர் மலைப் பிரதேசத்தில் அமைந்திருக்கக்கூடிய விவசாய நிலங்களில் நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்கள் தன்னிறைவுப் பொருளாதாரமான விவசாயத்தினை மேற்கொண்டுவருகின்றனர். 2025.05.10 சனிக்கிழமையன்று முல்லைத்தீவின் குமிழமுனைப்பிரதேசத்திற்கு அண்மித்துள்ள தண்ணிமுறிப்புக் கிராமத்தில் தங்களுடைய சொந்தக்காணியில் பயிர்ச்செய்கைக்காக உழவு இயந்திரத்தின் மூலம் நிலத்தினைப் பண்படுத்தி உழவில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இரண்டு விவசாயிகள் தொல்பொருள் தளத்தைச் சேதப்படுத்தினார்கள் என்று பௌத்த துறவி ஒருவரினால் தொல்பொருள் திணைக்களத்துக்கு அளிக்கப்பட்ட புகாரினைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டனர். 25 நாட்களினை கடக்கின்ற நிலையில் அவர்களுக்கு பிணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

உண்மையில், தொல்பொருள் பிரதேசத்துக்குள் அத்துமீறி நுழைந்ததாகப் பொய்யான ஒரு முறைப்பாடு செய்யப்பட்டு இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் குறிப்பிட்ட பகுதியானது எந்த ஒரு வர்த்தமானியிலும் தொல்பொருள் திணைக்களத்திற்குரிய இடமாக இன்றுவரை பிரகடனப்படுத்தப்படவில்லை. குருந்தூர் மலையைச் சுற்றியுள்ள 79 ஏக்கர் மாத்திரம் தொல்பொருள் பிரதேசத்துக்குரிய வரையறுக்கப்பட்ட இடமாக 1932 வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டது. அவ்வாறு இருக்கத்தக்க சூழலில் குருந்தூர் மலையிலே சட்டவிரோதமாக விகாரை ஒன்றினை அமைத்து அங்கே தங்கியுள்ள புத்தபிக்குவின் அடாவடி செயற்பாடுகளுக்கு அடிபணிந்த சிறீலங்கா காவல்துறையினரால் அங்கு விவசாயத்தில் ஈடுபட்டிருந்த அப்பாவித் தமிழ் விவசாயிகள் கைது செய்யப்பட்டு இன்றுவரை பிணையின்றித் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். விவசாயம் மேற்கொள்வது குற்றம் எனக் கருதும் இச் சிங்களப் பேரினவாத அரசின் இந்த கைதுகளையும், சட்ட விரோதமாகவும் இனவாதத்தோடும் நடந்து கொண்டிருக்கின்ற தொல்லியல் திணைக்களத்தையும் சிறீலங்கா காவல் துறையினரையும் நாம் வன்மையாக கண்டிப்பதோடு கைது செய்யப்பட்ட இரு அப்பாவி தமிழ் விவசாயிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தின் லதுகலப் பிரதேசச் செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள முருகன் ஆலயத்தின் தீர்த்தக்கரைக்கு அருகிலே திடீரென்று புத்தர் சிலை ஒன்றும் பௌத்த கொடி ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது. எந்த விதச் சட்ட அனுமதிகளும் பெறப்படாமல் சட்ட விரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புத்தர் சிலையானது தமிழர்களின் பண்பாடுகளையும் தமிழ் ஆலயங்களின் தொன்மையையும் சிதைக்கும் நோக்கிலான பௌத்தமயமாக்கல் நிகழ்ச்சிநிரலுடன் இச்செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே உடனடியாக இங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள சிலையானது சட்டமுறைப்படி அகற்றப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசத்தின் அரசியல் பொருளாதார பண்பாட்டுக் கட்டுமாணங்களைத் தகர்க்கும் நோக்கோடு தமிழர் தாயகத்தின் மீது நிகழ்த்தப்படும் தொல்லியல் ஆக்கிரமிப்புக்களையும் திட்டமிடப்பட்ட ரீதியில் தமிழ்த் தேசிய இனத்தின் மீதும் மேற்கொள்ளப்படும் கைதுகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் சட்டவிரோதமாகவும் இனவாத நோக்கோடும் நடந்து கொண்டிருக்கின்ற தொல்லியல் தினைக்களத்தையும், வனவிலங்குதுறையினரையும் காவல்துறையினரையும் மேலும் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆகவே குருந்தூர்மலையில் கைது செய்யப்பட்ட விவசாயிகளை நிபந்தனையின்றி உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும், உகந்தைமலையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் புத்தர் சிலையானது உடன் அகற்றப்பட வேண்டும் அத்துடன் தொடர்ச்சியாகத் தமிழ்த்தேசத்தின் இருப்புகளின் மீது மேற்கொள்ளப்படும் இப் பண்பாட்டு இனப்படுகொலையினை சிறீலங்கா அரசானது உடன் நிறுத்தவேண்டும் என்பதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழச் சமூகமாக கேட்டுக்கொள்கின்றோம்.


பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
UNIVERSITY STUDENTS' UNION
UNIVERSITY OF JAFFNA


பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
UNIVERSITY STUDENTS' UNION
UNIVERSITY OF JAFFNA

# குருந்தூர் மலையில் கைது செய்யப்பட்ட தமிழ் விவசாயிகளை உடனடியாக விடுதலை செய்யக்கோரியும், தொல்லியல் ஆக்கிரமிப்புக்களை உடன் நிறுத்தக்கோரியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் 04.06.2025









**www.sangathamil.ca**

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழி நீதி வேண்டி வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் யாழில் போராட்டம்

05.06.2025

யாழ். செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிக்கு நீதி வேண்டி இன்று வியாழக்கிழமை (05) செம்மணி சந்தியில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளால் யாழில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை தாங்கி "செம்மணி புதை குழிக்கு நீதி வேண்டும், மறைக்காதே மறைக்காதே புதை குழிக்குளை மறைக்காதே, எங்கே எங்கே உறவுகள் எங்கே, இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும்" என கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளர் மு.கோமகன் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.




















# யாழ். செம்மணி புதைகுழியில் குழந்தைகளின் எலும்புக்கூடுகள் உள்ளிட்ட 18 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு

06.06.2025

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் இடம்பெற்று வரும் மனித புதைகுழி அகழ்வில் இதுவரை கைக்குழந்தைகள், குழந்தைகள் என சந்தேகிக்கப்படும் மூன்று மனித எலும்பு கூட்டு தொகுதிகள் உட்பட 18 மனித எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.



அடையாளம் காணப்பட்டுள்ள 18 மனித எலும்பு கூட்டு தொகுதிகளில் 05 எலும்பு கூட்டு தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு , அவை சட்ட வைத்திய அதிகாரியின் பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை சில எலும்புக்கூட்டு தொகுதிகள் இணைந்த நிலையில் காணப்படுவதால், அவை ஒரே கிடங்கில் புதைக்கப்பட்டு இருக்கலாம் என்றும், இதுவரையில் ஆடை , அணிகலன்களோ காலணிகளோ எவையும் மீட்கப்படாததால், வெற்று உடல்கள் ஆகவே அவை புதைக்கப்பட்டு இருக்கலாம் என்றும் சந்தேகம் ஏற்பட்டுள்ளதால் குறித்த பகுதி பாரிய மனித புதைகுழியாக காணப்படலாம் எனும் சந்தேகம் வலுப்பெற்றுள்ளது.

அதேவேளை குறித்த பகுதியை மனித புதைகுழியாக பிரகடனப்படுத்த கோரி யாழ். நீதிவான் நீதிமன்றில் சட்டத்தரணிகள் விண்ணப்பம் செய்துள்ள நிலையில் கட்டளைக்கு இன்றைய தினம் வெள்ளிக்கிழமை நீதிமன்று திகதியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



**எமது வீர சுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தாலும், வியர்வையாலும், கண்ணீராலும் எழுதப்பட்டிருக்கிறது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# தமிழின விடுதலைக்காய் தன்னுயிர் தந்த முதல் தற்கொடையாளன் பொன். சிவகுமாரன் அண்ணாவின் 51வது ஆண்டு நினைவு நாள் யாழ். பல்கலைகழக மாணவர்களால் உணர்வெழுச்சியுடன் மலர்வணக்கம் செலுத்தி நினைவுகூரப்பட்டது

05.06.2025








# திருகோணமலை நிலாவெளியில் மீனவர்கள் வீதி மறியல் போராட்டம்!

05.06.2025

திருகோணமலை - திருக்கடலூர் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் வியாழக்கிழமை (05) நிலாவெளி பகுதியில் பிரதான வீதியை மறித்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.







இந்தப் போராட்டம், கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் வாழைச்சேனை கடற்பரப்பில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்தே ஏற்பாடு செய்யப்பட்டது.

குறித்த சம்பவத்தில் திருக்கடலூர் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகள் கடுமையாக சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பது மீனவர்களின் முக்கியக் குற்றச்சாட்டாகும். எனவே, தாக்கியவர்களை உடனடியாக கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே போராட்டத்தின் பிரதான கோரிக்கையாகும்.

போராட்டத்தின் போது "மீனவனின் நிலமையை பார்", "மீனவனின் உயிருக்கு உத்தரவாதம் இல்லையா?" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை மீனவர்கள் ஏந்தி நின்றனர்.

குறித்த பகுதியில் சில மணிநேரத்திற்கு போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குருந்தூர் மலையில் கைதாகிய இரண்டு விவசாயிகளும் விடுவிப்பு: முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற கட்டளையின் படி வழக்கு தள்ளுபடி!

05.06.2025

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக் குட்பட்ட குருந்தூர் மலை பகுதியில் விவசாய நடவடிக்கைகளின் ஈடுபட்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்



வைக்கப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக வழக்கு இடம்பெற்று வந்தது

இந்நிலையில் குறித்த வழக்கு இன்றையதினம் (05) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேக நபர்களான விவசாயிகள் இருவரையும் வழக்கில் இருந்து விடுவித்து முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் கட்டளையாக்கியுள்ளது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் தனது கட்டளையில், குறித்த சந்தேகநபர்கள் மீது வழக்கை தொடர்ந்து நடாத்தக்கூடிய அடிப்படை முகாந்திரங்கள் இல்லை எனவும், குறித்த பிரதேசம் இன்னமும் தொல்பொருள் திணைக் களத்துக்குரிய பிரதேசம் என வர்தமானியில் பிரசுரிக்கப் படவில்லை என்பதை வழக்கு தொடுனர்தரப்பே ஏற்றுக் கொண்டதையும் விசேடமாகக் குறிப்பிட்டார்.



இந்த வழக்கில் இன்றைய தினம் முல்லைத்தீவு சட்டத் தரணிகள் சங்கத்தின் பத்திற் கும் அதிகமான சட்டத் தரணிகள் சந்தேகநபர்கள் சார்பாக தோன்றி வாதிட்டிருந் தார்கள்.

# செம்மணி மனிதப் புதைகுழியினை மேலும் 45 நாட்கள் தொடர்ந்து அகழ்வுக்கு யாழ் நீதிமன்றம் கட்டளை!

06.06.2025

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியினை மேலும் 45 நாட்கள் தொடர்ந்து அகழ்வு மேற்கொள்ள யாழ் நீதிமன்றம் கட்டளையை ஆக்கியுள்ளது.

நாளையுடன் ஆரம்ப ஆய்வு நிறைவுபெறுகின்றது, மேலும் 45 நாட்கள் அகழ்வு தொடர்ந்து மேற்கொள்வதற்கு நீதி அமைச்சிடமிருந்து நிதியை பெற்றுக்கொள்வதற்கு திட்ட பாதீட்டை மன்றில் சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு கட்டளை வழங்கப்டுள்ளது .

இந்த வழக்கில் கடமையாற்றும் சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் தொல்பொருள் தடயவியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா ஆகியோரின் அபிப்பிராய அறிக்கையின் பிரகாரம் மூன்று விதமான விடயங்கள் இருவராலும் முன்வைக்கப்பட்டது.

குறிக்கப்பட்ட அகழ்வு இடம்பெறும் இடத்தில் 1.6 மீற்றர் அடி அளவிலேயே மனித என்பு எச்சங்கள் அடையாளப்படுத்த கூடியதாக உள்ளது .

குழப்பமாணசூழலில் முறையற்ற வகையில் மனித எலும்புக் கூடுகள் புதைக்கப்பட்டுள்ளது.

ஆடைகளோஅல்லது தனிப்பட்ட அணிகலன்களோ குறித்த இடங்களில் காணப்படவில்லை.

இது சட்டவிரோதமான இரகசியமான புதைகுழியாக இருக்கலாம் எனவும் தொடர்ந்தும் பல மனித எச்சங்கள் அடையாளப் படுத்தபட்டுள்ள நிலையில் தொடர்ச்சியாக இந்த மனிதப் புதைகுழியை 45 நாட்களுக்கு அகழவேண்டும் என்ற பரிந்துரை பேராசிரியர் மற்றும் சட்ட வைத்திய அதிகாரியால் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் அபிப்பிராய அறிக்கையின் அடிப்படையில், அகழ்வு இடம் பெற்றுவரும் இடம் சந்தேகத்திற்குரிய அல்லது இரகசிய மனிதப் புதைகுழித் தளமாக இருக்கலாம் என்று நீதிமன்றம் கருதியதன் அடிப்படையில் .

அகழ்வாராய்ச்சிக்கு 45 நாள் நீட்டிப்பை நீதிமன்றம் அங்கீகரித்தது.



தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா அவர்களினுடைய செய்மதி படத்தின் அடிப்படையில் புதைகுழி அகழ்வு இடம் பெற்றுவரும் இடத்துக்கு அருகிலுள்ள மற்றொரு சாத்தியமான தளத்திலும் ஆய்வு செய்யப்படவேண்டும் என்று மன்றில் குறிப்பிட்டுள்ளார்

# செம்மணியில் மனிதப்புதைகுழியில் இருந்து இதுவரை 19 மனித எலும்புக்கூடுகள் மீட்பு!

07.06.2025

யாழ் - அரியாலை, சித்துப்பாத்தி இந்துமயானத்தில் காணப்பட்ட மனிதப்புதைகுழி ஆரம்பகட்ட பரீட்சாத்த அகழ்விலிருந்து இன்றுடன் 19 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட 19 எலும்புக்கூடுகளும் புதைகுழியில் இருந்து வெளியே எடுக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்டுள்ள 19 எலும்புக்கூடுகளும் சட்டவைத்திய அதிகாரி செல்லையா பிரணவனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், சட்ட வைத்திய அதிகாரி குறித்த எலும்புக்கூடுகளை நீதிமன்றின் பாதுகாப்பில் வைப்பிலிடுவார் என்றும் சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா தெரிவித்தார்.

யாழ்- அரியாலை, சித்துப்பாத்தி இந்துமயானத்தில் காணப்பட்ட மனிதப்புதைகுழி பரீட்சாத்த அகழ்வு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆ.ஆனந்தராஜாவின் மேற்பார்வையில் இன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பரீட்சாத்த அகழ்வுப் பணியானது இன்றுடன் தற்காலிகமாக நிறைவுறுத்தப்படுகிறது.

இந்த மனிதப் புதைகுழி அகழ்வுப்பணியானது மேலும் 45 நாட்களுக்கு நீடித்து நீதவான் ஆ.ஆனந்தராஜா நேற்று அனுமதி அளித்திருந்தார்.

45 நாட்களுக்கான அகழ்வுப்பணிக்கான பாதீடு இன்று சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், யாழ் நீதவான் நீதிமன்ற நீதபதியிடம் ஒப்படைத்துள்ளார்.

இதற்கமைய அடுத்த மூன்றாம் கட்ட அகழ்வுப்பணிக்காக உத்தேச திகதியாக ஜூன் 26ம் திகதி நீதவான் அனுமதித்



துள்ளார்.

குறித்த உத்தேச திகதிக்குள்ளாக சமர்பிக்கப்பட்ட பாதீட்டின் நிதி கிடைக்கப்பெற்றால் மூன்றாம் கட்ட அகழ்வுப்பணி உத்தேச திகதியில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் நீதிகோரி போராடிய மூவர் சிறீலங்கா பொலிசாரினால் கைது!

08.06.2025

மன்னார் பொது வைத்தியசாலையில் இடம்பெற்ற மகப்பேற்று சிகிச்சைகளின் போது மரணமடைந்த சிந்துஜா மற்றும் பட்டி தோட்டத்தை சேர்ந்த வேணுஜா மற்றும் அவரின் சிசுவின் மரணத்திற்கு நீதி கோரி இடம்பெற்ற போராட்டத்தில் பொது மக்கள் சார்பாக முன்னின்று போராடியவர்கள் மூவர் மன்னார் பொலிசாரால் ஞாயிற்றுக்கிழமை(8) கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக சட்ட விரோதமாக பொது மக்களை ஒன்று கூட்டியமை மற்றும் பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தியமை உள்ளிட்ட பல பிரிவுகளில் சம்பந்தப்பட்ட மூன்று இளைஞர்களும் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன்பாக பொது அழைப்பின் பெயரில் கடந்த டிசம்பர் மாதம் ஒன்று கூடிய பொதுமக்கள், மன்னார் பொது வைத்தியசாலையில் இடம் பெறும் பல்வேறு சீர்கேடுகளுக்கு எதிராக அமைதியான போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் போராட்டக்காரர்களின் கோரிக்கை தொடர்பில் பல்வேறு வாக்குறுதிகளை அதிகாரிகளால் வழங்கப்பட்ட போதிலும் அதை ஏற்க மறுத்த சில போராட்டக்காரர்களால் போராட்டம் வன்முறையாக மாற்றம் அடைந்தது.

இந்த நிலையில் வீதிகளை மறித்தும் டயர்களை கொளுத்தியும் போராட்டகாரர்கள் சிலர் தங்கள் எதிர்ப்புக்களை தெரிவித்த நிலை போராட்டத்தில் சில விசமிகள் புகுந்து பொலிஸார் மீதும் வைத்தியசாலை மீதும் கல் வீச்சுக்களை மேற்கொண்டு




போராட்டத்தை திசை திருப்பி இருந்தனர்.

போராட்டம் இறுதியில் சுமுகமான நிலையில் நிறைவடைந்த போதிலும் மக்கள் சார்பாக போராட்டத்தில் கலந்து கொண்ட மூவரை பல மாதங்கள் கழித்து மன்னார் பொலிசார் ஞாயிற்றுக் கிழமை (8) கைது செய்துள்ளனர்.

சிந்துஜா மற்றும் வேணுஜா வின் மரணம் தொடர்பில் விசாரணைகள் இதுவரை முடிவுறுத் தப்படாத நிலையில் அவர்களுக்கு, அவர்களின் குடும்பங்களுக்கு நீதி கிடைக்காத நிலையில் அவர்கள் சார்பாக போராடிய மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

# வடக்கு, கிழக்கில் அத்துமீறி கட்டப்பட்டுள்ள விகாரைகளுக்கு பயணிப்பதை தவிர்க்குமாறு சிங்கள மக்களிடம் வேண்டுகோள்!

## வடமாகாண நீதி, சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியக இயக்குனர் அருட்பணி சூ.யே. ஜீவரட்ணம்

09.06.2025

வட.கிழக்கில் அத்துமீறி கட்டப்பட்டுள்ள விகாரைகளுக்கு பயணிப்பதை தவிர்க்குமாறு சிங்கள மக்களிடம் வடமாகாண நீதி சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வட.கிழக்கில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக வடமாகாண நீதி சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியக இயக்குனர் அருட்பணி சூ.யே. ஜீவரட்ணம் அ.ம.தி கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யுத்தத்தின் பிற்பாடு ஏறக்குறைய 16 வருடங்கள் கடந்து விட்ட நிலையில் தேசிய ஒருமைப்பாட்டையும் இன, மதங்களுக் கிடையிலான நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டிய காலத்தில் இவற்றையெல்லாம் விடுத்து இன்னும் அடக்கு முறைகளும் உரிமை மறுப்புக்களும் தான்தோன்றித்தனமான பொறுப்பற்ற அரசியல் அதிகார வீச்சுக்களும் சிறுபான்மை இன மக்களை நோக்கி அவ்வப்போது செயல்படுத்தப்பட்டு கொண் டிருப்பது வேதனை அளிக்கின்றது.

கடந்த பங்குனி மாதம் 28ம் திகதி காணி நிரணய உரிமைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டிருந்த அரசு வர்த்தமானியானது தமிழ் மக்களினுடைய காணிகளை அபகரிக்கின்ற நோக்கமாக கொண்டது என்று பல தரப்புக்களும் அச்சம் வெளியிட்டு கண்டனங்களை தெரிவித்தபோது இறுதியில் அதை இரத்து செய்தமையை வரவேற்கின்ற வேளை, இன்னும் இன மத சமூக நல்லிணக்கத்திற்கு பாதகத்தை விளைவிக்கும் செயற் பாடான தனியார் காணிகளுக்குள் அத்துமீறிய பௌத்தவிகாரை களின் கட்டுமானங்கள் மற்றும் புராதன தொல்பொருள் இடங்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் எந்த வித அகழ்வு மற்றும் கட்டுமான பணிகள் மேற்கொள்ள முடி யாது என்று சொல்லப்படுகின்ற இடங்களில் பௌத்த விகாரை களின் கட்டுமான பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப் படுகின்ற சூழ்நிலைகள் எல்லாம் வெளிப்படையாக மத வேறு பாட்டையும் பிரிவினை மனப்பான்மையையும் அதிகார வாக்கம் வெளிப்படுத்துகிறது. இதை வடமாகாண நீதி சமாதான நல்லிணக்கத்திற்கான பணியகம் வன்மையாக கண்டிக்கிறது.

அதேவேளை வட கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் உரித்துக்காணிகளை கையகப்படுத்தி, தனியார் காணிகளுக் குள் அத்துமீறி கட்டப்படுகின்ற விகாரைகளை நோக்கி பௌர் ணமி தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் வருகின்ற பௌத்த மத சகோதர சகோதரிகளுக்கு ஒரு பகிரங்க வேண்டு கோளையும் விடுக்கிறது. அத்துமீறி அடுத்தவர் காணிகளுக்குள் கட்டப்படுகின்ற மத தலங்களில் ஆன்மீகத்தை தேடுவது அர்த் தமற்றதும் அநியாயமானதும் என்பதை புரிந்து கொண்டு வட கிழக்கு மாகாணங்களில் சட்ட விரோத இடங்களில் அமைக் கப்பட்டுள்ள மத வழிபாட்டுத்தலங்களை நோக்கிய தங்களின் ஆன்மீக பயணங்கள் வேதனையளிக்கிறது என்பதை புரிந்து கொண்டு நல்மனதோடு அவற்றை தவிர்த்து தமிழ் மக்களின் உரிமைகளை அங்கிகரித்து அவர்களுக்குரிய காணிகளை மீள ஒப்படைக்க முயற்சிப்பதும் உங்களுடைய கடமை என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

அது மாத்திரம் இன்றி தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யக்கூடிய வளமான நிலங்கள், காணிகள் எல்லாம் இராணுவ கட்டுப்பாட்டுக்கு கீழ் இருந்து அவற்றை எல்லாம் விடுவிக்க வேண்டிய தேவைப்பாடு உணரப்படுகின்ற வேளை இப்படியான காணி அபகரிப்பு செயற்பாடுகள் தடை செய்யப்பட வேண்டும் என்பதையும் நீதி சமாதான நல்லிணக்கத்திற்கு



CENTER FOR PEACE & RECONCILIATION

No 76, Kanagapuram, Kilinochchi, Sri Lanka

9-06-2025

ஒரு பௌர்ணமி நாளில் ஒரு பகிரங்க வேண்டுகோள்...

யுத்தத்தின் பிற்பாடு ஏறக்குறைய 16 வருடங்கள் கடந்து விட்ட நிலையில் தேசிய ஒருமைப்பாட்டையும் இன, மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டிய காலத்தில் இவற்றையெல்லாம் விடுத்து இன்னும் அடக்குமுறைகளும் உரிமை மறுப்புகளும் தான்தோன்றித்தனமான பொறுப்பற்ற அரசியல் அதிகார வீச்சுகளும் சிறுபான்மை இன மக்களை நோக்கி அவ்வப்போது செயல்படுத்தப்பட்டு கொண்டிருப்பது வேதனை அளிக்கின்றது. கடந்த பங்குனி மாதம் 28ம் திகதி காணி நிர்ணய உரிமைச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டிருந்த அரசு வர்த்தமானியானது தமிழ் மக்களினுடைய காணிகளை அபகரிக்கின்ற நோக்கமாக கொண்டது என்று பல தரப்புகளும் அச்சம் வெளியிட்டு கண்டனங்களை தெரிவித்தபோது இறுதியில் அதை இரத்துசெய்தமையை வரவேற்கின்ற வேளை, இன்னும் இன மத சமூக நல்லிணக்கத்திற்கு பாதகத்தை விளைவிக்கும் செயற்பாடான தனியார் காணிகளுக்குள் அத்துமீறிய பௌத்தவிகாரைகளின் கட்டுமானங்கள் மற்றும் புராதன தொல்பொருள் இடங்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் எந்த வித அகழ்வு மற்றும் கட்டுமான பணிகள் மேற்கொள்ள முடியாது என்று சொல்லப்படுகின்ற இடங்களில் பௌத்த விகாரைகளின் கட்டுமான பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்ற சூழ்நிலைகள் எல்லாம் வெளிப்படையாக மத வேறுபாட்டையும் பிரிவினை மனப்பான்மையையும் அதிகார வர்க்கம் வெளிப்படுத்துகிறது. இதை வடமாகாண நீதி சமாதான நல்லிணக்கத்திற்கான பணியகம் வன்மையாக கண்டிக்கிறது.

அதேவேளை வட கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் உரித்துக்காணிகளை கையகப்படுத்தி, தனியார் காணிகளுக்குள் அத்துமீறி கட்டப்படுகின்ற விகாரைகளை நோக்கி பௌர்ணமி தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் வருகின்ற **பௌத்த மத சகோதர சகோதரிகளுக்கு ஒரு பகிரங்க வேண்டுகோளையும்** விடுக்கிறது. அத்துமீறி அடுத்தவர் காணிகளுக்குள் கட்டப்படுகின்ற மத தலங்களில் ஆன்மீகத்தை தேடுவது அர்த்தமற்றதும் அநியாயமானதும் என்பதை புரிந்து கொண்டு வட கிழக்கு மாகாணங்களில் சட்ட விரோத இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மத வழிபாட்டுத்தலங்களை நோக்கிய தங்களின் ஆன்மீக பயணங்கள் வேதனையளிக்கிறது என்பதை புரிந்துகொண்டு நல்மனதோடு அவற்றை தவிர்த்து தமிழ் மக்களின் உரிமைகளை அங்கிகரித்து அவர்களுக்குரிய காணிகளை மீள ஒப்படைக்க முயற்சிப்பதும் உங்களுடைய கடமை என்பதையும் வலியுறுத்துகின்றோம். அது மாத்திரம் இன்றி தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யக்கூடிய வளமான நிலங்கள், காணிகள் எல்லாம் இராணுவ கட்டுப்பாட்டுக்கு கீழ் இருந்து அவற்றை எல்லாம் விடுவிக்க வேண்டிய தேவைப்பாடு உணரப்படுகின்ற வேளை இப்படியான காணி அபகரிப்பு செயற்பாடுகள் தடை செய்யப்பட வேண்டும் என்பதையும் நீதி சமாதான நல்லிணக்கத்திற்குமான பணியகம் வலியுறுத்த விரும்புகிறது.

அருட்பணி சூ. யே. ஜீவரட்ணம் அமதி
இயக்குனர்
நீதி சமாதான நல்லிணக்கத்திற்குமான பணியகம்

Rev. Fr. S. J. Jeevaratnam OMI
Director
Centre for Peace & Reconciliation (C.P.R)
OMI Province of Jaffna
Northern Province, Sri Lanka.

மான பணியகம் வலியுறுத்த விரும்புகின்றது என்றுள்ளது.

# யாழ். செம்மணியில் நூற்றுக்கணக்கான அப்பாவி பொதுமக்கள் கொன்று புதைக்கப்பட்ட போது யாழ்ப்பாணத்தின் சிறீலங்கா இராணுவத் தளபதிகளாக இருந்தவர்கள்

9.06.2025

செம்மணியில் நூற்றுக்கணக்கான அப்பாவி பொதுமக்கள் கொன்று புதைக்கப்பட்ட போது யாழ்ப்பாணத்தின் இராணுவத் தளபதியாக பிரிகேடியர் ஸ்ரீ லால் வீரசூரியா இருந்தார்.



அதே போல செம்மணி பகுதி அடங்கலான அந்த பிராந்தியத் தின் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜனக பெரேரா இருந்தார்.

நாவற்குழி முகாமின் பொறுப்பதிகாரியாக மேஜர் ஜெனரல் துமிந்த கெப்பிட்டிவலன்ன (பீல்டு மார்சல் சரத் பொன்சேகாவின் நெருங்கிய உதவியாளர்) கடமையில் இருந்தார்.

அதாவது செம்மணியை சூழவுள்ள பகுதிகளில் கடமையி லிருந்த Sri Lanka Sinha Regiment யின் 8வா Battalion யுடைய 650 இராணுவத்தினர் மற்றும் 35 அதிகாரிகளின் கட்டளை யிடும் நிருவாக அதிகாரியாக (Second in Command) மேஜர் ஜெனரல் துமிந்த கெப்பிட்டிவலன்ன இருந்தார்.

விசேடமாக செம்மணி இராணுவ தடை முகாம்களின் (Check Points) பொறுப்பதிகாரியாக 2 ஆம் லெப்டினன்ட் சஷிந்த துடுகல அதிகாரத்தில் இருந்தார்.

அதாவது செம்மணி உள்ளடங்கலாக அப் பகுதியெங்கும் நடை பெற்ற மனித புதைகுழி உட்பட்ட கொடூர குற்றச்செயல்களோடு இவர்கள் நேரடியாக தொடர்புபட்டு இருந்தார்கள். இவர்கள் தவிர, செல்வி கிரிசாந்தி படுகொலை குற்றாவளியான சோமரத்ன ராஜபக்ச செம்மணி புதைகுழி சூத்திரதாரிகள் என குறிப்பிட்ட இராணுவ அதிகாரிகளும் செம்மணி புதைகுழி யுடன் தொடர்புபட்டவர்களாக அடையாளம் காணப்பட்டு இருந் தார்கள்.

இவர்களில் 5 இளநிலை இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்ட நிலையில் புதைகுழி வழக்கு கொழும்புக்கு மாற்றப் பட்டு அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு வழக்கும் கால வோட்டத்தில் முடிவுக்கு கொண்டுவரப் பட்டது.

2018 ஆம் ஆண்டு தரவுகளின் படி பிணையில் விடுவிக்கப் பட்டவர்களில் ஒருவரான கப்டன் சி. ஜே. டி. கே. லலித் ஹேவா பாணந்துறையில் உள்ள ஒரு இராணுவ விடுமுறை இல்லத்திற் குப் பொறுப்பான லெப்டினன்ட் கேணல் தர அதிகாரியாக கடமையிலுள்ளார்.

கப்டன் சச்சிந்திர விஜேசிறிவர்தன லெப்டினன்ட் கேணல் தர அதிகாரியாக பனகொட இராணுவத் தலைமையகத்துடன் இணைக்கப்பட்டுள்ளள்ளார.

கப்டன் டி. டி. சசிக பெரேரா கலாவெவ இராணுவ முகாமில் லெப்டினட் கேணல் தர அதிகாரியாக கடமையில் இருக்கின்றார்.

லெப்டினன்ட் ஏ. யடகாமா இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இது மாத்திரமின்றி லெப்டினன்ட் துடுகல, லெப்டினன்ட் உதய குமார, மேஜர் கருணாசேகர, கப்டன் ஜயவர்தன, கோப்ரல் பண்டார, சார்ஜென்ட் சில்வா ஆகிய அதிகாரிகளையும் சோமரத்ன ராஜபக்ச அடையாளம் காட்டியிருந்தார்.

அதே போல இராணுவ சிப்பாய் ஜே.எம். ஜயசிங்க, ஜயதிலக்க, நஸார், சமரவிக்ரம, பெரேரா (Probationary Private), நிஷாந்த (Probationary Private), முத்துபண்டா (Probationary Private) மற்றும் யுடநளை (Probationary Private-Dead) ஆகியோரும் 400-600 பேர் வரையான அப்பாவி பொதுமக்களை செம்மணி யில் கொன்று புதைத்தவர்களாக சோமரத்ன ராஜபக்ச சொல்லி இருந்தார்.

அதே போல பிரியதர்ஷன, அப்துல் ஹமீட், சமரசிங்க ஆகிய பொலிஸ் அதிகாரிகளையும் சோமரத்ன ராஜபக்ச அடையாளப் படுத்திருந்தார்.

அதாவது செம்மணி புதைக்குழி விவகாரம் தொடர்புடைய இராணுவ கட்டமைப்பு அடையாளம் காணப்பட்டு 26 ஆண் டுகள் கடந்து விட்ட பின்னரும் மனித புதைகுழி தொடர்பான எவ்விதமான நீதியான விசாரணைகளும் நடத்தப்படவில்லை. அதே போல பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த பரிகாரங்களும் செய்யப்படவில்லை. மாறாக சூத்திரதாரிகளை பல்வேறு தளங் களில் பாதுகாத்து பதவி உயர்வு உட்பட சலுகைகளை வழங்கி கௌரவித்து இருக்கின்றார்கள்.



திருமதி சந்திரிகா குமாரதுங்கா அவர்கள் பிரிகேடியர் ஸ்ரீ லால் வீரசூரியாவை பாகிஸ்தான் தூதுவராக நியமித்திருந்தார். அதே போல மேஜர் ஜெனரல் ஜனக பெரேரா அவர்களை அவுஸ்திரே லியா தூதுவராக நியமித்தார்.

2005 ஆம் ஆண்டில் அதிகாரத்திற்கு வந்த ராஜபக்சே குடும்பம் மேஜர் ஜெனரல் ஜனக பெரேரா அவர்களை இந்தோனேசியா தூதுவராக நியமித்தது. இது போதாதென்று திரு ரணில் விக்ரமசிங்கே வடக்கு மத்திய மாகாணசபையின் எதிர்க்கட்சி தலைவராக மேஜர் ஜெனரல் ஜனக பெரேராவை நியமித்து இருந்தார்.

அதே போல நல்லாட்சி (?) அரசாங்கம் மேஜர் ஜெனரல் துமிந்த கெப்பிட்டிவலன்ன அவர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கி காலாட்படையின் பணிப்பாளராக நியமித்திருந்தது.

இப்போது ஜேவிபி இராணுவ அதிகாரிகள் யாரும் நடவடிக்கை எடுக்க மாட்டோம் என வெளிப்படையாக அறிவித்து இருக் கின்றது.

உண்மையில் பாதிக்கப்பட்ட எண்ணிக்கையில் சிறிய தேசிய இன மக்களுக்கு நீதி செய்ய வேண்டும் என்கின்ற எந்தவித மான அரசியல் விருப்பும் இலங்கையின் எந்த ஆட்சியாளர் களுக்கும் கிடையாது என்பதே அவலமான உண்மையாகும். - இனமொன்றின் குரல் முகநூல்

# யாழ். தையிட்டியில் மக்கள் போராட்டம் போராட்டத்தை அடக்குவதற்கு சிறீலங்காப் பொலிசார் குவிப்பு

10.06.2025

சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றக்கோரியும், விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளைக் காணி உரிமையாளர்களிடம் மீளவும் வழங்குமாறு வலியுறுத்தியும் இன்று செவ்வாய்க்கிழமை (10) போராட்டம் நடைபெற்று வருகிறது.

திஸ்ஸ விகாரையில் இன்று (10) நடைபெறவுள்ள பொசன் பௌர்ணமி வழிபாட்டு நடவடிக்கைகளுக்காக ஆயிரக்கணக் கான சிங்கள மக்கள் அழைத்து வரப்படவுள்ளனர்.

இந்நிலையில் தையிட்டி விகாரை பகுதியில் குழப்பமான சூழல் உருவாகலாம் என்ற முன்னெச்சரிக்கையின் அடிப்படையில் பொலிசாரின் நீர்த்தரைப் பிரயோக இயந்திரம் கொண்டு வரப் பட்டுள்ளதுடன் கலகமடக்கும் பொலிசாரும் குவிக்கப்பட் டுள்ளனர்.

இதேவேளை பலாலி பொலிசாரினால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் கட்டளையொன்றும் பெறப்பட்டு போராட்ட பகுதி யில் ஒட்டப்பட்டுள்ளது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட அரசியல் பிர முகர்கள், காணி உரிமையாளர்கள் உள்ளிட்ட 27 நபர்கள் மற் றும் அமைப்புக்களுக்கு எதிராகவே குறித்த கட்டளை பெறப்பட் டுள்ளது.
















# செம்மணி படுகொலை விசாரணைக்கு தேசிய மக்கள் சக்தி கதவுகளை திறக்குமா?

**அருட்தந்தை மா. சத்திவேல்**

11.06.2025

பட்டலந்த அறிக்கையை அரசியலுக்காக தூசி தட்டி வெளியில் எடுத்தவர்கள் தமிழர்களுக்கு எதிராக புரியப்பட்ட இன அழிப்பு, இனப்படுகொலை விடயங்களை பகிரங்கமாக கையாள்வதற்கு முன்வர மாட்டார்கள் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப் பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரி வித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

செம்மணி சமூக புதைகுழியில் தோண்டத் தோண்ட கொலை செய்து புதைக்கப்பட்ட அல்லது உயிரோடு புதைத்து கொல்லப் பட்டோரின் உடல் எச்சங்கள் தனித்தனியாகவும், கூட்டாகவும் தோன்றுகின்றன.

இதற்கான நீதி விசாரணை நடத்தப்படும் என நீதி அமைச்சர் குறிப்பிட்டாலும் அகழ்வு பணிகளும் ஆய்வுகளும் சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப அத்துறையில் சர்வதேச நிபுணத்துவம் கொண்டவர்களால் நடத்தப்பட்டால் மட்டுமே நிகழ்த்தப்பட்டுள்ள இனப்படுகொலைளுக்கு முகம் கொடுத்து வலிகளை சுமந்து அரசியல் நீதிக்கு ஏங்கிக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கு நீதி கிட்டும். தேசிய மக்கள் சக்தி இதற்கான கதவுகளை திறக்குமா? அல்லது நாட்டின் இறைமை எனக் கூறி நீதிக்கான தடைகளை விதிக்குமா? என்பதே எமது கேள்வி.

தற்போது அகழப்படும் செம்மணி சமூக புதைக்குழி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க ஆட்சி காலத்துக்குரியது. இப்புதைகுழியை மூடி மறைக்கவும் கொலையாளிகளை பாது காக்கவும் அக்காலத்தில் சமாதான தேவதையாக காட்சியளித்த சந்திரிக்கா மட்டுமல்ல தேசிய மக்கள் சக்தியாக தற்போது அனுர குமார தலைமையில் பதவியில் இருக்கும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களும் குற்றவாளி கூண்டில் நிற்க வேண்டியவர்களே.

தற்போது அகழப்படும் சமூக புதைகுழியை விட மேலும் பல சமூக புதைகுழிகள் தமிழர் தாயகத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றிற்கு எல்லாம் விசாரணையை நடத்த எந்த ஒரு ஆட்சி யாளர்களும் துணியவில்லை. அகழ்வு மற்றும் ஆராய்வு அறிக் கைகளை எல்லாம் பாதாள கிடங்கில் கிடப்பில் போடப்பட் டுள்ளன. பட்டலந்த அறிக்கையை அரசியலுக்காக தூசி தட்டி வெளியில் எடுத்தவர்கள் தமிழர்களுக்கு எதிராக புரியப்பட்ட இன அழிப்பு, இனப்படுகொலை விடயங்களை பகிரங்கமாக கையாள்வதற்கு முன்வர மாட்டார்கள். அதுவும் அரசியலே.

தமிழர் தாயகப் பூமியில் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ள படை முகாம்கள் அதன் சூழவுள்ள வளவுகள் மற்றும் நிரந்தர கட் டடங்கள் அமைக்கப்பட்டுள்ள நிலப்பகுதிகளிலும் சமூக புதை குழிகள் இருக்கலாம். அவ் அந்நில பிரதேசங்களும் ஆய்வுக் கூட்படுத்தப்படல் வேண்டும்.

வன்புணர்வின் பின்னர் கொடூரமாக கொலை செய்யப்பட்ட கிருஷாந்தி தொடர்பில் மரண தண்டனை கைதியான கோப்ரல் சோமரத்னா என்பவரால் 600 மேற்பட்டோர் செம்மணியில் கொன்று புதைக்கப்பட்டார் எனக் கூறியதன் பின்னர் அதனோடு தொடர்புடையவர்களாக அடையாளம் காணப்பட்டோர் விடுவிக் கப்பட்டது மட்டுமல்ல பதவி உயர்வுகளும் அரச சலுகைகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிலையில் சமூக புதை குழியை ஆட்சியாளர் ஏற்றுக் கொண்டு அக்காலப்பகுதியில் இப் பிரதேசத்தின் பாதுகாப்புக்கு பொறுப்பாய் இருந்தவர்களுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுகளையும் அரச சலுகை கைகளை யும் அரசு மீளப்பெறல் வேண்டும்.

இலங்கையில் இனப்படுகொலை நடக்கவில்லை. மனிதாபி மான வகையில் மீட்பு யத்தமே நடந்தது எனக் கூறும் முன்னாள் இராணுவ தளபதி சவேந்திர சில்வா போன்றவர்களும், முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகரா போன் றவர்கள் மட்டுமல்ல தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் பிமல் ரத்னாயக்கவும் செம்மணி சமூக புதைகுழி காட்சிகளை கண்ட பின்னர் தாமத நிலைப்பாட்டை மாற்றி தமிழர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

இவர்கள் மட்டுமல்ல தமிழர்களின் வாக்குகளை பெற்று அரசியல் அதிகாரம் நாற்காலிகளில் அமர்ந்த பின்னர் அரச சுகங்களுக்காக இனப்படுகொலை ஆட்சியாளர்களை பாது காத்து அரசியல் போராட்டத்தையும், போராளிகளையும் காட்டிக் கொடுத்தவர்களும் தம் மனசாட்சிகளை தொட்டு பகிரங்க



மன்னிப்பு கேட்க வேண்டும்.

மனித குலத்துக்கு எதிரான திட்டமிட்ட இன படுகொலை 2009 இறுதி யுத்தத்திற்கு முன்னரும் இலங்கை பேரினவாத ஆட்சி யாளர்களால் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தியுடமைக்கு மிக ஆணித்தரமான சாட்சியாகவே செம்மணி சமூக புதைகுழி காட்சி தருகின்றது. இது மனித நேயம் கொண்ட மனசாட்சி உள்ளோரை நிச்சயமாக தட்டி எழுப்போம்.

இலங்கையின் பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழர் தாயகத்தில் தமிழர்களை கொன்று குவித்ததும், காணாமலாக்கப்பட்டு சமூக புதைகளுக்குள் தள்ளியதும், ஆயிரக்கணக்கானோரை சித்திர வதை செய்து சிறைகளில் அடைத்ததும் இலட்சக்கணக் கானோரை புலம்பெயர வைத்ததும் தமிழர்கள் என்பதற்காக மட்டுமல்ல தமிழரின் தாயகத்தையும் தேசியத்தையும் அதன் அரசியல் வழிதடத்தையும் அழிப்பதற்காகவே.

இந்நிலையில் தேசிய மக்கள் சக்தியின் தலைமையில் பேரின வாத சக்திகள் அரசியல் முள்ளிவாய்க்காலில் எம்மை மூழ்கடிக் கவே திட்டங்கள் தீட்டத்தொடங்கியுள்ளதோடு அவர்களின் அரசியல் முட்கம்பி வேலிக்குள் நிரந்தரமாக அடைத்து வைக் கவும் துடிக்கின்றனர்.

போராளிகள் விதையான மண்ணில் இருந்தும் முள்ளிவாய்க் கால் நிலத்திலிருந்தும் எழுகின்ற குரலை தமிழர் தேச அரசிய லுக்கான குரலாக ஏற்று கொள்கை அடிப்படையில் அரசியலை முன்னோக்கி நகர்த்த ஒன்று படுமாறு தமிழ் தேச அரசியல் தலைமைகளை கேட்கின்றோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டம்

11.06.2025

இலங்கைக்கும், எமது மாவட்டத்திற்கும், மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் பல சட்டவிரோத அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரான அனைத்து திட்டங்களையும் உடன் நிறுத்தி, மக்களுடன் நல்ல முறையில் கலந்துரையாடி, பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் திட்டங்களை கைவிட்டு, மக்களுக்கு நலன்கள் கொண்டு வரும், மக்களை பாதிக்காத திட்டங்கள் நல்ல முறையில் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும் என மன்னாரில் இன்றைய நாள் புதன் கிழமை(11) நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தின் போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழு மற்றும் சிவில் பொது அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் இன்றைய நாள் புதன்கிழமை(11) காலை 9.30 மணியளவில் மன்னாரில் இடம் பெற்றது.




பேரணி முடிவில் ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட மகஜர் வாசிக்கப்பட்டு, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.





இதன்போதே குறித்த மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.





குறித்த மகஜரில் மேலும் குறிப்பிடுகையில்,,,

“எங்களையும், எங்கள் வாழ் விடங்களையும், எங்கள் வளங்களையும் பாரிய அழிவிலிருந்து பாதுகாக்க உங்களை வேண்டுகின்றோம்.”

கடந்த ஆண்டுகளாக பல்வேறு முயற்சிகளை நாம் சாத்வீக முறையில் தொ டர் பாட ல்கள் வழியாகவும், போரா ட்ட ங்கள் மூலமாகவும், பல துறை சார்ந்த அமைச்சர்கள், அதிகாரிகள் உட்பட பல அரச நிறுவனங்களுடன் மாவட்ட, மாகாண மத்திய அரசின் உயர் அதிகாரிகளுடன் கலந்துரை யாடியதன் மூலமாகவும் எமது நாட்டையும், எமது மாவட்டத்தையும், எமது வாழ் விடங்களையும், எமது வளங்களையும், எமது வாழ்வாதாரங்களையும் பெரும் அழிவிலிருந்து பாதுகாக்கவும், அபிவிருத்தி செய்யவும், மகிழ்வுடன் வாழவும் முயற்சிகள் பலவற்றை முன்னெடுத்து வருகிறோம்.

ஆனால் இதுவரைக்கும் இலங்கை நாட்டு மக்களாகிய நாம் பல்வேறு தளங்களிலும், பல்வேறு விடயங்களிலும், திட்டமிட்ட முறையில் நடைபெறும் பல பயங்கரமான அழிவுகளை சந்தித்து வந்து கொண்டு இருக்கின்றோம். எங்களுக்குரிய மனித உரிமைகள் அனைத்தும் இழந்த நிலையில், நம்பிக்கைகள் அனைத்தும் அழிக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட நிலையில் உங்கள் ஆட்சியில் வாழ நேரிட்டிருப்பது வேதனைக்குரிய, ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நிலையாக உள்ளது.

எமது மாவட்டத்தில் நடைபெறும் சரியான முறையில் திட்டமிடப்படாத திட்டங்களும், மக்களுடன் கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்காத திட்டங்களும், நாட்டிலுள்ள பல்வேறு சட்டதிட்டங்களை மீறி முன்னெடுக்கப்படும் திட்டங்களும், எமது மனித உரிமைகளை மீறும் திட்டங்களையும், எமது வாழ் விடங்களையும், வளங்களையும், வாழ்வாதாரங்களையும் அழிக்கும் திட்டங்கள் அனைத்தையும் உடன் நிறுத்தி, மக்களுடன் கலந்தாலோசித்து மக்களின் நீண்ட வாழ்வினை பாதிக்காத, வளங்களை பாதுகாக்கின்ற, வதிவிடங்களை அழிக்காத, சுற்றுச்சூழலை பாதிக்காத திட்டங்களை மட்டும் முன்னெடுக்குமாறு இலங்கை நாட்டு மக்களாகிய நாம் அன்புடன் கேட்டு நிற்கின்றோம்.

இப்போது எமது மாவட்டத்தில் எமது வாழ்வினை அழித்துக் கொண்டிருக்கும் திட்டங்கள், மனித உரிமை மீறல்கள் சில

1. மன்னார் தீவில் மேற்கொள்ளப்படும் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்கள் (பல நிறுவனங்கள், இலங்கை மின்சார சபையின் அனுமதியுடன் ஆதரவுடன் செய்து வருகிறது. உதாரணம் தாழ்வுபாடு, கீரி, தரவன் கோட்டை, சாந்திபுரம், சவுத்பார், சிலாவத்துறை, காயாக் குழி போன்ற சில இடங்களில்.

2. வெளிநாட்டு தனியார் கொம்பனிகளினால் எமது இலங்கை நாட்டையும், மன்னாரையும் முற்றாக அழித்து எங்கள் வளங்கள் முழுவதையும் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்ல மன்னார் தீவிலும், மன்னார் பெரும் நிலப்பரப்பிலும் மேற்கொள்ளப்படும், மேற்கொள்ளப்படவுள்ள பாரிய வளங்களை அழிக்கும், மனிதன் வாழும் உரிமைகளை அழிக்கும் பல கனிய மணல் அகழ்வு திட்டங்கள். இரண்டு நிறுவனங்களால் கனிய மண் அகழ்வு திட்டங்களை முன்னெடுப்பதற்கான திரைமறைவில் பல முயற்சிகள் செய்யப்படுகிறது.

3. பல ஆண்டுகளாக அழிக்கப்பட்டு வரும் கடல் வளங்கள், அத்துமீறிய இந்திய மீனவர்கள் வருகை, சட்டங்களுக்கு எதிரான மீன்பிடி முறைகளை பயன்படுத்துதல், திட்டமிடாத அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படுதல், போன்ற செயல்களால் கடல் வளங்கள் பாரிய அளவில் அழிக்கப்பட்டு வருகின்றது.



4. மக்களின் வாழ்விடங்களும், காணிகளும் அபகரிக்கப்படுதல். மக்களின் தேவை கருதியும், அவர்களின் மனித உரிமைகள் மதிக்கப்படும் வகையில் காணிகள் இன்னும் பங்கிட்டு கொடுக்கப்படாமல் காலங்கள் பிற் போடப்பட்டு பல ஆண்டுகளாக மக்கள் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள். (இதுவரை 4000 ற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்வதற்கு காணிகள் கேட்டும், 800 க்கு மேற்பட்ட இளையோர் சுய தொழில்கள் தொடங்க காணிகள் கேட்டும், மன்னார் மாவட்ட செயலகத்தில் விண்ணப்பித்துள்ளார்கள்.)

இவை போன்ற பல பாரிய அழிவுகளை இலங்கைக்கும், எமது மாவட்டத்திற்கும், மக்களுக்கும் ஏற்படுத்தும், பல சட்டவிரோத அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரான அனைத்து திடங்களையும் உடன் நிறுத்தி, மக்களுடன் நல்ல முறையில் கலந்துரையாடி, பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் திட்டங்களை கைவிட்டு, மக்களுக்கு நலன்கள் கொண்டு வரும், மக்களை பாதிக்காத திட்டங்கள் நல்ல முறையில் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும் என்று, இந்த கண்டன, எதிர்ப்பு ஊர்வலத்தில் நீங்கள் ஆட்சி செய்யும் இலங்கை நாட்டின், மன்னார் மாவட்டத்தின் மக்களாகிய நாங்கள் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். என ஜனாதிபதிக்கு வழங்கும் வகையில் அரச அதிபரிடம் கையளித்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.










**அறிவின் அதி உயர்ந்த பண்பாகப் பிறப்பதுதான் எளிமை, தன்னலமும் தற்பெருமையும் அகன்ற நற்பண்பாக எளிமை தோன்றுகிறது. இந்த எளிமை ஒருவரை அழகான மனிதராக, பன்பான மனிதராக ஆக்கிவிடுகிறது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# கல்மடுக்குளத்தையும் அதன்கீழான வயல்நிலங்களையும் விடுவிப்புச் செய்க!

## வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

11.06.2025

வவுனியாவடக்கு பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக கல்மடுக்குளத்தையும், அதன்கீழான வயல்நிலங்களையும் விடுவிப்புச்செய்ய நடவடிக்கைஎடுக்குமாறு வவுனியா மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவிடம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு தமிழ்மக்கள் நீண்டகால இடப்பெயர்வைச் சந்தித்த இடங்கள், தற்போது பயன்பாடின்றி பற்றைக்காடுகளாகக் காணப்படுகின்றபோது, அந்த இடங்களை வனப்பகுதியாகக் கருதி வனவளத் திணைக்களம் ஆக்கிரமிப்புச்செய்யும் செயற்பாட்டிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்தார்.

இவ்வருடத்திற்கான இரண்டாவது வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் 11.06.2025 இன்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டுகருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கல்மடுக்குளம் என்றொரு குளம் இருப்பின், அக்குளத்தின் கீழ் மக்களுக்கு வயல்காணிகள் கட்டாயம் இருந்திருக்கும். எனவே அக்குளத்தின் கீழ் மக்களுக்கு வயல் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். இவ்வாறிருக்கும்போது வனவளத்திணைக்களம் மக்களுக்குரிய வயல்காணிகளை பகிர்ந்தளிக்கமுடியாது எனக்கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாதென நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது தெரிவித்தார்.

இந்நிலையில் வனவளத்திணைக்கள அதிகாரி இதன்போது பதிலளிக்கையில்,

கல்மடுக்குளமென வனவளத் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரதேசம் நடுக்காட்டிற்குள், ஐந்து கிலோமீற்றர் தூரத்திலேயே குறித்த குளம் காணப்படுகின்றது. அந்தவகையில் அக்குளம் நடுக்காட்டிற்குள் காணப்படுவதால், அது வனமாக பாதுகாக்கப்படுவதால் அதனைவிடுவித்துக் கொடுக்க முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவித்தார்.

இதன்போது வனவளத் திணைக்கள அதிகாரியின் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளமுடியாதெனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கடந்தகால அசாதாரண சூழ்நிலைகாரணமாக குறித்த பகுதியில் குடியிருந்த, விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட தமிழ் மக்கள் குறித்த பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இவ்வாறு இடப்பெயர்வைச் சந்தித்த மக்கள் அவர்களுடைய பகுதிகளில் மீளக்குடியமர்த்தப்படாதநிலை காணப்படுகின்றது. அத்தோடு அவர்கள் விவசாய நடவடிக்கைக்காகப் பயன்படுத்திய குளங்களும், குளங்களுக்குக் கீழான வயல் நிலங்களும் விடுவிக்கப்படாத நிலையிலும் காணப்படுகின்றன.

இந்நிலையில் மக்கள் குடியிருந்த மற்றும், விவசாய நடவடிக்கைக்குப் பயன்படுத்திய நிலங்கள் பற்றைக் காடுகளாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு மக்கள் விவசாயத்திற்காக பயன்படுத்திய குளமும், வயற்காணிகளும் நீண்டகாலமாக பயன்படுத்தாத நிலையில் பற்றைக்காடுகளாக காணப்படும்போது, குறித்த பகுதியை வனப்பகுதி எனக்கூறிக்கொண்டு வனவளத் திணைக்களம் விடுவிப்புச்செய்யாமல் தொடர்ச்சியாக ஆக்கிரமித்துவைத்திருப்பது நியாயமற்ற செயற்பாடென நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், குறித்த கல்மடுக்குளம் என்ற பகுதியில் மக்களால் முன்பு விவசாயம் செய்யப்பட்டமையினால்தால் தற்போதும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் குறித்த குளம் தொடர்பான பதிவுகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

எனவே குறித்த காணிகளை அரசாங்கம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனத் தெரிவித்தார். அதைவிடுத்து இவ்வாறாக திணைக்களங்கள் மக்களின் காணிகளை தொடர்ந்தும் அபகரிப்புச் செய்துவைத்திருந்தால் மக்கள் எங்கே செல்வார்கள் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி



எழுப்பினர்.

கடந்த காலங்களில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சிஎன பாரிய அளவில் மக்களால் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு, நெல் வடக்கிலிருந்து தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்த வரலாறுகளே காணப்பட்டன. இவ்வாறு மக்களால் நெற்செய்கைக்காக பயன்படுத்தப்பட்ட பெருமளவான காணிகளை அரசதிணைக்களங்கள் ஆக்கிரமித்துள்ள நிலையே காணப்படுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது தெரிவித்தார்.

அத்தோடு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க இந்த விடயத்தில் கூடுதல் கவனமெடுக்கவேண்டுமென வலியுறுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், அரசதிணைக்களங்களால் அபகரிக்கப்பட்டுள்ள மக்களின் குடியிருப்பு மற்றும், விவசாயக்காணிகளை விடுவிப்புச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை முன்வைத்தார்.

அதேவேளை கல்மடுக்குளத்தின்கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு விண்ணப்பத்தவர்களின் தரவுகளையும், அங்கு ஏற்கனவே மக்கள் பயிற்செய்கை மேற்கொண்டமைக்கான ஆதாரங்களையும் வவுனியா வடக்கு பிரதேசசெயலரிடம் சமர்ப்பிக்குமாறு கமநல அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# செம்மணிப் புதைகுழி விவகாரம் உண்மையையும் நீதியையும் நிலைநாட்டப்பட வேண்டும்

## யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

12.06.2025

செம்மணிப் புதைகுழி விவகாரம் கைவிடப்படும் விடயமாகவன்றி உண்மையையும் நீதியையும் நிலைநாட்டத்தக்கதாக முன்நகரவேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

செம்மணிப் புதைகுழி அகழ்வாய்வு பணிகள் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணக் குடாநாடு இருந்தபோது காணமால் ஆக்கப்பட்ட பலருக்கு இன்று வரை என்ன நடந்தது என்பது தெரியாத அவல நிலை தொடர்கின்றது. இந்த நிலையே இறுதிப் போரின் போதும்

நிகழ்ந்துள்ளது. அவர்களது உறவினர்கள் பல்லாண்டுகளாக தொடர்ச்சியாக போராடிவருகின்றார்கள்.

போருக்குப் பின்னான சூழ்நிலையில் யார் எந்த வலுவான சத்தியும் இயற்கை நீதிக்கு மாறாக நிகழ்ந்த அவலங்களை மறைக்க நினைத்தாலும் அவை ஏதோவொரு விதத்தில் வெளிக்கிளம்பிய வண்ணமே உள்ளன. செம்மணிப் புதைகுழி விவகாரமும் இப்போது அவ்வாறு வெளிக்கிளம்பி நீதித்துறையின் கட்டுப்பாட்டில் உரிய வகையில் முன்கொண்டு செல்லப்படுகின்றது. இந்த நிலை வலுவாக்கப்பட வேண்டும் என்பதுடன் புதைகுழிகளின் நீட்சி அறியப்படவும் வேண்டும் என்பதும் மிகவும் அவசியமானது.

எந்தவொரு காரணத்தை முன்னிறுத்தியும் புதைகுழி அகழ்வுகள் இடைநிறுத்தப்படக்கூடாது. உரிய நிதியை உரிய காலத்தில் விடுவித்தல், புதைகுழி அகழ்வுப் பிரதேசங்களுக்கு உரிய பொலிஸ் பாதுகாப்பினை வழங்குதல், அகழ்வுப் பணிகளில் ஈடுபடும் தரப்பினர் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்காதிருத்தல் என்பன அவசியமானவையென எமது ஆசிரியர் சங்கம் கருதுகின்றது.

புதைகுழி விவகாரங்களை சரியான முறையில் அணுகுவது இலங்கைத்தேசத்தின் முன்னேற்றத்துக்கு அவசியமானது.

அவலமாக மரித்த உயிர்களின் ஆத்மாக்கள் அமைதிகொள்ளும் போது தான் நாடு முன்னோக்கிச் செல்ல முடியும். மாறாக அந்த ஆத்மாக்களின் அவலக்கதைகள் தொடர்ந்தும் மூடி மறைக்கப்பட்டால் அவற்றினால் விளையும் பாதிப்புக்கள்




நாட்டை மேலும் மோசமானநிலைக்கு இட்டுச் செல்லும்.

இதனையுணர்ந்து செம்மணிப் புதைகுழி விவகாரம் கைவிடப்படும் விடயமாகவன்றி உண்மையையும் நீதியையும் நிலைநாட்டக்கூடிய வகையில் முன்கொண்டு செல்லப்படும் விடயமாக மாறவேண்டும் என்பதை யாழ்ப்பாணப்

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினராகிய நாம் வலுவாக பதிவுசெய்கின்றோம் – என்றுள்ளது

# யாழ். கற்கோவளம் இராணுவ முகாமிற்கு அருகில் மண்டையோட்டுடன் கூடிய எலும்புச் சிதிலங்கள்

12.06.2025

யாழ்ப்பாணம் கற்கோவள இராணுவ முகாமிற்கு அருகில் உள்ள காணிக்குள் இருந்து மண்டையோட்டுடன் கூடிய எலும்பு சிதிலங்கள் காணப்படுகின்றன.

குறித்த காணிக்குள் மனித மண்டையோட்டுடன் எலும்புகள் காணப்படுவதாக பருத்தித்துறை பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.







# நீதி மன்ற கட்டளையை மீறினார்கள் என தையிட்டி விகாரைக்கு எதிராக போராடியரவர்களுக்கு எதிராக சிறீலங்கா பொலிசால் வழக்குத் தாக்கல்!

11.06.2025

யாழ்ப்பாணம், பலாலி சிறீலங்காப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மல்லாகம் நீதவான் நீதிமன்றை தவறாக வழிநடத்துவதாக மன்றில் சட்டத்தரணிகள் தமது சமர்ப்பனங்களில் தெரிவித் துள்ளனர்.

நீதிமன்ற கட்டளையை மீறி, தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராக போராட்டம் நடத்தியதாக பலாலி சிறீலங்காப் பொலிசார் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

குறித்த வழக்கு விசாரணைகளின் போது, போராட்டம் நடத்தியவர் சார்பாக மன்றில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி என். சிறிகாந்தா, நா.காண்டீபன் ஆகியோர் சமர்ப்பனங்களை முன்வைத்தனர்.

குறித்த வழக்கு தொடர்பில் சட்டத்தரணிகள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம் நடைபெறவிருந்த வேளை சிலரின் பெயர் அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் தடையுத்தரவுகளை பெற்று இருந்தனர். நீதிமன்றினால் பெறப்பட்ட தடையுத்தரவை, சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்காது, போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை, அங்கு வந்த பொலிசார் அவர்களின் பெயர் விபரங்களை வாசித்து சென்று இருந்தனர். அதனூடாக சட்டத்தின் ஏற்பாடுகளை திருப்தி படுத்தியுள்ளதாக பொலிஸ் தரப்பு கூற முடியாது என மன்றில் தெரிவித்திருந்தோம்.

அதேவேளை, தையிட்டி விகாரைக்கு பொறுப்பான "அமரபுர நிக்காய பீடம்" விகாரையில் பொசன் நிகழ்வுகளை நடாத்துவது இல்லை என கடந்த மே மாதம் 29ஆம் திகதியே பதில் பொலிஸ் மா அதிபர், வடமாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு அறிவித்துள்ளது.

இந்த நிலையில் கடந்த மாதம் பூரணை தின வழிபாட்டிற்கு வருகை தந்த பௌத்தர்களை போராட்டக்காரர்கள் இடைமறித்ததாகவும், தமிழர்கள் விகாரையை இடித்து அழிக்க போகின்றார்கள், பௌத்தர்கள் ஒன்றிணைந்து தையிட்டிக்கு செல்ல வேண்டும் என சமூக வலைத்தளங்களில் கடும் போக்கு சிங்கள இனவாதிகள் பொய்யான தகவல்களை பரப்பி, இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்று விக்க முயன்றனர். அவர்கள் தொடர்பில் பொலிசார் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்ற விடயத்தை மன்றில் சுட்டிக் காட்டி, அதற்கான ஆதாரங்களையும் மன்றில் சமர்ப்பித் துள்ளோம்.

பலாலி பொலிஸ் அதிகாரிகள் பொய்யான தகவல்களை வழங்கி மன்றை தவறாக வழி நடத்துகிறார். என்ற விடயத்தையும் மன்றில் சுட்டிக்காட்டினோம். அதனை அடுத்து குறித்த வழக்கினை நீதவான் கிடப்பில் போட்டுள்ளார் என தெரிவித்தனர்.



அதேவேளை தையிட்டி விகாரையை தமிழர்கள் இடித்து அழிக்க போகிறார்கள் என சமூக வலைத்தளங்களில் பொய்யான தகவல்களை பரப்பியவர்கள் என குற்றம் சாட்டப்பட்ட பொதுபலசேன ராவண பலய, சிங்கள ராவய அமைப்பை சேர்ந்தவர்கள் தையிட்டி விகாரைக்கு வந்திருந்தார்கள் என்றும், அவர்களுக்கு பலாலி சிறீலங்கா பொலிவார் பாதுகாப்பு வழங்கி இருந்தார்கள் என சமூக செயற்பாட்டாளர் ராஜ்குமார் ராஜீவ்காந்த் குற்றம் சாட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தனியார் காணிகளில் இருந்து வெளியேற மறுக்கும் கோப்பாய்ப் பகுதியிலுள்ள சிறீலங்கா பொலிசார்

12.06.2025

கோப்பாய்யில் உள்ள சிறீலங்கா பொலிசார் தனியார் காணிகளை அடாத்தாக கையகப்படுத்தி தங்கியுள்ளதுடன், அங்கிருந்து வெளியேற மறுத்து வருவதாக கோப்பாய் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் முழுமையான இராணுவ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 1995ஆம் ஆண்டு காலம் முதல் கல்வியங்காட்டு பகுதியில் உள்ள 09 தனியார் வீடுகளையும் அதனுடன் கூடிய காணிகளுமாக 2.77 ஏக்கர் காணியை அடாத்தாக கையகப்படுத்தி 30 வருடங்களுக்கு மேலாக சிறீலங்கா பொலிசார் தங்கியுள்ளனர்.

அந்நிலையில் தமது காணிகளை விட்டு பொலிசார் வெளியேற வேண்டும் என காணி உரிமையாளர்கள் தொடர்ச்சியாக கோரி வரும் நிலையில், தற்போது நீதிமன்றில் வழக்கும் தொடர்ந்துள்ளனர்.

இது தொடர்பில் கோப்பாய் பிரதேச செயலர் தெரிவிக்கும் போது,

09 தனியார் காணிகளை பிடித்தே கோப்பாய் பொலிஸ் நிலையம் மற்றும் பொலிசாரின் தங்குமிடம் என்பவற்றை அமைத்துள்ளனர். குறித்த காணிகளை காணி உரிமையாளர்களிடம் கையளிக்குமாறும், பொலிஸ் நிலையத்திற்கு என 1.25 ஏக்கர் அரச காணி பொலிஸாருக்கு ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ள போதிலும் , அக்காணிக்கு செல்ல மறுத்து தொடர்ந்தும் தனியார் காணிகளில் தங்கியுள்ளனர் என தெரிவித்தார்.




# தென்னிலங்கை இனவாதிகளால் தமிழ் மக்களுக்கு ஆபத்து

## மக்கள் போராட்ட முன்னணியின் உறுப்பினர் ராஜ்குமால் ரஜீகாந்த்

12.06.2025

கடந்த பொசன் போயா தினத்தில் தென்னிலங்கை இனவாதிகள் தையிட்டி விகாரைக்கு வந்ததாகவும் இவர்களால் தமிழ் மக்களுக்கு ஆபத்து ஏற்படும் எனவும் மக்கள் போராட்ட முன்னணியின் உறுப்பினர் ராஜ்குமார் ரஜீவ்காந்த் தெரிவித்துள்ளார்.

அவர் தனது சமூக ஊடக பக்கத்தில் இன்று (12) வெளியிட்ட பதிவிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது,





'மக்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் இதைக் கவனத்தில் கொள்ளவும். தாமதிக்காமல் இந்த விடயத்தில் அக்கறை காட்ட வேண்டும்'. கடந்த ஜூன் 10ஆம் திகதி அன்று பொசன் நிகழ்வு எனும் போர்வையில் தையிட்டிக்கு வந்தவர்கள் யார் என்பதை நான் அனைவருக்கும் ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

சிங்களக் கடும் போக்கு தேசிய வாத சிங்கள ராவய அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் செயலாளரே அங்கு வந்திருந்தார்கள். பொதுபலசேன ராவண பலய போன்ற கடும்போக்குத் தேசியவாத அமைப்புகளுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளவர்களே இவர்கள்.

தொடர்ச்சியாக அமைதியான முறையில் நாங்கள் செய்யும் நினைவேந்தல் நிகழ்வுகளை குழப்பியிருக்கின்றார்கள். விளக்குகளை காலால் தட்டி இருக்கின்றார்கள். மாலைகளை கிழித்து எறிந்திருக்கின்றார்கள். நினைவேந்தல் செய்தால் மீண்டும் ஒரு யுத்தம் வரும் என்று நேரடியாக மிரட்டி இருக்கின்றார்கள் என்றும் மக்கள் போராட்ட முன்னணியின் உறுப்பினர் ராஜ்குமார் ரஜீவ்காந்த் தெரிவித்துள்ளார்.

இப்படிப்பட்டவர்களை 10ம் திகதி முழுமையான காவல்துறை பாதுக்காப்புடன் வரவேற்று தையிட்டியின் சட்டவிரோத விகாரையினுள் வைத்திருந்தார்கள். இந்த காடையர் கூட்டம் உள்ளேயும் காணிகளைத் தொலைத்தவர்கள் வெளியே வெயிலில் இருந்தார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இங்கு வழிபட வரவில்லை, எமது கடந்தகால அனுபவ அடிப்படையில் இவர்களால் தமிழ் மக்களுக்கு ஆபத்தே அதிகம்.

இவர்களைப் போன்றவர்கள் தங்கள் இனவாதத் தேவைக்கு இந்தப் போராட்டத்தை பயன்படுத்துவார்கள் என நன்கு அறிந்த அரசாங்கம் இதற்கு எந்த தீர்வையும் முன்வைக்காது அமைதியாகவுள்ளது என்றும் மக்கள் போராட்ட முன்னணியின் உறுப்பினர் ராஜ்குமார் ரஜீவ்காந்த் தெரிவித்துள்ளார்.

# திருகோணமலையின் பொன்மலைக்குடாவில் ஜனாஸா நல்லடக்கத்திற்கு பௌத்த பிக்குவின் தடையால் பதற்றம்...

13.06.2025

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட புல்மோட்டை 02 - பொன்மலைக்குடா பகுதியில் ஜனாஸா நல்லடக்கத்திற்கு பௌத்த பிக்கு தடை விதித்ததால் அப்பகுதியில் பதற்றமான நிலை தோன்றியது.

குறித்த சம்பவம் வெள்ளிக்கிழமை (13) காலை இடம் பெற்றிருந்தது.

புல்மோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்மலைக்குடா பகுதியில் இன்று காலை ஆண் ஒருவர் சுகவீனமுற்று மரணமாகியிருந்த நிலையில் குறித்த ஜனாஸாவை நல் லடக்கம் செய்வதற்கு மயானத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள குறித்த காணியில் ஜனாஸா நல்லடக்கம் இடம்பெறுமென அறிவிக் கப்பட்டது.

இதன் பின்னர் ஜனாஸா அடக்கத்திற்கு எதிராக புல்மோட்டை அரிசிமலை விகாரையின் விகாராதிபதியினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று மேற்கொண்டுள்ளதாகவும் அதன் அடிப்படையில் குறித்த ஜனாஸா நல்லடக்கத்தினை நிறுத்தக்கோரியும் புல்மோட்டை பொலிஸ் நிலைய அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில் குழப்ப நிலை ஏற் பட்டுள்ளது.

இதனையடுத்து பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவின் கவனத்திற்கு குறித்த விடயம் கொண்டு செல்லப்பட்டதையடுத்து அவ்விடத்திற்கு வந்த பிரதேச செயலாளரின் தடையீட்டினால் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.

புல்மோட்டை பகுதியில் மக்களுடைய பெருமளவான காணி களை பூஜா பூமி என்ற பெயரில் குறித்த பௌத்த பிக்கு ஆக்கிர மித்து வருவதாகவும் இதனால் தங்களுடைய வாழ்வாதாரம் மற்றும் இயல்புநிலை பாதிக்கப்பட்டு வருவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி குறித்த பகுதியில் ஜனாஸா நல்லடக்கத்திற்காக குழி தோண்டப்பட்டபோது புல்மோட்டை அரிசிமலை விகாரையின் விகாராதிபதி குறித்த



காணி "பூஜா பூமி" என புல்மோட்டை பொலிஸார் சிலரை அப் பகுதிக்கு அனுப்பி ஜனாஸா நல்லடக்கத்தை தடை செய் திருந்தார்.

இதனையடுத்து அப்பகுதியில் பதற்றமான சூழல் தோன்றியது. குறித்த விடயம் பிரதேச செயலாளர் உட்பட பலருடைய கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் குறித்த பகுதியில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பதவியில் உயிர்வாழ்வதே தமிழ் அரசியல் வாதிகளின் குறிக்கோள்

## வலிந்து காணாமல் போனோரின்உறவுகளின் சங்கம்

14.06.2025

தமிழ் அரசியல்வாதிகளின் ஒரே குறிக்கோள் பதவியில் உயிர் வாழ்வதே. அவர்கள் எந்த தொலைநோக்கு பார்வையையும் இல்லாதவர்கள் இதனால் நாங்கள் அவர்கள் மீது நம்பிக்கை வைக்கவில்லை என தமிழர் தாயக வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.







வவுனியாவில் சனிக்கிழமை (14) காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவுகளின் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப் பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்,

போரின் இறுதிக் கட்டத்தின் போதும் அதற்குப் பின்னரும் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளின் தமிழ் தாய்மார்களான எங்கள் போராட்ட பயணம் 3,036 வது நாளாக, தொடர்கிறது.

எங்கள் குழந்தைகளை கண்டுபிடிக்க வேண்டுமென்ற தவிப் போடு மட்டுமன்றி, இனப்படுகொலையிலிருந்து எதிர்காலத் தலைமுறையினரைப் பாதுகாக்கவும், தமிழர் இறையாண் மைக்கு சர்வதேச ஆதரவைக் கோரவும், அமெரிக்க ஐரோப்பிய ஒன்றியம் ஒரு காலத்தில் எங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அழைப்பு விடுக்கிறோம்.

அரசியல் தீர்வு ஒன்றுதேவை என யுத்தத்தின் போது இலங்கை அரசுக்கும் அதன் பின்னணியில் இருந்த பங்களிப்பாளர் களுக்கும் ஐரோப்பிய ஒன்றியம், வாக்குறுதி அளித்தது. ஆனால் இன்று வரை எந்த தீர்வும் இல்லை. எங்கள் கண்ணீர் மட்டும் தொடர்கிறது.

இன்று, அமைதிக்கு பதிலாக, இலங்கையின் வடகிழக்கு இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளது. புலனாய்வு அமைப் புகள் பொதுமக்கள் வாழ்க்கையை ஆதிக்கம் செலுத்துகின்றன.

அதே நேரத்தில் அரசுடன் தொடர்புடைய போதைப்பொருள் வலையமைப்புகள் மற்றும் பாலியல் சுரண்டல் தமிழ் இளைஞர் களையும் பெண்களையும் அச்சுறுத்துகின்றன.

நாங்கள் தமிழ் அரசியல்வாதிகள் மீது நம்பிக்கை வைக்க வில்லை. அவர்களின் ஒரே குறிக்கோள் பதவியில் உயிர் வாழ்வது என்று தெரிகிறது. அவர்கள் எந்த தொலைநோக்கு பார்வையையும், தைரியத்தையும், சர்வதேச ஈடுபாட்டின் மூலம் இறையாண்மையைப் பெற்ற பிற ஒடுக்கப்பட்ட நாடுகளிட மிருந்து கற்றுக்கொள்ள எந்த முயற்சியையும் காட்டவில்லை.

அவர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தை பொறுப்பேற்க வைக்கவோ





# யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்!

12.06.2025

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணை யாளர் வோல்கர் டேர்க், யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள் ளார் என்று உறுதியான வகையில் அறியமுடிகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணை யாளர் வோல்கர் டேர்க், எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

நான்கு நாள்கள் இலங்கையில் தங்கியிருக்கும் அவர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தவுள்ளார்.

இதன் ஒரு பகுதியாகவே, அவர் யாழ்ப்பாணத்துக்கு எதிர்வரும் 25ஆம் திகதி பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் எனப் பலதரப்பினரையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தவுள்ளார்.

அத்துடன், இறுதிப்போரில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பான பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் தொடர்பிலும் அவர் ஆராய்வார் என்று தெரியவருகின்றது.

இலங்கை இராணுவத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுத் தொடர்பில் எதிர் வரும் செப்டெம்பர் மாத அமர்வில் சில நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளன.



ஆதலால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் யாழ்ப்பாணம் வருகின்றமை முக்கியத்துவம் மிக்க விடயமாகப் பார்க்கப்படுகின்றது.




# ஒன்ராரியோவில் 407 கிழக்குப் பகுதி அதிவேக நெடுஞ் சாலைகளுக்கான கட்டணங்கள் நீக்கம்

01.06.2025

ஒன்ராரியோ மாகாணத்தின் அதிவேக நெடுஞ்சாலைகளுக்கான கட்டணங்கள் நீக்கப்பட்டுள்ளன. இறுதியாக 407 கிழக்கு நெடுஞ்சாலையில் பயணிப்பதற்கான கட்டணம் நீக்கப்பட்டுள்ளது.



இன்றைய நாள் முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த கட்டண நீக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணத்திற்கு சொந்தமான பகுதி முழுவதிலும் கட்டணம் (தொடர்வழி பயணக் கட்டணம்) அதிகாரப்பூர்வமாக நீக்கப்பட்டுள்ளது.

ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் தனது முக்கிய தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றை நிறைவேற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிக்கரிங்கில் உள்ள ப்ராக் வீதி முதல் கிளாரிங்டனில் உள்ள நெடுஞ்சாலை 35/115 வரை உள்ள பிரிவில், இனி பயணிகள் எந்தவொரு கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் டக் ஃபோர்ட் அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையில் கட்டண நீக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாகாண போக்குவரத்துத் துறை அமைச்சர் ப்ரப்மீத் சர்காரியா தெரிவித்துள்ளார்.

“முந்தைய ஆட்சி காலங்களில் அமல்படுத்தப்பட்ட கட்டண நீக்கங்களை முற்றிலும் நீக்கும் பணியில் இது இறுதி படி என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், தனியார் நிறுவனத்துக்கு சொந்தமான 407 நெடுஞ்சாலைப் பகுதிகளில் டோல்கள் தொடரும் எனத் தெரிவிக்கப் படுகின்றது.




ஒன்ராரியோ மாகாணத்திற்கு சொந்தமான நெடுஞ்சாலைகளில் இருந்து அனைத்து கட்டணங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டண நீக்கத்தின் ஊடாக நாள்தோறும் பயணம் செய்யும் பயணிகள் ஓராண்டுக்கு 7200 டொலர்கள் வரையில் சேமிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# புலம்பெயர்தல் தொடர்பில் கனடா முன்வைத்துள்ள மசோதா

04.06.2025

புலம்பெயர்தலைக் கட்டுப்படுத்த சட்டம் ஒன்றைக் கொண்டுவர கனடா அரசு திட்டமிட்டுவருகிறது.




சில புகலிடக் கோரிக்கைகளை கட்டுப்படுத்துதல் மற்றும், புலம்பெயர்தல் பரிசீலிப்பதை நிறுத்த அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் தொடர்பிலான ஒரு மசோதாவை கனடா அரசாங்கம் முன்வைத்துள்ளது.

கனடாவின் புலம்பெயர்தல் அமைச்சரான லீனா (Lena Diab) டயப் கூறும்போது, ‘வலிமையான எல்லைகள்’ சட்டமானது, திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் குற்றங்களையும், சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் ஆயுதங்கள் நாட்டுக்குள் நுழைவதை கட்டுப்படுத்துவதையும், நாட்டின் புலம்பெயர்தல் அமைப்பின் ஒருமைப்பாட்டை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்றார்.

இந்த சட்டத்தின் மூலம், அமெரிக்காவுடனான கனடாவின் பகிரப்பட்ட எல்லையைக் கண்காணிக்க பொலிசாருக்கு அதிக அதிகாரம் அளிக்கப்பட உள்ளது.

இன்னொரு முக்கிய விடயம், இந்தச் சட்டம், கனடாவில் ஒரு வருடத்திற்கு மேலாக தங்கியிருப்பவர்கள் புகலிடம் கோருவதைத் தடுக்கக்கூடும்.

அதாவது, கனடாவுக்கு வந்தவர்கள், 14 நாட்களுக்குள் புகலிடம் கோரி விண்ணப்பிக்கவேண்டும்.



அப்படி விண்ணப்பிக்காமல், ஒரு வருடத்துக்கும் மேல் கனடாவில் தங்கியிருப்பவர்கள், அதற்குப்பின் புகலிடம் கோர தடை விதிக்கப்படுவதுடன், அவர்கள் நாடுகடத்தப்படவும் வாய்ப்புள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடாவின் மத்திய வங்கி வட்டி வீதம் 2.75 % பேணுவதாக அறிவிப்பு

05.06.2025

கனடாவில் வட்டி வீதம் தொடர்பில் அந்நாட்டு மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

கனடா மத்திய வங்கி (Bank of Canada) முக்கிய வட்டி வீதத்தை 2.75% ஆக மாற்றமின்றி பேணுவதாக இன்று அறிவித்துள்ளது.



அமெரிக்க வரிகள் பொருளாதாரத்தில் எவ்வாறு தாக்கம் ஏற்படுத்தும் என்பது தெளிவாக தெரிய வராத நிலையில், நிலைமையை கவனிக்க விரும்புவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

“தெளிவற்ற சூழ்நிலை இன்னும் நீடிக்கிறது,” என்று மத்திய வங்கி ஆளுனர் டிஃப் மேக்லெம் குறிப்பிட்டுள்ளார்.

“தகவல்கள் மேலும் கிடைக்கும் வரை வட்டிக் கொள்கையை மாற்றமின்றி வைக்க வேண்டியதாக எல்லா உறுப்பினர்களின் ஒருமித்த முடிவாக இது தீர்மானிக்கப்பட்டது” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




முந்தைய மாதங்களுக்குப் போலவே, பொருளாதார நிபுணர்கள் மற்றும் சந்தை கணிப்புகளும் இந்த முடிவை எதிர்பார்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



**“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# ஒன்ராரியோ அரசு ஒன்ராரியோ பாதைகளுடன் இணைந்த போக்குவரத்து வசதியை விரிவாக்குகிறது

05.06.2025

ஒன்ராரியோ அரசு குயின் போக்குவரத்து நிலையத்தின் கீழே 40 மீட்டரில் புதிய நிலையத்தை அமைப்பதற்கான வேலையைத் தொடங்கியுள்ளது. 15.6 கிலோமீட்டர் நீளமுள்ள 40 இற்கும் மேற்பட்ட போக்குவரத்து வழித்தடங்களை இணைக்கவுள்ள இப்பாதை பயன்பாட்டுக்கு வரும்போது, நாளாந்தம் 28,000 வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது பற்றி அமைச்சர் விஜய் தணிகாசலம் கருத்துத் தெரிவிக்கும்போது, "இத்திட்டம் ஒரு போக்குவரத்துத் திட்டம் என்பதைக் கடந்து மக்களை அவர்களுக்கான வாய்ப்புகளுடன் இணைப்பது தொடர்பானது" என்று தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "ஒன்ராரியோ பாதை மூலம் குடும்பங்களுக்கும், மாணவர்களுக்கும், தொழிலாளர்களுக்குமான செயற்றிறன் மிக்க ஒரு நகரத்தை நாம் உருவாக்கி வருகிறோம்" எனக் கூறினார். அதேபோல் ஸ்காபரோவிலுள்ள பின்தங்கிய பகுதிகளில் நம்பகத்தன்மை வாய்ந்ததும், விரைவானதாகவுமான போக்குவரத்துக்கு புதிய மூன்று நிறுத்தங்களை அமைத்து, நிலக்கீழ் வழித்தடப் பாதை நீட்டிப்பில் ஒன்ராரியோ அரசு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முன்னேற்றத்தை அடைந்துவருகிறது.



# கனடாவின் குடியுரிமை கட்டுப்பாடுகளில் தளர்வு

07.06.2025

கனடா மக்கள், அந்நாட்டை தவிர வேறு நாடுகளில் குழந்தையை பெற்றால், முதல் தலைமுறை குழந்தைக்கு மட்டும் குடியுரிமை வழங்கப்பட்டு வந்தது. இரண்டாவது தலைமுறை குழந்தைக்கு குடியுரிமை கிடைக்காமல் இருந்தது.

இந்நிலையில் அனைத்து தலைமுறை குழந்தைகளுக்கும் குடியுரிமை கிடைக்கும் வகையில் தற்போது கனடிய அரசு, சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு வருகிறது.

இதற்கான மசோதா தற்போது நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. கனடாவின் குடியுரிமை பெற்றவர்கள், வெளிநாட்டில் குழந்தையை பெற்றெடுத்தாலும், அக்குழந்தைக்கு கனடாவின் குடியுரிமை கிடைக்கும்.

ஆனால், இந்த குழந்தை கனடாவின் குடியுரிமையை பெற்றிருந்தாலும் வளர்ந்து திருமணமாகி, வெளிநாட்டில் குழந்தையை பெற்றால், அதாவது இரண்டாவது தலைமுறை குழந்தைக்கு கனடா குடியுரிமையை கோர முடியாது என்று சட்டம் இருந்தது.

இது கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகி வந்த நிலையில், தற்போது இந்த சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. அதன்படி இனி எத்தனை தலைமுறை வேண்டுமானாலும் கனடாவின் குடியுரிமையை பெற்றுக்கொள்ளலாம்.




இந்த சட்டத்திருத்தம் நேற்று அந்நாட்டு நாடாளுமன்றத்தில் முன்மொழிப்பட்டிருக்கிறது. இந்த சட்டத்திருத்தத்திற்கு பல்வேறு வெளிநாட்டை சேர்ந்த மக்களும் வரவேற்பு தெரிவித்திருக்கின்றனர்.

# கனடா தொழிலாளர் நலத்திட்டமான CWB மூலம் குறைந்த வருமானம் கொண்ட தொழிலாளர்களுக்கும், குடும்பங்களுக்கும் அதிகரிக்கப்பட உள்ள கொடுப்பனவுகள்

10.06.2025

கனடா தொழிலாளர் நலத்திட்டமான CWB மூலம், குறைந்த வருமானம் கொண்ட தொழிலாளர்களுக்கும் குடும்பங்களுக்கும் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் எதிர்வரும் யூலை மாதம் முதல் வழங்கப்படும்.

இந்த புதிய திட்டத்தின் கீழ், முதலாவது கொடுப்பனவு யூலை 12ஆம் திகதி வழங்கப்படும். அதன் பிறகு, ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒருமுறை, ஒக்டோபர் 11 மற்றும் ஜனவரி 10, 2026 ஆகிய திகதிகளில் கூடுதலாக கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன.

இந்த நலத்திட்டத்தின் பயனாளர்களில் ஏற்கனவே 2024ஆம் ஆண்டில் இதற்காக பதிவு செய்தவர்கள், மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை. ஒற்றை நபர்களுக்கான வருடாந்த கொடுப்பனவு அதிகபட்சம் $1,633 ஆகும். குடும்பங்களுக்கு இது $2,813 வரை வழங்கப்படும். மேலும், மாற்றுத் திறனாளிகள் கூடுதலாக $843 பெறக்கூடிய தகுதியும் பெற்றுள்ளனர். இந்த நலத்திட்டத்தின் பயனை பெற, நபர் கனடாவில் ஆண்டுபூராக வசித்து இருக்க வேண்டும்.

கடந்த ஆண்டு டிசம்பர் 31க்குள் 19 வயது முடித்திருக்க வேண்டும் என்பதுடன் 2024ஆம் ஆண்டில் குறைந்தது $3,000 வரை சம்பாதித்து வேலை செய்திருக்க வேண்டும். கொடுப்பனவு வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுவதால், வரம்பை விட அதிக வருமானம் இருப்பின் கொடுப்பனவு குறைக்கப்படலாம் அல்லது முற்றாக நிறுத்தப்படவும் கூடும்.

இந்த கொடுப்பனவை பெறுவோர், தங்களது வருமானத் தகவல்களை முழுமையாக சமர்ப்பித்திருக்கிறார்களா, அதே சமயம் அந்த தகவல்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.



அத்துடன், பணம் சரியான நேரத்தில் வரவில்லை என்றால், 10 வேலை நாட்கள் காத்திருந்து, அதன் பிறகு கனடா வருவாய் நிறுவனத்தை (CRA) தொடர்பு கொள்ளலாம்.

# தொழிலாளர்கள் மற்றும் குடும்பங்களுக்கு உதவ ஒன்ராரியோ விதிகளை எளிதாக்குகிறது

12.06.2025

உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் அமெரிக்காவின் புதிய விதிகள் காரணமாக, வணிகங்களை எளிதாக்க ஒன்ராரியோ அரசு கடுமையாக உழைத்து வருகிறது. வணிகங்கள் நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்தும் வகையில் குழப்பமான விதிகளை அரசாங்கம் குறைத்து வருகிறது. இது ஒவ்வொரு ஆண்டும் 5.8 மில்லியன் டொலர்களையும், 256,000 மணித்தியாலங்களுக்கு மேலான நேரத்தையும் மிச்சப்படுத்தும்.

2018 முதல், ஒன்ராரியோ வணிகங்கள் 1 பில்லியன் டொலர்களுக்கு மேலான பணத்தையும் 1.5 மில்லியன் மணித்தியாலங்களுக்கு மேலான நேரத்தையும் மிச்சப்படுத்த உதவியுள்ளது. இதன் மூலம் வேலைகளை உருவாக்குவதற்கும் குடும்பங்களுக்கு உதவுவதற்கும் அதிக பணமும் நேரமும் கிடைக்கும்.

அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், "நமக்குத் தேவையில்லாத விதிகளை அகற்றுவதன் மூலம், வேலைகளைப் பாதுகாக்கவும், ஒன்ராரியோவை வலிமையுள்ளதாகவும் உருவாக்குகிறோம்" என்றார். ஒன்ராரியோவை வாழ, வேலை செய்ய மற்றும் ஒரு குடும்பத்தை வளர்க்க ஏற்புடைய ஒரு சிறந்த இடமாக வைத்திருப்பதே எமது குறிக்கோளாக விளங்குகின்றது.



www.sangathamil.ca

# தமிழக செய்திகள்



## 2026 தேர்தல் களத்தில் ஐந்தாம் தமிழர் சங்கத்தில் வேண்டுகோள்

01.06.2025



ஐந்தாம் தமிழர் சங்க நேயர்களுக்கு வணக்கம்…!

இன்றைய தினம், தமிழ் நாடு முழுக்க உள்ள அனைத்து ஆசீவகத் தமிழர்களைக் கொண்டு "ஆசீவக தமிழர் ஒன்று கூடல்" என்ற நிகழ்வு நடத்தப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் இணைத்து, அதை ஒன்பது மண்டலங்காளாகப் பிரித்து நடத்தப்பட்ட இந்நிகழ்வு, மிக சிறப்பான முறையில் அமைந்தது.

நிகழ்ச்சியின் நடுவில், Google இணைப்பின் மூலம், அனைத்து மண்டல உறுப்பினர்களிடம், ஐந்தாம் யுகக் கட்சியைக் குறித்தும், நமது கடவுளர்களைக் குறித்தும், முனைவர் திரு. பாண்டியன் ஐயா அவர்கள் சிறப்புரையை நிகழ்த்தினார்.

அதன் பிறகு, ஐந்தாம் யுகக் கட்சியின் அடுத்தக்கட்ட வளர்ச்சியை முன்னிறுத்தி, அனைத்து உறவுகளிடமும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது. ஒட்டுமொத்தமாக இன்றைய தினம் ஒரு வரலாற்று சிறப்புமிக்க தருணமாக அமைந்தது.

2026 தேர்தல் களத்தை நமக்கான களமாக மாற்றி அமைக்க, அனைத்து தமிழரும் ஒன்றிணைந்து, தமிழத் தேசிய ஆட்சி அமைக்க முன் வரவேண்டி கேட்டுக்கொள்கின்றோம்.

## "பூமித்தாயின் மார்பை அறுத்து இரத்தத்தை குடிக்கும் குவாரி உரிமையாளர்கள்"

### சென்னை உயர் நீதிமன்றம்

07.06.2025





"தீராத பேராசை கொண்ட குவாரி உரிமையாளர்கள், பூமித் தாயின் மார்பை அறுத்து இரத்தத்தை குடிக்கின்றார்கள் என குவாரி விதிமீறல் தொடர்பான வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் வேதனை தெரிவித்துள்ளது.

கோவை மாவட்டத்தில், புரவிபாளையம் கிராமத்தில் கே.டி.செந் தாமரை என்பவர் பட்டா நிலங்களில் 2009-ம் ஆண்டு முதல் குவாரிகளை நடத்தி வருகிறார். இவரது குவாரிகளில் விதிமீறல் உள்ளது என இராதாகிருஷ்ணன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தார்.

இதையடுத்து, உயர் நீதிமன்ற உத்தரவின் படி அமைக்கப்பட்ட குழு 2021 ஆம் ஆண்டு தாக்கல் செய்த அறிக்கையில் சிறிய அளவில் விதிமீறல் இருப்பதாக கூறப்பட்டது. இதனையடுத்து விதிமீறல் தொடர்பாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டு வழக்கு முடிக்கபட்டது. ஆனால், இந்த அறிக்கையை ஆய்வு செய்த கோவை சப்-கலெக்டர், குவாரியில் இருந்து சட்டவிரோதமாக கனிம வளங்கள் எடுத்ததாக கூறி செந்தாமரைக்கு 32 கோடியே 29 இலட்சத்து 77 ஆயிரத்து 792 ரூபாய் அபராதம் விதித்து 2022-ம் ஆண்டு உத்தரவிட்டார்.

இதை எதிர்த்து புவியியல் மற்றும் சுரங்கத் துறை கமிஷனரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த கமிஷனர், சப்-கலெக்டர் உத்தரவை ரத்து செய்தார். அபராதத் தொகையை ரூ.2 கோடியே 48 இலட்சத்து 9 ஆயிரத்து 119 ஆக குறைத்து, அதில் ரூ.25 இலட்சத்தை உடனடியாக செலுத்த வேண்டும். மீதத் தொகையை மாதம் ரூ.8 இலட்சம் வீதம் தவணை முறையில் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டார்.

இதற்கிடையில், புவியியல் மற்றும் சுரங்கத் துறை கமிஷனரின் உத்தரவை, தாமாக முன்வந்து இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமை செயலாளர் விசாரித்தார். கமிஷனர் உத்தரவை ரத்து செய்தும், கோவை சப்-கலெக்டர் விதித்த அபராதத் தொகையை உறுதி செய்தும் உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் செந்தாமரை வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி விசாரித்தார். அப்போது, அனைத்து வித மான சுற்றுச்சூழல் அனுமதிகளையும் பெற்ற பின்னரே குவாரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. இதில் எந்த விதிமீறலும் இல்லை என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

அரசு தரப்பில் கூடுதல் அரசு பிளீடர் ஆஜராகி, அபராத தொகையை குறைத்து புவியியல் மற்றும் சுரங்கத் துறை கமிஷனரின் உத்தரவு எந்த வகையிலும் ஏற்க முடியாதது. அதை ரத்து செய்தது அரசு துறை செயலாளர் உத்தரவு சரியான முடிவு. மனுதாரருக்கு குவாரியை நடத்த உரிமை எதுவும் இல்லை. சட்டவிரோதமாக எடுக்கப்பட்ட கனிம வளத்துக்கு இணையான தொகையை அவரிடம் இருந்து வசூலிக்கப்படும் என்றார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி பிறப்பித்த உத்தரவில், சம்மந்தப்பட்ட குவாரிகளில் இருந்து கற்கள், கிராவல் மண் எவ் வளவு எடுக்கப்பட்டுள்ளன? என்ற அட்டவணையே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த அட்டவணையில் உள்ள விவரங் களை மனுதாரர் எதிர்க்கவில்லை. மனுதாரருக்கு 5 குவாரி களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

அதில் முறையான உரிமம் இல்லாமல் கற்களும், கிராவல் மண்ணும் எடுத்துள்ளார். இந்த குற்றத்துக்காக அவருக்கு 5 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும், 5 இலட்சம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கும் வகையில் சட்டப்பிரிவுகள் உள் ளன. எனவே சம்பந்தப்பட்ட விசாரணை நீதிமன்றத்தில் மனு தாரருக்கு எதிராக புகார் அறிக்கையை அரசு அதிகாரிகள் தாக்கல் செய்ய வேண்டும்.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, சட்டவிரோதமாக எடுக்கப்பட்ட கனிம வளத்துக்கு இணையான தொகையை சம்மந்தபட்டவர் களிடம் இருந்து வசூலிப்பதில் எந்த சமரசமும் இருக்கக்கூடாது. 100 சதவீத தொகையை வசூலிக்கவேண்டும். அதன்படி கோவை சப்-கலெக்டர் சரியான அபராதம் விதித்துள்ளார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டமே, நேர்மையற்ற பேராசைக்காரர் களிடம் இருந்து பூமித்தாயை காப்பாற்றுவதற்காகத்தான் கொண்டு வரப்பட்டது. ஆனால், தீராத பேராசைக்காரர்களான குவாரி உரிமையாளர்கள், பூமித்தாயின் மார்பை அறுத்து இரத்தத்தை குடிக்கின்றனர்.

ஆனால், சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டிய அந்த துறை கமிஷனரின் இந்த செயல் அதிர்ச்சி அளிக்கிறது. அவருடைய உத் தரவு மனசாட்சி உள்ள ஒருவரால் புரிந்துக் கொள்ளவும், கற்பனை செய்யவும் முடியாத அளவில் உள்ளது. அவரது உத்தரவு மக்களையும், அரசையும் ஏமாற்றும் விதமாகவும், மோசடியாகவும் உள்ளது.

அதுமட்டுமல்ல, உயர் நீதிமன்ற பொதுநல வழக்கு விசாரணை யின்போது, குவாரியை மூடி விட்டதாக அதிகாரிகள் அறிக்கை தாக்கல் செய்து விட்டு, மறுபுறம் குவாரியை செயல்பட அனு மதித்துள்ளனர். இதன்மூலம், இந்த உயர் நீதிமன்றத்தையும் அதிகாரிகள் ஏமாற்றியுள்ளனர்.

எனவே, சட்டப்படி ஒட்டுமொத்த அபராத தொகையையும் மனு தாரரிடம் இருந்து அரசு வசூலிக்க வேண்டும். மனுதாரரின் குவாரி உரிமம் 2023-ம் ஆண்டே முடிந்து விட்டதால், அதை ரத்து செய்ய வேண்டிய அவசியம் தற்போது இல்லை. இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமை செயலாளர் எடுத்துள்ள நடவடிக்கையை இந்த நீதிமன்றம் பாராட்டுகிறது.

இந்த குவாரி மோசடியில் கள அதிகாரிகள் முதல் உயர் அதி காரிகள் வரை என்ன பங்கு உள்ளது? என்பது குறித்து இலஞ்ச ஒழிப்பு காவல்துறை மூலம் தமிழ அரசு விசாரணை நடத்த வேண்டும். பின்னர், அவர்கள் குற்றத்திற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீது குற்றவியல் சட்டப்பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும் என நீதிபதி பரத சக்கரவர்த்தி தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

www.sangathamil.ca

# உலக செய்திகள்

## உணவுக்காக காத்திருந்த மக்கள் மீது இசுரவேல் தாக்குதலில் 32 பேர் பலி!

01.06.2025

காசா அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பெறும் உதவி மையங்கள் மீதான இசுரவேலிய தாக்குதல்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை குறைந்தது 32 பேர் கொல்லப்பட்டனர்.

தெற்கு நகரமான ரஃபாவில் உள்ள உதவி விநியோக மையத்திற்கு அருகில் இசுரவேலிய துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது 31 பேர் கொல்லப்பட்டதாகவும், 200 பேர் காயமடைந்ததாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.



மத்திய காசாவில் உள்ள நெட்சாரிம் காரிடார் அருகே உள்ள மற்றொரு உதவி விநியோக மையத்திலும் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றும் 32 பேர் காயமடைந்தனர் என்று டெலிகிராமில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாவில் உள்ள ஒரு விநியோக தளத்திற்கு அருகில் உதவி பெற காத்திருந்த பாலஸ்தீனியர்கள் மீது இசுரவேலியப் படைகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.






அசோசியேட்டட் பிரஸ் மேற்கோள் காட்டிய செஞ்சிலுவை சங்கள மருத்துவமனை மற்றும் ஏராளமான சாட்சிகளின் கூற்றுப்படி, குறைந்தது 21 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயமடைந்தனர்.

மொத்தம் 30 பேர் கொல்லப்பட்டதாகவும், ஒரு டஜன் பேர் காயமடைந்ததாகவும் ஹமாஸ் தெரிவித்துள்ளது.

கடற்படை போர்க்கப்பல்கள், டாங்கிகள் மற்றும் ட்ரோன்கள் என அனைத்து திசைகளிலிருந்தும் தாக்குதல் நடந்தது என்று கூட்டத்தில் இருந்த அமர் அபு தேய்பா கூறியதாக அசோசியேடட் பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது. மற்றொரு நேரில் கண்ட சாட்சி இந்தக் கணக்கை உறுதிப்படுத்தியுள்ளார்.

இசுரவேலிய ஆதரவு பெற்ற காசா மனிதாபிமான அறக்கட்டளை (GHF) இந்த செய்திகளை மறுத்துள்ளது.

இன்று காலை மக்கள் உணவு பெறுவதற்காக கூடியிருந்த போது இந்த சம்பவம் நடந்தது. பலஸ்தீனப் பகுதியின் மக்கள் பல மாதங்களாக இசுரவேலிய முற்றுகையால் பட்டினியால் வாடி வருகின்றனர், இது சர்வதேச அளவில், இசுரவேலின் நெருங்கிய நட்பு நாடுகளிடமிருந்து கூட சீற்றத்தைத் தூண்டியது.

காசாவிற்கு உதவிகளை அனுமதிக்க இசுரவேலிய அரசாங்கம் எடுத்த முடிவு சர்ச்சையிலும் குழப்பத்திலும் சிக்கியுள்ளது. முதல் உதவி விநியோகம் மிகக் குறைவாகவே இருந்ததாகவும், அப்போதும் கூட தேவைப்படுபவர்களை சென்றடையத் தவறிவிட்டதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

இசுரவேலிய மற்றும் அமெரிக்க ஆதரவுடன் காசா மனிதாபிமான அறக்கட்டளையை (GHF) அனுப்பும் திட்டம் கவலைகளைத் தணிக்கவில்லை. ஹமாஸுக்கு உதவி திருப்பி விடப்படுவதைத் தவிர்ப்பதே இதன் நோக்கமாகும். எனவே, GHF உதவி விநியோக தளங்களைப் பாதுகாக்க கூலிப்படையினரைப் போன்ற தனியார் பாதுகாப்பு ஒப்பந்தக்காரர்களைப் பயன்படுத்துகிறது.

இதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று ஐ.நா கூறியது.

மே 27 அன்று நடந்த முதல் கொடிய சம்பவத்திலிருந்து, ரஃபா மற்றும் நெட்சாரிம் வழித்தடத்தில் உள்ள GHF நடத்தும் விநியோக மையங்களைச் சுற்றி மொத்தம் 49 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் 300 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

## இசுரவேலின் முற்றுகையை உடைப்பதற்காக கப்பலில் காசாவை அடைய முயன்ற உதவிக் கப்பலை இசுரவேல் தடுத்து நிறுத்தியது

09.06.2025

சுவீடன் காலநிலை ஆர்வலர் கிரெட்டா துன்பெர்க் உடன் காசாவிற்கு உதவிப் பொருட்களை ஏற்றிச் சென்ற படகு , பாலஸ்தீனப் பகுதியின் கடற்கரையை நெருங்கிக்கொண்டிருந்தபோது, இசுரவேலியப் படைகளால் தடுத்து நிறுத்தப்பட்டது.







காசா பகுதிக்கு மிகவும் தேவையான மனிதாபிமானப் பொருட்களை அந்தக் கப்பல் ஏற்றிச் சென்றது. அங்கு முழு மக்களும் பட்டினியால் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக ஐ.நா எச்சரித்துள்ளது.

இன்று திங்கட்கிழமை அதிகாலை, ஃப்ரீடம் ஃப்ளோட்டிலா கூட்டணியின் கப்பல், குவாட்காப்டர்களால் சூழப்பட்டுள்ளதாகவும், இசுரவேலியப் படைகளால் கட்டாயமாக இடைமறிக்கப்பட்டதாகவும் கூறியது.

காசா நோக்கி மனிதாபிமான உதவிகளை ஏற்றிச் சென்ற மேட்லீன் என்ற கப்பல் இசுரவேலியப் படைகளால் தடுத்து நிறுத்தப்பட்டதை சுதந்திர புளோட்டிலா கூட்டணி (FFC) உறுதிப்படுத்தியுள்ளது.

அந்தக் குழு தனது கப்பல் சர்வதேச கடல் நீரில் இசுரவேலிய இராணுவத்தால் தாக்கப்பட்டது வலுக்கட்டாயமாக இடைமறிக்கப்பட்டது என்று கூறியது.

கப்பலில் இருந்த நிராயுதபாணியான பொதுமக்கள் இசுரவேலியப் படைகளால் சட்டவிரோதமாகக் கடத்தப்பட்டனர். மேலும் குழந்தை பால், உணவு மற்றும் மருத்துவப் பொருட்கள் உட்பட அதன் உயிர்காக்கும் சரக்குகள் பறிமுதல் செய்யப்பட்டன என்று சுதந்திர புளோட்டிலா கூட்டணி தெரிவித்துள்ளது.

மாட்லீனில் உள்ள தன்னார்வலர்களை தடுத்து வைக்க இசுரவேலுக்கு சட்டப்பூர்வ அதிகாரம் இல்லை என மனித உரிமை வழக்கறிஞரும் ஃப்ரீடம் ஃப்ளோட்டிலா அமைப்பாளருமான ஹுவைடா அர்ராஃப் ஒரு அறிக்கையில் கூறினார்.

இந்த பறிமுதல் சர்வதேச சட்டத்தை மீறுவதாகவும், சர்வதேச நீதிமன்றத்தின் (ICJ) காசாவிற்கு தடையற்ற மனிதாபிமான அணுகல் தேவை என்ற பிணைப்பு உத்தரவுகளுக்கு எதிரானது என்றும் அர்ராஃப் மேலும் கூறினார்.

இசுரவேலிய தன்னார்வலர்களை தடுத்து வைக்க இசுரவேலுக்கு சட்டப்பூர்வ உரிமை இல்லை என்றும், அவர்கள் இசுரவேலிய அதிகார வரம்பிற்கு உட்பட்டவர்கள் அல்ல, மேலும் உதவி வழங்கியதற்காகவோ அல்லது சட்டவிரோத முற்றுகையை சவால் செய்ததற்காகவோ குற்றவாளிகளாகக் கருத முடியாது" என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

அவர்களின் தடுப்புக்காவல் தன்னிச்சையானது, சட்டவிரோதமானது, உடனடியாக முடிவுக்கு வர வேண்டும் என்று அர்ராஃப் கூறினார்.

# கிரீமியா பாலத்தின் மீது உக்ரைன் தாக்குதல்!

04.06.2025

ரஷ்யாவையும் கிரிமியன் தீபகற்பத்தையும் இணைக்கும் பாலத்தில் சாலைப் போக்குவரத்து செவ்வாய்க்கிழமை தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கெர்ச் பாலத்தின் மீதான தாக்குதலுக்குப் பின்னால் தாங்கள் இருப்பதாக உக்ரைனின் பாதுகாப்பு சேவை உரிமை கோரியது. நீருக்கடியில் வெடிபொருட்களைப் பயன்படுத்தி சாலை மற்றும் தொடருந்துப் பிரிவுகள் இரண்டையும் தாக்கியதாகக் கூறியது.

பாலத்தின் நீருக்கடியில் உள்ள தூண்களில் ஒன்றில் இணைக்கப்பட்ட 1,000 கிலோகிராம் வெடிபொருட்களை வெடிக்கச் செய்ததாகக் கூறியது.

உக்ரைனின் பாதுகாப்பு சேவைவெளியிட்ட காட்சிகளில், நீருக்கடியில் ஏற்பட்ட குண்டுவெடிப்பைக் காட்டியது. மேலும் பாலத்தின் பக்கவாட்டில் வெளிப்படையான சேதத்தைக் காட்டும் ஒரு நிலையான படமும் இருந்தது. இருப்பினும், சேதத்தின் அளவு தெளிவாகத் தெரியவில்லை.



# உக்ரைன் தலைநகர் மற்றும் பிற பகுதிகளில் ரஷ்யா மிகப் பெரிய தாக்குதல்களை நடத்தியுள்ளது

06.06.2025



உக்ரைனின் தலைநகர் மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் வெள்ளிக்கிழமை அதிகாலை ரஷ்யா பெரிய அளவிலான ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தாக்குதல்களில் குறைந்தது மூன்று பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 49 பேர் காயமடைந்ததாக உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

வான்வழித் தாக்குதல்கள் கீவ், அதே போல் நாட்டின் வடமேற்கில் உள்ள லுட்ஸ்க் நகரம் மற்றும் டெர்னோபில் பகுதியையும் குறிவைத்தன.

உக்ரைனின் ஆட்சியின் பயங்கரவாதச் செயல்களுக்கு பதிலடியாக இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் கூறியது, மேலும் அது இராணுவ தளங்களை குறிவைத்ததாகவும் கூறியது.

அதிக துல்லியமான நீண்ட தூர வான், கடல் மற்றும் தரை ஆயுதங்கள் மற்றும் தாக்குதல் ட்ரோன்களைப் பயன்படுத்தி ஒரே இரவில் தனது ஆயுதப் படைகள் ஒரு பெரிய தாக்குதலைத் தொடங்கின என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரஷ்ய விமானப்படை தளங்கள் மீது உக்ரைன் நடத்திய சமீபத்திய தாக்குதல்களுக்கு பதிலடி கொடுப்பேன் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பிடம் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் எச்சரித்ததைத் தொடர்ந்து இந்த தாக்குதல் நடந்துள்ளது.

அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் உலகெங்கிலும் உள்ள அனைவரும் ரஷ்யா மீது அழுத்தம் கொடுப்பதன் மூலம் இந்தப் போரை நிறுத்தக்கூடிய சரியான தருணம் இது என்று எக்ஸ் தளத்தில் ஜெலென்ஸ்கி கூறினார்.

ரஷ்யா மீது அழுத்தம் கொடுக்க டிரம்ப்பின் வெளிப்படையான விருப்பமின்மையையும் ஜெலென்ஸ்கி மறைமுகமாகச் சாடினார்.

ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்காமல் இருந்தால் அவர்களும் உயிர்கள் காவுகொள்வதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்ற அர்த்தம் என்று ஜெலென்ஸ்கி எழுத்தினார்.

இந்தத் தாக்குதலில் 400க்கும் மேற்பட்ட ட்ரோன்கள் மற்றும் 40க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டதாகவும், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் கூறினார்.

கியேவின் மேயர் விட்டாலி கிளிட்ச்கோ, நாட்டின் தலைநகரில் நான்கு பேர் கொல்லப்பட்டதாகக் கூறினார்.

கியேவில் வான்வழித் தாக்குதல் எச்சரிக்கைகள் அமலில் இருந்தன. அங்கு ஒரு குடியிருப்பு கட்டிடம் தாக்கப்பட்டது, மேலும் சேதமடைந்த மெட்ரோ தண்டவாளங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதால் நகரின் தொடருந்து அமைப்பு பாதிக்கப்பட்டது.

தலைநகரில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் நிலத்தடி முகாம்களில் சில மணிநேரங்களை அமைதியின்றிக் கழித்தனர்.

நகர மையத்திலிருந்து, புறநகரில் உள்ள வான் பாதுகாப்புப் படையினர் கியேவை இலக்காகக் கொண்ட ஏராளமான



ட்ரோன்களை வீழ்த்த முயன்றபோது, இயந்திரத் துப்பாக்கிச் சூடுகளின் நீண்ட வெடிப்புகள் கேட்டன.

அவ்வப்போது, மேலே பறக்கும் ட்ரோன்களின் தனித்துவமான சத்தமும் கேட்டது.

சில நேரங்களில் அருகிலுள்ள கட்டிடங்களில் பிரதிபலிக்கும் பிரகாசமான ஒளிக்கற்றைகள், ஐந்து அல்லது பத்து வினாடிகளுக்குப் பிறகு, இடி போன்ற வெடிப்புகள் ஏற்பட்டன.

இந்த தாக்குதல்களில் 38 குரூஸ் ஏவுகணைகள் உள்ளடங்கியதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

கார்கிவ், சுமி மற்றும் லுஹான்ஸ்க் நகரங்களும் வான்வழித் தாக் குதல் எச்சரிக்கையின் கீழ் இருந்தன.

மற்ற இடங்களில், டெர்னோபிலின் இராணுவத் தலைவர் வியாசெஸ்லாவ் நெகோடா, வெள்ளிக்கிழமை நடந்த தாக்குதல் எங்கள் பிராந்தியத்தில் இன்றுவரை நடத்தப்பட்ட மிகப் பெரிய வான் வழித் தாக்குதல் என்றார்.

இந்த தாக்குதலில் ஐந்து பேர் காயமடைந்ததாகவும், வீடுகள், பள்ளிகள் மற்றும் ஒரு அரசு வசதிக்கு சேதம் ஏற்பட்டதாகவும் டெர்னோபில் மேயர் இகோர் போலிஷ்சுக் தெரிவித்தார்.

லுட்ஸ்கில், 15 ட்ரோன்கள் மற்றும் ஆறு ஏவுகணைகளைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட தாக்குதலில் ஐந்து பேர் காயமடைந்ததாக மேயர் இஹோர் பாலிஷ்சுக் தெரிவித்தார்.

இதற்கிடையில், ரஷ்யாவின் சில பகுதிகளிலும், கிரிமியாவை ஆக்கிரமித்த பகுதிகளிலும் ஒரே இரவில் 174 உக்ரேனிய ட்ரோன்களை அதன் வான் பாதுகாப்பு சுட்டு வீழ்த்தியதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நெப்டியூன் கப்பல் எதிர்ப்பு கப்பல் ஏவுகணைகளும் கருங்கடலுக்கு மேல் இடைமறிக்கப்பட்டதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் சமீபத்திய தாக்குதல், கெய்வ் நான்கு இராணுவ தளங்களில் குறைந்தது 11 ரஷ்ய போர் விமானங்கள் மீது அதன் மிகப்பெரிய நீண்ட தூர ட்ரோன் தாக்குதலை நடத்திய சில நாட்களுக்குப் பிறகு வந்துள்ளது.

இந்த மாத தொடக்கத்தில், ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான நேரடி அமைதிப் பேச்சுவார்த்தைகள் இஸ்தான்புல்லில் நடைபெற்றன, ஆனால் பெரிய முன்னேற்றம் இல்லாமல் முடிந்தது.


## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# புதிய கட்சியின் பெயரை அறிவித்த எலான் மஸ்க்

08.06.2025

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புடனான மோதலுக்கிடையே, “தி அமெரிக்கன் பார்ட்டி” என்ற புதிய கட்சியை எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

அமெரிக்க அரசு கொண்டு வந்த வரி மற்றும் செலவு மசோதாவால், அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கும் டெஸ்லா நிறுவனரும் ட்ரம்ப்பின் தீவிர ஆதரவாளராக இருந்தவருமான எலான் மஸ்க்குக்கும் இடையிலான நட்புறவில் விரிசல்.

இதன் தொடர்ச்சியாக, இருவரும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி, பொதுவெளியிலேயே (சமூக ஊடகங்களில்) சண்டையிட்டனர்.

இதனிடையே, 80 சதவிகித நடுத்தர மக்களை பிரதிநிதித்துவப்படுத்த புதிய கட்சி தேவையா? என்று எக்ஸ் தளத்தில் எலான் மஸ்க் கருத்துக் கணிப்பு நடத்தினார்.

இந்தக் கருத்துக் கணிப்புக்கு 80 சதவிகிதத்தினர் (56.30 இலட்சம் பேர்) “ஆம்” என்று பதிலளித்தனர். அமெரிக்க மக்களின் இந்த பதில், சமூக ஊடகங்களில் பேசுபொருளாகியது.

இந்த நிலையில், புதிய கட்சிக்கு “தி அமெரிக்கன் பார்ட்டி” என்று எலான் மஸ்க் பெயரிட்டு அறிவித்துள்ளார்.




# சிறீலங்கா ஜனாதிபதி வருகையை எதிர்த்து பேர்லினில் வெளிநாட்டு அலுவலகம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது!

10.06.2025

சிறீலங்கா தூதரகத்தின் பயமுறுத்தும் முயற்சிகளினையும் மீறி, இன்று பேர்லின் நகரில் உள்ள வெளிநாட்டு அலுவலகம் முன்பாக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் திரண்டனர். தமிழர்களுடன்



மற்ற மக்களும் கலந்து கொண்டு தங்களின் ஒற்றுமையையும் ஆதரவையும் வெளிப்படுத்தினர்.

சிறீலங்காவின் ஜனாதிபதி வருகையையொட்டி ஈழத்தமிழர்களின் உண்மையான நிலைமையை வெளிப்படுத்தும் துண்டுப்பிரசுரங்கள் யேர்மன் மொழியில் பகிரப்பட்டன மற்றும் உரைகளும் நிகழ்த்தப்பட்டன. யேர்மன் பாராளுமன்ற உறுப்பினரும் “Die Linke ” கட்சியைச் சேர்ந்தவருமான திரு Ferat Koçak இந்த போராட்டத்தில் கலந்துகொண்டு தமிழர்களுக்கு தனது உறுதுணையைக் காண்பித்ததோடு ஈழத் தமிழர்கள் சார்ந்த யேர்மன் நாட்டின் மௌனத்தையும் கண்டித்தார்.

தொடர்ந்து குர்த் சமூக பிரதிநிதிகளும் மனித உரிமைப் செயற்பாட்டாளர்களும் தங்களது உரைகளை நிகழ்த்தினார்கள். இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து அக்கறை தெரிவித்தனர். கால நிலை சீராக இல்லாத நிலமையிலும் போராட்டம் உணர்வுபூர்வமாகவும் உற்சாகமாகவும் நடைபெற்றது.



நாளைய நாள் Schloss Bellevue அருகே இன அழிப்பு குறித்த கண்காட்சி நடைபெற உள்ளது – அங்கு இலங்கை ஜனாதிபதி அனுரா சிவப்புக் கம்பள வரவேற்புடன் வரவேற்கப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது










# பொறுப்புக்கூறலுக்கான கடமைகளை நிறைவேற்றுமாறு அநுரவை ஜேர்மன் வலியுறுத்த வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்

10.06.2025

பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான தமது உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை ஜேர்மன் வலியுறுத்த வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.




ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாளைய தினம் உத்தியோகபூர்வ விஜயமாக ஜேர்மன் செல்லவுள்ள நிலையில், ஜேர்மனிக்கான மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளர் பிலிப் ஃபிரிஷ் அறிக்கையொன்றின் ஊடாக இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

30 வருட யுத்தத்தின்போது, கொலைகள், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை உள்ளிட்ட பரவலான துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளன.

அத்துடன், யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் அரச படைகள் பொதுமக்களைத் தாக்கியதுடன், சிலரை வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கியுள்ளன.

போருக்கு பின்னர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை பொறுப்புக்கூறலின் அவசியத்தை எடுத்துக்காட்டும் பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதுடன், சாட்சிய சேகரிப்பு செயல்முறையையும் நிறுவியுள்ளது.

எனினும், அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கமும் இது வரையான செயற்பாடுகளைப் பொறுத்தவரையில் அதன் முந்தைய அரசாங்கங்களிடமிருந்து வேறுபட்டதாகத் தெரியவில்லை.

இதன்படி, போர்க்குற்றங்களில் தொடர்புடைய முன்னாள் சிரேஷ்ட அதிகாரிகளைப் பாதுகாத்து, பேரவையின் கோரிக்கைகளை நிராகரித்துள்ளது.

இந்த அரசாங்கம் நடந்து வரும் மனித உரிமை மீறல்களுக்குத் தீர்வு காணவில்லை, கடந்த கால அட்டூழியங்களுக்கு நீதி வழங்குவதில் பின் நிற்கிறது.

அதேநேரம், அநுரகுமார திசாநாயக்க 2017 ஆம் ஆண்டு முதல், தடைச் சட்டத்தை ரத்து செய்வதாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கு உறுதியளித்தார்.

எனினும், தற்போது அவரது அரசாங்கம் அதே சட்டத்தைப் பயன்படுத்திவருகிறது.

இலங்கை மீதான மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில் ஜேர்மனி முன்னர் முன்னணி நாடாக இருந்தது, எனினும் 2022 ஆம் ஆண்டில் அந்தப் பங்கிலிருந்து விலகியது.

பொறுப்புக்கூறலுக்கான அழுத்தத்தைத் தக்கவைத்துக்கொள்ளவும், ஆதாரங்களைச் சேகரிப்பதை உறுதி செய்யவும், இந்த ஆண்டின் பிற்பகுதியில் தீர்மானம் புதுப்பிக்கப்படுவது மிக அவசியமாகும்.



எனவே, ஐக்கிய நாடுகள் முயற்சிகள் மற்றும் ஜி.எஸ்.பி பிளஸ் உறவுகளின் அடிப்படையில் பெர்லினுக்கு வருகைதரும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் சீர்திருத்தங்களுக்கான அவரது உறுதிமொழிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்ற ஜேர்மனிய ஜனாதிபதி, வலியுறுத்த வேண்டும்.

எனவே, அதற்காக தற்போது கிடைக்கும் இந்த வாய்ப்பினை ஜேர்மன் ஜனாதிபதி பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் ஜேர்மனிக்கான மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளர் பிலிப் ஃபிரிஷ் தெரிவித்துள்ளார்

**சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்குமுறை காரணமாகவே நாம் சுயநிர்ணய உரிமைக்காகவும், அரசியல் சுதந்திரத்திற்காகவும், போராட்டத்தில் குதித்தோம்.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

# லண்டன் நோக்கிச் சென்ற ஏர் இந்தியா பயணிகள் விமானம் குஜராத்தின் ஆமதாபாத்தில் விழுந்து நொருங்கியது!

12.06.2025

குஜராத்தின் ஆமதாபாத்தில் இருந்து லண்டனின் கேட்விக் செல்லப் புறப்பட்ட ஏர் இந்தியா பயணிகள் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. இதை ஏர் இந்தியா செய்தித் தொடர்பாளர் உறுதி செய்துள்ளார்.



ஆமதாபாத்தில் இருந்து புறப்பட்ட விமானம் பிரிட்டன் நேரப்படி மாலை 6:25 மணிக்கு (இந்திய நேரப்படி இரவு 10:55) தரையிறங்க திட்டமிடப்பட்டிருந்ததாக லண்டனின் கேட்விக் விமான நிலையம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக கேட்விக் விமான நிலைய நிர்வாகம் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இன்று ஆமதாபாத் விமான நிலையத்தில் இருந்து புறப்படும்போது விபத்துக்குள்ளான போயிங் 787-8 விமானம், மாலை 6:25 மணிக்கு லண்டன் கேட்விக் விமான நிலையத்தில் தரையிறங்க வேண்டியிருந்தது என்பதை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்” என்று தெரிவித் துள்ளது.

இந்த விமானத்தில் பயணித்த 231 பயணிகள், 10 பணியாளர்கள் கொன்ற ஏர் இந்தியா விமான விபத்தில் இடிபாடுகளில் இருந்து ஒரு பிரிட்டிஷ் நபர் தப்பித்து உயிர் பிழைத்துள்ளார்.





# பிரித்தானியாவின் எஸ். ஏ. எஸ். சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து தமிழர்களுக்கு எதிரான போர்க்குற்றங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டு: விசாரணை இடம்பெற்று வருவதாக பிரித்தானிய அரசாங்கம் தெரிவிப்பு

12.06.2025

பிரித்தானியாவின் தனியார் ஆயுதப்படை நிறுவனங்களால் பணியமர்த்தப்பட்ட எஸ்.ஏ.எஸ். என்ற விசேட படை உள்ளிட்ட பிரித்தானிய படையினர் சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து தமிழர்களுக்கு எதிரான போர்க்குற்றங்களில் ஈடுபட்டிருக்கலாம் என்ற குற்றச்சாட்டுகள் குறித்து தொடர்ந்தும் விசாரணை இடம்பெற்று வருவதாக பிரித்தானிய அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

தொழில் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் இந்த விடயம் தொடர்பில் பிரித்தானிய பாராளுமன்றில் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளித்த பிரித்தானிய வெளியுறவு அலுவலக அமைச்சர் கேத்தரின் வெஸ்ட், ‘முன்னதாக வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் மேம்பாட்டு அலுவலகம், காவல்துறை விசாரணைகளுக்கு உதவியிருந்தாலும் இந்த விடயத்துடன் தொடர்புடைய மேலதிக தகவல்கள் எதுவும் தற்போதைக்கு இல்லை’ என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மோதலின் போதான போர்க்குற்றங்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்களை தாங்கள் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்வதாகவும் கேத்தரின் வெஸ்ட் பதிலளித்துள்ளார்.

1980களில் இலங்கையில் செயற்பட்ட பிரித்தானிய படையினர் தொடர்பான முறைப்பாடுகளை அடுத்து, 2020 மார்ச் முதல் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தநிலையில் லண்டனில் உள்ள தீர்ப்பாயம் ஒன்றில் சாட்சியமளிக்குமாறு குறித்த ஆயுதப்படையினர் வலியுறுத்தப்பட்டபோதும் பிரித்தானிய வெளிவிவகார அலுவலகம் அதனை தடுத்து நிறுத்தியதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த சூழ்நிலையிலேயே பிரித்தானிய அமைச்சர் கேத்தரின் வெஸ்ட் பாராளுமன்றில் பிரித்தானிய அரசாங்கத்தின் நிலைப்



பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். இதேவேளை, இலங்கையில் செயற்பட்ட காலப்பகுதியிலேயே எஸ்.டி.எஃப் என்ற விசேட அதிரடிப்படையை ஸ்தாபிக்கவும் பிரித்தானியாவின் எஸ்.ஏ.எஸ் சேவை நிறுவனம் சிறீலங்கா அரசாங்கத்துக்கு உதவியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானின் இராணுவத் தளங்கள் மற்றும் அணுசக்தி நிலைகள் மீது இசுரவேல் தாக்குதல்!

13.06.2025

ஈரானுக்கு எதிராக அந்நாட்டின் இராணுவ தளங்கள் மற்றும் அணுசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக இசுரவேல் இராணுவம் கூறியுள்ளது. இதற்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என ஈரான் நாட்டின் உச்ச தலைவரும், மத குருவுமான அயதுல்லா அலி காமெனி தெரிவித்துள்ளார்.



இன்று ( ஜூன் 13) ஈரான் தலைநகர் தெஹ்ரான் மீது வான்வழி தாக்குதலை தொடுத்தது இசுரவேல். இதில் தெஹ்ரான் நகரில் உள்ள குடியிருப்புகள் உட்பட பல்வேறு கட்டிடங்கள் சிதில மடைந்தன. இந்த தாக்குதலை அடுத்து ஈரான் வான்வெளி மூடப்பட்டது. இதை ஈரான் நாட்டின் அரசு ஊடக நிறுவனமான ஐஆர்என்ஏ உறுதி செய்தது.

வான்வழி தாக்குதல் மட்டுமல்லாது இசுரவேலின் மொஸாட் (MOSSAD) அமைப்பும் ஈரானில் தாக்குதல் நடவடிக்கை மேற்கொண்டதாக இசுரவேல் இராணுவ வானொலி தெரிவித்தது. இந்த தாக்குதலில் ஈரான் நாட்டின் இராணுவ தளபதிகள், வீரர்கள் மற்றும் அணுசக்தி விஞ்ஞானிகள் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. இதில் ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர இராணுவ அதிகாரி ஹுசைன் சலாமி உயிரிழந்திருப்பதாவும் தகவல் வெளியாகி உள்ளது. இது மிகப்பெரிய அளவில் நடத்தப்பட்ட தாக்குதல் என சர்வதேச செய்திகளை வெளியிடும் ஊடக நிறுவனங்கள் கூறியுள்ளன. ஈரான் தரப்பில் முடிவெடுக்க கூடிய முக்கியஸ்தர்கள் இந்த தாக்குதலில் உயிரிழந்துள்ளதாக தகவல்.



இந்த தாக்குதலுக்கு என்ஜஏசி அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. அப்பாவி மக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் இதில் உயிரிழந்துள்ளதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது. மேலும், இது அமெரிக்காவை உள்ளடக்கிய பெரிய அளவிலான போர் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

இந்த தாக்குதலை தன்னிச்சையாக நடத்தியதாக இசுரவேல்



தெரிவித்துள்ளது. இதை இசுரவேலின் ஐநா தூதர் டேனி டானன் கூறியுள்ளார். இந்நிலையில், வெள்ளிக்கிழமை அன்று தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நடத்த உள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

ஈரான் மீதான தாக்குதலை அடுத்து இசுரவேலுக்கு தக்க பதிலடி தரப்படும் என ஈரானின் ஆயுதப்படைகளின் செய்தித் தொடர்பாளர் அபோல்பஸ்ல் ஷேகார்ச்சி கூறியுள்ளார்.

www.sangathamil.ca

# இசுரவேல் மீது ஈரான் பதில் தாக்குதல்!

13.06.2025

ஈரான் இசுரவேல் மீது ஏவுகணை தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. ஜெரூசலேத்தில் வெடிப்பு சத்தங்களை கேட்க முடிந்ததாகவும் டெல் அவியில் கரும்புகை தென்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

40க்கும் அதிகமானவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தகவல்கள் வெளியாகின்றன.

ஏவுகணைகள் கட்டிடங்கள் மீது விழுந்துள்ளன,இதனால் கட்டிடங்களிற்கு சேதம் ஏற்பட்டுள்ளது, உயிரிழப்புகள் இல்லை ஆனால் பொதுமக்கள் காயமடைந்துள்ளனர் ஆனால் பெருமளவு அழிவுகள் ஏற்பட்டுள்ளன என இசுரவேலின் செய்தியாளர் ஒருவர் பிபிசிக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை பெருமளவு ஏவகணைகள் இசுரவேலின் இரண்ாவது மிகப்பெரிய நகரமான டெல்அவியை தாக்கின என தெரிவித்துள்ள டெலிகிராவ் இசுரவேல் இது பொதுமக்கள் மீதான தாக்குதல் என தெரிவித்துள்ளது என குறிப்பிட்டுள்ளது.





நகரின் மத்தியில் உள்ள உயரமான கட்டிடமொன்று சேதமடைந்துள்ளதை காண்பிக்கும் படங்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை சனிக்கிழமை காலையிலும் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன ஏவுகணைதாக்குதல்களில் இது தப்புவதற்காக ஜெரூசலேத்தில் புகலிடங்களை நோக்கி ஓடியுள்ளனர்.

இசுரவேலில் மக்கள் வசிக்கும் பகுதிகளை நோக்கி ஏவுகணை தாக்குதல்களை மேற்கொண்டதன் மூலம் ஈரான் எல்லை மீறிவிட்டது என இசுரவேலின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இந்தியா விமான விபத்தில் உயிரிழந்ப்பு 274ஆக உயர்வு

18.05.2025

உலகை உலுக்கிய அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 274-ஆக உயர்ந்துள்ளது. இடிபாடுகளை அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.



விபத்தில் ஒரேயொரு பயணி தவிர 241 பேரும் உடல் கருகி உயிரிழந்தனர். இவர்களில் குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியும் ஒருவர். இந்தியப் பயணிகள் 169 பேருடன் பிரிட்டன் (52), போர்ச்சுகல் (7), கனடா (1) பயணிகளும் உயிரிழந்தனர்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை மீட்புக் குழுவினர் விமானத்தின் கருப்புப் பெட்டியையும், மேலும் 29 உடல்களையும் மீட்டுள்ளனர். விமானத்தில் பயணித்தவர்கள் தவிர, அது விழுந்த இடத்தில் உயிரிழந்தவர்களையும் சேர்த்து இறப்பு எண்ணிக்கை 274 ஆக உயர்ந்துள்ளது.
இவர்களில் மருத்துவ மாணவர்கள் 10 பேர், விடுதி கட்டடம் அருகே டீக்கடை நடத்தும் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன் உள்பட மொத்தம் 33 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இதுவரை 6 பேரின் உடல்கள் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அடையாளம் தெரியாத அளவில் உருக்குலைந்த நிலையில் உள்ள உடல்களை மரபணு பரிசோதனை மூலம் அடையாளம் காணும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது. இப்பணிகள் நிறைவடைய 3 நாள்கள் வரை ஆகும்.

மரபணு சோதனைப் பணிகள் முடிந்த பிறகு அரசுத் தரப்பில் முழு விவரங்கள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.








## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**




சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# மாணவ சமூகத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசியக்கடமைப்பாடாகும்.

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



கல்வி பெறும் உரிமை மனித சுதந்திரங்களில் அடிப்படையானது. அறியாமையிலிருந்து விழிப்புற்று, தனது வாழ்க்கை பற்றியும் தான் வாழும் உலகம் பற்றியும் அறிந்து கொள்வற்கு ஒவ்வொரு தனி மனிதப்பிறவிக்கும் உரிமையுண்டு. தனது ஆற்றல்களை வளர்த்து, தனது ஆளமையை மேம்படுத்தி, சுதந்திரமாகச் சிந்தித்துச் செயற்படும் உரிமை ஒவ்வொரு வருக்கும் உரித்தானது.

இந்த மூலாதார உரிமையைப் பறித்தெடுத்து தமிழீழத்தின் கல்வித்துறையைச் சிதைத்துவிட சிங்களப் பேரினவாதம் நீண்ட காலமாகவே முயன்று வருகின்றது. இதன் விளைவால் எமது சமூகத்தின் கல்வி வாழ்வு பாரதூரமான அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக்கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள். இந்தத் தூண்களைத் தகர்த்துவிட எதிரி முனைகின்றான். இனத் தனித்துவத்தை அழிப்பது அவனது நோக்கம்.

நாம் எமக்கு உரித்தான உரிமைகளை வென்றெடுக்கப் போராடுகிறோம். அதேவேளை, சமூக வாழ்விற்கு ஆதாரமான அமைப்புக்கள் அழிந்து போகாது பாதுகாக்கவும் நாம் போராட வேண்டியிருக்கிறது. ஆகவே இரு முனைகளில், ஒரே வேளையில் போராட வேண்டியவர்களாக நாம் நிர்ப்பத்திக்கப்பட்டுள்ளோம். இது தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நிர்ப்பந்தம்.

தமிழீழ மக்களின் விடுதலை இயக்கம் என்ற ரீதியில் இந்த இரு முனைப்போராட்டத்தை முன்னெடுப்பதில் நாம் தெளிவோடு, உறுதியோடு, தீர்க்கமாக உழைத்து வருகின்றோம். இந்த இரு முனைகளுக்கும் இடையில் வெடிக்கும் முரண்பாடுகளைக் களைந்து விடுவதிலும் நாம் நிதானமாகச் செயற்படுகிறோம்.

உரிமைகளுக்காக நாம் தொடுத்த போராட்டம் இன்று உயிர் வாழ்வதற்கான போராட்டமாக விரிவாக்கம் பெற்றிருக்கின்றது. அன்றொரு காலம் நாம் அமைதி வழியில் உரிமை கேட்டோம். இன்று நாம் இரத்தம் சிந்திப் போராட வேண்டியிருக்கின்றது. உயிர்ப்பலி கொடுத்து உயிர் வாழ வேண்டியிருக்கின்றது.

இன அழிவைத் தடுத்து எமது மண்ணையும், மக்களையும் பாதுகாப்பது இன்று எமது விடுதலை இயக்கத்தின் முதன்மையான கடனாக உள்ளது. இதற்குப் போராடியே ஆக வேண்டும். போராடி வாழ்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

போராடுவதற்கு போராளிகள் வேண்டும். எதிரியுடன் போர் நடத்த ஒரு படை வேண்டும். இந்த விடுதலைப் படை இல்லாது போனால் எமது இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்த முடியாது. இந்தப் போராளிகளை, இந்த இளம் புலி வீரர்களை, நாம் எமது மக்கள் சமுதாயத்திலிருந்தே அணிதிரட்ட வேண்டியுள்ளது. நாம் வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பதில்லை. இது ஒரு தேசிய விடுதலைப் போர் என்பதால் சுயவிருப்பிலேயே இளம் போராளிகள் எமது இயக்கத்தில் இணைந்து கொள்கிறார்கள். தமது சுயத்தைத் துறைந்து, தமது சொந்த வாழ்வின் சுகபோகங்களைத் துறந்து, தமது மண்ணையும், மக்களையும் நேசிக்கும் விடுதலைப் பற்றாளர்கள் எம்முடன் இணைகின்றார்கள். இந்தப் போராளிகளின் இலட்சிய வாழ்க்கையையும், அர்ப்பணிப்பையும் நாம் போற்ற வேண்டும், கௌரவிக்க வேண்டும்.

தாயக விடுதலைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும், கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக்கு கவசமாக இருப்பதுபோல கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்க வேண்டும். எமது விடுதலைப்போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்துகொள்ளும் வகையில் மாணவ சமூகத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசியக்கடமைப்பாடாகும்.

(13.02.1993 ஆம் திகதி தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் சித்தி எய்திய மாணவர்களைப் பாராட்டி வெளியிட்ட அறிக்கையிலிருந்து)


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24 EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ 25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

# நிலவில் தீ



சுபா

'விடிவெள்ளி பூக்கவில்லை'
'வீதியிருள் தொலையவில்லை'
விழி நீர் கோர்த்து
விம்முகிறது நெஞ்சம்

திசைகள் இன்னும்
வெளிக்கவில்லை
தீய இருள் இன்னும்
கலையவில்லை
சிந்தும் கண்ணீரும்
அறவில்லை
தேசம் பிரிந்த துயர் தீயாய்
சுடுகிறது.

கூடுடைத்துக் கலைந்த
துயரால் நொடிந்தோம்
கோடி எழில் தாயகத்தைப்
பிரிந்தோம்
பாலாய் பொழி நிலவைப்
பகைவர் பறிக்க
குன்ந்தோம்
பாடிடும் ஒற்றைக்
குயிலின் சோகம்
கொண்டோம்
வெள்ளிகள் பூக்கும்
வானத்தை இழந்தோம்
வெள்ளலை பூக்கும்
கடலினைப் பிரிந்தோம்
துள்ளி வரும் அலைகளின்
துடிப்பைத் தொலைத்தோம்
தூயவராம் புலி விரர்
துணையை மறந்தோம்
விடுதலைப் பாட்டோடு வரும்
காற்று
விடியலின் பாட்டுக்கு
தாளமிட விரல்கள்
அசைப்பாய் - உன்
விழிகள் சிவந்திடும்
நாளில்
திசைகள் வெளித்திடும் -
நீ சிரிப்பாய்

இணைகள் பிரிந்த
குயில்களின் தோப்பென - எம்
இதயப் புலம்
அழுகின்றது.
வீட்டை விளைநிலத்தை
காட்டைக் கரம்பையை
விட்டேகக் கலைத்த
கொடும் துயரில்
கண்ணீர் உகுத்து
நிற்கின்றோம்.

எதை எதையோ
தொலைத்தவர்களைப்போல
பதை பதைத்துக் கொண்டு
உங்கள் ஊரின் மனிதர்கள்
போகிறார்கள்.
ஒடுங்கிய சாலைகளூடும்
இடுக்கு நிறைந்த வழிகளூடும்
இருள் கவிந்த தெருக்களூடும்
இழப்பின் துயர்
பின்னே திரியப் போகிறார்கள்.

காலை எழும் கதிரவின்
மகிழ்வு பொங்குகிற
முகங்களில்
சோகமும், துயரமும்
அப்பியது யார்?

திசைகள் காணச் செலுத்துகின்ற
தீரா முயற்சியில்
தோற்றார் போலும்
முடங்கிய வாழ்வு

கும்மிருட்டில்
குரங்குகள் கூடு பிய்க்க
கலைய நேர்ந்த குரவிகள்
போலும் அறறலை
உள்ளொலிக்கும் துயரை
யாரறிவார்.

உயிர் உருகும் சத்தம்
யார்க்கு இங்கே கேட்கும்?
திசையெலாம் கலைந்த
புதிய கூடுகளுள்
தஞ்சமடைந்த வாழ்வின்
கொடு துயரின் வலியை
யாரறிவார்?

திசையெலாம் சிதறி
சிந்தும் கண்ணீர்த்
துளிகளில் - எங்கள்
இனிய செல்வங்களும்
குளித்தன
வேரூன்றி தளிர்க்கும்
தளிர் போலும்
புன்னகையும் போச்சே
சிறக்கை அசைவில்
மெல்லிய சிலிர்ப்பும்
அடங்கிப் போச்சே
புயலிடை நிமிர்ந்த பனந்தோப்பின்
இணை பிரிந்த குயில்களௌன
கொண்டதொரு சோகமாச்சே
தலைவிரி கோலமாய்
நின்றிரஞ்சும்
அகதி வாழ்வெமக்கு
எங்கனம் வாய்த்தது?

எங்கள் வாழ்வும் வனப்பும்
சந்தைக் கூட்டச்
சங்கதிகளோ?

பேசினோம்: சிரித்தோம்
ஆடினோம்: மகிழ்ந்தோம்
அழுதோம்:
கூடினோம்: கலைந்தோம்
தோம், தோம், தோம்
தோம், தோம்

கூத்தின் ஜதிகள் முழங்க
வேஷங்கள் பூண்டோம்
வாழ்வே ஒரு நாடக மேடையில்
நாளும் தோன்றுமோ!

கூடிக் கழித்திருந்த
கொலுவிருந்த வாழ்வெமது
விடுதலைப் பாடல்க்ள பாடி
விண்ணதிர
விண்ணதிர சிறகசைத்துப் பூமியில்
புதிதாய் உயிர்க்கும் நாள்
எந்நாளோ?
எங்களூர் வாழ்வும்
வனப்பும்
சந்தைக் கூட்டச் சங்கதிகளோ?
எங்களூர் வளம் நிறை
பனந்தோப்பு
இரப்பவனைப் போல்
இரஞ்சி நிற்பதுவோ?
வாழ்விடமேதுமின்றி
அன்பு
வறிதே
கிடக்கின்ற
பூமிகளுள் உழன்றோம்
போக்கிடமறியா
பொறிகளில் சிக்கி
போகும் உயிரை நாளுமே
மாய்த்தோம்
தோம், தோம், தோம்
தோம், தோம்




# யாழில் போர் விமானங்கள் வீழ்ந்த வரலாறு

## 28,29–04.1995



தமிழீழ வான்பரப்பில் வெள்ளி முட்டையிடும் இயந்திரப் பறவைகள் தமிழ் மக்களின் வாழ்வில், பயங்கரமான, கொடிய பயபீதியை ஏற்படுத்தின. மக்கள் எல்லையில்லாத துன்பம் அடைந்தார்கள்.

வெண் முகில்களுக்கூடாக பொன்றிந மாலைப்பொழுதில் காது செவிடுபடும்படி திடீரென பேரிரைச்சலுடன் தமிழீழ வான் பரப்பில் தோன்றும் இந்த இயந்திரக் கழுகுகளின் கதையை எப்படிச் சொல்லுவது?



கண்விழித்து உலகை காணுமுன் குண்டுவீச்சினுள் முடிந்த ஒரு சிசுவின் வாழ்வு

மக்கள் குடியிருப்புக்களின் மீதும், மக்கள் கூடும் இடங்களின் மீதும், வழிபாட்டு தலங்களின் மீதும், வைத்தியசாலைகள் மீதும், பாடசாலைகள் மீதும் சர்வதேச போர்ச் சட்டவிதிகளுக்கு முரணான முறையில் பீப்பாக் குண்டுகளையும், மலக் குண்டு களையும் வீசியது இவ் விமானங்கள்தான்.

இக் குண்டு வீச்சுக்களின் போது, எங்கள் மண்ணிலே பல பல கேடி சொத்துக்கள் அழிந்த. ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் ஊனமுற்றவர் களாகினர்.

இந்த விமானங்கள் ஆக்கிரமிப்பாளர்களை எமது மண்ணுக் குச் சுமந்து வந்தது. நிர்மலமான நீல வான்வெளிப் பரப்பூடாக கொடிய நாசகாரக் குண்டுகளையும் ஆயுதங்களையும் கொண்டுவந்து சேர்த்தது.

தமிழீழத்தில் தரைப் பகுதியிலும், கடற்பகுதியிலும் நின்றுபிடிக்க முடியாதுபோன சிறீலங்கா அரச படைகளும், இனவாத அரசும் வான் பலத்தை தமது பலமாக எண்ணியிருந்தனர்.



இந்த நேரத்தில் எமது தேசியத் தலைவர் அவர்களின் உருவாக்கத்தில், விமான எதிர்ப்புப் படையணி உருவானது, இவ்வணி உருவாக்கிய குறகிய காலத்துக்குள்ளேயே அதன் உச்சக்கட்டத் தாக்குதல் பெரிய வளர்ச்சியை அடைந்திருக்கிறது. இதனால் சிங்களப் பேரினவாதம் அச்சமுற்று கையறு நிலைக்குச் சென்றிருக்கிறது.

28.04.1995 மாலை கடல்காற்று பனைமரங்களோடு வேக மாக மோதி வீசிக்கொண்டிருந்தது. மாலைச் சூரியக் கதிர்களின் ஒளியில் பலாலியிலிருந்து எழுந்த ‘அவ்றோ’ விமானம் துலங்கியது. HF748 ரகத்தைச் சேர்ந்த இவ் அவ்றோ விமானம் 75 கோடி ரூபா பெறுமதி வாய்ந்தது. பலாலி விமானப் பெருந்தளம் எப்பொழுதும் போல உசார் நிலையில் வைக்கப்பட் டிருந்தது. ஆக்கிரமிப்பாளர்களின் படைத்தளத்திலிருந்து தமிழின அழிப்புக்காக படையினர் நகர்த்தப்பட்டுக்கொண் டிருந்தனர். இந்த விமானத்தில் 19 இராணுவத்தினரும், 11 விமானப் படையினரும், 5 கடற்படையினரும் இருந்தனர். இவர்களுடன் அராலித் துறையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் காயமடைந்த எட்டு இராணுவச் சிப்பாய்களுமாக 43 பேர் இருந்திருக்கிறார்கள். இவர்களில் யாரும் இதுவெ இறுதியான பறப்பாக இருக்கும் என ஒரு போதும் எதிர்பார்த்திருக்கவில்லை. இதற்கெல்லாம் மேலாக வடபகுதி விமானப்படைத் தளதபி ‘வின் கொமாண்டர்’ றோஜர் வீரசிங்காவும் இதில் இறந்துள்ளார். விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியினரின் தாக்குதலுக்கு உள்ளான இவ் விமானம் குறித்து, சிறீலங்கா அரசாங்கம் இயந்திரக் கோளாறு காரணமாகவே வெடித்துச் சிதறியது என மூடி மறைக்க முயன்றது. 1993ஆம் ஆண்டு ஆனையிறவுக்கு அப்பால், Y-8 ரக விமானம் வெடித்துச் சிதறிய போதும் இயந்திரக் கோளாறு என்றே மூடி மறைத்தது. இந்த மூடி





மண்ணுள் சிதறிய மானுட வாழ்வு

மறைப்பு விவகாரம் பின்னர் அவர்களிற்கே ஆபத்தானதாக அமைந்துவிட்டிருந்தது.

அடுத்தநாட் காலை 8:30 மணி போல், மழையும் பெய்யத் தொடங்கியிருந்தது. மாதகல் பகுதியில் 1500 மீற்றர் உயரத்தில் 'சார்லி றோஜர் 834' ரக அவ்றோ விமானம் பறந்து கொண்டிருந்தது. இந்த விமானத்தில் விமானப்படையின் உயரதிகாரிகளும், நிபுணர்கள் அடங்கிய குழுவுமாக பலர் இருந்தார்கள். இந்த விமானம் முக்கிய பிரமுகர்களை ஏற்றி இறக்குவதற்கே பயன்படுவது தெரிந்ததே. அவர்களின் முழு நோக்கமும் நேற்று எப்படி வெடித்துச் சிதறியது என்பதை அறியும் நோக்காக இருந்தது. அப்போது பாரிஸில் இருந்த ஜனதிபதி சந்திரிகாவின் பணிப்பின் பேரில், இந்த நிபுணர் குழவை இரவோடிரவாக விமானப் படைத்தளபதி 'ஏயர் மார்ஷல்' ஒலிவர் ரணசிங்கவே நியமித்திருந்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள புன்னாலைக் கட்டுவன் பகுதியில் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில், விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியினரின் தாக்குதலுக்கு இவ் விமானம் உள்ளாகியது.

வானம் அதிரும் வண்ணம் இடியோசை கேட்டது. கரும்புகைகள் எழுந்தன. இந்த நிலையிலும் விமானம் பலாலித் தளம் நோக்கி விரைந்தது. மீண்டும் ஆகாயாத்திலேயே சில வினாடிகளில் காதைப்பிளக்கும் வண்ணம் வெடியோசை கேட்டதென இதனை நேரில் பார்த்த தமிழீழ மக்கள் தெரிவித்துள்ளார்கள். பெரும் திரள் திரளாக மக்கள கூடி வீழ்ந்து கிடக்கும் அந்த விமானங்களை பார்த்துள்ளனர். அதன் உதிரிப் பாகங்கள் பொதுமக்களால் சேர்க்கப்பட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.



சுட்டு வீழ்த்தப்பட்ட Y-8 (சகடை) விமானத்தை மக்கள் பார்வையிடுகின்றனர்











பிற்பாடு விடுதலைப் புலிகளி னால் யாழ். முற்றவெளி மைதானத்தில், சிதறிய விமானங் களின் உதிரிப்பாகங்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. அன்று மக்கள் முகங்களில் எல்லையில்லாத சந்தோசம் கரைபுரண்டது.



விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படைப்பிரிவால் சுட்டுவீழ்த்தப்பட்ட 'அவ்றோ' விமானங்களில் ஒன்று




# தம்பலகாமம் படுகொலை 20 யூன் 1986

திருகோணமலை மாவட்டத்திலுள்ள புகழ் பெற்ற கிராமங்களில் ஒன்றாக தம்பலகாமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் பிரதான தொழிலாக விவசாயம் அமைந்துள்ளது.

1986.06.20 அன்று தம்பலகாமம் சந்தியிலிருந்த விமானப்படையினரும், இராணுவத்தினரும் இணைந்து அக்கிராமத்தில் மேற்கொண்ட தாக்குதலினால் மக்கள் தமது வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்றனர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் பொற்கேணி அரிசி ஆலையில் தஞ்சமடைந்தனர். இந்தவேளையில் அங்குவந்த இராணுவத்தினர் அனைவரையும் கைது செய்து கொண்டு சென்றனர். பின்னர் கைது செய்யப்பட்ட அனைவரையும் உள்பந்தை கிராமத்தின் சமுனைஆறு என்னும் இடத்தில் வைத்துச் சுட்டதில் அனைவருமே உயிரிழந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. கந்தசாமி கனகசபாபதி - -
02. கனகசபாபதி புவனேஸ்வரி - -
03. கனகசபாபதி தாசன் - -
04. கனகசபாபதி தீபன் - -
05. கனகசபாபதி தீசன் - -
06. கனகசபாபதி ரஞ்சி - -
07. கணபதிப்பிள்ளை சபநாயகம் - தொழிலாளி - 51
08. கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன் - வியாபாரம் -
09. முனியையா லெட்சுமி - 37
10. சேகர் கந்தமுத்து - -
11. சேகர் கணபதிப்பிள்ளை - -
12. சேகர் வனிதா - -
13. சேகர் ராதிகா - -
14. சுப்பிரமணியம் ஜெயானந் - -
15. சுப்பிரமணியம் ஜெயராணி - -
16. சுப்பிரமணியம் செல்வராணி - -
17. சுப்பிரமணியம் சுதாகரன் - -
18. சுப்பிரமணியம் சசீகரன் - -
19. சுப்பையா சாந்தகுமார் வியாபாரம் -

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# பரந்தன் விவசாயிகள் படுகொலை 28 யூன் 1986



கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் உள்ளடங்கியுள்ள பிரதேசம் பரந்தன் ஆகும். இந்த மாவட்டத்திற் காணப்படும் நகரங்களில் முதன்மையான ஒரு நகரமாக பரந்தன் விளங்குகின்றது. இங்கு வாழ்பவர்களது பிரதான தொழில் நடவடிக்கையாக விவசாயம் காணப்படுகின்றது. அத்தோடு சிலர் பகுதிநேர மீனவர்களாகவும், கூலித் தொழில் செய்பவர்களாகவும் உள்ளார்கள்.

பரந்தன் நகரமானது, யுத்தகாலத்தில் பல்வேறு இராணுவ நடவடிக்கையால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாக இருந்தது. குறிப்பாக ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்த இலங்கை இந்தியப்படை 87 இன் பின்பு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்களுக்கும் முகம்கொடுத்த பிரதேசமாக இருந்தது.

28.06.1986 அன்று அதிகாலை 5.15 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து எறிகணைத் தாக்குதல் செய்தவாறு பரந்தனை நோக்கி முன்னேறி வந்த இராணுவத்தினர் நகரின் பிரதான வீதியை அண்டியுள்ள வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு நின்ற விவசாயிகள் ஏழு பேரைக் காரணமின்றிக் கைதுசெய்து, அவர்களை ஒன்றாகக் கயிற்றினால் பிணைத்துக் கட்டி சித்திரவதை செய்து கொன்ற பின்னர் உயிரற்ற அவர்களது உடல்களை அங்கிருந்த கழிவாற்றுப் பகுதியில் போட்டுவிட்டுச் சென்றனர்.

அன்றையதினம் 03.30 மணியளவில் வயல் வேலைக்காக வந்தவர்கள் இராணுவத் தாக்குதலினால் உயிரிழந்து கிடந்தவர்களைக் கண்டு அவர்களது உறவினர்களிடமும் கிராம மக்களிடமும் தெரிவித்ததைத் தொடர்ந்து, கிராம மக்கள் அவர்களது உடல்களை எடுத்துச் சென்று அடக்கம் செய்தார்கள். இவ்வாறு இராணுவத்தினரின் தாக்குதல்களையும் கெடுபிடிகளையும் தொடர்ந்து பரந்தன் பகுதி மக்கள் 1980களில் சொந்த இடங்களை விட்டு வெளியேறினார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. ஜோசப் செபஸ்டியன் 44
02. வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம் - 23
03. முனுச்சாமி உதயசூரியன் - 17
04. நாராயணப்பிள்ளை நடராசா - 75
05. வினாசித்தம்பி சண்முகநாதன் - 18
06. சுப்பையா கனகசபை - 39
07. ஆறுமுகம் சிவஞானசுந்தரம் - 22

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# வீரமுனை படுகொலைகள் 20 யூன் 1990




அம்பாறை மாவட்டத்தில் காரைதீவிற்கு மேற்காக நாற்பத்தைந்து கி.மீ தூரத்தில் வீரமுனைக் கிராமம் அமைந்துள்ளது. வீரமுனைக் கிராமத்திற்கு வடக்கே சொறிக்கல் முனையும் தெற்கு மற்றும் மேற்குப் பக்கங்களில் செழிப்பான வயல் நிலங்களும் அமைந்துள்ளன. வீரமுனை தமிழ்மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாகும். சம்மாந்துறைப் பிரதேசம் போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையின் தென் கடற்கரையோரங்களிலிருந்து போர்த்துக்கேயரால் விரட்டப்பட்ட முசுலிம்கள் இடம்பெயர்ந்து குடியேறி வாழும் பிரதேசமாகும். இவ்விரண்டு பிரதேசங்களையும் இணைத்து சம்மாந்துறை நகரசபை அமைந்துள்ளது.

1954ஆம் ஆண்டு தனிநபர்களுக்கிடையே நடைபெற்ற தகராற்றினால் சம்மாந்துறை முசுலிம்கள் ஒரு சிலரால் வீரமுனைப் பிரதேசம் தீயிட்டு எரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வீரமுனை மக்கள் இடம் பெயர்ந்து காடுகளில் கணபதிபுரம், வீரச்சோலை போன்ற புதிய கிராமங்களை உருவாக்கினார்கள். 1990 யூன் மாதம் மூன்றாம் வாரத்தில் இராணுவத்தினரால் வீரமுனைப் பிரதேசம் சுற்றி வளைக்கப்பட்டது. சுற்றி வளைத்த இராணுவத்தினர் ஒவ்வொரு வீடாகச் சென்று மக்களை அருகிலுள்ள வீரமுனைப் பிள்ளையார் ஆலயத்திற்குச் செல்லுமாறு பணித்தனர். ஆலயத்திற்குச் செல்லாது வீடுகளிலிருந்தவர்களை இராணுவத்தினர் சுட்டுப் பின்னர் வீட்டுடன் சேர்த்து எரித்தார்கள் வீதிகளில் நடமாடிய பலரும் இராணுவதத்தினராற் சுடப்பட்டார்கள் 1990. 06.20 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு கனரக வாகனங்களில் வீரமுனைப் பிள்ளையார் கோயிலுக்கு வந்து இறங்கிய இராணுவத் தினர் வீரமுனைப் பிரதேசத்தில் பல பிர தேசத்திலுமிருந்து தஞ்சமடைந்திருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களைச் சுற்றி வளைத்து பதினைந்து வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் அனைவரையும் கோயிலின் பின் வீதியில் ஒன்று சேருமாறு பணித்தார்கள். இவர்களில் அறுபத்தொன்பது இளைஞர்களை உறவினர்களின் முன்னிலையிற் கைது செய்து அழைத்துச்சென்றனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அனைவரும் சம்மாந்துறையிலுள்ள மார்ஜன் பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இவர்களில் ஐம்பது பேர் வரை இராணுவத்தினரால் சம்மாந்துறையிலுள்ள மலைக்காட்டுக்குள் உயிருடன் எரிக்கப்பட்டனர். மிகுதிப் பேர் விடுதலை செய்யப்பட்டார்கள்.

1990.06.29ஆம் திகதி மீண்டும் மக்கள் தங்கியிருந்த கோயிலுக்கு வந்த இராணுவத்தினர் அங்கிருந்தவர்களில் பலரைக் கைது செய்து இராணுவ முகாமிற்கு அழைத்து சென்றார்கள். இவர்களில் எவருமே திரும்பி வரவில்லை. வீரமுனைப் பிள்ளையார் கோயிலில் தஞ்சமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இராணுவ அச்சுறுத்தலிலிருந்து தப்புவதற்காக இடம் பெயர்ந்து காரைதீவு மகாவித்தியாலயத்திற் தஞ்சமடைந்தார்கள். 1990.07.03 அன்று காரைதீவு மகா விதத்தியாலயத்தை சுற்றி வளைதத் இராணுவதத்தினர் பாடசாலையிற் தங்கி யிருந்தவர்களில் பதினொரு இளைஞர்களைக் கைது செய்து இராணுவ முகாமிற்கு அழைத் துச் சென்றார்கள். இவர்களிலும் எவருமே திரும்பி வரவில்லை.

1990.07.05 மீண்டும் பாடசாலைக்கு வந்த அதிரடிப்படையினர் அங்கிருந்த இளைஞர்கள் பதின்மூன்று பேரைக்கைது செய்து இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்றார்கள். காரைதீவு மகா வித்தியாலயத்தில் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட அனைவரும் சித்திரவதைகளின் பின்னர் உயிருடன் ரயர் போட்டு எரிக்கப்பட்டார்கள்.

கைது செய்யப்பட்டவர்களைத் தேடிச்சென்ற உறவினர்களும் இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு உள்ளானார்கள். இதனைத் தொடர்ந்து மக்கள் மீண்டும் வீரமுனைக்கு அருகிலுள்ள அகதிமுகாமிற்குத் திரும்பினார்கள். 1990.07.10 அன்றும் வீரமுனை அகதிமுகாமைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் பதினைந்து இளைஞர்களைக் கைது செய்து, இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்று கடுமையான சித்திரவதைகளின் பின்னர் அவர்களையும் உயிருடன் எரித்தார்கள்.

1990.07.16 அன்று வீரமுனை அகதி முகாமிலிருந்து தமது வீடுகளைப் பார்க்கச்சென்ற பெண்களில் எட்டு இளம்பெண்கள் மல்வத்தையிலிருந்த இராணுவ சோதனைநிலையத்தில் இராணுவத்தினராற் கைது செய்யப்பட்டு முப்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரால் பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டார்கள். இவர்களும் இராணுவத்தினரால் பின்னர் எரிக்கப்பட்டனர்.

1990.07.26 இல் மீண்டும் வீரமுனை அகதி முகாமைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் முப்பத்திரண்டு இளைஞர்களைக் கைது செய்தார்கள். இவர்களில் இருபத்துமூன்று பேர் பாடசாலை மாணவர்கள். இவர்களில் எவருமே திரும்பி வரவில்லை. 1990.07.29இல் வீர முனைப் பிரதேசத்தில் தமது குடும்பத்தினருடன் பயணம்செய்துகொண்டிருந்த எட்டுப் பாடசாலை ஆசிரியர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்கள் இவர்களில் எவரும் திரும்பிவரவில்லை.

1990.08.01 ஆம் திகதி வீரமுனையிலுள்ள சவளக்கடை வீதி வழியாக நாவிதன் வெளிக்குச் சென்ற பதினெட்டுபொதுமக்கள் இராணுவம், காவற்றுறை மற்றும் ஊர்காவற் படையினராற் கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் ஒரு குழந்தையும் நான்கு பெண்களும் அடங்குவர். இவர்கள் அனைவரும் வாள், கத்தி போன்ற கூரிய ஆயுதங்களால் துண்டுகளாக வெட்டப்பட்டு சவளக்கடை கோயிலுக்குள் போட்டு எரிக்கப்பட்டார்கள்.

1990.08.12 ஆம் திகதி வீரமுனை அகதி முகாமிற்குக் கூரிய ஆயுதங்கள் துப்பாக்கிகளுடன் வந்த முசுலிம் குழுமுகாமிலிருந்தவர்களை வெட்டியும் சுட்டும் தாக்கினார்கள். இவர்களின் தாக்குதலில் பத்துப் பேர் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தார்கள். உயிரிழந்தவர்களில் கோயில் அறங்காவலர் தம்பிமுத்து சின்னத்துரை, இரண்டு குழந்தைகள், மூன்று பெண்கள் உள்ளடங்குவார்கள்.

1990.08.12 இல் முசுலிம்களின் தாக்குதலில் காயப்பட்டவர்கள் முதலில் சம்மாந்துறை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. பின்னர் அம்பாறை வைத்திய சாலைக்கு எடுத்து செல்லப்பட்டார்கள். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஏழு பேரில் மூன்று பேர் இராணுவத்தினராற் கடத்திச் செல்லப்பட்டார்கள். மிகுதி நான்கு பேர் வீரமுனைக்குத் தப்பி வந்தார்கள். வீரமுனையில் அறுநூறு வீடுகளும் வீரமுனைக்கு அருகிலுள்ள கிராமங்களான மல்வத்தை, மல்லிகைத்தீவு, நியூரவுண், கணபதிபுரம், வலாத்தபிட்டி, சம்மாந்துறை ஆகிய கிராமங்களில் ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்திரண்டு வீடுகளும் எரிக்கப்பட்டன.

1990.06.20 தொடக்கம் 1990.08.15 வரை வீரமுனை, காரைதீவு மற்றும் அயற்கிராமங்களிலுமாக இருநூறிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள் அல்லது காணாமற் போனார்கள். இரண்டாயிரம் வீடுகள் வரை இராணுவத்தினரால் எரிக்கப்பட்டன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 இளையதம்பி கணபதிப்பிள்ளை - -
02 இளையதம்பி செல்லம்மா - -
03 இளையதம்பி சின்னப்பிள்ளை - -
04 இராசையா பரமேஸ்வரி - -
05 இராசையா சுபாசினி மாணவி 16
06 இராமநாதன் வாணிதாசன் - -
07 இராமக்குட்டி பொன்னம்மா - 65
08 இராசலிங்கம் அழகையா - -
09 இருளாண்டி அமிர்தலிங்கம் - மாணவன் - 20
10 யு.நடராஜா - 5
11 நாகலிங்கம் தியாகராசா - மேசன் - 31
12 நாகலிங்கம் தவராசா - -
13 நாகலிங்கம் மாரிமுத்து - -
14 நமசிவாயம் தேவராசா - -
15 நடராஜா உதயகுமார் - 7
16 நடராசா இளங்கோ - -
17 நடராசா கிருபைராசா - தொழிலாளி - 39
18 நல்லதம்பி தவராசா - -
19 நல்லதம்பி கோபால் - -
20 நல்லதம்பி வடிவேல் - -
21 நல்லதம்பி விக்னேஸ்வரன் - -
22 க.கறுவல்தம்பி - -
23 க.மாரிமுத்து - -
24 க.அழகையா - -
25 கனகரெட்ணம் யோகராசா - -
26 கனகசபாபதி இளங்கோ - -
27 கந்தையா நவரட்ணம் - -
28 கந்தையா கணேசமூர்த்தி - -
29 கந்தையா கணபதிப்பிள்ளை. - -
30 கந்தையா திசாநாயக்க - -
31 கந்தையா தருமலிங்கம் - -
32 கந்தக்குட்டி பாக்கியராசா. - -
33 கந்தக்குட்டி தருமலிங்கம் - -
34 கந்தசாமி விஜயகுமார் - -
35 கந்தவனம் கந்தசாமி - -
36 கந்தவனம் குமார் - -
37 கந்தவனம் ஆறுமுகம் - -
38 கந்தவனம் சோமசுந்தரம் - -
39 காத்தமுத்து நாகேந்திரன் - -
40 காத்தமுத்து சண்முகநாதன் கமம் 40

# வீரமுனை படுகொலைகள் 20 யூன் 1990

41 காளிக்குட்டி உலகநாதன் - -
42 கதிர்காமத்தம்பி கருணாகரன் - -
43 கதிரேசப்பிள்ளை சந்திரசேகர் - -
44 கதிராமத்தம்பி இராசையா - -
45 கதிரவேலு இராசலிங்கம் - கமம் -
46 கதிரவேல் இராஜேந்திரன் - -
47 கதிரவேல் ராதிகாகிருஸ்னன் - -
48 குமாரன் சின்னத்தம்பி - -
49 குலேந்திரன் அஜந்தன் - 3
50 கிருஸ்ணபிள்ளை கனகசூரியம் - -
51 கிருஸ்ணபிள்ளை மோகனராஜ் -
52 கிருஸ்ணபிள்ளை சுந்தரலிங்கம் - -
53 கிருஸ்ணபிள்ளை சிதம்பரமூர்த்தி - தொழிலாளி - 21
54 கிருஸ்ணபிள்ளை விஜயகுமாரி - -
55 கிருபானந்தம் அமிர்தலிங்கம் - -
56 கறுப்பையா சிவசாமி - கமம் - 40
57 கறுவல்தம்பி திருச்செல்வம் - -
58 கணபதி குகநாதன் - -
59 கணபதி சந்திரன் - -
60 கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரி - -
61 கணபதிப்பிள்ளை புஸ்பலதா - -
62 கணபதிப்பிள்ளை பரசுராமன் - -
63 கணபதிப்பிள்ளை தவராசா - -
64 கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை - -
65 கணபதிப்பிள்ளை சிவபாலன் - தொழிலாளி -
66 கணபதிப்பிள்ளை சிவலிங்கம் - சாரதி - 49
67 கணபதிப்பிள்ளை சண்முகநாதன் - தொழிலாளி - 35
68 கணபதிப்பிள்ளை சண்முகம் - -



69 குணரெட்ணம் சிவகௌரி - -
70 பாவில் சண்முகம் - -
71 பாலன் மகேந்திரன் - -
72 பாலன் கேதரன் - -
73 பாலசுந்தரம் - -
74 பாண்டியன் முனியாண்டி - -
75 பத்மநாதன் விநாயகமூர்த்தி - -
76 பழனித்தம்பி மாணிக்கம் - 46
77 பீ.ஜி.பியாந்தன் - -
78 பீ.நந்தசிறி - -
79 பி.மாரியான் - -
80 பீ.சுசிபன் - -
81 ரீ.மாதவன் - -
82 ஐயாத்துரை மகேஸ்வரன் - -
83 ஐயாத்துரை கோவிந்தன் - -
84 கைலாயபிள்ளை தேவராசா - மாணவி - 8
85 வை.இராசதுரை - -
86 வை.பிரான்சிஸ் - -
87 வைரமுத்து கற்பகம் - -
88 வைரமுத்து கோபாலபிள்ளை - -
89 வைரமுத்து தெய்வானை - -
90 வைரமுத்து சிவம் - -
91 தர்மலிங்கம் பொன்னத்துரை - -
92 தம்பிப்பிள்ளை இராசலிங்கம். - -
93 தம்பிப்பிள்ளை கந்தையா - -
94 தம்பிமுத்து கந்தையா - கமம் - 77
95 தம்பிமுத்து தயாபரன் - -
96 தம்பிமுத்து சின்னத்துரை - அறங்காவலர் - 52
97 தம்பிமுத்து சிந்தாத்துரை - விவசாயம் - 70
98 திருநாவுக்கரசு கணேசமூர்த்தி - -
99 திருநாவுக்கரசு கருணாநிதி - விவசாயம் - 18
100 திருநாவுக்கரசு புஸ்பராசா - -
101 தங்கநேசம் வேலுப்பிள்ளை - -
102 தங்கராசா உதயசூரியன் - -
103 தங்கராசா மனோகரன் - 18
104 தங்கராசா ராகினி - -
105 மார்க்கண்டு தங்கவேல் - -
106 மார்க்கண்டு யோகராசா - -
107 மார்க்கண்டு சிவானந்தன் - 29
108 மாசிலாமணி தருமலிங்கம் - -
109 மாசிலாமணி செல்வரட்ணம் - -
110 மாசிலாமணி விநாயகமூர்த்தி - விவசாயம் - 26
111 மாணிக்கம் பாலு - -
112 மாணிக்கம் முருகேசப்பிள்ளை - கமம் - 21
113 மாணிக்கம் ஜெகநாதன் - -
114 முத்துலிங்கம் பாலபாஸ்கரன் - -
115 முத்துலிங்கம் பரமேஸ்வரி - ஆசிரியர் - 32
116 முத்துலிங்கம் செல்லையா - -
117 முருகுப்பிள்ளை தங்கரெத்தினம் - -
118 முருகுப்பிள்ளை தங்கராசா - -
119 முருகுப்பிள்ளை ஞானம்மா - -
120 மருதுரிஸ் செல்வராசா - -
121 முருகேசு உதயகுமார் - -
122 முருகேசு பாஸ்கரன் - -
123 முருகேசப்பிள்ளை பத்மநாதன் - -
124 மணியம் சோமசுந்தரம் - -
125 ஆ.யோகநாதன் - -
126 ஆர்.மயில்வாகனம் - 50
127 அம்பாரக்குட்டி தியாகராஜா - -
128 அழகையா இராமச்சந்திரன் - -
129 அழகையா சாமித்தம்பி - -
130 அழகையா சிவா - -
131 அழகையா வீரசேனன் - -
132 அழகையா ரகுநாதன் - -
133 அரசரெத்தினம் கதிரமலை - -
134 அரசரெட்ணம் மகேந்திரன் - -
135 அரசரட்ணம் வள்ளியம்மை - 58
136 அருளப்பா இந்துருஜன் - -
137 அருணாசலம் இராசரெட்ணம் - -
138 அருணாசலம் சின்னப்பிள்ளை - 55
139 ஆறுமுகம் கந்தசாமி - -
140 ஆறுமுகம் கலா - -
141 ஆறுமுகம் தெய்வேந்திரம் - தச்சுத்தொழில் - 34
142 யோகராசா கிருபானந்தி - -
143 கே.அழகையா - -
144 கே.சிவலிங்கம் - 48
145 கே.ரவிச்சந்திரன் - -
146 பொன்னம்பலம் இராஜேந்திரன் - -
147 பொன்னம்பலம் இராசமணி - -
148 பொன்னுச்சாமி கந்தசாமி - தொழிலாளி - 24
149 பொன்னுச்சாமி கணேசமூர்த்தி - ஆசிரியர் - 26
150 பொன்னையா உதயகுமார் - -
151 பொன்னையா மகேஸ்வரன் - -
152 பொன்னையா வள்ளியம்மை - 67
153 தேவநாயகம் மகேந்திரன் - -
154 சொலமன் சகாயநாதன் - -
155 செல்லையா கிருஸ்ணபிள்ளை - -
156 செல்லையா அசோகன் மின்சாரசபை - ஊழியர் - 24
157 செல்லையா சோமசுந்தரம் - -
158 செல்லையா வடிவேல் - -
159 செல்வன் சிவநாதன் - -
160 செல்லன் அருளம்மா - -
161 செல்லத்துரை தர்மலிங்கம் - -
162 செல்லத்தம்பி கருணாநிதி - கடதாசி ஆலை ஊழியர் - 24
163 வெள்ளையன் மாணவன் 7
164 வேல்முருகு முத்து - -
165 வேலுப்பிள்ளை நாகேந்திரன் - -
166 வேலுப்பிள்ளை காசியானந்தன் - -
167 வேலுப்பிள்ளை கதிரமலை - -
168 வேலுப்பிள்ளை திருச்செல்வம் - தொழிலாளி - 22
169 வேலுப்பிள்ளை யோகராசா - -
170 வேலுப்பிள்ளை தெய்வநாயகம் - -
171 வேலுப்பிள்ளை சந்திரகுமார் - -
172 வேலுப்பிள்ளை சுதாகரன் - -
173 ரெட்ணம் செல்வராசா - கமம் - 20
174 சு.மனோகரன் - -
175 சந்திரன் அழுளப்பன் - -
176 சுப்பிரமணியம் நடேஸ்வரன் - -
177 சாமித்தம்பி கணபதிப்பிள்ளை - -
178 சாமித்தம்பி குணசீலன் - -
179 சாமித்தம்பி தங்கவேல் - மாணவன் - 17
180 சாமித்தம்பி சுப்பிரமணியம் - -
181 சதாசிவம் புவனேந்திரன் - -
182 சதாசிவம் தேவராசா - விவசாயம் - 18
183 சின்னத்துரை காளிக்குட்டி - -
184 சின்னத்தம்பி குகதாஸ் - -
185 சின்னத்தம்பி திலகேஸ்வரி - -
186 சின்னத்தம்பி அண்ணாதாசன் - -
187 சின்னத்தம்பி வன்னியசிங்கம் - -
188 சின்னதம்பி ரவிச்சந்திரன் - சாரதி - 22
189 சின்னையா முத்தையா - -
190 சீனி இந்திரன் - -
191 சீனி தவசீலன் - -
192 சீனி ஜெயசீலன் - -
193 சீனித்தம்பி மாரிமுத்து - -
194 சீனித்தம்பி வேல்முருகு - -
195 சித்தாத்துரை காளிக்குட்டி - கமம் - 47
196 சித்தாத்துரை செல்வராசா - -
197 சித்தாத்துரை சம்பந்தன் - விவசாயம் - 24
198 சித்தாத்துரை தவராசா - -
199 சித்தாத்துரை தேவராசா - -
200 சித்தாத்துரை வேவி - -
201 சித்தாத்துரை சம்மந்தன் - விவசாயம் 24
202 சித்திரவேல் பத்மநாதன் - -
203 சிவனடியார் ரவிச்சந்திரன் - -
204 சிவானந்தன் இந்திரன் - -
205 சிவானந்தன் பாலச்சந்திரன் - -
206 சிவானந்தன் ரவிச்சந்திரன் - -
207 சிவஞானம் கணேசன் - -
208 சிவசம்பு தேவராசா - -
209 சங்கரப்பிள்ளை அற்புதராசா - -
210 சங்கரப்பிள்ளை வில்வராசா - விவசாயம் - 20
211 சலமன் மோகனராஜன் சகாயநாதன் - வியாபாரம் - 22
212 சண்முகம் இளஞ்சேகர் - மாணவர் -
213 விநாயகமூர்த்தி பாலு - -
214 வீரக்குட்டி கிட்ணன் - -
215 வீரபாண்டியன் ஜமுனா - -
216 வள்ளியம்மை - -
217 ராமன் - -
218 ரவி தில்லையம்மா - -
219 ஏ.ஈ.தேவதாசன் - -
220 ஏ.கனகரெத்தினம் - -
221 ஏ.பரமநாதன் - -
222 ஏ.முருகேசபிள்ளை - -
223 ஏ.சுபாசினி - மாணவி 1 - 7
224 ஏ.சின்னப்பிள்ளை - 50
225 ஏ.சித்திரவேல் - -
226 ஏ.சிவநேசன் - -
227 ஏ.ஏ.சண்முகவேல் - -
228 எஸ்.மாணிக்கம் - 35
229 என்.இராசன் - -
230 என்.சந்திரகுமார் - -
231 ஏகாம்பரம் தருமலிங்கம் - -
232 எம்.முத்துக்குமார் - -
233 எம்.அருள்மணி - -

வீரமுனையில் வேறு தினங்களில் உயிரிழந்த சிலரது விபரங்கள் (பெயர் தொழில் வயது)

01 15.03.1985 சதாசிவம் சண்முகராஜா - கமம் - 23
02 25.10.1985 சின்னத்தம்பி நவரட்ணராசா - விவசாயம் - 19
03 08.09.1988 காளிக்குட்டி நவரெட்ணம் - தொழிலாளி - 23
04 13.01.1989 சேதுமதி குணரட்ணம் - கமம் - 33
05 11.06.1990 கணபதிப்பிள்ளை கந்தசாமி - தொழிலாளி - 27
06 15.06.1990 பாலசந்திரபோஸ் சுபாஸ்சந்திரபோஸ் - தொழிலாளி -16
07. செல்லத்துரை விக்னேஸ்வரன் - கமம் - 21
08. செலடன்ஸ்பெக் பிறிங்கேஸ்பெக் - தச்சுத்தொழில் - 19
09. சிவராசா சதீஸ்குமார் - 19
10. சங்கரப்பிள்ளை சிவகுருநாதன் - மாணவன் - 18
11. சவரிமுத்து ரஞ்சன் - கமம் - 22
12. சற்குணநாதன் ரஞ்சிதகுமார் - வியாபாரம் - 22

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# பேசாலைத் தேவாலயப் படுகொலை – 17 யூன் 2006






2006 ஜீன் 17ஆம் நாள் அதிகாலை மன்னார் பேசாலைக்கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படையினருக்கு ஏற்பட்ட பெரும் தோல்வியை அடுத்து பேசாலையிலுள்ள தமிழ்க் குடி மக்களை பழிவாங்கத் தொடங்கினார்கள். தமிழர்கள் வெற்றிநாயகி தேவாலயத்தில் தஞ்சம் புகுந்தார்கள். கடற்சண்டையில் தோற்கடிக்கப்பட்ட கடற்படையினர் பேசாலைப் பகுதியைச் சுற்றிவளைத்து கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூட்டினை மேற்கொண்டார்கள். அவ்வாறாக சுட்டுக்கொண்டு வந்த இராணுவத்தினர் தேவாலயத்தினுள்ளே திரண்டு நின்ற மக்கள் மீது கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டார்கள். அதில் ஒரு பெண் கொல்லப்பட்டார். கடலில் நிகழ்ந்த மோதலைப் பார்ப்பதற்காக கடற்கரைக்குச் சென்ற மீனவர்கள் மீதும் கடற்படையினர் கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டனர். 05 மீனவர்கள் அவர்களது படகுகளுக்கு உள்ளேயே இறந்து கிடக்க காணப்பட்டனர். கரையிலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் சிறீலங்காக் கடற்படையினரால் தீ மூட்டப்பட்டுள்ளன. 40படகுகளும் 25வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. 10மில்லியன் பெறுமதியான மீன்பிடி வலைகளும் எரிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

1. மணவள் கிளாரம்மா லீலா, 75
2. ஜேசுதாசன் ஜுட் நிக்சன், 23
3. சிறிலப்பர் புனித ஜுட், 22
4. துரைராஜா விஜயகுமார், 39
5. கோடலிங்கம் லிங்கநாதன், 20
6. அப்துல் ரஹீம் லத்தீப், 28













# புதுக்குடியிருப்பு படுகொலை – 15 யூன் 2008





முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு ஒரு பெரிய நகரமாகும். 2008 யூன் 15ம் திகதியனறு சிறீலங்கா விமானப்படையின் இப்பகுதி மீது பரவலாக குண்டுள் வீசினர். நாலு பொதுமக்கள் கொல்லப் பட்டனர். மேலும் 10 பொதுமக்கள் காயப்பட்டனர். பாடசாலை, வைத்தியசாலை, கோவில், சந்தை, கடைகள் யாவும் சேதமடைந்தன. புதுக்குடியிப்பு வைத் தியசாலை, புதுக்குடியிருப்பு மகாவித் தியாலயம், கல்வித் திணைக்கள அலுவலகம், சிறீ கந்தசாமி முருகன் கோவில் ஆகியன சேதமடைந்தன. ஏழு வீடுகளும் முற்றாக அழிக்கப்பட்டன. மேலும் 25 வீடுகள் சேதமடைந்தன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. ஐயாத்துரை சுந்தரலிங்கம், 47
02. சுப்பிரமணியம் சுகந்தன், 19
03. தேவராசா பானுசன், 19
04. வ. நாகதம்பிராசா, 20

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)















ஐயாத்துரை சுந்தரலிங்கம், 47



வ. நாகதம்பிராசா, 20



## கிருஷாந்தி கொலைவழக்கில் மரணதண்டனை பெற்ற கைதி கோப்ரல் ராஜபக்சவின் சாட்சியம்



(யாழ் நீதவான் முன்னிலையில் புதைகுழிகளை அடையாளம் காட்ட முன்னர் அறிவிக்கப்பட்ட சாட்சியம்)

★ மக்கள் புதைக்கப்பட்ட 10 இடங்களை என்னால் காட்டமுடியும்.

★ நான் வெறுமனவே உடல்களைப் புதைத்தேன். எனக்கு பாதிக்கப்பட்டவர்களின் அடையாளம் (யார் என்பது) தெரியாது.

★ நான்கு உயர் அதிகாரிகளே இக் கொலைக்கு காரணம்.

★ நான் உண்மையை வெளியே சொல்ல முற்பட்டதன் காரணம், நான் ஈடுபடாத கொலை ஒன்றிற்காக நான் தண்டிக்கப்பட்டேன். கொலைகாரர்கள் வீட்டில் உள்ளனர். நான் சிறையில் உள்ளேன்.

★ செம்மணியைத் தவிர உடல்கள் புதைக்கப்பட்ட வேறு இடங்களையும் என்னால் காட்ட முடியும். அரியாலை கிழக்கிலும் பூம்புகாரிலும் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன.

★ இளநிலை அதிகாரிகளின் கடமை, உயர் அதிகாரிகள் தரும் கட்டளைகளை நிறைவேற்றுவது. நான் உடல்களை புதைக்குமாறு உத்தரவிடப்பட்டேன். இவை கிருஷாந்தியுடையதா அல்லது எவரினதோ என்பது பற்றி புதைக்கும் போது நான் அறியேன்.

★ ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு கணவனும் மனைவியும் வீட்டிலிருந்து திரைப்படம் பார்த்துக் கொண்டருந்தபோது கைதுசெய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் கொல்லப்பட்டனர்.

★ நான் இந்நாட்டின் இராணுவத்தினர் அனைவரையும் குற்றசாட்டவில்லை. இச் செயல்களில் ஈடுபட்டவர்களை மட்டுமே குற்றம் சாட்டுகின்றேன்.

★ நான் 10 புதைகுழிகளையும், என் சக குற்றம் சாட்டப்பட்டவர் 5 புதைகுழிகளையும் அடையாளம் காட்டுவார். ஆனால் 3 வருடங்களின் முன் இச் சம்பவங்கள் இடம்பெற்றமையால் அவ் இடங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு நான் பொறுப்பாளியல்ல.



**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும்.
நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில்
உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு
தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**




JATHU
KITCHEN & RENOVATION
உங்கள் கனவுகளை
அடைய நாங்கள்
உதவுகிறோம்..
வீடு சீரமைப்பு
சேவைகளுக்கு
அழையுங்கள்
Custom Kitchen
Kitchen Counter Top
Kitchen Cabinets
Plumbing
Washroom Full Work
Electrical
Pot Light
Painting
Ground Moulding
Basement
Flooring
Free!
ESTIMATES
Stairs
Tiles
Windows
Garage Door
Patio Door
Carpet
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com



Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free
Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# கந்தரோடைத் தொல்லியல் – பகுதி 1

## பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்

யாழ்ப்பாணத்திலுள்ள 3.2 சதுரகிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட கந்தரோடைக் கிராமம் அனைத்துமே ஒரு தொல்லியல் மையம்தான். கந்தரோடைக் கிராமத்தை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்: (1) மக்களின் வதிவிடப் பகுதி, (2) தென்மேற்காக அமைந்த பனந்தோப்பு. இந்தக் கிராமத்தின் மிகப் பழமையான நகரம் அதன் நடுவே இரண்டு மீட்டர் உயரத்தில் 25 ஹெக்டயர் (62 ஏக்கர்) பரப்பளவில் அமைந்த மேட்டு நிலமாகும். அதன் பள்ளமான பரப்பு நெல்வளரும் செழிப்பான விளைச்சல் நிலம். அந்த விளைநிலத்தினருகே 40 ஏக்கர் பரப்பளவிலான கந்தரோடைக் குளம் காணப்படுகிறது. அக்கிராமத்தினூடாகச் செல்லும் வழுக்கை ஆறு எனப்படும் கடற்கால்வாய் தென்மேற்காக வளைந்து, மேற்கே கல்லுண்டாய் வழியாக நாவாந்துறைக்கருகே யாழ்ப்பாணக் கடலேரியில் சங்கமமாகிறது.




**கந்தரோடையில் முக்கியமான அகழாய்வு இடங்களாக இரு திடல்மேடுகள் காணப்படுகின்றன. வடக்கேயிருக்கும் பெரிய மேடு (900மீ.  600மீ.) அங்கே வளர்ந்திருக்கும் விளாமரத்தை அடையாளமாகக் கொண்டு 'விளாத்தி மேடை' என்றும், தெற்கே பனந்தோப்பினிடையேபௌத்த ஸ்தூபங்களைக் கொண்ட மேடுகள் 'தாதுகோபப் பகுதி' எனவும் அழைக்கப்படுகின்றன.**

Image Source : Barbara Helwing 2018.

கந்தரோடையின் வரலாற்று முக்கியத்துவம் இருபதாம் நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டுகளில்தான் மக்களின் கவனத்தை ஈர்த்தது. ஆனால், இது இத்தனை பழமையான நடுவம் என்பதை எவருமே எண்ணிப்பார்த்திருக்க மாட்டார்கள். 1916 ஆம் ஆண்டில் வட இலங்கையில் தொல்லியல் மேலாய்வுகளை மேற்கொண்ட வடமாகாண அரசாங்க அதிபராகவிருந்த ஜே.பி. லூயிஸ், யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய இடங்களிலிருந்த புராதனக் கட்டட அழிபாடுகளைக்கொண்டு இந்த இரு இடங்களும் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட குடியேற்ற மையங்களாக இருந்திருக்க வேண்டும் என அறிவித்திருந்தார். 1917-1919 ஆண்டுகளில் ஸேர். போல் எட்வார்ட் பீரிஸ் இங்கே அகழாய்வுகளை மேற்கொண்டு "கந்தரோடை ஒரு சிறிய அளவினதான அநுராதபுரம்" என அறிவித்தார் (Pieris, P. E. 1919).

"அழிந்து கிடக்கும் கட்டடங்களின் அடையாளங்களாலும், கண்டெடுக்கப்பட்ட கற்சிலைகள், கற்றூண்களினாலும், பரவிக் கிடக்கும் ஓடுகளின் துண்டுகளினாலும், கதிரமலை (கந்தரோடை) எனப்படும் இப்பழைய நகரம் மிகவும் விசாலமானதும், அழகிய வீதிகளையும், மாடமாளிகைகள், கூட கோபுரங்களுமுடையதுமாய், கண்ணைக் கவரும் வனப்பு வாய்ந்ததுமாய் இருந்திருக்க வேண்டும் என ஊகிக்கலாம்" என வரலாற்றாசிரியர் முதலியார் இராசநாயகம் கந்தரோடை நகரத்தை வருணித்தார் (இராசநாயகம், செ. 1933: 14-15). அக்கால வரலாற்றாசிரியர்களான முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் இருவரும் பண்டைய யாழ்ப்பாணத்தின் தலைநகராகக் கந்தரோடையை இனம் கண்டார்கள்.



**கந்தரோடைக் கிராம வதிவிடப்பகுதி பின்னணியில் காணப்படுகிறது. அதற்கு முன்னால் தொல்லியல் மேடும், அதன் நடுவில் உள்ள விளாத்திமரமும் காணப்படுகின்றன.**

Image Source : Vimala Begley, 1967.

### தொல்லியலாய்வுகள்

கடந்த ஒரு நூற்றாண்டிற்கும் மேலாகக் கீழ்க்காணும் ஆய்வாளர்கள் கந்தரோடையில் தொல்லியல் மேலாய்வுகளையும், தொல்லியல் அகழாய்வுகளையும் இலங்கை அரசின் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியுடன் மேற்கொண்டிருக்கிறார்கள். இவற்றில் சில ஆய்வுகளின் அறிக்கைகள் இதுவரை வெளிவரவில்லை. ஆய்வுகளில் கண்டெடுத்த தொல்பொருட்களில் பெரும்பாலானவை அநுராதபுர, மற்றும் கொழும்பு அருங்காட்சியகங்களுக்கும், யாழ்ப்பாண அருங்காட்சியகத்திற்கும், சில தனியாரிடமும் சென்றடைந்திருக்கின்றன.

கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாக கந்தரோடையில் தொல்லியல் மேலாய்வுகளையும், அகழாய்வுகளையும் மேற்கொண்டவர்கள்:

போல் பீரிஸ்: 1917, 1919.
கொடகும்புர, C.E: 1966-1967 - அறிக்கை 1968.
விமலா பெக்லி: பெப்ரவரி-மார்ச் 1967.
விமலா பெக்ளி, பென்னெற் புறொன்ஸன்: ஜூன்-ஆகஸ்ட் 1970.
இலங்கைத் தொல்லியல் திணைக்களம்: 1971.
இந்திரபாலா, சிற்றம்பலம், இரகுபதி: 1983.
பொன்னம்பலம் இரகுபதி: 1987.
கிருக்ஷ்ணராஜா: 1994-1995.
புக்ஷ்பரட்ணம், நிமால் பெரேரா: 2011.
பார்பரா ஹெல்விங், நிமால் பெரேரா: 2018-19.

### கந்தரோடைத் தொல்லியல் மேலாய்வுகள்

1917-1919 ஆம் ஆண்டுகளில் கந்தரோடையில் போல் பீரிஸ் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளின் பின்னர் அரை நூற்றாண்டுகளாகக் கந்தரோடைத் தொல்லியல் மையம் கவனிப்பாரற்றுக் கிடந்தது. 1956 முதல் 1967ஆம் ஆண்டு வரை இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் ஆணையாளராக (Commissioner of Archaeology) பணியாற்றிய சாள்ஸ் எட்மண்ட் கொடகும்புர (Charles Edmund Godakumbura) தனது பதவிக்காலத்தின் இறுதிப்பகுதியில் கந்தரோடையில் கவனம் செலுத்தினார். 1917-1919 ஆம் ஆண்டுகளில் கந்தரோடையில் தொல்லியலாய்வுகளை மேற்கொண்ட போல் பீரிஸ் முக்கியமாக மேலாய்வுகளையும், சில கிடைமட்ட அகழ்வுகளையுமே (Horizontal excavations) செய்திருந்ததை அறிந்திருந்தார். இவ்விடங்களில் முறையான அடுக்கமைவு அகழ்வுகள் செய்ய வேண்டிய தேவையை உணர்ந்தார். இலங்கை அரசின் அனுமதியோடு, தமிழ்நாட்டில் அரிக்கமேட்டில் தொல்லியலாய்வை மேற்கொண்டிருந்த அமெரிக்க பென்ஸில்வேனியப் பல்கலைக்கழக அரும்பொருட்காட்சியகத்தின் தொல்லியலாளர்களை இலங்கை வந்து பொம்பரிப்பிலும், கந்தரோடையிலும் தொல்லியல் அகழாய்வை நிகழ்த்தித்தருமாறு அழைத்திருந்தார். அத்துடன் 1966 ஆம் ஆண்டில் கந்தரோடையில் தொல்லியல் திணைக்கள அகழாய்வுகளையும் தானே ஆரம்பித்திருந்தார்.

இலங்கைத் தொல்லியல் திணைக்கள ஆணையாளரான கொடகும்புரவின் அழைப்பை ஏற்றுக்கொண்ட அமெரிக்கப் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழகத்தினர் முதலில் 1967 ஆம் ஆண்டில் கந்தரோடையில் ஒரு தொல்லியல் மேலாய்வை மேற்கொள்ளுவதாகவும், அது ஆக்கவளமுடையதாக (Productive) இருப்பின் பின்னால் விரிவான அகழ்வை மேற்கொள்ளவும் முடிவடுத்தனர்.

1967 ஆம் ஆண்டு பெப்ரவரி-மார்ச் மாதங்களில் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தின் தலைவராக இருந்த தொல்லியலாய்வாளர் விமலா பெக்லி கந்தரோடை வந்து தொல்லியல் மேலாய்வுகளை மேற்கொண்டார்.

இலங்கையில் அதுவரை காலமும் (1967 வரை) மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் தொல்பொருட்களின் சரியான காலக்கணிப்புகளோ, அல்லது அவற்றின் பண்பாட்டு வளர்ச்சி அடுக்குகளோ (Culture sequences) வரையறுக்கப்படவில்லை. அதன் காரணமாக அதுவரை ஆய்வு செய்யப்பட்ட பிராந்தியங்களின் காலக்கிரமமான வரலாற்று வளர்ச்சியை அதுவரை மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகள் மூலம் கண்டறிவது இயலாத காரியமாக இருந்தது.

கந்தரோடைக் கிராமம் தெளிவாகப் பிரிக்கக்கூடிய இரு பகுதிகளைக் கொண்டிருந்தது: ஒன்று மக்களின் வதிவிடக் கிராமம், மற்றது அதற்குத் தெற்கேயுள்ள பனந்தோப்பு. அந்தப் பனந்தோப்பில் இருந்த மண்மேடுகள் பௌத்த தாதுகோபங்கள்

RADIOCARBON DATES FROM KANTARODAI, SRI LANKA (CEYLON) 1977

| P. No. | Sample No. | Trench | Stratum | Pretreatment | 5568 Half-life B.P. 1950 | A.D/B.C. | 5730 Half-life A.D./B.C. | MASCA Corr¹ A.D./B.C. |
|---|---|---|---|---|---|---|---|---|
| P-2521 | 4 | A | IV | – | 2020 ± 50 | 70 B.C. | 140 ± 50 B.C. | 10- 100 ± 30 B.C. |
| P-2518 | 5 | A | IV | NaOH | 2290 ± 50 | 340 B.C. | 410 ± 50 B.C. | 420 ± 50 B.C. |
| P-2520 | 8 | A | V | – | 2180 ± 60 | 230 B.C. | 290 ± 60 B.C. | 270- 390 ± 60 B.C. |
| P-2524 | 9 | A | VI | – | 2340 ± 50 | 390 B.C. | 460 ± 30 B.C. | 440 ± 50 B.C. |
| P-2514 | 1 | B | V | – | 2250 ± 60 | 300 B.C. | 370 ± 60 B.C. | 410 ± 60 B.C. |
| P-2515 | 2 | B | VI | – | 2990 ± 60 | 1040 B.C. | 1130 ± 60 B.C. | 1290 ± 60 B.C. |
| P-2516 | 3 | B | VI | NaOH | 2070 ± 60 | 120 B.C. | 180 ± 60 B.C. | 130 ± 60 B.C. |
| P-2522 | 7 | B | VII | – | 2110 ± 60 | 150 B.C. | 220 ± 60 B.C. | 170- 200 ± 60 B.C. |
| P-2523 | 15 | B | VIII | – | 2060 ± 50 | 110 B.C. | 170 ± 60 B.C. | 120- 140 ± 60 B.C. |
| P-2525 | 16 | B | VIII | – | 2730 ± 220* | 780 B.C. | 870 ± 220 B.C. | 940- 980 ± 220 B.C. |
| P-2519 | 17 | B | IX | NaOH | 2290 ± 60 | 340 B.C. | 410 ± 60 B.C. | 420 ± 60 B.C. |
| P-2528 | 19 | B | XI | – | 2370 ± 60 | 420 B.C. | 500 ± 60 B.C. | 480 ± 60 B.C. |
| P-2526 | 18 | B | X | – | 2090 ± 50 | 140 B.C. | 200 ± 60 B.C. | 140- 190 ± 50 B.C. |
| P-2529 | 6 | X | III | – | 2350 ± 200* | 400 B.C. | 470 ± 210 B.C. | 440- 460 ± 210 B.C. |
| P-2517 | 12 | X | IV or V | NaOH | 2250 ± 50 | 300 B.C. | 370 ± 50 B.C. | 410 ± 50 B.C. |
| P-2527 | 11 | X | IV or V | Too Small | | | | |

* Large tolerance due to small sample size necessitating counting in small counter.
1 For explanation of MASCA corrections see MASCA Newsletter, 1973, Vol.9, No.1, p.1-20.

கந்தரோடை தொல் பொருட்களின் கதிரியக்கக் கரிம தேதிக் கணிப்பு.
Image Source : S.U. Deraniyagala & P. Ragupathy.





கந்தரோடை: சாம்பல் நிற, ஆரம்பகால சிவப்பு மட்பாண்டங்கள்.
Image Source : P.Pushparatnam

இருந்த இடங்களாக இருக்கலாம் என போல் பீரிஸ் கருதினார் (Pieris, P.E. 1917: 11-30: 1919: 40-67). பீரிஸ் மேற்கொண்ட சிறிய அளவிலான அகழ்வுகளில் பளபளப்பாக மெருகிட்ட ஓடுகள், சுண்ணாம்புக் கற்கள் என்பன காணப்பட்டன. அக்கிராம மாணவர்களிடமிருந்து முத்திரை குத்திய மற்றும் ரோமாபுரி நாணயங்களையும் பெற்றுக்கொண்டதாகப் பதிவு செய்திருந்தார் (Begley, V. 1967: 23).

விமலா பெக்லி கந்தரோடையில் மேலாய்வுகளை மேற்கொண்ட மாதங்களில் இலங்கைத் தொல்லியல் திணைக்களர் ஆய்வாளர்கள் தெற்கேயிருந்த பனந்தோப்புப் பகுதியில் அகழ்வுகளை மேற்கொண்டிருந்தார்கள். அது பற்றிக் குறிப்பிட்ட விமலா பெக்லி "அந்த அகழ்வுகள் சிறிய அளவிலான தாது கோபங்களின் அடித்தளங்களையும், அக்கட்டடங்களின் துண்டுப்பகுதிகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்திருந்தன." (This excavation has so far brought to light the bases and architectural fragments of several small dagobas) எனப் பதிவு செய்திருந்தார் (Vimala Begley, V. 1967:p. 23).

"எங்களது அப்பிராந்திய மேலாய்வுகளில் மக்களின் வதிவிடம் தாதுகோப மையத்திலிருந்து வடக்கே சில பர்லாங்கு தூரத்தில் கந்தரோடைக் கிராமத்தில் காணப்பட்டது. கிராமத்தின் கரையில் வெட்டப்பட்ட ஒரு கிடங்கில், அக்கிராம ஒழுங்கைகளை அமைத்தபொழுதில் பெற்றுக்கொண்ட பெருந்தொகையிலான மட்பாண்ட ஓடுகளைக் குப்பையாகப் போட்டிருந்தார்கள். இம்மட்பாண்ட ஓடுகள் இரும்புக்கால, ஆரம்ப வரலாற்றுக்கால



கந்தரோடை: கறுப்பு-சிவப்பு மட்பாண்டம்.
Image Source : P.Pushparatnam

தென்னிந்திய மட்பாண்டங்களை ஒத்திருந்தன - அவையாவன பெருங்கற்கால கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களும், அரிக்மேட்டு வகை ரௌலெற்றெட் மட்பாண்டங்களுமாகும்." (Vimala Begley, V. 1967: 24).

"அவ்விடத்தில் ஒரு சிறு குழியைத் தோண்டி ஆராய்ந்தபொழுது அக்குழி 12 அடி அழம்வரை வெவ்வேறு காலப்பகுதிகளுக்குரிய மக்களின் வதிவிடக் கழிபொருட்களைக் காட்டியது. அக்குழியின் அடிமட்டக் கன்னிநிலம் வரை அகழ முடியவில்லை. அக்குழியின் மேல் மட்டங்களிலேயே கி.பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளுக்குரிய தொல்பொருட்களைக் காணமுடிந்தது. இவைதவிர இரும்புத் தாது, 'கோறல்' கற்கள், லக்ஷ்மி பதக்கவில்லைகள் (Lakshmi plaques) என்பன அக்குழியிலிருந்து கண்டெடுக்கப்பட்டன." (Vimala Begley, V. 1967: 24).

"கந்தரோடைக் கிராமத்திற்கு அப்பாலும் சில மேலாய்வுகளை மேற்கொண்டிருந்தோம். மேற்கே கந்தரோடைக் கிராமத்திலிருந்து கடல்வரை செல்லும் கால்வாய்க்குப் பக்கத்தில் அம்மன் கோயிலுக்குச் சமீபமாகப் பல மண்குன்றுகள் காணப்பட்டன. இன்னும் சற்றுத்தள்ளி பழைய கட்டடங்களின் இடிபாடுகள் காணப்பட்டன." (Begley, V. 1967). இந்த மேலாய்வின் அறிக்கை பென்ஸில்வேனியப் பல்கலைக்கழக 1967 ஆம் ஆண்டின் கோடைகால அறிவிப்பு வெளியீடாக வெளிவந்தது.

## தொல்லியல் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட கந்தரோடை வரலாற்றியல்

1970 ஆம் ஆண்டு யூன்-ஆகஸ்ட் மாதங்களில் அமெரிக்கப் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தின் தொல்லியலாளர்கள் கந்தரோடையில் மேற்கொண்ட அகழாய்வுகளின் கண்டுபிடிப்புகளும், அக்குழுவிற்குத் தலைமை தாங்கிய விமலா பெக்லி 1967 ஆம் ஆண்டு பெப்ரவரி-மார்ச் மாதங்களில் கந்தரோடையில் மேற்கொண்ட மேலாய்வுகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினர் 1980-1981 டிசம்பர்-பெப்ரவரி மாதங்களில் கந்தரோடைக்கு அருகாமையிலுள்ள ஆனைக்கோட்டையில், பேராசிரியர் இந்திரபாலாவின் தலைமையில் மேற்கொண்ட அகழாய்வுகளின் கண்டுபிடிப்புகளுமே கந்தரோடை வரலாற்றியலின் (Historiography - வரலாற்று மெய்மை) கருப்பொருளாக அமைகின்றன. இந்த ஆனைக்கோட்டை அகழாய்வு அடுத்து வரும் இயலில் விரிவாகப் பேசப்படும்.

மேலே கூறப்பட்ட ஆய்வுகளோடு 1917-1919 ஆண்டுகளில் போல் பீரிஸ் கண்டெடுத்த தொல்பொருட்களும், 1967 ஆம் ஆண்டில் இலங்கைத் தொல்லியல் திணைக்கள ஆணையாளராகவிருந்த கொடகும்புர அவர்களது அகழாய்வின் கண்டுபிடிப்புகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. 1980களில் கலாநிதி இரகுபதியின் தொல்லியல் மேலாய்வுகளும், 1994-1995 ஆண்டுகளில் யாழப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த செல்லையா கிருஷ்ணராசா கந்தரோடையில் உச்சாப் பனை என்ற இடத்தில் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தினரின் அனுமதியோடு மேற்கொண்ட அகழாய்வுகளும், 2011 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பரமு புக்ஷ்பரட்ணம் இலங்கைத் தொல்லியல் திணைக்கள உதவி ஆணையாளராகவிருந்த நிமால் பெரேராவுடன் இணைந்து மேற்கொண்ட கந்தரோடை அகழாய்வின் கண்டுபிடிப்புகளும், 2018 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலிய சிட்னிப் பல்கலைக்கழகத் தொல்லியல் பேராசிரியர் பார்பரா ஹெல்விங் கந்தரோடையில் மேற்கொண்ட அகழாய்வின் தொல்பொருட்களும், 2018 ஆம் ஆண்டில் இலண்டன் பல்கலைக்கழகப் பேராசிரியர் டொறியன் புல்லர் மேற்கொண்ட கந்தரோடைத் தொல்தானியங்களின் கதிரியக்கக் கரிம ஆய்வுகளும் இங்கே கூறப்படுகிறது. இக்கண்டுபிடிப்புகள் அனைத்தும் கந்தரோடை வரலாற்றியலின் உருவாக்கத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

கந்தரோடையின் சமீபகால அகழாய்வுகளில் கதிரியக்கக் கரிமக் காலக்கணிப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அதன் பெறுபேறுகள் இலங்கை அரசின் தொல்லியல் திணைக்கள அதிகாரிகளால் அறிக்கைகளில் வெளியிடப்படுவதில்லை. அவர்களில் ஒரு சிலர்தான் விதிவிலக்கானவர்கள். கந்தரோடையில் முதன்முதலாக விஞ்ஞான-அறிவியல் ரீதியிலான அகழாய்வை மேற்கொண்ட அமெரிக்கப் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழகத்தின் தொல்லியலாளர்களை இலங்கைக்கு வரவழைத்ததில் கலாநிதி கொடகும்புர, கலாநிதி சத்தமங்கல கருணரத்தின இருவரினதும் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

காலப்பகுதி I: ஆதி இரும்புக்காலம் - கி.மு. 1350-600.

## வரலாற்றிற்கும் முற்பட்டகாலப் பெருங்கற் பண்பாட்டுப் பரவல்

அமெரிக்காவின் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விமலா பெக்லியின் தலைமையிலான குழுவினர் 1970 ஆம் ஆண்டில் ஜூன்-ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் கந்தரோடையில் மேற்கொண்ட அறிவியல்பூர்வமான அகழாய்வே வெளிநாட்டவர்களின் முயற்சியால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது அகழாய்வாகும். இந்த அகழ்வில் கண்ட முக்கியமான தொல்பொருட்கள் அமெரிக்காவிற்கு கதிரியக்க கரிமக் காலக்கணிப்பிற்கு (Radiocarbon C-14 Dating) அனுப்பிவைக்கப்பட்டன. விமலா பெக்லியின் விவரமான 1970 ஆம் ஆண்டின் கந்தரோடை அகழாய்வு அறிக்கை அன்றைய அரசினால் தடைசெய்யப்பட்டது. அது இன்றுவரை வெளியிடப்படவில்லை. ஆனால் விமலா பெக்லி, 1970 இல் கந்தரோடை அகழாய்வில் கண்டெடுத்த முக்கியமான சில தொல்பொருட்களைப் பற்றி அமெரிக்க கோர்ணல் பல்கலைக்கழகம் 1973 இல் வெளியிட்ட ஒரு நூலில் கூறியிருந்தார் (Begley. V. 1973).


## ஆரம்பகாலக் குடியிருப்புகள்: கி. மு. 1350

தென்னாசியாவில் 'ஹோமோ செப்பியன்ஸ்' (Homo sapiens) எனப்படும் நவீன மனிதர்களின் சமூகங்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களுள் யாழ்ப்பாணத் தீபகற்பமும் ஒன்றாகும். இப்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு

தொடர்புகளுக்கு 437.345.4203



கந்தரோடை மேலாய்வுகளின்போது கண்டெடுக்கப்பட்ட 'A' வகை மட்பாண்டங்கள்.
Image Source : Vimala Begley, 1967.

பிரதேசத்தில் இம்மனிதக் குடியிருப்புகளின் சரியான ஆரம்ப காலத்தை அறிய முடியாது போனாலும், இற்றைக்கு 3,350 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இங்கே நவீன மனிதர்களின் குடியிருப்புகள் இருந்தன என்பதை தொல்லியலாய்வுகளில் கண்டெடுத்த அம்மனிதர்களின் பாவனைப்பொருட்களின் தேதிக் கணிப்புகளைக் கொண்டு கண்டறிய முடிகிறது. இவற்றுள் ஆரம்பப் பெருங்கற்கால கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகள் உபயோகத்திலிருந்த காலப்பகுதியை இப்பிராந்தியத்தில் மக்களின் குடியேற்றங்கள் ஆரம்பித்த காலமாகக் கொள்ளலாம். இதை அறிந்து கொள்வதற்கு இம்மட்பாண்டங்களின் காலக் கணிப்பு அவசியமாகிறது.

1970 ஆம் ஆண்டு யூன்-யூலை மாதங்களில் கந்தரோடையில் அறிவியல்பூர்வமான அகழாய்வை மேற்கொண்ட அமெரிக்கப் பென்ஸில்வேனியப் பல்கலைக்கழகத் தொல்லியலாளர்கள், அங்கே கண்டெடுத்த தொல்பொருட்களை அமெரிக்காவின் கதிரியக்கக் கரிம ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பெறுபேறு பற்றி நீண்டகாலமாக இலங்கையின் தொல்லியல் திணைக்களத்தினர் எதுவிதமான அக்கறையும் காட்டவில்லை.

1977 ஆம் ஆண்டில் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் ஆணையாளராக நியமிக்கப்பட்ட பிரபல தொல்லியராளரான சிரான் தெரனியகல, 1970 ஆம் ஆண்டில் கந்தரோடை அகழ்வுகளில் பங்கு பற்றிய பென்னெற் புரொன்ஸனைத் தொடர்புகொண்டு கந்தரோடையில் கண்டெடுத்த தொல்பொருட்களின் கதிரியக்கக் கரிமக் கணிப்புத் திகதிகளைப் பெற்றுக்கொண்டார். இந்த அறிவிப்பு 08-02-1982 திகதியிட்ட இலங்கைப் பத்திரிகை 'Weekend' இலும், பின்னர் இரகுபதியின் 1987 ஆம் ஆண்டின் யாழ்ப்பாணத் தொல்லியலாய்வு நூலிலும் வெளியானது.

இத்தொல்லியல் பொருட்களில் P-2515, P-2525 என அடையாளமிட்ட கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் முறையே கி.மு. 1290±60 ஆண்டையும், கி.மு. 980±220 ஆண்டையும் தந்திருக்கின்றன. இக்காலக்கணிப்பின்படி கி.மு. 1350 ஆண்டளவில் உபயோகப்படுத்தப்பட்ட மட்பாண்டங்கள், அக்காலத்தில் இங்கே பெருங்கற்கால மக்களின் குடியேற்றங்கள் இருந்திருப்பதை உறுதிப்படுத்துகின்றன (Ragupathy, P. 1987:205, Thiagarajah, S. 2016: 42)

## இலங்கையில் பெருங்கற் பண்பாட்டின் நுழைவாயில் கந்தரோடை

கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் அவ்விடத்தில் பரவியிருந்த பெருங்கற்பண்பாட்டின் முக்கியமானதொரு அங்கமாகும். முதன்முறையாக 1970 ஆம் ஆண்டில் விமலா பெக்லியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட கந்தரோடை அகழ்வாராய்ச்சியின்போது பெருங்கற்காலப் பண்பாட்டுச் சுவடுகள் பல இங்கே கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த இடத்தில் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் பற்றியும், பெருங்கற் பண்பாட்டில் அவற்றின் சிறப்பிடம் பற்றியும் சில வரிகள் கூறுவது அவசியமாகிறது. முதன்முதலாக சிந்துவெளி நகரங்களில் கி.மு. 3000-2800 ஆண்டு காலங்களில் இனங்காணப்பட்ட இவ்வகையான மட்பாண்டங்கள் பின்னர் இந்தியத் துணைக்கண்டம் எங்கும் பரவி, பின்னர் கி.மு. 1800 ஆண்டளவில் கர்நாடகத்தில் பிரம்மகிரி, மஸ்கி ஆகிய மையங்களில் காணப்படும் பெருங்கற் புதையல்களில் காணப்படுகின்றன. தென்னாசியச் சூழமைவில் பெருங்கற் பண்பாடும், அதன் ஓர் அம்சமான கறுப்பு-சிவப்பு மட்பாண்டமும் திராவிட மக்களுக்குரிய தனித்துவமான பண்புகளாகும் (இது பற்றிப் பின்னொரு இயலில் விரிவாகப் பேசப்படும்).

பெருங்கற் பண்பாடானது முக்கியமாக இறந்த மக்களை அடக்கம் செய்யும் பெருங்கற்களைக்கொண்ட கல்லறைகளை உள்ளடக்கியது. இறந்தவர்களை அடக்கம் செய்த பின்னர் பெரிய கற்பாறைகளை கற்பலகைகளாக வெட்டியோ, அல்லாமலோ அடக்கத்தைச் சுற்றிவர நட்டு மேலாக மற்றொரு கற்பலகையால் மூடிவிடுவார்கள். இந்த அடிப்படை முறையிலிருந்து பலவகையான மாறுபாடுகள் காணப்படுகின்றன. தமிழகத்தின் தாழிப் புதையல்கள் இப்பண்பாட்டின் மற்றொரு அங்கமாகும். இம்மாதிரி பெருங்கற்களைக் கொண்ட சமாதிகளும், வழிபாட்டு நடுகற்களும் பண்டைய உலகின் பல பகுதிகளில் காணப்படுகின்றன. இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்தவரையில் தென்னிந்தியாவில் வாழ்ந்த திராவிட மொழிகளைப் பேசும் மக்களே இந்த அடக்க முறைகளைக் கடைப்பிடித்தவராவர்.

பெருங்கற் பண்பாடு என்பது மேற்கூறப்பட்ட பெருங்கற்களைக் கொண்ட கல்லறைகள் அல்லது தாழிப் புதையல்களோடு இரும்பின் தொழில்நுட்பம், குளம் மற்றும் அணைக்கட்டு ஆகியவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் நீர்ப்பாசன விவசாயம், உழுவதற்கான ஏர், நெற் பயிர்ச்செய்கை, மட்பாண்டம் வனையும் சில், கறுப்பு-சிவப்பு மட்பாண்டம், அம்மட்பாண்டங்களில் காணப்படும் எழுத்துகள் ஆகிய பண்புகளை உள்ளடக்கியதாகும்.

செக்கோசிலாவாக்கிய நாடு தந்த சமஸ்கிருத, தமிழ் மொழிகளின் மொழியியல் விற்பன்னர், பேரறிஞர் கமில் ஸ்வெலபில்லின் கூற்று இது:

"கறுப்பு-சிவப்பு மட்பாண்டம் திராவிடமொழி பேசும் மக்கள் காவிச்சென்ற பண்பாட்டு அடையாளம். அதன் அகில இந்திய பரவல், இவர்கள் ஒருகாலத்தில் இந்தியா முழுவதிலும் பரவி இருந்தார்கள் என்பதற்கான சான்று. கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களும், வேதகாலப் பண்பாட்டின், தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டங்களும் ஒன்றாகக் காணப்படும் கி.மு. 500 ஆம் ஆண்டுகாலப்பகுதி பெருவாரியான திராவிடமொழிச் சொற்கள் சமஸ்கிருத மொழியில் உட்புகுந்த காலமாகும்" (Kamil Zvelebil 1965: 65-69).



கந்தரோடை அகழ்வுகளில் கண்ட வெண்கல வேல்
Image Source : P.Pushparatnam


இலங்கையின் பெருநிலப்பரப்பில் காணப்படும் பெருங்கற் சமாதிகளினதும், தாழிப்புதையல்களினதும் அவற்றோடு காணப்படும் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களினதும் காலக் கணிப்புகள் கி.மு. 1000 ஆண்டையும், அதற்குப் பிந்திய ஆண்டுகளையுமே தருகின்றன. இவற்றை நோக்குமிடத்து இப்பெருங்கற் பண்பாடும், அதனோடு சேர்ந்த கறுப்பு-சிவப்பு மட்பாண்ட உபயோகமும் கந்தரோடை வழியாகவே இலங்கைக்குப் பரவியிருக்கின்றன என எண்ணத் தோன்றுகிறது.

## பெருங்கடல் வர்த்தக – பண்பாட்டுப் பரிமாறல்கள்

யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் மூன்று கரையோரங்களிலும்



கந்தரோடை: பலவகை மட்பாண்ட ஓடுகள்.
Image Source : P.Pushparatnam



கந்தரோடை: கண்ணுக்கு மைதீட்டும் கோலக்குச்சிகள்
Image Source : Paul E. Pieris

அமைந்திருந்த இறங்குதுறைகள், துறைமுகங்களான யாழ்ப் பாணப்பட்டினம், யம்பு கோவளம், காயாத்துறை, கல்கோவளம் (பருத்தித்துறை) என்பன பல்வேறு நாடுகளுடன் வர்த்தக - பண் பாட்டுப் பாரம்பரியங்களைப் பரிமாறிக்கொள்ளும் வாயில்களாக விளங்கின. யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் கரையோரங்களில் உள்ள இறங்குதுறைகளினதும், துறைமுகங்களினதும் பெயர் களைக் கவனிக்கும்போது இந்த உண்மை நன்கு புலப்படும்.

அன்றைய யாழ்ப்பாணத் தீபகத்திற்கு மிக அருகிலிருந்த தமி ழகத்துடனேயே ஆரம்பகாலக் கடல் தொடர்புகள் ஏற்பட்டிருந் தன. அதன் காரணமாக தமிழகத்தின் வரலாற்றுப்போக்கு யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்றுப் பண்புகளைப் பெரு மளவுக்கு இயக்கியிருக்கிறது. கி.மு. 1350 ஆம் ஆண்டளவில் கந்தரோடையில் காணப்படும் கறுப்பு-சிவப்பு மட்பாண்ட உப யோகம், ஆனைக்கோட்டையில் கண்ட தாழிப்புதையல் (பின் னர் பேசப்படும்), விவசாயத்தின் வருகை ஆகிய பெருங்கற் பண் பாட்டு அம்சங்கள், அதற்குப் பல ஆயிரத்தாண்டுகள் முன் பிருந்தே தமிழகத்திற்கும், யாழ்ப்பாணத்திற்குமிடையே ஏற்பட்டிருந்த கடல்வழித் தொடர்புகளின் பெறுபேறுகளாகும்.

கந்தரோடையின் நிரந்தரக் குடியிருப்புகள் குளத்து நீரைப் பாச்சி, ஏர் பிடித்து உழுது மேற்கொண்ட நெற்பயிர் விவசாயம் செம்பு, வெண்கலம், இரும்பு ஆகிய உலோகங்களை உபயோகித்த தொழில்நுட்பம் உருளும் சில்லை உபயோகித்து வனைந் தெடுத்த மட்பாண்டங்கள் நீண்டதூர நெடுங்கடல் வர்த்தகம் சமூக அமைப்பு எழுத்துருவாக்கம் ஆட்சிபுரியும் ஓர் அரச வர்க் கம் என்பன பெருங்கற் பண்பாட்டு வழியாகப் பெற்றுக்கொண்ட கந்தரோடை நாகரிகத்தின் பேரெழுச்சியாகும். இந்தக் கால கட்டங்களை எடுத்துரைக்கும் தொல்லியல் சான்றுகள் இனி மேல் உரைக்கப்படும்.

## கந்தரோடை உள்நாட்டு மட் பாண்டங்கள்

கந்தரோடையில் பென்ஸில்வேனியப் பல்கலைக் கழகத் தினரால் நடாத்தப்பட்ட தெல்லியலாய்வின் அடிப்படையில் இப்பிரதேசத்து மட்பாண்டங்களின் தன்மை, தொன்மை பற்றி அறியக்கூடியதாகவுள் ளது. அமெரிக்கப் பல்கலைக்கழகத் தொல்லிய லாளர்கள் கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்ட வகைகளை மூன்று பெரும் பிரிவுகளாக வகுத்து தமது ஆய்வினைச் செய்துள்ளனர் (Orton. N. 1995; கிருக்ஷ்ணராசா, செ. 1998).

இதில் முதலாவது வகையினை ‘A’ என வகுத்துள் ளனர். இவ் வகையைச் சேர்ந்த மட்பாண்டங்களின் கழுத்து வளையங்கள் (Rim) ரோமச்சிவப்பு நிறத் தினைக் (Roman Red) கொண்டிருக் கின்றன. இவ் வகையான சிவப்பு மட்பாண்டங்கள் அரிக்க மேட்டு மட்பாண்டங்களிலிருந்து வேறானவை. இம்மட் கலன்களை இரகுபதி ‘ஆரம்ப கால சிவப்பு மட் கலன்கள்: கி.மு. 1200 - கி.மு. 300’ என வகைப்படுத்தியிருக்கிறார் (Ragupathy, P. 1987: 9).

இரண்டாவது ‘B’ வகையான மட்பாண்டங்களை கறுப்பு-சிவப்பு வண்ண மட்பாண்டங்கள் என வகுத் துள்ளனர். இவை பெரு மளவுக்கு தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களுக் குரிய மட்பாண்ட வகைகள் எனவும் கொள்ளப்பட்டுள் ளன. இவ்வகையான மட்பாண்டங்கள் தென் னிந்தியாவில் அரிக்கமேட்டில் கண்டுபிடிக்கப் பட்ட மட்பாண்டங்களை ஒத்துக் காணப்படுகின்றன எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இவ்வகை யான மட்பாண்டங்களின் பரவலான உபயோகம் தென்னிந்தியாவில் இரும்பின் உபயோகத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது (Orton, N. 1995; கிருக்ஷ்ணராசா, செ. 1998: 39).

மூன்றாவது ‘C’ வகையைச் சேர்ந்த மட்பாண் டங்களே அதிகளவில் கிடைத்துள்ளன. இவற் றினைச் சமையல் மற்றும் அன்றாட உபயோகங் களுக்காக மக்கள் கொண்டிருந்தமையால் இவை தடிப்பாகவும், தடிப்பான விளிம்புகளை உடையன வாகவும், பெரிய உருவத்தைக் கொண்டனவாகவும் உருவாக் கப்பட்டன. ‘சாடி’ வகையான மட்பாண்டங்களும் இவற்றில் அடங்கும். சில மட்பாண்டங்களில் ‘கிராபிற்றி’ கீறல் குறியீடுகள் காணப்பட்டன (Orton 1995; கிருக்ஷ்ணராசா 1998).

இந்த மட்பாண்டங்களின் வடிவமைப்புகளும், அவற்றில் காணப்பட்ட கீறல் குறியீடுகளும் (Graffiti marks) இலங்கையின் மற்றைய தொல்லியல் மையங்களான அநுராதபுரம், பொம் பரிப்பு, திவுல்வேவா, மகேவித்த ஆகிய இடங்களில் கண்டெடுக் கப்பட்ட பெருங்கற்பண்பாட்டு மட்பாண்டங்களை ஒத்திருந் தன (Sitampalam, S.K. 1993: 12). இவற்றுள் காணப்பட்ட கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களைப் பற்றி கருத்துக்கூறிய விமலா பெக்லி இந்த கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் தென் னிந்திய இரும்புக் கால மட் கலன்களை ஒத்திருப்ப தாகவும், “கந்தரோடையில் குடியேற்றம் பெற்ற மக்கள் தென்னிந்திய மக்களின் கலாசார சமுதாயச் சூழலின் வழித்தோன்றல்களாகவோ, அல்லது அவர்களோடு நெருங்கிய கலாசாரத் தொடர்பு கொண்டவர்க ளாகவோ இருந்திருக்க வேண்டும்” எனக் கூறியுள்ளார் (The people of Kantarodai have either descended from the same cultural milieu as the South Indians or have had very close cultural contacts with them) (Begley, V. 1973).

கந்தரோடையில் மிகப் பழமையான உள்ளூர், மற் றும் வெளியூர் மட்பாண் டங்கள் காணப்படுகின்றன. அவ்விடத்தில் பெருங் கற் கால முறிவளைவு கொண்ட கறுப்பு-சிவப்பு மட்பாண் டங்கள் (கி.மு. 1500 - கி.மு. 300), மற்றவகை கறுப்பு-சிவப்பு மட்பாண் டங்கள் (கி.மு. 700 - கி.பி. 300), ஆரம்பகால சிவப்பு மட் கலன்கள் (கி.மு. 1200 - கி.மு. 300) என்பனவற் றோடு கி.மு. 500 ஆம் ஆண்டிற்குரிய பளிங்கு மெருகூட்டப் பெற்ற கிரேக்க ‘ரெளலெற்றெட்’ கலனொன்றும் காணப்பட்டது (Ragupathy, P. 1987: 58).



எகிப்திய கோலக்குச்சி
கி.மு. 1575-1194.
Image Source : Science Museum, London

இந்த ஆதி இரும்புக்கால அகழாய்வு மட்டத்தில் இரும்பு ஆணிகள், இரும்புக் கருவிகள், மற்றும் செம்பு, வெண்கலக் கரு விகளும் காணப்படுகின்றன. வெண்கலப் பொருட்களில் திரி சூலம், இலை போன்ற வடிவில் அமைந்த வேல் என்பன குறிப் பிடத்தக்கவை. திரிசூலம், வேல் என்பன தென்னிந்தியப் பெருங் கற் புதையல்களிலும் காணப்படுகின்றன. இவை சைவ மதத் தின் முன்னோடியான பெருங்கற்காலச் சமய வழிபாட்டிற்குரிய பொருட்களாகும். (Sitampalam, S.K. 1993: 11-12).

இங்கே வெண்கலத்தினாலும் செம்பினாலும் செய்யப்பட்ட,



கந்தரோடையில் கண்டெடுத்த மற்றொரு லக்ஷ்மி பட்டயம். வலது கரத்தில் தண்டமும், மறுபக்கத்தில் தண்டத்தின் மேல் சுவாஸ்திக்காசின்னமும் காணப்படும் இப் பட்டயம் ஸ்ரீசுக்தா விபரிக்கும் கஜலக்ஸ்மியை ஒத்திருக்கிறது. இப்படியான பட்டயங்களை மக்கள் தங்கள் வீடுகளில் செல்வம் தரும் என்ற நம்பிக்கையில் வைத்திருந்தார்கள்.
Image Source : சிவசாமி, 1974:29

முனைகள் சற்றுத் தடித்த உருண்டையான குச்சிகள் பல நீளங் களில் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் நீளமானவை, 4-5 அங் குல நீளம் கொண்டவை. இம் மாதிரியான குச்சிகள் அலெக் ஸாந்தர் காலத்தில் ரக்ஸிலாவில் (தக்க்ஷசீலம்) உபயோகத்தில் இருந்தன என பீரிஸ் குறிப்பிடுகிறார் (Pieris, P.E. 1919: 61). இவற்றைப் பரிசீலனை செய்த சிற்றம்பலம் இவை பெண்கள், தங்கள் கண்களுக்கு மை தீட்டுவதற்காக உபயோகித்த ‘கோலக்குச்சிகள்’ (Kohl sticks) என அடையாளம் காண்கிறார். இப்படியான ஒரு செப்புக் குச்சியில், நெல்லின் அடையாளம் பதிந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார் (Sitrampalam, S.K. 1993: 11-12). இப்படியான கோலக்குச்சிகள் பண்டைய எகிப்தியப் பெண்களிடையே கி.மு. 1500 ஆம் ஆண்டுகளில் பாவனை யில் இருந்திருக்கிறது.

அகழ்வாராய்ச்சியாளர் போல் பீரிஸ் தனது கந்தரோடை அகழ் வாராய்சிக்காக ரூபா 150 மட்டுமே தரப்பட்டதாகவும், அப்பணம் முடிந்ததும் தனது அகழ்வுகளை நிறுத்திவிட்டதாகவும் கூறியிருக்கிறார் (Pieris, P.E. 1919: 40). அகழ்வு செய்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வெண்கலத்தினால் செய்யப்பட்ட ஆறு அங் குல உயரமான ஒரு பெண் தெய்வத்தின் உருவம், அதன் வலது கரம் ‘அபயஹஸ்த’ முத்திரையையும் (காத்தல் அடை யாளம்), இடது கரம் ‘வரதஹஸ்த’ முத்திரையையும் (செல்வம் அளிக்கும் அடையாளம்) காட்டி நின்றது எனக் குறிப்பிட்டிருக் கிறார் (Pieris, P.E. 1919: 60). இத்தெய்வம் லக்க்ஷ்மி என அடையாளம் காணப்படுகிறது. இப்படியான செப்பு, அல்லது வெண்கலப் பட்டயங்களை அக்கால மக்கள் தங்கள் வீடுகளில் வைத்து வணங்கி வந்தார்கள்.

அகழ்வுகளில் பலவகையான இரும்புத் துண்டுகளும், இரும்பை உருக்கி வேலை செய்ததற்கான அடையாளங்களும் காணப்பட்டன. இவற்றில் மிகப்பழமையானது எது, பழமையில் லாதது எது என அடையாளம் காண முடியவில்லை. மேலும், அங்கே காணப்பட்ட சிவப்பு நிறமான இந்தியத் தங்கத்துண் டுகள் தங்க ஆபரணங்களின் உடைந்த துண்டுகள் என இனங்காணப்பட்டன (Pieris, P.E 1919: 62).

கந்தரோடையின் பெருங்கற்பண்பாட்டுக்காலம் கால்நடைகள், பசு, நாய் ஆகிய பிராணிகளை வீட்டுச்சூழலில் பழக்கியெடுத்து, அவற்றை அச்சூழலில் பற்றுக்கொள்ள வைத்த காலப்பகுதியு மாகும். அகழ்வுகளில் காணப்பட்ட பெருவாரியான கால்நடை எலும்புகள், எருதுகள் விவசாய நடவடிக்கைகளுக்காக உப யோகிக்கப்பட்டதை எடுத்துக்காட்டுகின்றன. நாய்களின் எலும் புகள், அவை பழக்கப்பட்ட வீட்டு மிருகங்களாக வளர்க்கப் பட்டதைக் காட்டுகின்றன. பறவைகளின் எலும்புகள், மீன் முள்ளுகள் அவை உணவாக உட்கொள்ளப்பட்டதைக் காட்டி நிற்கின்றன. ஆட்டெலும்புகளில் காணப்படும் கூர்மையான வெட்டுகள், அவை உணவாக உட்கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் ஆகும். அருகிலுள்ள ஆனைக்கோட்டைக் கிராமத் தில் காணப்பட்ட பெருங்கற் பண்பாட்டுப் புதையல்கள், பெருவாரியான கறுப்பு-சிவப்பு மட்பாண்ட ஓடுகளின் இருப்பு, இரும்பின் பாவனை, வயல்கள், குளங்கள், விவசாய நட வடிக்கைகள் என்பன அனைத்தும் ஒரு பெருங்கற் பண்பாட்டின் புராதன நடைமுறைகளை எடுத்துக்காட்டுகின்றன (சிற்றம் பலம், சி.க. 1993: 10-13).

- நன்றி: எழுநா - சிவ தியாகராஜா

# குருந்தூர் மலை சைவ எச்சங்களும் சிதைவுகளும் வரலாற்று ரீதியாக 2,300 ஆண்டு காலம் பழமை வாய்ந்தது!

02.06.2025

குருந்தூர் மலை சைவ எச்சங்களும், சிதைவுகளும் வரலாற்று ரீதியாக 2,300 ஆண்டுகாலம் பழமை வாய்ந்தது. அங்குள்ள தமிழ் வரிவடிவ எழுத்துக்கள் கி.மு. 3 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது. அதே போல இங்கு கண்டுபிடிக்கப்பட்ட சிவலிங்கத்தை ஒத்த உருவம் பல்லவர் காலத்திற்கும் முற்பட்ட நாகர் கால லிங்க வடிவம் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.




ஆங்கிலேய ஆய்வாளர்களும் குருந்தூர் மலையில் ஆவடையார் (லிங்கத்தின் அடிப்பாகம்), அதனருகில் கை கூப்பிய சிலை, உடைந்த நந்தி சிலை, செங்கல்லாலான பழங்கால கிணறு உட்பட்ட சான்றுகள் இருந்ததாக பதிவு செய்திருக்கின்றார்கள்.

இது மாத்திரமின்றி, கலிங்க மாகோன் என்ற மன்னன் ஆட்சி செய்த காலத்தில் குருந்தூர் மலை படைத்தளமாக இருந்ததாக சூளவம்சம் சொல்லுகின்றது. அதனடிப்படையில், வீர சைவத்தை வழிபட்ட கலிங்க மாகோன் காலத்தில் சிவன் கோவில் இருந்திருக்க வேண்டும்.




அதாவது, தமிழர்கள் அந்த மலையில் சிவன் மற்றும் ஐயனார் ஆலயங்களை வைத்து பாரம்பரியமாக பல நூறு ஆண்டுகளாக வழிபாடுகளை மேற்கொண்டு வந்துள்ளார்கள் என்பதற்கு வரலாற்று ஆதாரங்கள் உண்டு. இந்த வரலாற்று உண்மைகளை புரிந்து கொள்ளாமல், குருந்தூர் மலையில் 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பௌத்த ஆலயம் இருந்ததாக நாங்களே சொல்ல முயற்சிப்பது ஆபாயகரமானது.

இங்கே 13 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலமொன்றில் இப்பகுதியில் பௌத்த வழிபாடு நடந்த சில ஆதாரங்கள் இருக்கின்றது என்பது உண்மையானது. ஆனால் அவை தமிழ் பௌத்தர்களுடையது. இந்த வழிபாட்டிற்கும் சிங்கள பெரும் தேசிய இனத்திற்கும் எந்த தொடர்புமில்லை.




பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்துகின்ற பாளி இலக்கியங்கள் கூட, வடக்கில் தமிழர்கள் பௌத்தர்களாக இருந்தமைக்கும் பௌத்த மதத்துக்குத் தொண்டாற்றியமை பற்றியும் பேசியிருக்கின்றன. இந்த உண்மைகளை ஏற்க தொல்லியல் திணைக்களமும் பௌத்த பிக்குகளும் தயாரில்லை.




குருந்தனூர் மலை சிங்கள பௌத்த பாரம்பரியத்தின் அடையாளமாக நிறுவி 'குருந்தி இதிகாசம்' இங்கு வைத்து சிங்கள மொழியில் எழுதப்பட்டு இருப்பதாக சொல்லுகின்றார்கள். சிங்கள மொழி கி.பி. 6ம், 7ம் நூற்றாண்டுகளில் தான் வழங்குமொழியாக உருவாகியது. 13 ஆம் நூற்றாண்டில் தான் முதலாவது சிங்கள இலக்கண நூல் எழுதப்பட்டு இருக்கின்றது.

இந்த நிலையில், கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலமொன்றில் 'குருந்தி இதிகாசம்' சிங்கள மொழியில் குருந்தூர் மலையில் வைத்து எழுதப்பட்ட கதையை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? இந்த புனைகதை புரளிகளின் தொடர்ச்சியாக, குரநதூர் மலையில் பௌத்த விகாரை என்கின்ற பேரில் 229 ஏக்கர் நிலத்தை அபகரித்திருக்கின்றார்கள்.




இந்த ஆக்கிரமிப்புகளுக்கு வெளியே, வழக்கம்போல் விவசாயம் செய்ய முயற்சிக்கும் தமிழ் விவசாயிகளையும் சிறையில் அடைகின்றார்கள்.

பொலநறுவையில் 12 க்கும் அதிகமான சைவ ஆலயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவற்றில் எதனையும் பழைய நிலைக்கு மறுசீரமைத்து வழிபாட்டுக்குரியதாக மாற்றவில்லை. தொல்லியல் திணைக்கள வழமையின்படி, புராதன ஆதாரங்கள் காணப்படும் போது, அவற்றை தேசிய மரபுரிமையாகக் கருதி, மரபுரிமைச் சின்னமாகப் பிரகடனம் செய்வது அல்லது இருக்கின்ற நிலையிலேயே பாதுகாப்பதே நடைமுறையாக இருக்கின்றது.

ஆனால் நடைமுறைகளுக்கு மாறாக தமிழ் பிரதேசமான குருந்தூரில், புராதன ஐயனார் ஆலயத்தை பிடுங்கி எறிந்து, பௌத்த ஆலயத்தை கட்டி, ஒரு கோபுரம் அமைத்து, ஒரு முழுமையான பௌத்த ஆலயமாக மாற்றி, சிங்கள பௌத்த நிலமாக உரிமை கோருகின்றார்கள். ஆனால் குருந்தூர் மலை இது தமிழரின் ஆன்மிக மரபுகளும், கலாச்சாரப் புகழும், வரலாற்று நற்சான்றுகளும் அடியெடுத்து நடந்த நிலம்.

2300 ஆண்டுகளுக்கும் மேலான சைவ வரலாற்று தடங்கள், தமிழ் எழுத்து வடிவங்களும், நாகர் கால சிவலிங்க வடிவங்களும், பல்லவர்களுக்கு முந்தைய ஆவணங்களும், ஆங்கி லேய ஆய்வாளர்களால் பதிவு செய்யப்பட்ட திருக்கோயில் சிதைவுகளும் அனைத்தும் ஒன்றாகச் சொல்லும் ஒரே உண்மை:

இந்த மலை தமிழ் மக்களின் பூர்வீக தாயகம்.

இவ்வளவு தெளிவான வரலாற்று ஆதாரங்கள் இருந்தும், இந்த நிலத்தை புனைகதைகளால் புதைத்துவிட்டு, தமிழர் வழி பாட்டை அழிக்க முயல்வது, ஒரு சமூகத்தின் அடையாளங்களை மடியிலிருந்து பறிப்பதற்குச் சமம்.

ஆகவே குருந்தூர் மலை பௌத்த விகாரை 2,000 ஆண்டு கால பழமையானது என்கிற ஆதாரமற்ற பொய்களை காவுவதை தவிர்ப்போம்

- நன்றி: இனமொன்றின் குரல் முகநூல்

# உலகையே உலுக்கிய செம்மணி படுகொலை: மீளத் தோண்டப்படும் தமிழர்களின் புதைகுழிகள்!

நவீனன்

09.06.2025

மூன்றிற்கு மேற்பட்ட மனித உடல்கள் ஒரு இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் அந்த இடத்தை “மனிதப்புதைகுழி” என பிரகடனப் படுத்த முடியும் என சர்வதேச சட்டம் பொருள்பட கூறுகின்றது. ஆயினும் சிங்கள ஆட்சியில் மூடி மறைக்கப்பட்ட பல மனிதப் புதைகுழிகள் வெளி உலகிற்கு ஒருபோதும் தெரியவரவில்லை.

## உலகையே உலுக்கிய செம்மணி :

1996 செப். ஏழாம் திகதி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டதால் உயிரிழந்தார். கிருசாந்தியைத் தேடி இராணுவ முகாமிற்குச் சென்ற தாயாரான திருமதி இராசம்மா, சகோதரர் பிரணவன், அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரும் இராணுவத்தினராற் படுகொலை செய்து புதைக்கப்பட்டனர்.

செம்மணியில் சிறீலங்கா இராணுவத்தினரால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பாக நீதிமன்றில் அவர்களது உறவினர்களால் வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு, வழக்கின் தீர்ப்பின்படி குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்ட ஐந்து இராணுவத்தினருக்கும் ஒரு காவற்றுறையினருக்கும் கண் துடைப்புக்காக அரசால் தண்டனை வழங்கப்பட்டது. இன்னமும் பல கொலையானவர்களின் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதால் தற்போது மீளவும் செம்மணி புதைகுழி தோண்டப்படுகிறது.






## புதைகுழியும் இனப்படுகொலையும்:

02.05.2025 அன்று செம்மணியில் மேற்கொண்ட அகழ்வின் போது பல மனித மண்டை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டன ஆகவே சட்டப்படி செம்மணியை மனித புதைகுழியாக பிரகடனப்படுத்த முடியும்.

இந்த செம்மணியில் புதைக்கப்பட்டவர்கள் அனைவரும் தமிழர்கள். அவர்களை கொலை செய்து புதைத்தவர்கள் அரச படையினர். இந்த மகாபாதக செயலை செய்தவர்கள் எப்படி இலங்கையில் சுதந்திரமாக நடமாட முடியும்? இந்த கொலைகாரரை கண்டுபிடித்து அதிகபட்ச தண்டனை வழங்க முடியவில்லை என்பது சிறீலங்கா அரசின் இனவாத போக்கை வெளிக்காட்டுகிறது.

செம்மணி, வீரமுனை, கொக்கட்டிச்சோலை, முள்ளிவாய்க்கால் என தமிழர்களை கொன்று குவித்த வரலாறு இன்னும் பல உண்டு.

இலங்கை அரச படைகளால் தமிழர்கள் கொன்று புதைத்தது அவமானகாரமான, அசிங்கமான, அக்கிரமான, கொடூரமான வரலாறு உலகின் பார்வைக்கு இன்னமும் வெளிப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிகாரமும் அவமானமும்:

ஜெ. ஆர் . ஜெயவர்த்தன காலம் தொடங்கி, பிரேமதாசா போன்றவர்கள் அறுபது ஆயிரத்திற்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்களை கொலை செய்துவிட்டு நிறைவேற்று அதிகாரத்திற்குள் ஓடி ஒழித்துக் கொண்டனர்.

பின்னர் சந்திரிக்கா குமாரதுங்கா யாழ்ப்பாணத்தில் அப்பாவி தமிழ் மக்கள் பலரை கொலை செய்து செம்மணியில் புதைத்து விட்டு அவரும் நிறைவேற்று அதிகார போர்வைக்குள் புகுந்து ஒழித்துக்கொண்டார்.

இறுதியில் ராஜபக்சாக்கள் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என்று பாகுபாடு இன்றி முள்ளிவாய்க்காலில் வைத்து கொன்று குவித்து விட்டு நிறைவேற்று அதிகாரத்தையும், தேசிய வீரர்கள் எனவும் தேசிய வெற்றி எனவும் மூன்று அடுக்கு பாதுகாப்பிற்குள் பதுங்கி கொண்டனர் என்பது சிறிலங்காவின் அவமானகரமான வரலாறாகும்.

## சமாதானத்துக்கான போர் :

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா 1994இல் புதிதாக ஆட்சியினைப் பொறுப்பேற்ற பின், அவர் தலைமையிலான அரசாங்கம் மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்காக காணாமற்போனவர்கள் புதைக்கப்பட்ட சூரியகந்த புதைகுழிகள் போன்ற பல புதைகுழிகளை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தியதோடு குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தியதாக காட்டிக்கொண்டது.

ஆயினும் “சமாதானத்திற்கான போர்” என்னும் பெயரில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் 1994ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பத்தொன்பதாம் திகதி புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்ததை தொடர்ந்து போர் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டன. 1995 இன் இறுதிகளில் யாழ் நகரையும், 1996 இன் நடுப்பகுதிகளில் யாழ் குடாநாடு முழுவதனையும் இராணுவத்தினர் கைப்பற்றினர்.

“சமாதானத்துக்கான போர்” மூலம் இராணுவத்தினர் யாழ் குடாநாட்டை 1996இல் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த பின்னர் யாழ் நகரத்திலிருந்த இராணுவத்தினருக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் ஜானகப் பேரேரா இருந்தபோது குடாநாட்டில் கைதாவோர், காணாமற்போவோர் பட்டியல் நாள்தோறும் அதிகரித்துச் சென்றதுடன், பெண்கள் மீதான துன்புறுத்தல்களும் மக்கள் உயிரிழப்புகளும் அதிகரித்தன.



சங்கத்தமிழ்

Eelamurasu Weekly 24 — 30 ஜூன் 1999 ஈழமுரசு 7

# கப்டன் லலித், கப்டன் விஜயசிறீவர்த்தன, துடுகல்ல, உதயகுமார, கான்ஸ்டபிள் நசார் ஆகியோர் அரியாலையில் கைதானோரை கொலை செய்தனர்.

## – ராஜபக்சவின் நீதிமன்ற வாக்குமூலம்

1996ம் ஆண்டு முதல் நான் அரியாலை படைமுகாமில் கப்டன் லலித் கேவாவின் கீழ் பணியாற்றினேன். அரியாலைப் பகுதியிலிலுள்ள விபரங்களைச் சேகரிப்பது தான் எனது பணி. அக் காலப்பகுதியில் அரியாலைப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்படும். பிடிக்கப்படும் பொது மக்கள் நெடுங்குளம் பகுதிக்குக் கொண்டு வரப்பட்டு முகமூடிகள் முன்னால் நிறுத்தப்பட்டு விசாரணை செய்யப்படுவது வழக்கம்.

ஒருநாள் ஐம்பது பேரை முகமூடி போட்ட தலையாட்டிகள் அடையாளம் காட்டினார்கள். அவர்கள் ஐம்பது பேரையும் வீடியோவில் நாம் படமெடுத்தோம். அதனை நாம் ஏற்கனவே வைத்துள்ள குடியிருப்பாளர் அட்டவணையுடன் ஒப்பிட்டுப் பார்த்தோம். அதன் பின்னர் என்னிடம், ஆகியோர் வீடுகளுக்குச் சென்று மக்களுடன் நட்புறவு மாதிரிப் பழகி படங்களில் தெரியும் சந்தேக நபர்களை கைது செய்யும்படி புலனாய்வுப் பிரிவு லெப். லலித் கேவாகே துடுகல்ல பணித்தனர். நாமும் அப்படியே செய்தோம்.

அரியாலை தபாற்கட்டைச் சந்தியில் ஏழாம் கட்டை முகாமுள்ளது. மற்றையது 'சீ' பிரிவு முகாம். 'சீ' முகாமிற்கு கப்டன் ஜெயவர்த்தனாவே பொறுப்பு. அம்முகாமிலும் சிலர் கைதாகி தடுத்து வைக்கப்பட்டனர். அரியாலை துண்டிப் பகுதியில் சிவில் நிர்வாகக் கடமையில் நான் இருந்ததால் அப்பகுதி முழுவதும் எனக்குத் தெரியும். எனக்குத் தமிழ் தெரியாதாதலால் குணரட்ணம் என்பவரே மொழி பெயர்த்து உதவுவார். அவரது வீட்டிற்கும் நான் அடிக்கடி சென்றுள்ளேன். கைது செய்யப்படுவோர்களை விசாரணை நடத்த 'சீ' பிரிவு முகாமிற்கும், செம்மணி முகாமிற்கும், தபாற் கட்டை முகாமிற்கும் மாறிமாறிப் போய் வருவேன். இவ்வாறு நான் சென்று வருவதால் கைது செய்யப்பட்டு அம் முகாம்களில் இருப்போரை நான் காணக்கூடியதாக இருந்தது. கிருஷாந்தியைக் கொலை செய்தது யாரென்று எனக்குத் தெரியாது அவர்கள் கொண்டு வரும் சடலங்களைப்



புதைப்பது தான் எனது வேலை. கிருஷாந்தி கொலை தொடர்பாக மேலதிகாரிகள் கைதுசெய்யப்படவுமில்லை. அவர்களுக்கெதிரான வழக்குமில்லை. ஆனால் எனக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இறுதியாக கொலை செய்தது நான் தான் எனக் கூறப்பட்டு மற்றவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளார்கள். நான் தான் முதன் முதலாக வாக்குமூலம் அளித்தேன். சடலங்களை புதைத்த பத்து இடங்களை என்னால் சரியாக இடங்காட்ட முடியும். ஐந்து இடங்களை ஏ.எஸ். பெரேராவால் காட்ட முடியும். ஏனைய இடங்களை ஜெயதிலகாவால் காட்ட முடியும். நீதிமன்றம் அவர்களையும் அழைக்க வேண்டும்.


அரியாலையில் கல்வித் திணைக்கள ஊழியர் செல்வரட்ணம் என்பவரை நாம் கைது செய்து 'சீ' பிரிவு முகாமிற்குக் கொண்டு சென்றோம். மறுநாள் அவரின் மனைவி முகாமிற்கு வந்து தனது கணவனின் கைது பற்றி கேட்டார். அவ்வேளை செல்வரட்ணம் கைகால் கட்டப்பட்ட நிலையில் இருந்தார். அவர் தனக்கும் புலிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை எனவும், தன்னை விடுவிக்கும் படியும் என்னிடம் மன்றாடினார். அவரை எனக்குத் தெரியும் என நான் கூறி, கப். லலித் கேவாவையும் கப். விஜெய சிறீவர்த்தனாவையும் அவரை விடுவிக்கும்படி கோரினேன். அவர்களும் விடுவிப்பதாகக் கூறினார்கள். ஆனால் மறுநாள் அங்குள்ள அறையொன்றில் பத்துச் சடலங்கள் கிடந்தன. கப்டன் லலித்தும் லெப். துடுகல்லையும் தான் செல்வரட்ணத்தை கைது செய்து முகாமில் வைத்திருந்தனர். எனவே அவர்களது கொலைக்கும் அவர்கள்தான் பொறுப்பு. 'சீ' பிரிவு முகாமிற்கென சித்திரவதை முகாம் ஒன்றும் உண்டு. இதேபோல அரியாலையில் யோகேஸ்வரன் என்பவரும் கைதுசெய்யப்பட்டு 'சீ' பிரிவு முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டார். உறவினர்கள் கெஞ்சி மன்றாடியும் அவரை விடுதலை செய்ய அதிகாரிகள் மறுத்துவிட்டனர். அவரை சித்திரவதை செய்வதற்காக செம்மணியிலுள்ள கோவிலுக்கருகிலுள்ள சித்திரவதை முகாமிற்கு பகல் பத்து மணியளவில் கொண்டு சென்றனர். அவ்வேளை அவரை விடுதலை செய்யுமாறு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தது. அந்த உத்தரவுடன் நான் அங்கு சென்றேன். ஆனால் அங்கு நான் சென்று பார்த்தபோது அதிகாரிகளான உதயகுமார விஜய சிறீவர்த்தன, துடுகல்ல ஆகியோர் யோகேஸ்வரனைத் தலைகீழாகக் கட்டிவிட்டு பிளேட்டினால் அவரை வெட்டிக் கொண்டிருந்தனர். மற்றொரு அறையில் வேறு ஒருவர் பொல்லொன்றால் அடித்து கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். பின்னர் அவ்வீட்டின் முன் புறமாக அவர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டன. மேலிடத்திலிருந்து யோகேஸ்வரனை விடுவிக்க வந்த உத்தரவை சொல்வதற்காகவே நான் அங்கு போனேன்.

அரியாலையில் சுதாகரன், பார்த்தீபன் ஆகிய இருவர் வியாபாரம் செய்வதற்காக பாஸ் அனுமதி கோரி என்னிடம் வந்தனர். நான் அதை லலித் கேவாவிடம் கூறினேன். அவர்கள் இருவரையும் கூட்டிவரும் படி அவர் சொன்னார். அதன்படி நான் இருவரையும் தபாற்கட்டை முகாமிற்குக் கூட்டிச் சென்றுவிட்டேன். ஆனால் அந்த இருவரையும் துடுகல்லவும், விஜய வர்த்தனாவும் கட்டித் தூக்கி கொலைசெய்து விட்டனர். அப்போது அங்கு அப்துல்ஹமீட் நசார், அமரசிங்க ஆகிய பொலீஸ்காரரும் இருந்தனர். அவர்களுக்கு நன்கு தமிழ் தெரியும். இவர்கள் மொழிபெயர்ப்பாளர்களாக இருப்பார்கள். ஒருநாள் அவர்கள் நெடுங்குள்ம் வீதியிலுள்ள வீடு ஒன்றை சோதனையிட உதவும்படி தொலைவானொலி மூலம் எனக்கு செய்தி தந்தனர். ஏ.எஸ்.பெரேரா என்ற சிப்பாயுடன் நான் அந்த வீட்டிற்குச் சென்றேன். அந்த வீட்டில் ஒரு ஆண தனது பிள்ளையுடன் இருந்தார். அவரின் மனைவி பக்கத்து வீட்டிற்கு அவ்வேளை சென்றிருந்தார் இவ்விருவரையும் நாம் கூட்டிவர அவர்களை செம்மணி உப்பளத்திற்கு அழைத்துச் சென்றனர். என்னை மண் வெட்டி ஒன்றினை எடுத்து வரும்படி சொன்னார்கள். நான் அங்கிருந்து சென்றேன். திரும்பி வந்தபோது அங்கே அப்பெண் உடைகள் ஏதுமின்றி நிர்வாணமாகக் காணப்பட்டார். அப்பெண்ணுக்கு மிக அருகில் கப்.லலித் நின்றார். சற்றுத் தள்ளி அந்தப் பெண்ணின் கணவரும் மற்ற இருவரும் நின்றனர். நானும் பெரேராவும் மண்வெட்டியைக் கொண்டு சென்றோம். அம் மண் வெட்டியை வாங்கிய கப்.லலித்கேவாவும் அப்துல்ஹமீட் நசாரும் அவ் இருவரையும் (கணவரையும், மனைவியையும்) அதனால் அடித்துக் கொன்றனர். அவ்விரு சடலங்களையும் செம்மணியில் புதைத்தனர். அவ் விடத்தை என்னால் காட்ட முடியும்.

எனக்கு ஏற்பட்ட அநீதியை எடுத்துச் சொல்லவே நான் இவ்வாறு கூறுகிறேன். இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் பெயர்ப் பட்டியலை எனது சாட்சியத்தில் கூறியுள்ளேன். இலங்கை நீதிமன்றங்களில் எனக்கு நீதி கிடைக்காவிட்டால், சர்வதேச நீதிமன்றத்திலாவது எனக்கு நீதி கிடைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

6 ஈழமுரசு 16 — 22 செப்டெம்பர் 1999 Eelamurasu Weekly

# செம்மணிப் புதைகுழிகள்



## நொருக்கப்பட்ட நிலையில் வெளிவரும் தமிழரின் எலும்புக்கூடுகள்

2 ஈழமுரசு 24 — 30 ஜூன் 1999 Eelamurasu Weekly

# சிலரை அடித்து கொன்றார்கள் சீவினார்கள் – சிலரை மொத்தக்


## செம்மணி புதைகுழி விசாரணையில் சிப்பாய் தரும் அதிர்ச்சி வாக்குமூலம்

### செம்மணியில் எலும்புக் கூடுகள் மீட்பு





#### அரியாலை முகாமில் நடந்தகோரம்







#### கோப்ரல் ராஜபக்சவின் சாட்சியம்



1996ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பின்னர் யாழ்குடா முழுவதையும் தமது கட்டுப் பாட்டிற்குள் இராணுவத்தினர் கொண்டுவந் தனர். இதன் பின் நடந்த கொடூர நிகழ் வுகளால் யாழ் குடாநாடே அதிர்ச்சியில் உறைந்தது.



## ராஜபக்சவின் சாட்சியம்:

1996 நடுப்பகுதிக்குப் பின்னான ஆறு மாதக் காலப்பகுதியில் காணாமற்போனோர் பட்டியல் எழுநூறிற்கு மேல் அதிகரித்தது. செம் மணி படுகொலை தொடர்பான சாட்சியங்கள் பல பதி வாகின.

செம்மணியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு உயிரிழந்தது தொடர்பாக நீதிமன்றில் அவர்களது உறவினர்களால் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு, வழக்கின் தீர்ப் பின்படி குற்றவாளிகளாக அடையாளங் காணப்பட்ட ஐந்து இராணுவத்தினருக்கும் ஒரு காவற்றுறையினருக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

தீர்ப்பு வழங்கப்பட்டவர்களிலில் “லான்ஸ் கோப்ரல் சோம ரட்ணா ராஜபக்ச” விசா ரணையின்போது கீழ்வருமாறு வாக்கு மூலம் அளித்தார். “யாழ்குடாநாட்டில் பரவலாக கைதுசெய்து காணாமற்போனவர்களில் பெரும்பாலானவர்கள் சித்திரவதை செய் யப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

இவர்களின் சடலங்கள் மேலதிகாரிகளின் உத்தரவின்பேரில் இரவில் எடுத்துச் செல்லப் பட்டு செம்மணியில் புதைக்கப் படுவதுண்டு. முந்நூறு, நானூறு பேரை புதைத்த புதை குழிகளை என்னால் காண்பிக்க முடியும் என்றார். இதன் பின்னர் 1999ஆம் ஆண்டில் “லான்ஸ் கோப்ரல் சோமரட்ணா ராஜபக்ச” வினால் செம்மணியில் அடையாளம் காட்டப்பட்ட இடங்களில் புதைகுழிகளைத் தோண்டும் பணி ஆரம்பிக் கப்பட்டது.
நீண்ட காலத்தின் பின்னர் மீளவும் செம்மணி புதைகுழிகள் தோண்டப்பட்டாலும் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை எவருக்கும் இல்லை. காலம் பல கடந்தும் இன்றுவரை செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர் பாக எந்தவிதமான இறுதி முடிவினையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மேற்கொள்ளவில்லை என்பதே கவலைக்குரிய விடயமாகும்.

## புதைகுழிக்கு நீதிகோரி போராட்டம் :

செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிக்கு நீதி வேண்டி கவனயீர்ப்பு போராட்டம் யாழில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோரது உறவுகளால் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை தாங்கி “செம் மணி புதை குழிக்கு நீதி வேண்டும், மறைக்காதே மறைக் காதே புதை குழிகளை மறைக்காதே, எங்கே எங்கே உறவுகள் எங்கே, இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும்” என கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டு வரு கின்றனர்.



Eelamurasu Weekly 24 – 30 ஜூன் 1999 ஈழமுரசு 3

# - சிலரின் தலையைச் குடும்பமாகவே கொன்றார்கள்

## மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன

### மகனை இழந்த தந்தை

### மேலும் புதைகுழிகள் உண்டு

### செம்மணியின் நிலவரம்

### எலும்புக்கூடுகளை செய்தியாளர்கள் பார்க்கத்தடை

### எலி எலும்பாக இருக்கலாம்



Eelamurasu Weekly 30 செப்டெம்பர் – 06 ஒக்டோபர் 1999 ஈழமுரசு 3

## வடதமிழீழச் செய்திகள்

# நான் பெயர்குறிப்பிட்ட அதிகாரிகளை விசாரியுங்கள் இன்னும் புதைகுழிகள் தெரியவரும்!

- ராஜபக்ஸ

### செம்மணிப் புதைகுழிகள் தோண்டும் பணி ஒத்திவைப்பு



கிருசாந்தி - ராசம்மா - பிரனவன்

# REWARDING YOUR EVERYDAY

MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.




**1-855-856-6875**

## Merchant Benefits

- Website Template: Modern design for improved user experience.
- Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
- Convenient Payment Options: EV gift wallet for seamle transactions.
- Comprehensive Analytics: Access full reporting and tracking online.
- Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
- Financial Security: Build income for future sale or retirement.
- One-time Registration Fee: $199 to unlock these benefits.

## Member Benefits

- Point Accumulation: Earn 4% to 60% on purchases.
- Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
- Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
- Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
- Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
- Networking Opportunities: Build your own shopping network effortlessly.
- Exclusive Privileges: Gain mining rights worth $60.




WWW.MYEVERYDAYSHOPPING.COM

## ஈரானில்

# அனு மையம் தகர்ப்பு, இராணுவத் தலைமை அழிப்பு! மத்திய கிழக்கில் கர்ஜிக்கும் சிங்கமாக இஸ்ரேல்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

13.06.2025

ஈரானியப் பகுதிக்குள் இஸ்ரேல் ஆழமான தாக்குதல்களை நடத்தியுள்ளது. மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான பதற்றத்தை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



இந்தத் தாக்குதல்களில் பல உயர் மட்ட ஈரானிய இராணுவ மற்றும் அணுசக்தி அதிகாரிகள் உயிரிழந்ததுடன், காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது. இஸ்ரேலின் வலிந்த தாக்குதல், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால மோதலில் ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளது.

அணு ஆயுதத் திட்டத்தில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படும் மூன்று மூத்த அணு விஞ்ஞானிகளான ஃபெரெய்டூன் அப்பாஸி மற்றும் மொஹமத் மெஹ்தி தெஹ்ரான்ச்சி ஆகியோரும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஈரானின் அணுசக்தி இலட்சியங்களின் மையப்பகுதியிலேயே நேரடியாகத் தாக்குதல் நடத்தப்பட்டதைக் காட்டுகிறது.



இந்தத் தாக்குதல்களுக்கு மேலாக, இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட், ஈரானிய எல்லைக்குள் தொடர்ச்சியான இரகசிய நடவடிக்கைகளை மேற்கொண்டதாக ஒரு இஸ்ரேலிய ஆதாரம் வெளிப்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கைகள் ஈரானின் மூலோபாய ஏவுகணை அமைப்புகள் மற்றும் வான் பாதுகாப்புத் திறன்களைக் குறிவைத்து, ஒரு பெரிய இராணுவ நடவடிக்கையின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஈரானின் அனுசக்தி மையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடாத்தி, ஈரானின் முக்கிய இராணுவத் தளபதிகள் கொல்லப்பட்டுள்ளனர். எவராலும் அடக்க முடியாத மத்திய கிழக்கின் கர்ஜிக்கும் சிங்கமாக இஸ்ரேல் எழுந்து நிற்கிறது**



மேற்கத்தய ஊடக தகவல்படி, தெஹ்ரானைச் சுற்றியுள்ள குறைந்தது ஆறு இராணுவத் தளங்களை இஸ்ரேல் குறிவைத்து தாக்கியுள்ளது. இதில், ஈரானின் அணுசக்தி திட்டத்தில் பங்கு வகிப்பதாக நீண்டகாலமாக சந்தேகிக்கப்படும் முக்கிய பார்ச்சின் தளமும் அடங்கும். இராணுவத் தளங்கள் மட்டுமல்லாமல், இராணுவத் தளபதிகள் தங்கியிருந்த பலத்த பாதுகாப்புடன் கூடிய இரு குடியிருப்புகள் மற்றும் பல அடுக்குமாடி கட்டிடங்களும் இலக்கு வைக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. இவை திட்டமிட்ட படுகொலை முயற்சிகளாகவே தென்படுகின்றன.

## இராணுவ தலைமை அழிப்பு:



இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் (IRGC) தளபதி மேஜர் ஜெனரல் ஹொசைன் சலாமி உயிரிழந்ததை, ஈரானிய அரசுத் தொலைக்காட்சி, உறுதிப்படுத்தியுள்ளது. இது ஈரானின் இராணுவ தலைமைக்கு ஒரு பெரும் பின்னடைவாகும். ஈரானின் ஜூன் 13ம் நாள் வெள்ளிக்கிழமை அதிகாலையில், தெஹ்ரான் அணு ஆயுதங்களை உருவாக்குவதைத் தடுக்க ஈரானிய அணுசக்தி இலக்குகளைத் தாக்கியதாக இஸ்ரேல் கூறியது. மேலும் நாட்டின் முக்கிய யுரேனியம் செறிவூட்டல் நிலையம் உட்பட வெடிப்புகள் ஏற்பட்டதாக ஈரானிய ஊடகங்களும் தெரிவித்தன.

## அணுசக்தி மையங்கள் இலக்கு:

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் ஏவுகணை மற்றும் அணுசக்தி நிலையங்களை இலக்கு வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடாத்தியுள்ள தாக்குதலை இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தத் தாக்குதல்கள் ஈரானின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு இலக்குகளை உள்ளடக்கிய முன்கூட்டியே தாக்கும், துல்லியமான, ஒருங்கிணைந்த தாக்குதல் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலிய அரசு அவசரநிலை பிரகடனம் செய்துள்ளதுடன், ஈரானுக்கு எதிராக பல சுற்றுத் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. இதேவேளை, குறித்த தாக்குதலையடுத்து, அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பாடசாலைகள் மற்றும் பணியிடங்கள் மூடப்பட வேண்டும் என்றும் கூட்டங்கள் நடத்தப்படக்கூடாது என்றும்



அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆபரேஷன் ரைசிங் லயன்:

ஈரானின் அணுசக்தித் திட்டத்தின் மீது இஸ்ரேல் தாக்குதல்களை “ஆபரேஷன் ரைசிங் லயன்”(Operation Rising Lion) திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார். ஈரான் இஸ்ரேலின் உயிர் வாழ்விற்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இஸ்ரேல் நாடு பழிவாங்கலை எதிர்பார்க்கிறது என்று கூறியுள்ளார்.

இந்த தாக்குதல் எவ்வளவு சீக்கிரம் நடந்தது என்பதைக் கண்டு வெள்ளை மாளிகை ஆச்சரியப்பட்டிருக்கலாம். ஈரானை தாக்க இஸ்ரேல் முழுமையாக தயாராக இருப்பதாகக் கூறப்பட்ட பின்னர், அமெரிக்கா தனது சில ஊழியர்களை பாக்தாத்திலிருந்து வெளியேற்றியது.

## இஸ்ரேல் தீர்க்கமான தருணத்தில்!

இஸ்ரேலின் வரலாற்றில் ஒரு தீர்க்கமான தருணத்தில் இருக்கிறோம், என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். அணு குண்டு, அதன் பாலிஸ்டிக் ஏவுகணை திட்டம் மற்றும் அதன் நடான்ஸ் யுரேனியம் செறிவூட்டல் வசதி ஆகியவற்றில் பணிபுரியும் ஈரானிய விஞ்ஞானிகளை இஸ்ரேல் குறிவைத்தது. இந்த நடவடிக்கை பல நாட்கள் தொடரும் என்றும் அவர் கூறினார்.

தெஹ்ரானில் பல வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும், நாட்டின் வான் பாதுகாப்பு அமைப்பு முழு எச்சரிக்கையுடன் இருப்பதாகவும் ஈரானின் அரசு தெரிவித்துள்ளது. இஸ்ரேல் பல டசின் கணக்கான அணு மற்றும் இராணுவ இலக்குகளைத் தாக்கியதாக இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சில நாட்களுக்குள் 15 அணு குண்டுகளை தயாரிக்க போதுமான பொருட்கள் ஈரானிடம் இருப்பதாக அந்த அதிகாரி கூறினார். ஈரானுக்கு எதிராக இஸ்ரேல் அரசு நடத்திய முன்னெச்சரிக்கை தாக்குதலைத் தொடர்ந்து, உடனடி காலக்கெடுவில் இஸ்ரேல் அரசு மற்றும் அதன் பொதுமக்கள் மீது ஏவுகணை மற்றும் ருயுஏ (ட்ரோன்) தாக்குதல் எதிர்பார்க்கப்படுகிறது என்று பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவித்தார்.

## அமெரிக்க தாக்குதலில் ஈடுபடவில்லை:

தற்காப்புக்காக இந்த நடவடிக்கை அவசியம் என்று இஸ்ரேல் நம்புவதால், ஒருதலைப்பட்சமாக இஸ்ரேல் செயல்பட்டதாக அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ கூறியுள்ளார்.

இஸ்ரேல் ஈரானுக்கு எதிராக ஒருதலைப்பட்ச நடவடிக்கை எடுத்தத்துள்ளது. ஈரானுக்கு எதிரான தாக்குதல்களில் நாங்கள் ஈடுபடவில்லை. மேலும் பிராந்தியத்தில் அமெரிக்கப் படைகளைப் பாதுகாப்பதே எங்கள் முதன்மையான முன்னுரிமை என்று ரூபியோ ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

## கச்சா எண்ணெய் விலை உயர்வு :

இஸ்ரேலிய தாக்குதல் செய்தி வெளியானதும் கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு மூன்று டாலருக்கும் அதிகமாக உயர்ந்தது.

ஈரான் மீதான இஸ்ரேலிய தாக்குதலின் பிறகு உலகளாவிய




எண்ணெய் விலைகள் உயர்ந்துள்ளன. இதனால் பல பங்குகள் சரிந்தும் வருகின்றன.

இச் செய்தி வெளியான பிறகு கச்சா எண்ணெய் மற்றும் NYMEX லைட் ஸ்வீட் 8% க்கும் அதிகமாக உயர்ந்தன.

எரிசக்தி வளம் மிக்க பிராந்தியத்தில் மோதல்கள் விநியோகத்தை சீர்குலைத்து, குறைந்த எண்ணெய் கிடைக்கும் என்று சர்வதேச வர்த்தகர்கள் கவலை கொண்டுள்ளனர்.

இதற்கிடையில், முதலீட்டாளர்கள் தங்கம் மற்றும் சுவிஸ் பிராங்க் போன்ற பாதுகாப்பான புகலிட சொத்துக்கள் என்று அழைக்கப்படுபவற்றிற்கு மாறியதால், வெள்ளிக்கிழமை ஆரம்ப ஆசிய வர்த்தகத்தில் பங்குகள் சரிந்துள்ளன.




## அமெரிக்கவை மீறும் டெல்அவிவ்:


ஏற்கனவே கடந்த புதன்கிழமை அமெரிக்க அதிகாரிகளுக்கு இஸ்ரேல் ஈரானுக்குள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த விஷயத்தை நன்கு அறிந்த அதிகாரிகள், வளைகுடாவில் உள்ள அமெரிக்கர்களை இப் பகுதியை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தியது.

மேலும் ஈராக்கில் உள்ள சில அமெரிக்க தளங்களில் ஈரான் பதிலடி கொடுக்கக்கூடும் என்று அமெரிக்கா எதிர்பார்த்ததாகவும் இந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஓமானில் தெஹ்ரானின் அதிகரித்து வரும் யுரேனியம் செறிவூட்டல் திட்டம் குறித்து அமெரிக்க மற்றும் ஈரானிய அதிகாரிகள் ஆறாவது சுற்று பேச்சுவார்த்தை நடத்த திட்டமிடப்பட்டிருந்தனர். ஆனால் இந்த தாக்குதலின் பின்னர், பேச்சுவார்த்தைகள் முடிவுக்கு வந்துள்ளன.

ஈரான் மீதான இஸ்ரேலிய தாக்குதல் நடக்கக்கூடும் என்று டிரம்ப் எச்சரிக்கையாக கூறியிருந்தார். ஆனால் அமைதியான தீர்வுக்கான தனது நம்பிக்கையை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்.

ஈரானின் அணுசக்தி நிலையங்களுக்கு எதிரான தாக்குதலுக்கு இஸ்ரேல் தயாராகி வருவதாக அமெரிக்க உளவுத்துறை முன்னரே சுட்டிக்காட்டியது. மேலும் எதிர் வரும் நாட்களில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தக்கூடும் என்று அமெரிக்க அதிகாரிகள் பெயர் குறிப்பிட விரும்பாத நிலையில் தெரிவித்தனர்.






அமெரிக்காவின் சொல்லையும் மீறி, ஏன் அமெரிக்கவுக்கு சவாலாகவே தற்போது ஈரானை தாக்கியுள்ளது. ஆயினும் ஈரானின் அணுசக்தி மையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடாத்தி, ஈரானின் முக்கிய இராணுவத் தளபதிகள் கொல்லப் பட்டுள்ளனர். எவராலும் அடக்க முடியாத மத்திய கிழக்கின் கர்ஜிக்கும் சிங்கமாக இஸ்ரேல் எழுந்து நிற்கிறது.



# தாய் மனம்




பிரதான வீதியில் ஏதொ ஒரு வாகனம் விரைந்து போவது துல்லியமாகக் கேட்டது. அதைத் தொடர்ந்து வேறும் ஏதாவது வாகனங்கள் இரைகிறதா? என செவிகளை கூர்மையாக்கி அவதானித்தான் பாக்கியம். எதுவித அசுமாத்தமும் இன்றி வீதி அமைதியாய் இருந்தது. ஏனொ இன்று தூக்கம் வராமல் மனது சுமையாய் இருந்தது.

‘குளத்தடி வளவுப் பக்கமா மயூரனும், இன்னுமொரு பொடியனும் சயிக்கிள்ளை போறாங்கள்…’

காலையில் அம்மன் கோயிலுக்கு மாலை கட்டும் மணியம் பூப்பிடுங்க வந்தபோது சொன்னதுதான் நினைவில் உழன்றது.

மயூரன் அங்கால நிற்பதாகத்தான் யாரோ சொன்னார்கள். ஆனால் மணியம் அவனைத்தன் கண்களால் கண்டதாகச் சொன்ன பிறகு மனது குழம்பி அலைந்தது.

கொஞ்ச நேரத்துக்கு முதல் கேட்ட வாகனச் சத்தத்தின் பிறகு எது வித ஓசையுமில்லை.

‘இந்த ஊரில் மனித வாடையே இல்லையோ என்னுமளவுக்கு ஊர் அடங்கிப்போயிருந்தது.

ஜன்னல் கண்ணாடிகளுக்கு அப்பால் வெளியே நிலவு காலித்துக் கொண்டிருந்தது. நிலவு வெளிச்சத்தைப் பார்த்துக் கிளர்ச்சி கொண்ட ஊளையிடும் நாய்கள் கூடவாய்திறக் கவில்லை.

‘வர்ற அமாவாசைக்கு அடுத்த நாள் தேப்பன்ர துவசம்… ஆரிட்டையும் சொல்லி எண்டாலும் விடவேணும்…’ நினைவு சுரந்தது.

வழமையாக தகப்பனின் துவச நாளன்று நண்பர்களையும் கூட்டிவந்து மயூரன் உண்டு விட்டுத்தான் போனவன் என்பதை நினைத்துப் பார்த்து மனம் நொந்தாள்.

கணவன் உயிரோடு இருந்தபோதெல்லாம்…

‘அவனை அவன்ர வழியிலை விட்டுவிடு பாக்கியம்’ என்று தான் சொல்லுவார். அவர் சொல்வதைத் தான் செயற்படுத்திவிட்டதாக இப்போது மனம் பூரித்தது அவளுக்கு.

வேலி ஒரமாக யாரோ நடந்து போவது போன்று காலடிச் சத்தங்கள் கேட்டன. பொருட்படுத்தாமல் கிடந்தாள்.

நேற்று முன்தினம் அதிகாலை –

ஜீப் ஒன்றில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கி பெற்றோர்கள் எல்லோரையும் ஊர்ப் பாடசாலையில் ஒன்பது மணிக்கு கூடுமாறு அறிவித்தபடி சென்றது.

பாக்கியமும் போயிருந்தாள்.

எல்லோருக்கும் ரீயும் பிஸ்கட்டும் தரப்பட்டது. சீரடைகள் சிரித் துச் சிரித்து உபசரித்தது ஆச்சரியமாயிருந்தது அவளுக்கு.

நூறு நூற்றைம்பது வரையான, வயதான இளமையான பெற்றோர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள்.

தடதடவென நிலத்தை மிதித்த படி அதிகாரி வந்தான். எல்லோரையும் பார்த்து கை கூப்பிவிட்டு அமர்ந்தான்.

அவனருகே இன்னுமொரு உத்தியோகத்தர் சாதாரண உடையுடன் இருந்தார்.

அதிகாரி அமர்ந்த படியே பேசத் தொடங்கினான். ஒருவருக்கும் அவன் என்ன சொல்கிறான் என்று புரியவேயில்லை.

அதிகாரி பேச்சை நடுவிலே நிறுத்த…

அருகே இருந்த உத்தியோகத்தர் அவன் சொன்னதை தமிழில் சொல்ல ஆரம்பித்தார்…



“நாங்கள் உங்களுக்கு நல்லதுதான் செய்வோம். உங்களுக்கு நல்ல வாழ்க்கை அமைச்சுத் தர நாங்கள் விரும்புகிறோம். நீங்கள் ஆரம் புலிகளை ஆதரிக்கக் கூடாது. அவர்களை கண்டால் எங்களுக்கு இனங்காட்ட வேண்டும். இல்லை யென்றால் என்ன நடக்கும் என்பது நான் சொல்ல வேண்டிய தில்லை…’

ஒரு மணி நேரமாக அந்த அதிகாரி பேசியதன் சாராம்சம் இதுவாகத் தான் இருந்தது.

கூட்டம் முடிந்த எல்லோரையும் போலத்தான் பாக்கியமும் வந்தாள்.

‘அவன் சொன்னதைக் கேட்டியே… எங்களுக்கேன் வீண் சோலிய… பெடியள கண்டால் கதை பேச்சு வைக்காமல் போயிட்டா சரி…’

ஊர் பெரியவர் ஒருவர் சொல்லிக் கொண்டு வந்தார்.

“பாவம் எண்டு நாங்கள் நினைச்சு பெடியளுக்கு உதவினாலும் அவனுகள் மணந்து பிடிச்சுடுவான்கள்… பிறகு ஆர் தப்பிறது…?

பழைய நினைப்பிலிருந்தவளுக்கு பின் கதவு மெதுவாக தட்டப்படும் சத்தம் கேட்டது.
திடுக்கிட்டு காதுகளைக் கூர்மைப் படுத்தினாள்.

அம்மா…’

மீண்டும் காதுகளைக் கூர்மைப் படுத்தினாள்’

‘அம்…மா…’

பின் கதவடியில் தான் குரல் கேட்டது மெதுவாக, கண்களை முழித்துப் பார்த்தாள்.

சுவர் மூலைக்குள் அரிக்கன் லாம்பு மினுங்கிக் கொண் டிருந்தது.

‘அம்…மா…’

கைகளை ஊன்றி எழுந்து பின்பக்கம் போனாள்.

'ஆரது?'

'கதவை ஒருக்கால் திறவுங்கோ... சொல்லுறம்...'

மனதுக்குள் அச்ச உணர்வு சுரந்தது. கால்களில் மெதுவான நடுக்கம் பரவ ஆரம்பித்தது.

வெளியே நின்றவர்கள் புரிந்து கொண்டார்கள் போலும்.

'பயப்படாதையுங்கோ அம்மா... கதவைத் திறவுங்கோ... உங்கட பிள்ளையள் தான் வந்திருக்கிறம்...'

நெஞ்சுக்குள் குளிர்ச்சி பரவ... மெல்ல கதவை நீக்கினாள்.

'ஆர் ம.. யூரனே...'

'இல்லையம்மா... நாங்கள் செட்டியும், குமணனும்...'

'என்ன தம்பியவை...?

'குமணனுக்கு சரியான காய்ச்சல்... பனடோலும்... குடிக்கிற தண்ணியும் தாருங்கோ'
இருளில் தட்டித் தடவி... உள்ளே போய்ப் பனடோலும் தண்ணியும் எடுத்து வந்தாள்.

மடக்மடக்கென்று செம்புத் தண்ணி முழுவதையும் ஒருவனே குடித்து முடித்தான்.

'நாங்கள்... நிண்ட இடம் காலமை துவக்கம்' றவுண்டப்'... ஒருமாதிரிச் சுழிச்சுப் போட்டு வந்திட்டம்...'

'என்னம்மா?... பயமாக் கிடக்கே... ஒருமாதிரியாய்ப் பேசாம நிக்கிறியள்...'

'ச்சா...' என்றாள். ஆனால் உள்மனம் இலேசாக நடுங்கியது. பிள்ளைத் திரும்பிப் பார்த்தாள். இருவரும் ஆழ்ந்த நித்திரையில் கிடந்தார்கள்.

அந்த அதிகாரியின் அகோரத் தோற்றம் ஒருமுறை நெஞ்சில் வந்து நிழலுருவாடியது.

'காலமை துவக்கம் ஒண்டும் சாப்பிடவுமில்லையாம்மா...'


நெஞ்சில் ஆழத்தில் எதுவோ குத்தியது போன்ற வலியை அவள் உணர்ந்தாள்.

'உள்ளுக்கு வாங்கோ... புட்டு இருக்கு... சாப்பிடலாம்...' கதவை அகலத் திறந்தாள்.

குளிர்ந்த காற்று சில்லென்று அவள் முகத்தில் தொற்றியது.

அந்த இருவரும் உள்ளே வந்தார்கள்.

இருளில் துரிதமாக அவளது கைகள் இயங்கின.



எதிரியின் கட்டுப்பாட்டிலிருக்கும் பெண் என்பதை விட... தான் ஒரு அன்பான... உணர்வு மிக்க தாய் என்கின்ற பெருமிதத்தை அவள் முகம் பிரதிபலிப்பது போலிருந்தது.

முற்றும்.

- ஆதிலட்சுமி சிவகுமார், எரிமலை



# மாமனிதர் துரைராசாவின் நினைவு நாள் – யூன் 11
# மண்ணின் மகுடமான பேராசிரியர் துரைராசா!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா

08.06.2025

1988 செப்டெம்பர் மாதம் ஈழத்தில் கொடூரமான போர்ச்சூழல் காரணமாக எவரும் வரத்தயங்கிய தருணம் துணிச்சலுடன் யாழ் பலகலைக்கழகத்தின் துணைவேந்தராக இன்முகத்துடன் ஒருவர் பதவியேற்றார். அவர் யாருமல்ல, மண்ணின் மகுடமான மாமனிதர் பேராசிரியர் அழகையா துரைராசா தான்.

அவர் பதவியேற்க நிபந்தனையாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ் பல்கலைக்கழகத்தில் பொறியியற் பீடம் ஆரம்பிக்கபடும் என்ற கொடுத்திருந்த வாக்குறுதியை பெற்றுக் கொண்டே அவர் பதவியேற்றுக் கொண்டார்.

யாழ் குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பின் ஊற்று அமைப்பின் முன்னோடியும், கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தை உருவாக்கிய தமிழ் மண் போற்றும் பேராசான் துரைராசாவின் முப்பதாவது நினைவு நாள் யூன் 11 இன்றாகும்.

### கிளிநொச்சி அறிவியல் நகரில் பொறியியற் பீடம்:

1990 களில் யாழ்ப்பாணம் பொருளாதார சிக்கலில் தவித்திருந்த பொழுது, எல்லாத்தரத்திலான எல்லா வகையிலான கல்வியாளர்களையும், தொழில் நுட்பவியலாளர்களையும், தொழிலாளர்களையும், நிர்வாகிகளையும், சிவில் சமூகவியலாளர்களையும் ஒன்றிணைத்து பொருளாதார அபிவிருத்திக்கான எதிர்கால திட்டமிடலை மேற்கொண்டவரே மாமனிதர் பேராசான் துரைராசா.

தமிழ் பேசும் மக்கள் நற்சிறந்த கல்வியைப் பெறவேண்டும் என்பதற்காக பல்கலைக்கழக கல்வி முறையில் தொழிலாளர் கல்வி, வெளியார் கற்கைபோன்றவற்றை அறிமுகப்படுத்தி யாழ்ப்பாண சமூகத்தை அறிவு கூட்டி பல்கலைக் கழகம் வரை கொண்டு வந்தவர்.

வடக்குக் கிழக்கு மலையகத் தமிழர்களில் பெரும்பான்மையானோர் விவசாயிகளாக இருப்பதால் விவசாய பீடத்தை கிளிநொச்சியில் நிறுவியதில் முதன்மை வகித்தவரும் அவரே.


ஆனாலும் பேராசிரியரின் பெருங்கனவு பல வருடங்களின் பின்பே கிளிநொச்சி அறிவியல் நகரில் யாழ் பல்கலைக் கழகத்தின் பொறியியற் பீட அங்குரார்ப்பண நிகழ்வுடன் பூர்த்தியாகியது எனலாம்.

பேராசிரியர் அவர்கள் 1994 ஆம் ஆண்டு விழிமூடும் வரை, கொடிய நோயின் பிடியில் அவர் அகப்பட்டு இருந்தாலும், யாழ் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக அளப்பெரும் சேவை புரிந்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில், பேராசான் வதிவிடமான வடமராட்சியின் வதிரி பிரதேசத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு வல்லை வெளியினூடாக போர் மேகங்கள் சூழ்ந்திருந்த காலங்களில் 30 ற்கும் மேற்பட்ட கிலோமீட்டர்கள் தூரத்தை மீதி வண்டியினூடே பயணித்திருந்தார். மக்களின் துன்ப துயரங்களை தன் தோளில் சிறந்த மண்ணின் பற்றாளர் அவர்.



பேராசானுக்கு விருதுசூட்டி மகிழும் பெருந்தலைவன்
“தேசப்பற்றோடும், மக்கள் நேயத்தோடும் மண்ணுக்கு அவர் மகத்தான சேவை ஆற்றினார்.”



மாமனிதர் பேராசிரியர் அழகையா துரைராசா
10.11.1934 – 11.06.1994

### வீர வடமராட்சியின் மைந்தன்:

மாமனிதர் பேராசான் துரைராசா யாழ்ப்பாணத்தின் மூளை என்றழைக்கபடும் வடமராட்சி பிரதேசத்தில் பிறந்தார். யாழ்ப்பாணம் வடமராட்சியில் கம்பர்மலை என்னும் ஊரிலே, இமையாணனைச் சேர்ந்த வேலுப்பிள்ளை அழகையா-செல்லம்மா ஆகியோருக்கு 1934 நவம்பர் 10 இல் தமிழ் மண்ணில் அவதரித்தார்.

இளமையில் ஆரம்பக்கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியிலும், உயர்தரக்கல்வியை ஹாட்லிக் கல்லூரியிலும், கற்று, 1953 யூலையில் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

அதன்பின் குடிசார் பொறியியலில் 1957 ஆம் ஆண்டில் இளமாணிப் பட்டம் பெற்றார். 1958 மார்ச் வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றி, நான்கு மாதங்கள் பொதுப்பணித் திணைக்களத்தில் இளைய பொறியியலாளராகப் பணியாற்றினார்.

புலமைப்பரிசில் பெற்று பேராசிரியர் கென்னத் ரொசுக்கோ வழிகாட்டலில் கேம்பிரிச்சுப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவனாகச் சேர்ந்தார்.

1958 அக்டோபர் முதல் 1961 திசம்பர் வரை துரைராசா மண்ணின் வெட்டுப் பண்புகள் பற்றிய ஆய்வில் ரொசுக்கோவிற்கு பாரியளவில் உதவினார்.

### இங்கிலாந்தில் முனைவர் பட்டம்:

இந்த ஆய்வின் மூலம் 1962 ஜீன் மாதத்தில் ”கயோலின் மற்றும் மணலின் சில வெட்டுப் பண்புகள்” என்ற தலைப்பில் பேராசான் துரைராசாவிற்கு முனைவர் பட்டம் கிடைத்தது.



முனைவர் பட்டம் பெற்ற துரைராசா இலங்கை திரும்பும் முன்னர் இலண்டனில் 1962 இல் டெரிசர்ச் என்ற நிறுவனத்தில் சிறிது காலம் பணிபுரிந்தார். பின்னர் பேராதனை, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார்.

1971 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் குடிசார் பொறியியல் பேராசிரியராக ஆவதற்கு முன்பு கனடா, வாட்டர்லூ பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

மே 1975 முதல் செப்டம்பர் 1977 வரையும், பின்னர் பெப்ரவரி 1982 முதல் பெப்ரவரி 1985 வரையும் இலங்கைப் பல்கலைக்

www.sangathamil.ca



கழகத்தின் பேராதனை வளாகத்தில் பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாக பணியாற்றி இருந்தார்.

### கொலம்பியா பல்கலைக்கழக பேராசிரியர்:

அக்டோபர் 1977 முதல் டிசம்பர் 1978 வரை பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார். ஏப்ரல் 1987 முதல் ஆகஸ்ட் 1988 வரை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாக இருந்தார்.

போர் தீவிரம் பெற்ற தாயக மண்ணில் 1988 செப்டம்பர் முதல் 1994 மார்ச் வரை துரைராசா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றினார். தனிப்பட்ட மருத்துவக் காரணங்களுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து விலகி கொழும்பு சென்று அங்குள்ள திறந்த பல்கலைக்கழகத்தில் சிறிதுகாலம் பணியாற்றினார்.1994 யூன் 11 அன்று இரத்தப் புற்றுநோயினால் ஏற்பட்ட இதய செயலிழப்பினால் கொழும்பில் காலமானார்.

### தாயக மண்ணில் மாமனிதர் விருது:

தமிழ்த் தாயக மண்ணில் பேராசான் ஆற்றிய பணிக்காக, இவர் இறந்த பின்னர் இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மாமனிதர் விருது வழங்கிக் கௌரவித்தனர்.

மண் போற்றும் மானுடவியலாளனான துரைராசா 1977 முதல் இலங்கை தேசிய அறிவியல் கல்விக்கழகத்திலும், 1979 முதல் இலங்கை குடிசார் பொறியியல் நிறுவனத்திலும், 1985 மே முதல் ஐக்கிய இராச்சியத்தின் குடிசார் பொறியியல் நிறுவனத்திலும் உறுப்பினராக இருந்தார்.

1986 இல் இவர் இலங்கை தேசிய அறிவியல் கல்விக்கழகத்தின் தலைவராகவும், அக்டோபர் 1989 முதல் அக்டோபர் 1990 வரை இலங்கை குடிசார் பொறியியல் நிறுவனத்தின் தலைவராகவும் இருந்து சேவையாற்றினார். இவர் மண் பொறியியலில் நிபுணராகவும் இருந்தார்.

### பேராதனை பல்கலைக்கழக "அக்பர் பாலம்":

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் ‘அக்பர் பாலம்’ பேராசிரியர் துரைராசாவினால் அமைக்கப்பட்டது.

இப்பாலம் சிங்கள பேராசிரியர் ஒருவர் விட்ட சவாலை ஏற்று மகாவலிகங்கைக்கு குறுக்கே ஒரேயொரு தூணை எழுப்பி பேராசிரியரின் தொழில்நுட்பத்தில் கட்டப்பட்டது.

மேலும் பேராசிரியர் நினைவாக பேராசிரியர் துரைராசா கிண்ணம் எனும் சுற்றுபோட்டி வருடாவருடம் பேராதனை, கொழும்பு, மொரட்டுவ பல்கலைகழகங்களுக்கிடையில் இன்றும் இடம்பெற்றுவருகிறது.

### உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன் :


பேராசிரியர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம்,இலங்கை சிவில் பொறியிலாளர்கள் அமைப்பு, தேசிய விஞ்ஞான அக்கடமி என்பவற்றின் தலைவராகவும் இருந்து அளப்பெரும் சேவைகள் ஆற்றியுள்ளார்.

1987 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் அனர்த்தங்களில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி முற்றிலுமாக சிதைவடைந்திருந்த போது, வெளிநாடுகள் சென்று கல்லூரியின் நிலையினை எடுத்துரைத்து அங்குள்ள பழையமாணவர்களை ஒன்று திரட்டி நிதி சேகரித்து இன்றைய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி நிமிர்ந்து நிற்பதற்கு பேராசிரியரே துணை புரிந்தார்.

இன்றும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் நூலகம் அமைந்த கட்டிடதொகுதி பேராசிரியரின் பெயராலேயே பேராசிரியர் துரைராசா கட்டிடதொகுதி என்றே அழைக்கபடுகிறது.

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்:

1990 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட விவசாயத்துறை மாங்குளத்தில் நிறுவப்படவிருந்த பொறியியல்



துறைக்கும், முல்லைத்தீவில் நிறுவப்படவிருந்த மீன்பிடித் துறைக்குமான பூர்வாங்க வேலைகள் பேராசிரியர் துரைராசா அவரது முயற்சியையும் பரந்த நோக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் 1992 இல் உருவானதும் பேராசிரியரின் சிந்தனையில்தான். அதன் ஸ்தாபக தலைவரும் இவரேயாவார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த துறையை ஆரம்பிப்பதற்குரிய அங்கீகாரத்தைப் பெற்று அதனை நிர்வகிக்கத் தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனது அயராத முயற்சியால் பேராசிரியர் துரைராசா திரட்டிக் கொண்டார்.

மேலும், பல்கலைக்கழகத்தில் உள்வாரி மாணவர்களாக படிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெறாத மாணவர்களின் நலன் கருதி வெளிவாரி நிலையத்தை பேராசிரியர் துரைராசா உருவாக்கி பயன் பெறச்செய்தார்.

### யாழ் குடா தரைக்கீழ் நீர் சேமிப்பு – ஊற்று அமைப்பு:

1980 இல் ஊற்று என்ற அமைப்பை பேராசிரியர் துரைராசா உருவாக்கி, தலைவராக செயல்பட்டு தனது முயற்சியால் பல அபிவிருத்தி திட்டங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் உருவாக்கி கிராம மக்களை முன்னேற்றினார்.

அத்துடன் யாழ் குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பை ஊக்குவிக்கும் முகமாக 200 குளங்களின் வண்டல் மண் அகற்றும் திட்டம் ‘நோராட்’ நிறுவனத்தின் உதவியுடன் பேராசிரியர் துரைராசா மேற்கொண்டார். இதன் பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி திட்ட நிதி உதவியோடு பின்தங்கிய கிராமங்களின் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு, இந்நிறுவனமும் ‘கெயர்’ நிறுவனமும் இணைந்து அமுலாக்கிய உணவு உற்பத்தி திட்டத்தினையும், ‘போரூட்’ இன் உதவியுடன் காடு வளர்ப்பு திட்ட அறிக்கை தயாரிப்பு வேலைகளும் பேராசிரியர் துரைராசா அவரின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டன.

1990 ஆம் ஆண்டின் பின் வடபகுதியின் தன்னிச்சை பொருளாதார வளங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் நிபுணர் குழுவிற்கு தலைமை தாங்கி அதனை வழிநடத்திச் செல்ல பல திட்டங்கள் பேராசிரியர் துரைராசா அவரால் தயாரிக்கப்பட்டன.

பேராசிரியர் துரைராசாவை போன்ற கனவான்கள் இம் மண்ணில் தோன்றுவது அரிது. பேராசிரியர் துரைராசா எளிமையின் சின்னமாக வாழ்ந்தவர். பெருமை அதிகாரம் இல்லாத மண்



ணின் மனிதர்.

மாணவர்களானாலும் சரி, பொது மக்களாலும் சரி எந்நேரத்திலும் எவ்விடத்திலும் அவரை அணுகி தமது பிரச்சினைகளை எடுத்துக்கூறி அதற்கு அவர் மூலம் தீர்வொன்றை காணக்கூடிய பிறரை மதிக்கும் நற்குணமே அவருக்கு உயர்ச்சியைக் கொடுத்தது எனலாம்.

### இறந்தும் இறவா மாமனிதர் பேராசிரியர் துரைராசா :

இறந்தும் இறவா மண்ணின் மகுடமாக மிளிர்ந்த மாமனிதர் என்ற அடைமொழி கற்பனையாக இருந்தாலும் அவ் அடைமொழி பேராசிரியர் அழகையா துரைராசாவின் பெயரின் முன்னால் இருக்கும்போது அது உயிரோட்டமாகவே இருக்கின்றது என அவரின் மாணவர் ஒருவர் எழுதிய வரிகள் காலங்கடந்தும் அவர் நம்முள் வாழ்கிறார் என்பதனை எடுத்துக் கூறுகிறது.

**விடுதலைப் புலிகளின் மனோதிடத்தையும் உறுதியையும் அழித்து விட சிங்கள இராணுவத்தால் முடியாது. மகத்தான தார்மீக வலிமையும், தியாக உணர்வும் உன்னத இலட்சியப் பற்றும் எங்களுக்கு உண்டு.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**


"Based on the true story of a doctor
who served in the killing fields of Sri Lanka"
இறுதிப்போரில் நடந்தது என்ன?
நூல் வெளியீடும் திரைப்படம்
காண்பிப்பும்
Thursday, June 19 | 2025
7:00 PM
CTCC Business Centre
80 Travail Road, Unit 1,
Markham
Dr. T. Varatharajah in
The Lamp of Truth
THANESH GOPAL
JITHIN ROSHAN
R.G. ANAND
B. RAVINDRAN BFA
JOHN MARC
SELVAM
GUN RAJENDRAN
ANTONY BEBIN
Contact: Dr. Varatharajah 437-339-4193

# அஸ்தமிக்கிறதா குர்திஷ்தான் கனவு? உதயமாகிறதா பலூசிஸ்தான் தேசம்?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

23.05.2025

**துருக்கியில் நாற்பது ஆண்டுகால தனிநாட்டு போராட்டத்தில் ஈடுபட்ட குர்திஷ் போராளிகள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக ஒரு வரலாற்று முடிவை அறிவித்துள்ளனர். இதே வேளை பலூசிஸ்தான் பாகிஸ்தானில் இருந்து சுதந்திரம் பெற்றதாக அறிவித்துள்ளது. இவ்விரு தேசிய இனங்களின் உரிமைப் போராட்டத்தின் வரலாற்றுத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட அலசல்**




நீண்ட காலமாக தங்கள் இன அடையாளத்தைத் தக்கவைக்க குர்திஷ் மக்கள் போராடினர். ஆனால் அவர்களை எல்லை தாண்டியும் அழித்தொழிக்கத் துடித்தது துருக்கி. தனிநாடு கோரி போராடும் குர்திஷ் போராளிகள் அமைப்பான பி.கே.கே-க்கும் துருக்கிக்கும் இடையிலான மோதல் 1984 இல் தொடங்கியது. இந்த மோதல் பல்லாயிரக்கணக்கான இறப்புகளுக்கு வழி வகுத்தது.

துருக்கியில் நாற்பது ஆண்டுகால தனிநாட்டு போராட்டத்தில் ஈடுபட்ட குர்திஷ் போராளிகள் போர் நிறுத்தத்தை தற்போது அறிவித்துள்ளனர்.

நான்கு தசாப்த கால ஆயுத மோதலுக்குப் பிறகு, துருக்கியுடனான புதிய சமாதான முயற்சியின் ஒரு பகுதியாக, குர்திஷ் போராளிக் குழுவான 'குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி' (PKK) ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக ஒரு வரலாற்று முடிவை அறிவித்துள்ளது.

இதற்கு முன்பாக கடந்த 27.2.25 குர்திஷ் அரசியல் குழு, பி.கே.கே அமைப்பு தனது ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு கலைந்து செல்லுமாறு சிறையில் இருந்து குர்திஷ் போராளித் தலைவர் அப்துல்லா ஓஜலான் அழைப்பை விடுத்தார்.



## துருக்கியின் எல்லை தாண்டிய அழிப்பு:

நீண்ட காலமாக போராடி வரும் குர்திஷ் மக்களை எல்லை தாண்டியும் அழித்தொழித்து வந்தது துருக்கி.

சிரியாவில் கடந்த ஆண்டு இறுதியில் குர்திஷ் போராளிகளுக்கு எதிராக தரை வழியாகவும், வான் வழியாகவும் துருக்கி இராணுவம் தாக்குதல் நடத்தியதால் பாரிய அழிவை அவர்கள் சந்தித்தனர்.

நாற்பது ஆண்டுகால கிளர்ச்சியை நடத்தி வரும் குர்திஷ் போராளிகள், தங்கள் சிறையில் அடைக்கப்பட்ட தலைவரால் போராட்ட அமைப்பை நிராயுதபாணியாக்க அழைப்பு விடுத்தார்.

## நான்கு தசாப்த போராட்டம்:



நான்கு தசாப்த கால ஆயுத மோதலுக்குப் பிறகு, துருக்கியுடனான புதிய சமாதான முயற்சியின் ஒரு பகுதியாக, குர்திஷ் போராளிக் குழுவான 'குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி' (PKK) ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக ஒரு வரலாற்று முடிவை அறிவித்துள்ளது.

குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி (PKK) எடுத்த இந்த தீர்மானம் 1980 களில் இருந்து பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் கொன்ற பல தசாப்த கால மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு முக்கிய படியாக கருதப் படுகிறது.




1999 முதல் இஸ்தான்புல்லுக்கு அருகிலுள்ள ஒரு தீவில் சிறை யில் அடைக்கப்பட்டுள்ள PKK தலைவர் அப்துல்லா ஓஜலான், துருக்கியுடனான ஒரு புதிய சமாதான முயற்சியின் ஒரு பகுதி யாக கடந்த பெப்ரவரி மாதத்தில் தனது குழுவை ஒரு மாநாட்டைக் கூட்டி முறையாகக் கலைக்க முடிவு செய்யுமாறு வலியுறுத் தினார்.

இவ்வருடம் மார்ச் மாதத்தில் PKK ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை அறிவித்தது, ஆனால் சமாதானப் பேச்சுவார்த் தைகளுக்கான சட்ட கட்டமைப்பை உருவாக்குவது உட்பட நிபந்தனைகளை விதித்தது.

குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி 1984 முதல் ஆயுதமேந்திய கிளர்ச்சியை வழிநடத்தி வந்தது. இப் போராட்டங்களால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் கொல்லப்பட்டன. இதனால் துருக்கி மற்றும் அதன் மேற்கத்திய நட்பு நாடுகளால் ஒரு பயங்கரவாதக் குழுவாக பட்டியலிடப்பட்டது.

சிரியாவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம், லெபனானில் ஹெஸ்பொல்லா குழுவின் போராட்டம் மற்றும் காசாவில் இஸ்ரேல்-ஹமாஸ் போர் உள்ளிட்ட பிராந்தியத்தில் ஏற்பட்ட பெரிய மாற்றங்களின் பின்னணியில் குர்திஸ்தான் கட்சியின் அறிவிப்பு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தாயகம் இல்லாத குர்திஷ் மக்கள் :

மத்திய கிழக்கில் பாரம்பரியமாகவே வாழ்ந்து வரும் இனமான குர்திஷ் மக்கள் (Kurdish) தென்கிழக்கு துருக்கி, வட கிழக்கு சிரியா, வட ஈராக், வடமேற்கு ஈரான், தென்மேற்கு ஆர்மேனியா ஆகிய பகுதிகளில் அதிகம் வாழ்கின்றனர்.

ஆயினும் தாயகம் இல்லாத மிகப்பெரிய இனக்குழுவான குர்திஷ் மக்கள் துருக்கியிலும், சிரியாவிலும் பிற இடங்களிலும் நீண்டகாலமாக துன்புறுத்தலை எதிர்கொண்டுள்ளனர்.

ஐந்து நாடுகளில் சிதறி வாழும் குர்திஷ் மக்களின், பேரிடியாக ஐந்து நாடுகளிலுமே அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட இனமாக கருதப்படுகின்றனர். இதன் விளைவாக விடுதலை போராட்டத்திற்கும் தள்ளப்பட்டார்கள்.

## பலூசிஸ்தான் தனிநாட்டு பிரகடனம்:

பலூசிஸ்தான் பாகிஸ்தானில் இருந்து சுதந்திரம் பெற்றதாக மே 14இல் அறிவித்துள்ளது. 1947ல் பாகிஸ்தான் மத அடிப்படையில் இந்தியாவை பிரிந்து ஒரு தனி நாடாக உருவானது. ஆனால் உண்மையில் அது வங்காளம், பஞ்சாப், சிந்தி, பலூச்சி, பக்தூன் என ஐந்து தேசிய தேசிய இனங்களைக் கொண்டிருந்தது. மொழி அடிப்படையில் கிழக்கு வங்காளம் போராடி 1971ல் வங்காள தேசமாக மலர்ந்தது.

இராணுவ ஆட்சி, மக்களாட்சி என எதுவாயிருந்தாலும் பாகிஸ்தானில் கோலோச்சுவது பஞ்சாபி முஸ்லீம்களும் சிந்தி முஸ்லீம்களுமே. இவர்கள் பலூச்சிகளையும் பக்தூனியர்களையும் (பத்தானியர்கள்) நீண்ட காலமாக ஒடுக்கி வருகின்றனர். அதனை எதிர்த்துப் பாகிஸ்தானில் அவ்விரு இனங்களும் விடுதலை கோரிப் போராடி வருகின்றன.




பொருளாதார ரீதியாக, மற்ற பாகிஸ்தானியர்களுடன் ஒப்பிடும் போது பலூச்சிகள் தனிநபர் வருமானம் மிகக் குறைவு. கட்டமைப்பு ரீதியான பொருளாதாரச் சுரண்டல், சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தில் (CPEC) இருந்து பெரும்பாலான பலூச் சமூகத்தை விலக்கியது மற்றும் பிற பொருளாதாரத் திட்டங்களில் இருந்து அந்நியப்படுத்துதல் ஆகியவை பலூச் மக்களை போராட்ட வழியில் செயல்படத் தூண்டின.

பலூசிஸ்தான் தனி நாடு கோரிக்கை வலுத்து வரும் நிலையில், அந்நாட்டில் மிகப்பெரிய அளவிலான மக்கள் போராட்டங்கள் அப்பகுதியில் மட்டுமல்லாமல் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன.




## பலூசிஸ்தான் போராட்ட வரலாறு :

பிரிட்டீஷிடம் இருந்து 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11இல் பலூசிஸ்தான் பகுதி சுதந்திரம் பெற்றது. இதையடுத்து 1947, டிசம்பர் 16இல் அப்பகுதியை பாகிஸ்தானுடன் இணைப்பது தொடர்பாக பொது மற்றும் மேல்சபை ஆகியவற்றில் தீர்மானம் முன்மொழியப் பட்டது. ஆனால், இதனை இரு சபைகளும் நிராகரித்தன.

இந்நிலையில், பலூசிஸ்தான் மீது பாகிஸ்தான் படையெடுப்பு நடத்தியது. காலத் பகுதி கான் மற்றும் அவரது குடம்பத்தினரை சிறை வைத்தது. அப்பகுதியின் முழுக் கட்டுப் பாட்டையும் கைப் பற்றியது. எனவே 1948-ஆம் ஆண்டு முதல் அப்பகுதி பாகிஸ் தானின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

## மறைமுக இந்திய ஆதரவு :

பலூசிஸ்தான் விடுதலைப் போராட்டத்துக்கு இந்தியர்கள் தார் மீக ஆதரவு செய்வதாக பலூசிஸ்தான் விடுதலை இயக் கமான "ஹிந்த் பலூச்" எனும் அமைப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பின் நிறுவனர் ஜிதேந்திரானந்த் சரஸ்வதி கூறு கையில் பலூசிஸ்தான், பிரிட்டிசிடம் இருந்து சுதந்திரம் பெற்ற போதிலும், 1948-ஆம் ஆண்டு மார்ச் மாதம் மீள வலுக்கட்டாய மாக பாகிஸ்தானுடன் இணைக் கப்பட்டது.

பலூசிஸ்தான் மக்களின் சுதந்திர உரிமைகளுக்காக இந்தி யர்கள் பங்களிப்பு செய்தனர். தங்களது அடையாளம், கலா சாரம் ஆகியவற்றின் மீது பலூசிஸ்தான் மக்கள் அதிக மரி யாதை கொண்டுள்ளனர் என்றும் கூறினார். தற்போதைய சூழலில் சர்வதேச அளவில் இந்தியா முன்னணி நாடாக திகழ் வதால் பாகிஸ்தானில் இருந்து பிரித்து பலூசிஸ்தான் தனிநாடாக அமைக்க இந்தியா உதவ வேண்டும் என இந்த இயக்கம் விரும்புகிறது. இதனிடையே பலூசிஸ்தானில் ஏற்பட்டு வரும் அசம்பாவிதங்கள் தொடர்பாக ஐ.நா. சபையில் இந்தியா தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகிறது.

## பலூசிஸ்தான் இனப்படுகொலை :

பலூசிஸ்தான் மக்கள் மீது தொடர்ந்தும் இனப்படுகொலை நடத் தப்பட்டு வருகிறது. இப்பகுதி முழுவதும் பாகிஸ்தான் இரா ணுவத்தின் அராஜகம் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. ராணுவத்தால் திடீரென நடத்தப்படும் குண்டுவெடிப்புகளால் நூற்றுக்கணக் கானோர் அப்பாவி மக்கள் உயிரிழக்கின்றனர்.

இந்நிலையில், பலூசிஸ்தானில் நடைபெறும் கொடுமைகளை, மக்கள் விரோத நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் வித மாகவும், அதற்கு எதிரான மற்றும் தனிநாடு போராட்டங்களை தீவிரப்படுத்தி சர்வதேசமெங்கும் பாகிஸ்தானுக்கு எதிரான பலூசிஸ்தான் மக்களின் சுதந்திர கோஷங்கள் ஓங்கி ஒலித்து வருகின்றன.

## சீனாவின் நட்புக்கரம் :

இப்போது பாகிஸ்தானிற்கு பலூச்சிஸ்தான் பிரச்சனை பெரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. பாகிஸ்தானில் உள்ள பலூசிஸ்தான் மாகாணத்தை தனி நாடாகப் பிரிக்கக் கோரும் இவர்களின் போராட்டத்தை நசுக்குவதில், சீனாவும் நட்புக்கரம் நீட்டிவருவது குறிப்பிடத்தக்கது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பலூசிஸ்தானில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கணிப்பில் 37% மக்கள் தனி பலூசிஸ் தான் தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.






# CANADIAN TAMIL COLLECTIVE
# கனேடியத் தமிழர் கூட்டு

06.06.2025

உடனடி வெளியீட்டுக்கு.

அமைச்சர் ஆனந்தசங்கரி மீதான Global News ஊடகத்தின் இனப்பாகுபாடு ரீதியான தாக்குதல் அனைத்துத் தமிழ் கனேடியர்களையும் குறிவைக்கிறது.

Global News இன் ஊடகவியலாளர்கள் Stewart Bell, Mercedes Stephenson ஆகியோரின் அண்மைய கட்டுரையில் முன்வைக்கப்பட்ட இனப்பாகுபாடு கொண்ட, ஆழ்ந்த தீங்கு விளைவிக்கும் பகுதிகளை கனேடியத் தமிழர் கூட்டு கண்டிக்கிறது. எந்தவிதமான தவறான நடத்தைகளும் அடையாளம் காணப்படாவிட்டாலும், இக்கட்டுரை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி மீது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இது ஆதாரங்களின் அடிப்படையில் அமையாமல், மறைமுகத் தகவல்கள், தமிழர் என்ற அடையாளம், அவருடைய கடந்த கால சட்ட நகர்வுகள் அடிப்படையில் அமைந்துள்ளது. தமிழ்க் கனேடியர்கள் அவர்களது செயல்களுக்காக அல்லாமல், அவர்களின் அடையாளத்திற்காக குறிவைக்கப்படும் நீட்சியான பாணியின் அண்மைய அத்தியாயம் இதுவாகும்.

கடுமையான பின்னணிச் சோதனைச் செயல்முறையின் பின்னர், கனேடியப் பிரதமர் Mark Carney முழு நம்பிக்கையுடன் அமைச்சர் ஆனந்தசங்கரியை நியமித்தார். குறித்த கட்டுரையில் எழுப்பப்பட்ட ஒரே ஆட்சேபனை அமைச்சரின் இனம், அடையாளம், முன்னைய மனித உரிமைப் பணிகள் மட்டுமே. இவற்றில் எதுவும் அவர் சுய பரிசோதனையை செயல்படுத்த நிர்பந்திக்கக்கூடாது. இவை பொறுப்புகள் அல்ல. அவை தகுதிகள். பிரதமரும், Liberal கட்சியும் அமைச்சருடனும், தமிழ் சமூகத்துடனும் உறுதியாக துணை நிற்கவேண்டும்.

தன்னைச் சுய பரிசோதனைக்கு உட்படுத்த அமைச்சர் ஆனந்தசங்கரி மீது அழுத்தம் பிரயோகிக்கப்படுவது நெறிமுறைகளின் வெற்றி அல்ல. இது அவருடைய அடையாளத்தை முரண்பாடாகக் கருதும் ஒரு திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நெருக்கடியின் விளைவாகும்.

எமது அடையாளத்தை ஆயுதமாகக் கொண்டு, சேவை செய்வதற்கான எமது உரிமையைக் கேள்விக்குள்ளாக்கும் ஒரு புனைகதையை தமிழ்க் கனேடியர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நமது அடையாளத்திற்காக மன்னிப்புகோரும் நிலையில் நாங்கள் இல்லை.

மேலும், அமைச்சர் ஆனந்தசங்கரியின் துணைவி குறித்த கட்டுரையின் குறிப்பு தொந்தரவாக உள்ளது. ஒரு தேசியப் பாதுகாப்புத் தொடர்பான கட்டுரையில், ஒருவரின் துணைவியைக் காரணமின்றி இணைப்பது கனேடிய ஊடகவியல் விதிமுறைகளில் இருந்து முற்றிலும் மாறான நகர்வாகும். இது ஆய்வு அல்ல; தமிழர் என்ற அடையாளம் இயல்பாகவே சந்தேகத்திற்குரியது என்பதை வலுப்படுத்த, வேண்டுமென்றே முன்னெடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகும்.

ஹரி ஆனந்தசங்கரி, ஹரிணி சிவலிங்கம் மீதான தாக்குதல்கள் தனிமைப்படுத்தப்பட்ட சம்பவங்கள் அல்ல என்பதில் நாம் முற்றிலும் தெளிவாக உள்ளோம்.

இதற்கு முன்னரும் இவை போன்ற அனுபவங்களை தமிழ்க் கனேடியர்கள் எதிர் கொண்டுள்ளனர். நமது மக்களின் அமைதியான போராட்டங்கள் கண்காணிப்புடன் எதிர்கொள்ளப்பட்டன. நமது போராட்டத்தின் சின்னங்கள் அச்சுறுத்தல்களாக முத்திரை குத்தப்பட்டன. தற்போது, அரசியல் ரீதியாக தமிழரின் பிரதிநிதித்துவம் குறிவைக்கப்பட்டு மரியாதைக்கு இழுக்கு ஏற்படுத்தப்படுகிறது.

ஆனந்தசங்கரி எல்லைப் பாதுகாப்பு அமுலாக்கத்திற்கு தலைமை தாங்கத் “தவறான நபர்” என முன்னாள் CBSA அதிகாரியும், தற்போதைய Mount Royal பல்கலைக்கழக பேராசிரியருமான Kelly Sundberg கூறுவது- வேரூன்றியுள்ள கட்டமைக்கப்பட்ட நிலைப்பாட்டுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். அமைச்சரின் சட்டப் பின்னணி, வாதத்திறமை ஆகியவை பொறுப்புகள் அல்ல அவை பொதுத் தலைமைக்குத் தேவையான பண்புகளாகும். இது நிறுவனங்களை பொறுப்புக்கூற வைப்பவர்கள் அவற்றை வழி நடத்தத் தகுதியற்றவர்கள் எனப் பரிந்துரைக்கும் ஆபத்தான முன்னுதாரணமாக அமைகிறது.

தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்கள், ஏனைய இனரீதியான சமூகங்கள் தோல்வியடைந்தமைக்கு நீண்ட, நன்கு ஆவணப்படுத்தப்பட்ட வரலாற்றை CBSA கொண்டுள்ளது. இன்றைய தேவை சிந்தனையே தவிர மனக்கசப்பு அல்ல. ஆனாலும், வரலாறு குறித்து பேசுவதற்குப் பதிலாக, அவர்களின் கவனம் மீண்டும் தமிழ்க் கனேடியர்களை அச்சுறுத்தலானவர்களாகச் சித்தரிக்கும் இலக்கு நோக்கிச் செல்கிறது.

இது ‌தேசிய பாதுகாபபு குறிதத நலலெணணக கவலைகளை கொண்டதல்ல. இது தமிழ்க் கனேடியர்கள் பல தசாப்தங்களாக எதிர்கொண்டுவரும் நீதிக்காக வாதிடுவதை, விசுவாசமின்மையாக மறுபெயரிடப்படுவதுடன், தமிழர் என்ற அடையாளம் ஒரு பொறுப்பாக கருதப்படும், இனப்பாகுபாட்டு இரட்டை நிலைப்பாட்டின் தொடர்ச்சியாகும்.

மேலும், சமூக-சட்டக் கல்வியில் கலாநிதிப்பட்டம் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ள வழக்கறிஞரும், கல்வியாளருமான ஹரிணி சிவலிங்கமும் இதே போன்ற சவாலை எதிர் கொள்கிறார். அவரது திறமை சர்ச்சைக்கு அப்பாற்பட்டது. அவர் எவ்வித தவறுகளையும் இளைக்காதபோதிலும், அவருடைய அடையாளம் காரணமாக, அவரது நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்குகிறது.

இது வெறுமனே இரண்டு தனி நபர்கள் மீதான தாக்குதல் அல்ல. உங்கள் பங்களிப்புகள் ஆராய்ச்சிக்கும் உட்படுத்தப்படும், உங்கள் பின்னணி கேள்விக்குள்ளாகும், உங்கள் அடையாளம் ஒரு அச்சுறுத்தலாக கருதப்படும் எனப் பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு கனேடியத் தமிழருக்கும் விடுக்கப்பட்டுள்ள ஒரு பரந்த எச்சரிக்கையாகும். இதன்பிரகாரம்,தமது சேவைகளுக்கு அதிக விலை கொடுக்க நேரிடும் என அரசு, கல்வித்துறை, சட்டம், சிவில் சமூகத்தில் உள்ள தமிழர்கள் மீண்டும் ஒருமுறை அழுத்திக் கூறப்படுகின்றனர்.

தேசியப் பாதுகாப்புக் கண்ணோட்டத்தில் நோக்கப்படாமல் தமிழ்க் கனேடியர்கள் பொது நம்பிக்கைக்குரிய பதவிகளை வகிக்க முடியாது என்ற உட்குறிப்பு, பல தசாப்தங்களாகக் கட்டமைக்கப்பட்ட பாகுபாட்டின் தொடர்ச்சியாகும்.

உயிர் பிழைத்தவர்கள், மீண்டும் மன உளைச்சலுக்கு உள்ளாகும். நிபுணர்களை மௌனமாக்கும், எதிர்கால சந்ததியினரை பொதுச்சேவையில் இருந்து விலக்கி வைத்திருக்கும் வகையில், நீண்ட காலமாக, இந்த நாடகம் எவ்வாறு அரங்கேறுகிறது என்பதை நாம் அடையாளம் காணமுடிகிறது.

இவ்வாறான கட்டுக்கதைகளை நாங்கள் நிராகரிக்கிறோம். எங்கள் அடையாளங்கள் அச்சுறுத்தலானவை என்ற கருத்து, எங்கள் தொழில், எங்கள் குடும்பங்கள் மீது தாக்குதல்களுக்கு வழிவகுக்கிறது, அல்லது எங்கள் பின்னணி இந்த நாட்டிற்கு சேவை செய்வதிலிருந்து எங்களைத் தகுதியற்றதாக்கும் சித்தரிப்பை நாங்கள் நிராகரிக்கிறோம்.

எனவே, Global News, Stewart Bell, Mercedes Stephenson ஆகியோர் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி, ஹரிணி சிவலிங்கம், தமிழ்க் கனேடிய சமூகத்திடம் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

மேலதிக விபரங்களுக்கு, கனேடியத் தமிழர் கூட்டின் பேச்சாளர் மரியோ புஷ்பரட்ணத்தை (+1) 416-566-5431 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும் அல்லது: canadiantamilcollective@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

உண்மையுள்ள,



கனேடியத் தமிழர் கூட்டு

(குறிப்பு: ஜூன் 06, 2025 அன்று வெளியிடப்பட்ட கனேடியத் தமிழர் கூட்டின் ஆங்கில அறிக்கையின் தமிழாக்கப்பிரதி இதுவாகும்.)

.

**Ministry of Prevention and Accountability for Genocide and Human Rights**
**Transnational Government of Tamil Eelam**
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

**No. 227, Preston Road,**
**Wembley,**
**HA9 8NF**

mhr@tgte.org adminuk@tgte.org

Hon. Mark Carney, June 11, 2025

Prime Minister, Canada

**Re: Appointment of Gary Anandasangaree as Minister of Public Safety.**

Dear Prime Minister Carney,

I am writing to extend my congratulations on your appointment of the Honourable Gary Anandasangaree as Minister of Public Safety. His selection to this essential role is an affirmation of Canada's commitment to principled leadership, ethical governance, and human rights.

Mr. Anandasangaree's journey from refugee to senior minister embodies the Canadian Dream and is a testament to the contributions of Canada's immigrant population to your great nation. Over the past decade, he has shown unwavering dedication to truth and justice. Even before his time in public service, Mr. Anandasangaree stood before the United Nations Human Rights Council to demand accountability for mass atrocities, advocating for the marginalized, silenced, and unheard when few others would.

Undoubtedly, Mr. Anandasangaree's impressive record serving the Canadian people played no small role in your decision. Among his many accomplishments, as Minister of Crown-Indigenous Relations he was instrumental in the self-governance agreement with the Musqueam Nation and played a key role driving the implementation of the Inuit Nunangat Policy, which provided that Intuit leadership would guide federal decision-making in their territories—both ground-breaking achievements which further cemented Canada's role as a world leader in human rights, including the rights of Indigenous peoples. In 2022 he spearheaded the first National Action Plan to End Gender-Based Violence, and shepherded its implementation through the years to ensure it included all groups, including Indigenous women, girls, and 2SLGBTQQIA+ people. During his time as Minister of Justice and Attorney General, he pushed the issue of missing and disappeared Indigenous children to the forefront of the national consciousness—another example of his tireless human rights efforts on behalf of all Canadians.

In appointing Mr. Anandasangaree, you have entrusted one of Canada's most important ministries to a proven leader and champion of the people whose life reflects deeply held values of fairness, accountability, and justice for all. It is a decision which inspires confidence and one that affirms Canada's longstanding tradition of leading with integrity, magnanimity, and respect for human dignity.

Sincerely,

**Mrs. Thushani Rajavarothayam, MP,**
**Minister for Human Rights and Prevention and Accountability for the Crime of Genocide,**
**Transnational Government of Tamil Eelam.**

# ஆபிரிக்காவில் புதிய இளம் தலைமை!

# மேற்குலகின் சிம்ம சொப்பனம் இப்ராகிம் தராரே!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

02.06.2025

பிரெஞ்சு அரசு தனது சொந்த நலனுக்காக ஆபிரிக்காவில் அதிகார வர்க்கங்களின் போட்டிகளை கையாள்வதில் நீண்ட கால சாதனையை கொண்டுள்ளது. அத்துடன் பாரிஸ் அதன் முன்னாள் ஆபிரிக்க காலனித்துவ சாம்ராஜ்யத்தில் எண்ணற்ற இராணுவ சதிகளையும் ஏற்படுத்தி வெற்றி கண்டுள்ளது.

## தராரே என்ற புரட்சியாளன்:



இன்று மேற்குலகத்தைக் கலங்கடித்து, மேற்குலக ஆதிக்கத்திலிருந்து முழு ஆபிரிக்காவையும் மீட்டெடுப்போம் என்று சபதமிட்டு அதற்காகத் துரிதமாகாக் காய்களை நகர்த்திக் கொணடிருக்கிறார் இப்ராகிம் தராரே என்ற இளம் ஆபிரிக்க வீரர்.

அன்றைய புர்கினா பாசோ (Burkina Faso) நாட்டின் புரட்சியாளன் தோமஸ் சங்காரா கிளர்ந்தெழுந்தபோது உலக அரச பயங்கரவாதத்தால் அவர் படுகொலை செய்யப்பட்டார். ஆனால் தற்போது அந்த வரலாறு மீள திரும்புகிறது. மூன்று தசாப்தங்கள் கழித்து அந்த மண்ணிலிருந்து இப்ராகிம் தராரே என்ற புரட்சியாளன் வெடித்துக் கிளம்பியிருக்கிறான்.

> **நீண்ட காலமாகவே துயரத்தையே சுவாசித்துக் கொண்டிருக்கும் ஆபிரிக்க குடும்பங்களில் புதிய காற்று வீசுகிறது. ஒட்டு மொத்த ஆபிரிக்காவுக்கும் புதுச் சுவாசம் பெற வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டு உள்ளது. உலகில் உள்ள ஏழை நாடுகளிலும் அரசியல் மாற்றம் சாத்தியம் என்பதற்கு இப்ராகிம் தராரே என்ற இளம் வீரரின் வருகை விடிவெள்ளியாக மிளிர்கிறது**

பாட்ரிஸ் லுமும்பாவில் தொடங்கி சமோரா மோசஸ் மார்சல், தோமஸ் சங்கரா என்று ஆபிரிக்கப் புரட்சியாளர்களின் பட்டியல் நீளமானது. அதில் தற்போது இப்ராகிம் தராரே இணைந்து கொள்கிறார்.

காலனித்துவ காலத்தின் பின்னர் தாம் வெளியேறும் போது தமது கனிமவள சுரண்டலை தொடர்வதற்க்காக 'ஒரு பொம்மை அரசை' நிறுவுவது மேற்கு ஐரோப்பியர்களின் வழக்கம். அப்படியான பொம்மை அரசை உதறித் தவிர்த்து சுயாதீன அரசை நிறுவியவர். ஐரோப்பிய - பிரான்ஸ் படைகளை ஆபிரிக்க நாடான புர்கினோ பாசோவை விட்டு வெளியேற்றியவர் இப்ராகிம் தராரே ஆவார்.

## புர்கினா பாசோவின் விடிவெள்ளி:

தற்போது மாலி உட்பட பல ஆபிரிக்க நாடுகளை ஒன்றிணைக்கும் முயற்சியை முன்னெடுத்து வருகிறார். பலமிக்க ஒன்றிணைந்த ஒற்றுமையான ஆபிரிக்க பொருளாதாரம் மூலமே உலக சாம்ராஜியங்களின் சுரண்டலை ஒழிக்கலாம் என்பதை உணர்ந்து புரிந்தவர்.

அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவத்தை நிராகரித்து ஏழை நாடுகள் எப்படி உலகில் அரசியல் செய்ய முடியும், என்ற கேள்விக்கு விடையை அறியத் தந்துள்ளார். அதாவது சமத்துவ தேடலின் விடிவெள்ளியாக, சங்காராவின் அரசியல் வாரிசாக, மேற்கு ஆபிரிக்காவின் இளம் சூரியனாக தோற்றம் பெற்றுள்ளார் இந்த இப்ராகிம் தரோரே (Ibrahim Traore).

பாரிஸின் காலனித்துவ கொள்கைகளை விமர்சித்துவந்த ஆபிரிக்க ஆட்சிகளை வெளியேற்றுவதற்கு, ஆபிரிக்க நாடுகளில் பல சதிப்புரட்சிகளை பிரான்ஷ் மீண்டும் மீண்டும் பயன்படுத்தியுள்ளது.

1987 இல், புர்கினா பாசோவில், சோவியத் சார்பு ஜனாதிபதி தோமஸ் சங்கராவை தூக்கியெறிந்து, அவரை கொலை செய்த பின்னர் பிளைஸ் கம்போரேவை பிரெஞ்சு அரசாங்கம் ஆதரித்தது. ஆபிரிக்காவின் மிகமோசமான அக திகள் நெருக்கடிகளில் ஒன்றான, புர்கினா பாசோவில் நடந்துவரும் சண் டையால் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந் துள்ளனர். அத்துடன் பல்லாயிரக் கணக்கானோர் பட்டினியின் விளிம் பிற்கும் தள்ளப்பட்டுள்ளனர்.



கடந்த சில ஆண்டுகளாக புர்கினா பாசோ, நைஜர், மாலியில் முன்னாள் காலனித்துவ சக்தியான பிரான்சை தங்கள் நாடுகளில் இருந்து, அதனது படைகளை திரும்பப்பெறுமாறு கேடடுக் கொண்டன. தற்போது மேற்கு ஆபிரிக்கா முழுவதும் அரசியல் ரீதியாக பிரான்சை எதிர்க்கும் சூழ்நிலை உருவாகி யுள்ளது.

ஆயினும் புர்கினா பாசோ, மாலி மற்றும் நைஜர் மீது படை யெடுப்பதற்கு தயாராகுமாறு மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகம் (ECOWAS) மீது பிரெஞ்சு அழுத்தம் கொடுக்கிறது. 2023 அக்டோபர் மாத தொடக்கத்தில், இந்த மூன்று நாடுகளும் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை, சஹேல் அரசுகளின் கூட்டமைப்பு (AES) என்பதை உருவாக்கிக் கொண்டன.

AES நாடுகளில் ஒன்றிற்கு எதிரான படையெடுப்பு முயற்சிக்கு, இந்த மூன்று நாடுகளுக்கும் எதிரான தாக்குதலாகும் என்று கருதி, இந்த மூன்று நாடுகளும் சேர்ந்து பதிலளிப்பார்கள் என்று இந்த ஒப்பந்தம் குறிப்பிடுகிறது.

## புர்கினா பாசோ இராணுவப் புரட்சி:

பிரான்சின் சதிவலையால் 2023 செப்டம்பரில் நடந்த சதிப்புரட்சியை முறியடித்ததாக புர்கினா பாசோவின் ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். செப்டம்பர் 2022 இல் புர்கினா பாசோவில் இளம் தலைவர் கேப்டன் இப்ராகிம் தரோரே பதவிக்கு வந்த ஒரு வருடத்திற்குப் பிறகு, இந்த தோல்வியுற்ற சதி முயற்சி நடந்துள்ளது.

சுமார் 23 மில்லியன் மக்கள் வசிக்கும் புர்கினா பாசோவில், கடந்த சில ஆண்டுகளாக பல இராணுவப் புரட்சிகளைக் கண்டுள்ளது.



2022 செப்டம்பர் பிற்பகுதியில், கப்டன் தராரே ஆட்சியைக் கைப்பற்றியதில் இருந்து கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை முந்தைய 18 மாதங்களுடன் ஒப்பிடும்போது கிட்டத்தட்ட மூன்று மடங்காக அதிகரித்துள்ளது என்று ஆபிரிக்கா மூலோபாய ஆய்வு மையத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

## அடிமைத்தனத்திற்கு எதிராக கிளர்ச்சி:

ஓர் அடிமை, அந்த அடிமைத்தனத்திற்கு எதிராக தான் நடத்தும் கிளர்ச்சி, யாராலும் இரக்கத்துடன் பார்க்கப்படக்கூடாது என்றே விரும்புவான். 2024 இல் ரஷ்யாவிற்கு விஜயம் செய்த போது, "நாங்கள் ஒருபோதும் எங்களுக்காக வருத்தப்படவில்லை. எங்களுக்காக யாரும் வருத்தப்பட வேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை" என்ற இப்ராகிம் தரோரின் முழக்கம் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் மட்டுமல்ல, மேற்கத்திய சக்திகளின் உலகிலும் எதிரொலித்தது.

ஏகாதிபத்தியத்திற்கும் வறுமைக்கும் எதிரான போராட்டத்தை ஒட்டுமொத்த ஆபிரிக்கர்களும் பெரும் எழுச்சியுடன் நடத்த வேண்டிய தருணத்தில் இருக்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார். ஆபிரிக்காவில் மக்களின் அடிமைத்தனத்திற்கு எதிராக தாங்கள் நடத்தும் போராட்டத்திற்கு இதற்கு முன்பும் இப்போதும் பெரும் ஆதரவு அளிக்கிற ரஷ்யாவை நன்றிப் பெருக்குடன் பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

மேலும் சவுதி அரசர் தனது நாட்டில் பெரும் எண்ணிக்கையில் மசூதிகளை கட்டித்தருவதாக முன்வந்ததை நிராகரித்து பாடசாலைகளையும் வைத்திய சாலைகளையும் மற்றும் தொழிற்சாலைகளையும் நிர்மாணிக்குமாறு கேட்டவர் இவரே.

மேலும் பல தடவை ஐரோப்பியர்களின் சதித்திட்டத்தினால் திட்டமிட்ட கொலை முயற்சிகளில் இருந்து தப்பியவர். அத்துடன் பிராஸ்சின் கனிமவள கொள்ளையை எதிர்த்து தடை செய்த பெருமைக்கு சொந்தக்காரர் அவரே.

## ரஷ்யாவின் உதவிக்கரமும் நட்பும்:




நீண்ட காலமாகவே துயரத்தையே சுவாசித்துக் கொண்டிருக்கும் ஆபிரிக்க குடும்பங்களில் புதிய காற்றை வீசச் செய்திருக்கிறது. ஒட்டு மொத்த ஆபிரிக்காவுக்கும் புதுச் சுவாசம் பெற வேண்டிய ஒரு கட்டாயத்தில் உள்ளன.

இரண்டாம் உலகப்போரின் நாசிகளின் பிடியிலிருந்து இந்த உலகையே பாதுகாப்பதற்காக ரஷ்யா (சோவியத் ஒன்றியம்) செய்த தியாகங்கள் அளவிட முடியாதவை. எங்களது ஆப்பிரிக்க மக்கள், எங்களது மூதாதையர்கள், நாசிசத்தின் பிடியிலிருந்து - பாசிசத்தின் பிடியிலிருந்து ஐரோப்பா தன்னை விடுவித்துக் கொள்வதற்காக பலவந்தமாக போர்க்களத்தில் நிறுத்தப் பட்டார்கள்.

வரலாற்றின் பக்கங்களிலிருந்து, எங்களது மூதாதையர்களின் இந்த மகத்தான தியாகம் மறைக்கப்பட்டுவிட்டது. பாசிசத்திற்கு எதிரான போரில் எங்களது பங்கைப் பற்றி யாரும் எழுதவில்லை. திரைப்படங்களும் எடுக்கவில்லை.

பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் ரஷ்யாவும் ஆப்பிரிக்காவும் தோளோடு தோள் நின்று போராடிய மகத்தான தோழமை வரலாறு உண்டு. எங்களது மக்களுக்கு ஒரு சுதந்திரமான எதிர்காலத்தை உறுதிசெய்வதற்காகவே உங்கள் முன்னால் நிற்கிறேன். எங்களது உள்நாட்டு விவகாரங்களில் யாரும் தலையிடாத இறையாண்மை உறுதி செய்யப்பட வேண்டும் என இப்ராகிம் தரோரே வலியுறுத்தியுள்ளார்.

இவ்வருடம் மொஸ்கோவில் நடந்த இரண்டாம் உலக போரின் சுதந்திர விழாவில் கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய கூட்டுக்கள் புனிதமானவையா?

07.06.2025

கட்சி மைய அரசியலில் உலகம் முழுவதுமே புனிதமான கூட்டு என்று எதுவும் கிடையாது. இருப்பதில் பரவாயில்லை என்று கூறத்தக்க பொருத்தமான கூட்டுக்கள்தான் உண்டு. இப்பொழுது கஜேந்திரக்குமார் உருவாக்கி வைத்திருக்கும் கூட்டும் அப்படித்தான். அதுவும் ஒரு சமயோசிதக் கூட்டுத்தான். தந்திரோபாயக் கூட்டுத்தான். எனினும், தமிழ்த் தேசிய நோக்கு நிலையில், பொது எதிரிக்கு எதிராக ஆகக்கூடிய பட்ஷம் ஒரு தேசமாகத் திரள்வது என்ற அடிப்படையில் அந்த கூட்டுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு.




தமிழ் மக்கள் ஓர் ஆயுதப் போராட்டத்தை கடந்து வந்த மக்கள். அதேசமயம் ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னரும் நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்கள். எனவே நீதிக்கான போராட்டத்தில் யாரைப் பிரதான குற்றவாளியாகக் காணப் போகிறோம் யாருக்கு எதிராக அணி திரளப் போகிறோம் என்பதில் தமிழ் மக்களிடம் மிகத் தெளிவான சிந்தனை இருக்க வேண்டும். அதாவது பொது எதிரிக்கு எதிராக ஒன்று திரள்வது. எங்களுக்குள் ஒருவர் மற்றவரை குற்றஞ்சாட்டி நாங்கள் பல துண்டுகளாகச் சிதறிப் போவதா? அல்லது பொது எதிரிக்கு எதிராக ஒன்று திரள்வதா? என்ற கேள்விக்கு இங்கு விடை முக்கியம்.

இந்த அடிப்படையில் பார்த்தால் கஜேந்திரக்குமார் டிரிஎன்ஏயோடு கூட்டுக்குப் போவது என்று முடிவெடுத்தது ஒரு திருப்பகரமான மாற்றம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தியாகி – துரோகி வாய்ப்பாட்டுக்கு வெளியே அந்தக் கூட்டு உருவாகியிருக்கிறது. அப்படிப் பார்த்தால் கடந்த 15 ஆண்டுகால வாய்ப்பாட்டுக்கு வெளியே முன்னணி வந்திருக்கிறது. அது இரண்டு தரப்புக்கும் மெய்யான ஒரு பண்புருமாற்றமாக இருந்தால் கூட்டு நிலைக்கும்.

அந்தக் கூட்டின் மூலம் அவர்கள் பின்வரும் நன்மைகளை அடைய முயற்சிக்கலாம். முதலாவதாக, பொது எதிரிக்கு எதிராக ஒப்பீட்டளவில் பெரிய கூட்டு. இரண்டாவதாக, உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பதற்கான அதிகரித்த வாய்ப்புகளை உருவாக்கலாம். மூன்றாவதாக, தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணியைத் தனிமைப்படுத்தலாம். நான்காவதாக, மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஒரு பலமான முன்னணியை உருவாக்கலாம். ஐந்தாவதாக, கஜேந்திரக்குமாரின் தலைமைத்துவத்தைப் பலப்படுத்தலாம்.

டிரிஎன்ஏயைப் பொறுத்தவரை அவர்கள் யாரோடாவது கூட்டுச் சேர வேண்டும். தனியாக நின்று பிடிக்க முடியாது. தமிழரசுக் கட்சியோடு கூட்டுச் சேர்ந்தால் மாகாண சபையிலும் அதற்குப் பின் வரக்கூடிய தேர்தல்களிலும் அதிகரித்த வெற்றி வாய்ப்புகள் அவர்களுக்கு இருக்கக்கூடும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அவ்வாறான வெற்றி வாய்ப்புகளை இனிமேல்தான் நிரூபிக்க வேண்டாம். ஆனால் உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பது தொடர்பாக தமிழரசுக் கட்சியோடு அவர்கள் முன்னெடுத்த பேச்சுவார்த்தைகளில் திருப்தியான பெறுபேறுகள் இல்லாத ஒரு பின்னணிக்குள் அவர்கள் முன்னணியை நோக்கி வந்திருக்கிறார்கள். தமிழரசுக் கட்சி தன்னை முதன்மை கட்சியாகவும் பெரிய கட்சியாகவும் கருதி, தனது மேலாண்மையை வலியுறுத்த முற்பட்டதன் விளைவு இது.



புதிய கூட்டை எப்படி உளவியல் ரீதியாகவும் நடைமுறையிலும் பலவீனப்படுத்தலாம் என்று சிந்தித்து சுமந்திரன் அணி திட்டமிட்டு வேலை செய்கின்றது. சுமந்திரன் அணி இந்தக் கூட்டைக் கண்டு பதட்டமடைகிறது. எதிர்காலத்தில் தலைமைத்துவம் முன்னணியிடம் சென்று விடக்கூடாது என்ற பயமும் அதில் உண்டு. எனவே இந்தக் கூட்டை உடைப்பதற்காக எந்த ஒரு வெளி எதிரியையும் விடக் கூடுதலாக சுமந்திரன் அணி வேலை செய்கின்றது.

ஈபிடிபியுடன் தமிழரசுக் கட்சி பேச்சுவார்த்தைக்கு போனதும் இந்த அடிப்படையில்தான். ஆனால் அதனால் ஏற்படும் பின்னுதைப்பு கட்சியைக் கடுமையாக பாதிக்கக்கூடிய நிலைமைகள் தெரிகின்றன. இதில் சுமந்திரனுக்கு ஆறுதலான விடயம் என்னவென்றால், சிறீதரன் சுமந்திரனுக்கு எதிராக கட்சிக்குள் காணப்படும் சக்திகளுக்கு தலைமை தாங்க இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரை தயாரில்லை என்பதுதான். இதனால் சுமந்திரன் மக்களால் நிராகரிக்கப்பட்ட பின்னரும் படிப்படியாக கட்சிக்குள் தன் பிடியை பலப்படுத்தி வருகிறார். மந்திரித்து ஏவி விடப்பட்ட சேவலைப்போல அவர் அங்கலாய்ப்போடு ஓடிக்கொண்டேயிருக்கிறார். ஒரு கட்சியின் பதில் செயலாளர் இவ்வளவுக்குத் தீயாக வேலை செய்வதில்லை. ஆனால் சுமந்திரன் தொடர்ந்து இயங்குகிறார். முன்பு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் பொழுது கட்சியின் எல்லாமுமாக அவர் தோன்றினார். இப்பொழுதும் அந்தப் பாத்திரத்தை எப்படித் தக்க வைப்பது என்று சிந்தித்துத் திட்டமிட்டு உழைக்கிறார். அடுத்து வரக்கூடிய தேர்தல்களில் எப்படியும் மக்கள் ஆணையைப் பெற்று விட வேண்டும் என்ற தவிப்பு அதில் தெரிகிறது.

தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் தலைமைப் போட்டி என்பது பலமான தலைமைகள் இரண்டு இருப்பதால் ஏற்பட்டது அல்ல. இரண்டுமே பலவீனமான தலைமைகள் என்பதால் ஏற்பட்டதுதான் என்பதைக் கடந்த ஆண்டு நிரூபித்து விட்டது. இப்படிப்பட்டதோர் பின்னணிக்குள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது கஜேந்திரக்குமாரின் தலைமைத்துவத்தை பலப்படுத்த இதுதான் தருணம் என்று நம்புவதாகத் தெரிகிறது. கடந்த வெள்ளிக்கிழமை கஜேந்திரகுமார் கொழும்பில் நடாத்திய ஊடகச் சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கள் சுமந்திரன் அணிக்குப் பொறி வைப்பவை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது கடந்த 15 ஆண்டுகளாக தன்னை ஒரு மாற்று அணியாகத்தான் ஸ்தாபித்து வந்திருக்கிறது. தன்னை ஒரு பிரதான நீரோட்டக் கட்சியாகக் கருதி வடக்கு கிழக்கு தழுவிய ஒரு பெருங்கட்சியாக தன்னை கட்டமைத்துக் கொள்ள அக்கட்சி தவறிவிட்டது. 15 ஆண்டுகளின் பின் கஜேந்திரக்குமார் உடல் ரீதியாகவும் நோய்வாய்ப்பட்டு தேறிய பின், அந்தக் கட்சி அவருக்கு நெருக்கமான சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் தூண்டுதலால் தனது வழமையான வாய்ப்பாட்டிலிருந்து இறங்கி வருவதாகத் தெரிகிறது. ஆனால் வடக்கு கிழக்கு தழுவிய ஒரு பெருங்கட்சியாக அவர்கள் வளர்வதற்கு இதை விடக் கடுமையாக உழைக்க வேண்டும். அதாவது தமிழரசுக் கட்சிக்கு மாற்றீடாக வளர மேலும் கடுமையாக உழைக்க வேண்டும். அவர்கள் அப்படி உழைக்கும் வரையிலும் தமிழரசுக் கட்சிதான் முதன்மைக் கட்சியாக தொடர்ந்துமிருக்கும். புதிய கூட்டு நிலைத்திருக்குமாக இருந்தால் தமிழ்த் தேசிய அரசியலில் இரு கட்சிப் பண்பு மீண்டும் தலை தூக்கும்.

தமிழ்த் தேசிய அரசியலில் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் ஏற்பட்ட கூட்டுக்களைத் தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய கட்சிகளும் சரி ஆயுதப் போராட்ட இயக்கங்களும் சரி தங்களுக்குள்ளேயும் மோதியிருக்கின்றன. தங்களுக்கு இடையிலும் மோதியிருக்கின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து தொடங்கி ஆயுதப் போராட்ட காலத்தில் திம்பு பேச்சு வார்த்தையை நோக்கி உருவாக்கப்பட்ட இயங்கங்களின் கூட்டு. அதன்பின் உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அதன்பின் உருவாக்கிய தமிழ் மக்கள் பேரவை. அதன்பின் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு வரையிலுமான எல்லாக் கூட்டுக்களும் ஒரு கட்டத்தின் பின் குலைந்து விட்டன. கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலான தொகுக்கப்பட்ட தோல்வியென்பது கூட்டுக்களின் தோல்வியுந்தான்.




இப்பொழுது ஒரு கூட்டு உருவாகியிருக்கிறது. எனினும் இதுகூட பிரம்மாண்டமான ஒரு கூட்டு இல்லை. தமிழரசுக் கட்சி தொடர்ந்தும் வடக்கு கிழக்கு தழுவிய பெருங் கட்சியாக, முதன்மைக் கட்சியாகக் காணப்படுகின்றது. எனவே இப்பொழுது ஏற்பட்டிருக்கும் புதிய அரசியல் ரத்தச் சுற்றோட்டங்கள் தமிழ்த் தேசிய அரசியலில் இரு கட்சி நிலையை பலப்படுத்துமா? மேற்கத்திய ஜனநாயகங்களில் உள்ளது போல இரு கட்சிப் போட்டி நிலைமை என்பது அங்கு ஆரோக்கியமானது. ஆனால் நீதிக்காக போராடும், அரசற்ற மக்களாகிய தமிழ் மக்களைப் பொறுத்தவரை கடந்த 16 ஆண்டு காலத் தேக்கம், தோல்வி என்பவற்றின் பின்னணியில், அது ஆரோக்கியமானது அல்ல. பொது எதிரிக்கு எதிராகத் தேசம் திரண்டு நிற்காது. இரண்டாக நிற்கும். கட்சி மைய அரசியல் இப்படித்தான் இருக்கும். கட்சிகளால் மட்டும் தேசத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

நன்றி: நிலாந்தன்

உலக வணிகம் ULAGA VANIKAM

# 2026



# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



## உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல
அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள்
செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு
நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை
பெருகச் செய்யும். அது உங்கள் வணிக
முண்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது
உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.

**தொடர்புகளுக்கு 437.345.4203**

# உகந்தை முருகன் ஆலயத்தில் புத்தர் சிலை? காணி அபகரிப்பும் – வர்த்தமானி சர்ச்சையும்!

நவீனன்

02.06.2025

தமிழ் மக்களுடைய பூர்வீக நிலங்கள் மற்றும் அவற்றின் மரபுரிமைகளை மாற்றி அமைக்கும் வகையில் அரசுடமை யாக்குதல், மற்றும் பௌத்த சிங்கள மயமாக்கல் முயற்சிகளில் அரசு வெளிப்படையாகவே இயங்கி வருகின்றது.

வடக்கில் குருந்தூர்மலை விவகாரம், தையிட்டி விவகாரம், வெடுக்குநாறி மலை என்று பல ஆக்கிரமிப்புகள் தொடர் கின்றன. இதன் பின்னணியில், கிழக்கில் அம்பாறை மாவட் டத்தில் அமைந்திருக்கின்ற உகந்தை முருகன் ஆலயத்திற்கு செல்லும் முன்வாயிலிற்கு முன்பாக காணப்படுகின்ற கடற்கரை யின் இடது புறத்தில் புதிதாக ஒரு புத்தர் சிலையினை நிறுவி யிருக்கிறார்கள்.






உகந்தை முருகன் ஆலய புராதன வரலாறு கொண்ட புண்ணிய பூமியாகும். உகந்தைமலையில் 25 அடி முருகன் சிலை நிறுவும் பணியைத் வன இலாகாவினரும் முன்பு தடுத்து நிறுத்தினர். ஆனால் இங்கு எவ்வாறு புத்தர் சிலை நிறுவ அனுமதிக்கப்பட்டது எனும் கேள்வி எழுகிறது.

ஈழத்தில் தமிழர் பாரம்பரிய வரலாற்று ஆதாரங்களுடன் காணப்படும் பூர்வீகங்களை அழித்தலும் ஆக்கிரமித்தலும் தொடர்ந்து நடைபெறுகின்றது என்பதனை பல ஆக்கிரமிப்பு முயற்சிகள் மூலம் அறியலாம்.

உகந்தை முருகன் ஆலய புராதன தமிழர் வாழ்வியல் ஆதாரங் களைச் சிதைப்பதும் அதை அழிப்பதும் ஆக்கிரமிப்பதும் அடிப் படையில் நிறுவப்பட்டுள்ள இந்த புத்தர் சிலையானது, உகந்தை முருகன் ஆலய முன் வாயிலின் முன்பாகக் செல்லும் போது கடற்கரையில் இடது புறமாகக் காணப்படும் மலையில் கடற் படை முகாம் முன்பாக உள்ளது. இந்த மலையில் கடற்படை யின் தொடர்பு கோபுரம் முன்பாக புத்தர் சிலை அமைக்கப் பட்டுள்ளது.

## வடக்கில் காணி அபகரிப்பு சர்ச்சை!

வடக்கு மாகாணத்தில் நில தீர்வு தொடர்பாக 2025 மார்ச் 28, அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானியை தற்போது அரசாங்கம் மீள திரும்பப் பெற்றுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள பல கிராமங்களில் நிலங்களை கையகப்படுத்துவது தொடர்பாக விவசாயம், கால்நடை, நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சகத்தின் கீழ் உள்ள நில உரிமை தீர்வுத் துறையால் வர்த்தமானி அறிவிப்பு எண் 2430 வெளியிடப்பட்டது.

ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தமிழர் நிலத்தை அதன் உரிமை யாளர்களிடம் திருப்பித் தருவதாக உறுதியளித்த போதிலும் மக்களின் நிலங்களை மீண்டும் கையகப்படுத்த முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

புதிதாக வந்த இந்த வர்த்தமானிக்கு எதிராக தங்கள் எதிர்ப்பை வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல்வாதிகள் தெரிவித்தனர்.

வடக்கில் 5,940 ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்கு அந்த வர்த் தமானி அறிவித்தல் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் தொடர்ந்த மக்கள் போராட்டத்தால் வடக்கில் காணி அபகரிப்பு வர்த்தமானி மே 27இல் வாபஸ் பெறப்பட்டது.

## நல்லாட்சியில் திருகோணமலை நில அபகரிப்பு:

சிறீலங்காவில் பெருமையாக கூறப்பட்ட “நல்லாட்சி காலத்தில்”, நாவற்குழி சிங்கள குடியேற்றம் சட்டபூர்வமாக்கப்பட்டது என்பது பலருக்கும் தெரியாத ஒரு உண்மை ஆகும். இதனைப் போல வவுனியா வடக்கு கொக்கச்சான்குளம் (கலாபோகஸ்வெவ 1 ரூ 2) நாமல்புர குடியேற்றங்களும் சட்டபூர்வ சிங்கள குடியேற்றங் களாக்கப்பட்டன.

அத்துடன் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் மாலனூர் (12ஆம் கட்டை) மற்றும் ஏரமடு (10ஆம் கட்டை) பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் பல உருவாக்கப்பட்டன. திருகோண மலை சலப்பையாறு பகுதியில் 650 க்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் மேலும் குடியேற்றபட்டன.

கிழக்கு மண்ணில் மட்டக்களப்பு கெவிலியாமடு பகுதியில் சிங்கள மக்களுக்கான மாதிரி கிராமம் ஒன்று உருவாக்கப்பட்டு 20-25 சிங்கள குடும்பங்களுக்கு வீடுகளும் 60 இற்கு மேற் பட்ட குடும்பங்களுக்கு நிதி உதவிகளும் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை பகுதியில் 50 இற்கு மேற்பட்ட பொலநறுவை, அம்பாறையை சேர்ந்த பண வசதி படைத்த சிங்கள விவசாயிகள் பண்ணைகள் அமைக்க அரசால் காணி வழங்கப்பட்டது.



## முல்லைத்தீவில் சிங்கள குடியேற்றம்:

**தொடரும் ஆக்கிரமிப்புகள் தமிழர் தாயகத்தை சிதைத்து வருகிறது. பாரம்பரிய வரலாற்று ஆதாரங்களுடன் காணப்–படும் தமிழ் பூர்வீகங்களை அழித்தலும் ஆக்கிரமித்தலும் தொடர்வது இன அழிப்பின் இன்னொரு வடிவமாகும்**

ஒதியமலையை அண்டிய வவுனியாவின் எல்லைக் கிரா மங்கள் பலவும் கஜபாகுபுரவாக ஆக்கப்பட்டன. குறிப்பாக சிலோன் தியேட்டர், டொலர்ஸ் பாம், தனிக்கல், நாவலர் பண்ணை போன்ற பகுதிகளிலும் சிங்களக் குடியேற்றங்கள் பல செய்யப்பட்டன.

முல்லைத்தீவின் எல்லையில் சிங்கபுர, 13 ஆம் கொலனி என பல சிங்களக் கிராமங்கள் மீள உருவாக்கப்பட்டன. கொக்குத் தொடுவாயில் மட்டும் 2,156 ஏக்கர் நிலம் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. கொக்குதொடுவாய் பகுதியில் கோட்டக் கேணி அம்பட்டன் வாய்க்கால், வெள்ளக்கல்லடி, தொட்ட கண்ட குளம் போன்ற இடங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர்.

கோட்டைக்கேணி பிள்ளையார் கோவில் பகுதியில் 825 ஏக்கர் நிலம் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டது என தகவல்கள் வெளியாகியுள்ளது. கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் 20 ஏக்கர் நிலம் சிங்கள குடியிருப்புக்காக வழங்கப்பட்டது. நாயாறு கொக்கிளாய் - முகத்துவாரம் பகுதிகளில் சுமார் 794 சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.

கொக்கிளாய், கருநாட்டுக்கேணி பகுதியில் சிங்கள மீனவர் களுக்கு காணி உரிமம் வழங்கப்பட்டது. ஆண்டான்குளம், திருக்கோணப்பட்டி, ஆத்தங்கடவை, மருதடிக்குளவெளி, ஆலடிக்குளம், சாமிப்பில கண்டல், ஈரக்கொழுந்தன் வெளி, படலைக்கல்லு, நித்தகைகுளம் போன்ற பகுதிகளில் சுமார் 647 ஏக்கர் நிலம் சிங்கள குடியேற்றங்களுக்காக வழங்கப்பட்டது என்பது பலருக்கும் தெரியாத செய்தியாகும்.

கொக்குத்தொடுவாய், புலிபாய்ந்தகல், நாயாறு, கொக்கிளாய் - முகத்துவாரம், சாலை ஆகிய பகுதிகளில் பருவகாலங்களில் தொழில் செய்ய தென்னிலங்கை மீனவர்கள் குடியேற்றப் பட்டனர். சூரியனாறு, முந்திரிகைக்குளம் பகுதிகளில் சிங்கள குடியேற்றவாசிகளுக்கு தமிழ் மக்களின் வயல் நிலங்கள் அபகரிகப்பட்டு வழங்கப்பட்டது.

வவுனியாவில் மன்னார் மதவாச்சி வீதியை சூழ்ந்த பகுதிகளில் சிங்கள குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. மன்னார் முசலிப் பகுதியிலும் சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்பட்டது. கொக் கடிவான் குளத்தின் சூழலிருந்த இருநூறு ஏக்கர் வயல் நிலம் 165 சிங்கள குடும்பங்களுக்கு பகிரப்பட்டது.

## தமிழர் வாழ்வியல் ஆதாரம் சிதைவு:

உகந்தை முருகன் ஆலய வளாகத்திலும் அதனைச் சூழவும் வன இலாகா, மற்றும் படையினர் புதிய நிபந்தனைகளையும் விதித்து ஆலய சூழலைச் சுருக்கியுள்ளனர். மேலும் பல கட்டுப் பாடுகளையும் விதித்துள்ளனர், வள்ளிமலை போன்ற இடங் களுக்குச் செல்லவும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். இது தவிர சந்நியாசி மலையும் பறிபோகும் அபாயம் காணப் படுகிறது.

இந்த நிலையில் புத்தர் சிலை விவகாரம் இன மதங்களுடையே ஒற்றுமையின்மை ஏற்படுத்தி உள்ளது.

அத்தோடு இந்த இடத்தில் புத்தர் சிலை வைப்பதற்கான ஆயத் தமாக மலையில் பீடம் அமைக்கப்பட்டது. அத்துடன் இது உகந்தை ஆலய சூழலில் நிறுவப்பட்டுள்ள இரண்டாவது புத்தர் சிலையாகும். இதன் பின்னணியில் சிங்களவர்கள் பலரைக் குடி யேற்றும் திட்டம் இருக்கிறது. வன இலாகாவின் செயற்பாடுகள் மற்றும் மலையில் நிறுவப்படவிருந்த 25 அடி முருகன் சிலையை நிறுவாமல் தடுத்தது அதன் பின்னர் தற்போது புத்தர் சிலை வைத்தது அதற்கு உடந்தையாக பல படை அதிகாரிகள் பின்னணியில் இருந்துள்ளனர்.

தமிழர் வாழ்வியல் ஆதாரங்களை தொடரந்து சிதைக்க சிங்கள ஆட்சியாளர் முயல்கின்றனர். இந்த சிலை உடனடியாக அகற் றப்படுவதோடு அரசு தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறு திகளை நிறைவேற்றுமா என்பது சந்தேகமே?


கரும்புலிகள் நாள்
யூலை 05 2025
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்